மகரநெடுங்குழைக்காதர்

பிள்ளைத்தமிழ்

(1986)

25743



மகரநெடுங்குழைக்காதர் பிள்ளைத்தமிழ்

[177-ஆம் எண்ணுள்ள கையெழுத்துப் பிரதியையும் அதற்கு மூலமான 213 ஏட்டுச் சுவடியையும் ஒப்புநோக்கி எழுதிப் பிரதி செய்த பிரதி.]

ஆசிரியர் :— திருமேனிகவிராசர்



மகரநெடுங்குழைக்காதர் பிள்ளைத்தமிழ்

(பதவுரை, விசேடவுரை முதலியவற்றுடன் கூடியது)

Makaranedunkuzhaikkadar Pillait Tamizh

உரையாசிரியர்—பதிப்பாசிரியர்

பேராசிரியர் C. ஜெகந்நாதாசார்யர்

M.A. (Hist.) M.A. (Tamil), L.T,, P.O.L.,

Dipl Geog. Vidvan

முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்

விவேகாநந்தர் கல்லூரி, மயிலை. சென்னை-4.

(U. G. C. பேராசிரியர்)

மகாமகோபாத்தியாய

டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்

பெசன்ட் நகர், சென்னை-600 090.

1986

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல்நிலைய வெளியீடு எண்—96

முதற்பதிப்பு 1986 — 1000 பிரதிகள்

© மகாமகோபாத்தியாய
டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்
பெசன்ட் நகர், சென்னை-600 090

விலை : ரூ. 20/-

Published with the Financial Assistance of the Government of India, Dept of Edn. and Culture, New Delhi.

Printed at Sudha Printers
287/3 Lloyds Rood, Madras-600 014,

உள்ளடக்கம்

பதிப்பாளர் குறிப்பு	vii
முகவுரை	xiii
நூலாராய்ச்சி	xv-xxxii
நூல்-மூலமும் பதவுரையும்	1-195
செய்யுண் முதற்குறிப்பகராதி	196-199
(அனுபந்தம்)	
குழைக்காதர் சந்தானப்பத்து	

பதிப்பாளர் குறிப்பு

கற்றிலேன் கலைகள் ஐம்புலன் கருதும்
 கருத்துளே திருத்தினேன் மனத்தை
பெற்றிலேன் அதனால் பேதையேன் நன்மை
 பெருநிலத் தாருயிர்க் கெல்லாம்
செற்றமே வேண்டித் திரிதர்வேன் தவிர்ந்தேன்
 செல்கதிக் குய்யுமா றெண்ணி
நற்றுணை யாகப் பற்றினே னடியேன்
 நாராயணா வென்னும் நாமம்.

(பெரிய திருமொழி)

திருமால் லக்ஷ்மியிடத்தில் வைத்திருந்த அன்பைக் காட்டிலும் கருமேனியையுடைய பூமிதேவியிடம் மிக்க அன்புடன் இருப்பதைக் கண்டு லக்ஷ்மியானவள் துர்வாச முனிவரிடம் தன் குறையைத் தெரிவித்தாள். பூமிதேவி தன்னைப்போல் சிவந்த பொன்மேனியாக ஆகவேண்டும் என்று முனிவரிடம் வேண்ட, அவரும் இசைந்து பூமிதேவியின் இருப்பிடத்திற்கு வந்தார். கருமேனியழகினால் இறுமாப்பு அடைந்திருந்த பூமிதேவியானவள் வந்த துர்வாசரை உபசரிக்காமல் இருக்கவே, அவர் சினங்கொண்டு "நீ திருமகள் உருவத்தை அடைவாயாக" என்று சபிக்க, உடனே பூமிதேவி துருவாசரை வணங்கிச் சாபவிமோசனம் வேண்ட, முனிவர் 'தாமிரவருணி நதிக்குத் தென்கரையில் ஹரிபதம் என்ற க்ஷேத்திரத்தின் நதியில் நீராடித் தவம் செய் 'உன் பழைய வடிவம் உண்டாகும்' என்று சொல்லி அஷ்டாக்ஷர மந்திரத்தையும் உபதேசித்துவிட்டு லக்ஷ்மியிடம் வந்து நடந்ததைச் சொல்ல, அவள் மிக்க மகிழ்ச்சியடைந்து துர்வாச முனிவரைக் கொண்டாடினாள்.

பூமிதேவியானவள் அஷ்டாக்ஷர மந்திரத்தை ஜபித்துக் கொண்டு 'ஸ்ரீபேரை' என்னும் பெயரைத் தரித்துக் கொண்டு பங்குனிப் பௌர்ணமியில் சுக்கிர புஷ்கரணி தீர்த்தத்தில் நீராடும் போது மீன் போன்ற வடிவமுடைய இரண்டு குண்டலங்கள் கிடைக்கவே, இவை திருமாலின் காதுகளுக்கே தகுதியுடையன

வாகும் என்று நினைத்த மாத்திரத்தில் திருமால் அவள் முன் தோன்றி, அன்புள்ளவளே! இந்த மகர குண்டலங்களைத் தர வேண்டும் என்று கேட்க, பூமிதேவியும் பெருமகிழ்ச்சியுடன் கொடுத் தாள். திருமால் அவற்றை வாங்கித் தமது காதுகளில் அணிந்து கொண்டார். வானுலகிலிருந்து பூமாரி பொழிந்தது. தேவதுந்துபிகள் முழங்கின. தேவர்கள் பூமிதேவியால் கொடுக்கப்பட்ட மகர குண்டலங்களைக் காதுகளில் அணிந்து கொண்டமையால் இன்று முதல் உமக்கு **மகரநெடுங்குழைக்காதர்** என்ற திருப்பெயர் விளங்கட்டும். தீர்த்தமும் **மகர தீர்த்தம்** என்ற நாமத்துடன் வழங்கப்படவேண்டும் என்று சொல்ல, திருமாலும் சம்மதித்தார். அன்று முதற்கொண்டு அந்தத் திருப்பதி ஸ்ரீபேரை என வழங்க லாயிற்று.

இவ்வூர் நவ திருப்பதிகளுள் ஒன்று. நவ திருப்பதிகள் நவக் கிரக க்ஷேத்திரங்கள் என்று ஆன்றோர்கள் கூறுவார்கள். ஜோதி டர்கள் கீழ்க்கண்டவாறு கூறுகின்றார்கள்.

1.	சூரியன்	- வரகுணமங்கை	
2.	சந்திரன்	- திருப்புளிங்குடி	
3.	செவ்வாய்	- திருக்குளந்தை (பெருங்குளம்)	
4.	புதன்	- ஆழ்வார் திருநகரி (திருக்குருகூர்)	
5.	வியாழன்	- திருக்கோளூர்	
6.	சுக்கிரன்	- ஸ்ரீவைகுந்தம்	
7.	சனி	- தென் திருப்பேரை	
8.	இராகு	- அரவிந்தலோசனன்	இரட்டைத் திருப்பதி
9.	கேது	- தேவபிரான்	

விதர்ப்ப தேசத்தில் பன்னிரண்டு ஆண்டுகள் மழையின்மை யால் பஞ்சம் ஏற்பட, அந்தத் தேசத்தரசன் ஞானாசிரியரை வணங்கிப் பஞ்சம் ஏற்பட்ட காரணத்தைக் கேட்க, அவர் "திருப் பேரையை யடைந்து மகரநெடுங்குழைக்காதரை வழிபட்டால் தேவர்களின் சினத்தால் ஏற்பட்ட இப்பஞ்சம் நீங்கும்" என்றார். அரசனும் தென்திருப்பேரை வந்து குழைக்காதரை வழிபடப் பஞ்சம் நீங்கிச் சுபிட்சம் ஏற்பட்டது.

இத்தகைய சீரும் சிறப்புடனும் கூடிய இத்தலம் திருநெல்வேலி திருச்செந்தூர் சாலையில் இருக்கிறது.

ஆழ்வார் திருநகரியிலிருந்து தென்கிழக்கே மூன்றுகல் தொலை வில் இருக்கிறது ; பொருநையாற்றின் தென்கரையில் இருக்கிறது.

பெருமாள் : மகரநெடுங்குழைக்காதர் (நிகரில் முகில்வண்ணன்)
தாயார் : குழைக்காதுவல்லி
விமானம் : பத்திரவிமானம்
தீர்த்தம் : சுக்கிரபுஷ்கரணி
கிழக்கே பார்த்த சந்நிதி
வீற்றிருக்கும் திருக்கோலம்.

சுக்கிரன். பிரமன், ஈசானியருக்கும், ருத்திரருக்கும் பிரத்யக்ஷம். நம்மாழ்வாரால் பாடப்பட்ட பதி. இக்கோயிலில் சித்திரை மாதம் முதல் பங்குனிமாதம் முடிய பலதிருவிழாக்கள் நடைபெறுகின்றன.

நாராயணதீக்ஷிதர் என்பவர் ''மகரநெடுங்குழைக்காதர் பாமாலை'' என்னும் நூலை இயற்றியுள்ளார். இந்நூலை ஐயரவர்கள் 1939-ஆம் ஆண்டு பதிப்பித்துள்ளார்கள். ஐயரவர்கள் எழுதி யுள்ள முகவுரையின் மூலமாக மகரநெடுங்குழைக்காதரின் பெருமை யினை நன்கு அறிந்துகொள்ளலாம். ஐயரவர்கள் எழுதியுள்ள ''சிறைநீத்திய செய்யுள்'' என்ற கட்டுரையின் மூலமாகவும் அறிந்து கொள்ளலாம்.

திரு அனந்தகிருஷ்ணையங்கார் என்பவர் மகரநெடுங்குழைக் காதர் விஷயமாக ஒருகலம்பகம் பாடியுள்ளார். அந்நூல் 1936-ஆம் ஆண்டு அச்சிடப்பட்டுள்ளது.

மகரநெடுங்குழைக்காதர் விஷயமாக நூலகத்தில் ஒருபிள்ளைத் தமிழ்ச்சுவடியும், (சுவடி எண். 213) ஒருகையெழுத்துப்பிரதியும் (எண். 177), குழைக்காதர் சந்தானப்பத்து என்ற கையெழுத்துப் பிரதியும் (எண். 175) குழைக்காதர் பாமாலை என்ற கையெழுத்துப் பிரதியும் (எண். 176) உள்ளன.

ஸ்ரீராமையங்கார் என்னும் புலவர் மகரநெடுங்குழைக்காதர் பேரில் சந்தானப்பத்து என்னும் ஒருநூல் சந்தானம் வேண்டி (சந்தானம் - மகப்பேறு) பாடியுள்ளார். இந்நூல் பதின்மூன்று செய் யுட்களைக் கொண்டது. இந்தப்பதின்மூன்று பாடல்களையும் இந் நூலின் கடைசிப்பக்கத்தில் அச்சிடப்பெற்றுள்ளது. தினந்தோறும் இந்நூலை, ஏகாக்ரசித்தத்துடன் பாராயணம் செய்தால் மகப்பேறு இல்லாதவர்கள் நல்ல மகவினைப்பெற்றுச் சீரும் சிறப்புடனும் வாழ் வார்கள் என்பதில் எட்டுணை ஐயமும் இல்லை.

குழைக்காதர் பாமாலை என்னும் நூலை ஐயரவர்கள் குமாரர் திரு எஸ். கலியாணசுந்தரையர் 1947 - ஆம் ஆண்டில் இரண்டாம் பதிப்பாக வெளியிட்டுள்ளார்கள்.

இந்த நூலின் ஆசிரியர். தென்திருப்பேரை காரி இரத்தினக் கவிராயர். இவர் திருமேனி இரத்தினக் கவிராயர் என்றும், திருமேனிக் கவிராயர் என்றும் வழங்கப்படுவர். இவர் திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்பவரால் இயற்றப்பெற்ற **மாறனலங்காரம்** என்ற அணி இலக்கண நூலின் உரையாசிரியர். இவர் திருக்குருகைப் பெருமாள் கவிராயருடைய மாணக்கர். "தருகாளமேகம்" என்னும் மாறனலங்கார உரைச்சிறப்புப்பாயிரத்தால் விளங்கும். இவர் திருக் குறுங்குடி அழகியநம்பி பிள்ளைத்தமிழ் என்ற நூலையும், மகரநெடுங் குழைக்காதர் திருப்பணிமாலை என்ற நூலையும் இயற்றியுள்ளார் என்று தெரிகிறது. இவர் வடமலையப்பப் பிள்ளையின் காலத்தவர். வடமலையப்பப் பிள்ளையின் காலம் 18-ஆம் நூற்ருண்டின் முற்பகுதி. மகரநெடுங்குழைக்காதர் திருப்பணிமாலை என்னும் நூல் 161 கண்ணிகளையுடையது. இவரது இயற்பெயர் 'காரிரத்ன கவிராயர்' என்று தெரிகிறது 'காரிரத்னம்' என்பது ஆழ்வார் திருநாமம். இவருக்குக் கோயிலில் 'வாகனமாலை' படிப்பதற்காக அக்காலத் தரசன் சிறந்த மானியங்கள் விட்டிருந்தான் என்று தெரிகிறது.

பிள்ளைத்தமிழ் என்ற இந்நூல் இராமபாணப் பூச்சிக்கு இரையாகப் போவதற்குமுன் பதிப்பிக்க வேண்டுமென்று நினைத்து திரு. C. ஜெகந்நாதாசார்யர் அவர்களை அணுகிப்பதவுரை, விசேடவுரை எழுதித்தர வேண்டும் என்று கேட்கவே, அவர்களும் மிக்க உற்சாகத்துடன் ஏற்றுக்கொண்டு சிறந்த முறையில் பதவுரை, விசேடவுரை முதலியவற்றை எழுதிக்கொடுத்தார்கள். அன்னருக்கு நூல்நிலையத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலை ஐயரவர்கள் பதிப்பிக்கவேண்டும் என்று நினைத்திருந்தார்கள். அவர்களுடைய எண்ணத்தை அவர்பெயரால் திருமதி ருக்மிணிதேவி அவர்களால் நிறுவப்பட்டுத் திருவான்மியூரில் இலங்கிக் கொண்டிருக்கும் நூல்நிலையம் நிறைவேற்றி வருகின்றது.

நூல்நிலையத்தை நன்கு நிர்வகித்துவரும் நிர்வாகக்கமிட்டித் தலைவருக்கும், உறுப்பினர்களுக்கும் நன்றி.

மத்திய அரசு இப்பதிப்பு வெளிவர மானியம் அளித்தமைக்கு நன்றி.

இந்நூலை நன்கு அச்சிட்டுக் கொடுத்த சுதாஅச்சக உரிமையாளர் திரு சுப்பிரமணியன் அவர்களுக்கு நன்றி.

வித்துவான் **சு. பாலசாரநாதன்**
ஆராய்ச்சித்துறைப் பிரிவு.
டாக்டர். உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்

பெசன்ட் நகர்
20-5-86

முகவுரை

திருப்பேரைப் பெம்மானை
இருமகரக் குழையானை
கருவறுக்குங் கோமானை
மருவிநிதம் பணிவோமே.

பாண்டிய நாட்டு வைணவத் தலங்களுள் சிறப்புடன் திகழ்வது திருப்பேரை. இதனைத் தென்திருப்பேரையெனவும் வழங்குவர். இத்தலம் பொருநையாற்றங்கரையின் தெற்கில் உள்ளது. திருநெல் வேலிக்குக் கிழக்கே இருபத்து நான்கு மைலில் உள்ளது. ஆழ்வார் திருநகரிக்கு அருகாமையில் உள்ளது. இங்கே வீற்றிருக்கும் திருக் கோலத்தில் கிழக்கு நோக்கி எழுந்தருளியிருக்கும் மகரநெடுங்குழைக் காதரை 'நிகரில் முகில்வண்ணன்' என்றும் பெயர் வழங்குவர். தாயார் பெயர் - குழைக்காது வல்லி நாச்சியார். மற்றும், திருப்பேரை வல்லி நாச்சியார் ஸந்நிதியும் உண்டு. இங்கேயுள்ள ஸந்நிதிக்கருடன் பெருமாளுக்கு நேரே எழுந்தருளியிராமல் சற்று விலகியிருப்பர்.

இங்குள்ள கூடுபுனற்றுறை (சமூக தீர்த்தம்) மிகவும் மேன்மை வாய்ந்தது. மற்றும் இந்தத் திருமஞ்சனத்துறையில் வருணன் நீராடி, தினமும் மகரநெடுங்குழைக்காதரை ஆராதனை செய்கிறன் என்பர். வருணபகவான் வழிபடும் தலமாதலால் எப்போதும் வளமுடைய தாயிருக்கும் என்ப. இங்கே தலவகாரஸாமவேதிகள் நூற்றெண்மர் திருக்கோயிலில் கைங்கர்யபரர்களாக இருந்தனர். இப்போதும் அந்த ஸாமவேதிகளின் மரபினர் கைங்கர்யஞ் செய்து வருகின்றனர். பூர்வத்தில் இத்தலத்திற்கு 'ஹரிபத க்ஷேத்திரம்' என்று பெயர். இதனை வழிபடுவோர் தீங்கொன்றும் வாராமல் சுகம் பெறுவர்.

இத்தகைய மேன்மைகள் வாய்ந்த தென்திருப்பேரையில் எழுந் தருளியுள்ள மகரநெடுங்குழைக்காதர் மேல் திருமேனி கவிராசர் பாடிய பிள்ளைத்தமிழ் பிரபந்தத்தைச் செவ்வனே பதிப்பித்து அதற்கு உரையெழுதும் பணியை மகாமகோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி திராவிட வித்யாபூஷணம் டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் நூல்நிலையத்தார் அடியேனுக்கு இட்டனர். அவர்கள் பணித்தபடியே இந்த உரையாக்கம் நூல் முழுவதற்கும் செய்யப் பட்டுள்ளது. இந்த உரையாக்கத்திற்கு ஐயரவர்களின் ஆசியின் பலமும் அடியேனுக்கு ஞானாசிரியராய் அபிநவவியாசர் என்றும்

அபிநவபதஞ்சலி என்றும் போற்றப்படும் உரையாசிரியச் சக்ரவர்த்தி ஸ்ரீ. உ. வே. வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர் ஸ்வாமியவர்களின் அருளாசியின் பலமும் துணைநின்றன. சொற்பொருள்களின் நயம், வைணவ சித்தாந்தக் கருத்துக்கள், இலக்கண நுணுக்கங்கள், அணிகள், கற்பனைவளங்கள், தலதீர்த்தமூர்த்தி விசேடங்கள், புராண கதைகள், வரலாற்றுக் குறிப்புகள் முதலியன இவ்வுரையாக்கத்திற் காணலாம். திருப்பேரைத் தலத்தைப்பற்றிய பல விஷயங்களை யுசாவித் தெளிவுறவறிதற்குத் **தென்திருப்பேரை கலியன் மகரபூஷண ராமாநுஜ ஐயங்கார் ஸ்வாமி** அவர்களை யண்டினேன். அந்த மஹான் பல விஷயங்களைத் தெரிவித்தார். அன்னூர்க்குத் தலையல்லால் கைம்மாறிலேன்.

டாக்டர் ஐயரவர்களுக்குத் திருப்பேரை எம்பெருமானிடம் பெரிதும் ஈடுபாடு உண்டு. ஆகவே அவர் திருப்பெயரைத் தாங்கிய நூல்நிலைய நிர்வாகத்தினர் இந்த விழுமிய தெய்விக பிள்ளைத்தமிழ் நூலை உரையுடன் வெளியிடுவது அன்னூர் திருவுள்ளத்துக்குப் பேருகப்பாகும். இந்நற்பணியில் அடியேனைக் கூவியேவல் கொண்ட **ஸ்ரீ க. சுப்பிரமணிய ஐயர்**, கௌரவ பாதுகாவலர், ஐயர் நூல்நிலையம் அவர்களுக்கும், வித்துவான் சு. பாலசாரநாதன் அவர்களுக்கும் என்றும் நன்றியறிதலுடையேன். அனைத்துக்கும் மேலாக, இந்த நல்லுரையை வெளியிடுதற்குத் தோன்றாத் துணையாய்நின்று உதவிய குழைக்காதர் கருணைத் திறத்திலீடுபட்டு அனவரதமும் அப்பரமனை வழுத்துகின்றேன்.

இங்ஙனம்

சி, ஜெகந்நாதாசார்யர்

உரையாசிரியர்—பதிப்பாசிரியர்

திருவல்லிக்கேணி,
சென்னை—5
11—5—86

மகரநெடுங்குழைக்காதர் பிள்ளைத்தமிழ்

நூலாராய்ச்சி

மகரநெடுங்குழைக்காதர் பிள்ளைத்தமிழ் என்ற தொடர் — மகரநெடுங்குழைக்காதர் என்ற திருமாலைப் பற்றிய பிள்ளைத்தமிழ் என்று விரியும் : இரண்டனுருபும்பயனுமுடன்றொக்க தொகை.

பிள்ளைத்தமிழ் என்பது - தமிழில் வழங்குகின்ற பலவகைப் பிரபந்தங்களில் ஒன்று. பிரபந்தத் தலைவனைக் குழந்தையாகக் கொண்டு பாடுவது. அது ஆண்பாற்பிள்ளைத்தமிழ் என்றும், பெண் பாற்பிள்ளைத்தமிழ் என்றும் இருவகைப்படும். அவற்றுள் ஆண்பாற் பிள்ளைத்தமிழ் — காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்னும் பத்துப் பருவங்களையும் கூறுவதாம். (இந்தப்பத்தில் இறுதிமூன்றை யொழித்து அவற்றிற்குப் பதிலாக, அம்மானை, நீராடல், ஊசல் என்பனவற்றைச் சேர்த்துக்கூறுவது —பெண்பாற்பிள்ளைத்தமிழாம்). இந்த மகரநெடுங்குழைக்காதர் பிள்ளைத்தமிழ் நம்மாழ்வார் துதி தொடக்கமாக, ஆழ்வார் பன்னிருவர், ஆசார்யசார்வபௌமர் உடையவர் இவர்களைக் காப்பாகக் கொண்டு காப்புப்பருவம் அமைய, மேலேவரும் பருவங்கள் ஒன்பதினுக்கும் பப்பத்துச் செய்யுள் கொண்டு, பத்துப்பருவங்களாக இயன்ற நூற்றுநான்கு செய்யுட்களையுடையது. இந்நூலையியற்றியவர் திருமேனி கவிராசர் என்பவர்.

இவரைப்பற்றிய விவரம் தெரியவில்லை. எனினும், கவிராசன் (கவிராயன்) என்பது புலவர் வமிசத்தானுக்கு வழங்கும் பட்டப் பெயர் (hereditary title) எனத்தெரிகிறது. கவிராயகுடும்பத்தினர் கோயில் பிராகாரங்களில் விளக்கிடுதல் போன்ற கைங்கரியங்களைச் செய்வார்கள் என்றும், பெருமாள்புறப்பாட்டில் எழுந்தருளும்போது ஆங்காங்குக் குறித்த இடங்களில் நின்று தமிழ்த்துதிப்பாடல்களை யிசைப்பர் என்றும் கூறுப.*

(குறிப்பு :-* இந்தப் பிள்ளைத்தமிழ்ப் பாடல்கள், 177 ஆம் எண் ணுள்ள கையெழுத்துப் பிரதியையும் அதற்கு மூலமான 213 ஆம் எண்ணுள்ள ஏட்டுச்சுவடியையும் ஒப்புநோக்கியெழுதிப் பிரதி செய்த பிரதியின்படி செப்பஞ்செய்து அமைந்தன.

மகரநெடுங்குழைக்காதர் எழுந்தருளியிருக்கின்ற **தென்திருப்பேரை** யென்ற க்ஷேத்திரம் — திருவழுதிவளநாடு என்றுவழங்கும் பாண்டியநாட்டிலே தாமிரபர்ணி நதியின் தெற்குக்கரையிலுள்ள பாடல்பெற்ற தலமாகும். இஃது நூற்றெட்டுத் திவ்யதேசங்களுள் ஒன்று. நம்மாழ்வார் மங்களாசாசனம் பெற்றது. திருவாய்மொழி - ஏழாம்பத்து – மூன்றுந் திருவாய்மொழி - "வெள்ளைச்சுரிசங்கு" என்னும்பதிகம் இந்தத்திவ்யதேசத்தைப் பற்றியது. இந்தப்பதிகம், தாய்மாரும் தோழிமாரும் தடுக்கவும் தலைவி தென்திருப்பேரைக்குச் செல்வேனென்று துணிந்தமையைக் கூறும் பாசுரங்களைக்கொண்டது. மற்றும், பெரியதிருமொழி - மூன்றுந் திருமொழி - இரண்டாம் பாடலில் "மகரக்குழைக்காதனை" என்று திருமங்கையாழ்வார் பாடற்றொடரும் வருகின்றது. திவ்யகவி பிள்ளைப்பெருமாளையங்காரும் தமது நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியில் —

அரைசாகி வையமுழு தாண்டாலு மின்பக்
கரைசார மாட்டார்கள் கண்டீர் — முரைசாரும்
தென்திருப்பே ரைப்பதியான் சீர்கேட்டு நாவிலவன்
றன்திருப்பே ரைப்பதியா தார்"

என்று அருளிச்செய்துள்ளார். இதனால், தென்திருப்பேரைத் திருமாலினது திருநாமத்தைச் செவியினாற் கேட்டலும் நாவினாலுச்சரித்தலும் செய்தால், பேரின்பத்திற்கிடமாகிய முத்தியுலகம் வாய்க்குமென்பது பெற்றும்.

இனி, இந்தத் திருத்தலத்தைப் பற்றியும், மகரநெடுங்குழைக்காதரைப்பற்றியும் பாடியுள்ள ஏனையநூல்களில் முக்கியமான சிலவற்றைக் காண்போம். அவையாவன —

(1) நாராயண தீக்ஷிதர் இயற்றிய மகரநெடுங்குழைக்காதர் பாமாலை.

(2) ஸ்ரீ அனந்தகிருஷ்ணையங்கார் அவர்கள் இயற்றிய திருப்பேரைக் கலம்பகம்.

(3) திருமேனிகவிராசர் இயற்றிய இந்த மகரநெடுங்குழைக்காதர் பிள்ளைத்தமிழ்.

மகரநெடுங்குழைக்காதர் பாமாலை :

இந்தநூல் ஸ்ரீ. உ. வே. சாமிநாதையர் அவர்கள் — 1939-இல் குறிப்புரை முதலியவற்றுடன் கலைமகள் வாயிலாக வெளியிடுவித்

தார். இந்தநூல் தென்திருப்பேரை நாராயணதீக்ஷிதர் என்ற தலவ காரசாமவேதியாகிய ஸ்ரீ வைஷ்ணவப்பெரியோரால் இயற்றப் பெற்றது.. அது தொடக்கத்து நம்மாழ்வார் காப்புச் செய்யுள் ஒன்றும், பெரியதிருவடியின் (கருடாழ்வாரின்) வணக்கச் செய்யுள் ஒன்றும், இறுதியில் வாழ்த்து ஒன்றும் சேர்ந்து நூற்றுமூன்று கட்டளைக்கலித்துறைகளால் ஆகியது. இவற்றுள், முதல் அறுபத்தைந்து பாடல்கள் தாம் சிறையில் கஷ்டப்பட்ட வருத்தம் தோன்ற மனம்நொந்து பாடியபாடல்களாகவும், மேலுள்ள முப்பத்தைந்து பாடல்கள் சிறையினின்று வடமலையப்பப்பிள்ளையனால் விடுதலை பெற்ற பின்னர் ஆறுதல் பெற்று மனமகிழ்ச்சியோடு பாடியவைகளாகவும் விளங்கும். இறுதியில் ஒரு வாழ்த்துப் பாடலையும் பாடி, பாமாலையை நிறைவு செய்தார். (இவர் சிறையிடப்பட்டதற்குக் காரணம் - வரிசெலுத்த இயலாத நிலையில் இருந்தமை. அதற்குக் காரணம் - அவ்வாண்டு பயிர் செவ்வையாகப் பயன்தராமை. இவர் சிறையிலிருந்தது திருநெல்வேலியில். அந்தச் சிறைக்கூடம் இருந்த தெரு இப்போதும் காவற்புரைத்தெரு என்னும் பெயரால் வழங்கி வருகிறது என்பர்.)

இந்தப்பாமாலை எளியநடையினது. பக்திச்சுவை மிக்கது. தென்திருப்பேரை வட்டாரத்தார் இதனைப் பக்தியுடன் பாராயணம் செய்கின்றனர். மற்றும், க்ஷேத்ராடனம் செய்யும்போது நாடோறும் இந்நூலைப் பாராயணம் செய்வார்களாம். இதனால் துன்பங்கள் விலகி, இன்பம் பெருகும் என்பது கண்கூடு. இந்நூல் தெய்வீக சக்தியுடையது. இந்தப்பாமாலை நூலை 1947-இல் டாக்டர் ஐயரவர்களின் திருக்குமாரர் ஸ்ரீ. உ. வே. S. கலியாணசுந்தரையர் அவர்கள் இரண்டாம் பதிப்பாக வெளியிட்டார். அப்போது அதன் விலை அணாஎட்டு.

திருப்பேரைக் கலம்பகம் :

இது தென்திருப்பேரை ஸ்ரீ. அநந்தகிருஷ்ணையங்கார் அவர்களால் இயற்றப்பட்டது. இவர் ஸ்ரீ வானமாமலைமடம் ஆஸ்தான வித்வானாக இருந்தார். இவர்க்கு அபிநவகாளமேகம், அபிநவ பிள்ளைப்பெருமாளையங்கார் என்ற விருதுகள் உண்டு. இந்நூலுக்கு

---

* வடமலையப்பப்பிள்ளையன் என்பவர் திருச்சிராப்பள்ளியில் சொக்கநாத நாயக்கருடைய அரசாட்சியில் 1659 - 1683 A D. அவருடைய பிரதிநிதியாகத் திருநெல்வேலிச் சீமையை ஆண்டுவந்தார்.

மதிப்புரை 1936-இல் (25-12-1936) டாக்டர். உ. வே. சாமிநாதையர் அவர்கள் வழங்கியுள்ளார். அதற்கு இருபத்தைந்தாண்டுகட்கு முன்னரே 1911-இல் (12-6-1911) திருமணம். செல்வ கேசவராயமுதலியார், M. A. அவர்களும், பின்னர் 1935-இல் (31-8-1935) உபயமஹாவித்வான், ஸ்ரீமத். உ. வே. திருநாராயணயங்கார் ஸ்வாமி அவர்களும் இந்த நூலைப் பாராட்டியுள்ளார்கள். இந்நூலின் காப்பு - நம்மாழ்வார், ஆழ்வார் பன்னிருவர், உடையவர், மணவாளமாமுனி, (தமது குருவான இருபத்து மூன்றுவது பட்டம்) வானமாமலைசீயர் இவர்கள் வணக்கத்தோடு அவையடக்கமும் கொண்டு திகழும். நூல் நூறு பாடல்களைக் கொண்டுள்ளது. இந்நூலுக்கு அரும்பொருள் விளக்கம் இந்த நூலாசிரியரின் இளைய சகோதரர் ஸ்ரீநம்பிஐயங்கார் அவர்களால் இயற்றப் பட்டது.

மகரநெடுங்குழைக்காதர் பிள்ளைத்தமிழ்

முன்னுரையாக அறியவேண்டியன :—

தென்திருப்பேரை எம்பெருமானுக்கு மகரநெடுங்குழைக்காதர் என்று பெயர். இப்பெயர் எப்படி வந்தது எனில்:— நிலமாமகள் திருமகளின் திருமேனியை வகித்துப் பொருநையாற்றின் கரையிலிருந்து தவஞ் செய்கையில், கூடுபுனற்றுறை (சமூக தீர்த்தம் என்னும்) திருமஞ்சனத்துறையிலே அவள் கையில் இரண்டு மகர குண்டலங்கள் அகப்பட்டன. அவற்றை அணியத்தக்க நெடியகாது உளனாகை வந்த திருமாலை அந்தப் பூமிதேவிகாதலித்துக் குண்டலத்தைச்சாத்தி மணந்து கொண்டாள். ஆதலின் அத்திருமாலுக்கு மகரநெடுங்குழைக் காதர் என்று பெயராயிற்று. இவர்க்கு "நிகரில் முகில்வண்ணன்" என்றும் பெயர். இந்தத் திருமஞ்சனத் துறையில் பெருமாள் உகந்தருளி அணியத்தக்க அற்புத மகர குண்டலம் அகப்பட்டமையால் இஃது மாகரிக தீர்த்தம் என வழங்கலாயிற்று. மற்றும், இங்கு வருணன் தான் அசுரர்க்கு இழந்த பாசத்தை மகரநெடுங்குழைக் காதரை நோக்கித் தவம்புரிந்து அப் பெருமானருளால் திரும்பப் பெற்றனனாதலின் அந்நன்றிக்காகத் தான் நின்று தவம் புரிந்த அத் தீர்த்தத்தில், "சகலவுலகங்களிலுமுள்ள தீர்த்தங்களின் மகிமையும் கூடுவதாக' என்று அருள் செய்தமையால் இத்துறை "கூடு புனற்றுறை" என்றும், சமூகதீர்த்தம் என்றும் பெயர் பெற்றது. இதனை "தடந்திரைப்புனல் யாவும் ஒருமுகங் கொண்டு வருணன் படியவே கூடுபொருநைத்துறை" (செ. 13) என்ற வரிகளால் இப் பிள்ளைத்தமிழில் பெறவைத்தார். நம்மாழ்வாரும் இதனை "கூடு புனல் திருப்பேரையிற்கே காலம் பெற என்னைக் காட்டுமின்கள்" என்கிறார். எனவே, இத்திருமஞ்சனத்துறை இன்றும் சிறப்பாகக்

கருதப்பட்டு வருகிறது. இதன் புனிதத்தன்மையை "வருணனு தரிக்குந் திருசந்திச் சமுக தீர்த்தத்துறைத் தீம்புனல் திவலையொரு சிறிதுபடிலோ உன் முயற்கறை சிதையும் "(அம்புலி : செ. 66) என்றதால் அறியலாம். வருணபகவான் தினமும் இத் துறையில் நீராடி ஆராதனை செய்வன் என்பதை :—"வருணன் தினம் ஆராதனை செய் பொருநைத்துறை" (செ. 81) என்றதால் தெளியலாம். மற்றும் "மால் உபயசரணாரவிந்தத்தெடுக்கும் பனிக்குறுந்திவலைபடு மலரிட்டிறைஞ்சி வருணன் பரவுவோன்" (செ. 41), வருணன் செயும் பூசனையுவந்தமால் (செ:104) இவைகளாலும் அவன் வழிபாடு செய்தலை யுணரலாம். அடிக்கடி வருணன் இப்பெருமானிடத்து ஈடுபட்டதைப் பின்வரும் வரிகளால் கவிராயர் பெறவைக்கிறார் :—

வருணன் வந்தடி பரவுமாழி நீர் வண்ணன் (செ : 1)
"கருணையொடு வருணனடி பரவு மகரக்குழைக்கடவுள்" (3)
"வருணன் பரவுமாழி நீர் வண்ணன்" (7)
"வருணனாராதனை செய்விமலன்" (14)
"வருணன் வருடு முபய சரண!" (55)
"வருணன் வந்திரு சரண்வணங்கிட (57)
"வருணன் பரவு மிருசரண" (94)

இனி, இந்த ஸ்தல விமானம் - புஷ்கர விமானம், பத்ரவிமானம் எனப்படும். திருக்குளம் - சுக்ரபுஷ்கரிணி, எம்பெருமான் வீற்றிருந்த திருக்கோலம், கிழக்கே திருமுகமண்டலம், சுக்கிரனுக்கும் பிரம்மாவுக்கும் ஈசாந்யருத்ரனுக்கும் பிரதியட்சம். முன் குறித்தபடி நம்மாழ்வார் மங்களாசாசனம் பெற்றது. இந்தத்தலம் திருநெல்வேலிக்குக் கிழக்கே 24 மைலில் உள்ளது. ஆழ்வார்திருநகரிக்குச் சமீபமாக 5 மைலில் உள்ளது.

(குறிப்பு :- தென்திருப்பேரை என்றது - சோழநாட்டுத் திருப்பேர்நகர் என்னும் அப்பக்குடத்தான் ஸந்நிதியினின்று வேறு காட்டுதற்கென்க. இந்த அப்பக்குடத்தான் ஸந்நிதி கோவிலடி யெனவும் வழங்கப்படும்.)

இனி ஓர் முக்கியமான ஆய்வு.

நம்மாழ்வார் திருவாய்மொழி 7 ஆம்பத்து 3-ஆம் திருப்பதிகப்பாசுரங்களுக்கு உரை வகுத்த பெரியோர்களில் சிலர் "திருப்பேரெயில்" என்பதே இத்திருப்பதியின் திருநாமம். இது 5, 6, 7, 9 பாட்டுக்களினின்று விளங்கும். பெரியபிராகார

முடையது என்றது பொருள். நாளடைவில் பேரை என்று மருவி வழங்கலாயிற்று.'' என்று அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்கள். மேற்குறித்த எண்ணுள்ள பாட்டுக்களில் —

''திருப்பேரையிற்கே என்னைக் காட்டுமின்'' (5)
''திருப்பேரையிற்கே என்னைக் காட்டுமின்கள்'' (6)
''பேரையிற்கே புக்கு'' (7) *

[*இந்த ஏழாம் பாடலில் மூன்று நான்காமடிகளின் முதலில் 'ஆரை' என வைத்திருப்பதற்கேற்ப இரண்டாமடியில் 'பேரை' என்பது பெரிதும் பொருந்துவதாகும்.]

''தென்திருப்பேரையின் மாநகரே சேர்வன்'' (9) என்று தொடர்கள் காணப்படுகின்றன.

''திருப்பேரையில்'' என்பதற்குப் பதிலாகத் ''திருப்பேரெயில்'' என்று கொள்ளவேணும் என்பது இவர்கள் அபிப்பிராயம்.

ஈண்டு ஒன்று கூற விழைகின்றேன். மேற்குறித்த ''திருப்பேரையில்'' என்ற விடங்களில் ''இல்'' என்பது வேண்டா வழிச்சாரியை. மற்றும் சாரியை மொழிக்கு இறுதியாக நிற்றலும் உண்டு. ஆதலின் ''திருப்பேரையின்'' என ஐகார வீற்றதான மொழிக்கு இறுதியில் நின்றது. மேலும், சாரியை பற்றுசு போல விகுதிபதவுருபுகளிடையே நின்று புணர்த்துவது என்பது பிரயோக விவேகவுரை, அதன்படி நோக்க,திருப்பேரையிற்கே'' என்றவிடத்து.
'இன்' என்பது பற்றுசுபோல 'பேரை' என்ற பதத்துக்கும் 'கு' என்ற நான்கனுருபுக்கும் இடைநின்று புணர்த்துவதாயிற்று. இனி, திருப்பதிகத்து ''திருப்பேரையில் வீற்றிருந்த'' என்பது திரும்பத் திரும்ப வந்துள்ள இடங்களைத் ''திருப்பேரெயில் வீற்றிருந்த'' என்று மாற்றுப் பாடங்கொண்டுள்ளார்கள். அப்போது ''திருப்பேரெயில் வீற்றிருந்த'' என்றவிடத்து ஏழனுருபு தொக்கது எனக் கொள்ள வேண்டும். ''திருப்பேரையில் வீற்றிருந்த'' என்னும் பொழுது வேற்றுமை விரி காணப்படுகிறது. மற்றும் ஒரு முக்கியமான இடம் கவனிக்க வேண்டுகிறேன். மணவாளமாமுனிகள் தமது திருவாய்மொழி நூற்றந்தாதியில் ''தெள்ளியமால் தென் திருப்பேர் சென்றுபுக''என்று அருளிச்செய்துள்ளார். இங்கு ''திருப்பேர்'' என்பது திருப்பேரை என்பதன் மரூஉவாகும். இனி, ''திருப்பேரெயில்'' என்பது 'திருப் பேர்' என மருவியது என்று கொள்வதோ அல்லது திருப்பேரை என முன்னர் மருவிய பெயரே மேலும் 'திருப்பேர்' என மருவியது என்று கொள்வதோ சிறப்பின்று. [இங்கே கானப்பேரெயில் என்பது கானப்

பேர் என மருவியுள்ளதுபோல் ஈண்டும் கொள்க எனச் சாதிக்கலாம் ஆனால், ''கார்வயல்சூழ் கானப்பேர் உறை காளையையே'' என்று தேவாரத்தில் தொடர் அமைந்துள்ளதேயன்றி கானப்பேரெயில் என்ற குறிப்பு காணோம். மற்றும் எயில் என்பது - மதில் என்ற பொருளது. (ஊர் என்ற பொருளதுமாம் : (திவாகரம்) பிராகாரம் என்ற பொருளில் வாராமை காண்க.) இவ்வாற்ருன் நோக்க, 'திருப் பேரை'' என்பதே சாலச் சிறக்கும் என்பது அடியனேன் கருத்து.

இனி, திருப்பேரையைச் சார்ந்த அபிநவகாளமேகம் ஸ்ரீ. அநந்தகிருஷ்ணயங்கார் தமது நூலுக்குத் ''திருப்பேரைக் கலம்பகம்'' என்று பெயரிட்டுள்ளார். மற்றும், தாம் பாடிய கலம்பகம் நூறு பாடல் களில் ஓரிடத்திலாவது 'பேரெயில்' என்ற குறிப்பே இல்லை. அன்றி யும் 'பாமாலை' பாடிய நாராயண தீஷிதரும் ஓரிடத்திலாவது பேரெ யில் என்று குறிப்பிடவில்லை.

அனைத்தினுக்கும் மேலாக, பிள்ளைப்பெருமாளையங்கார் தமது நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியில், ''தென்திருப்பேரைப் பதியான் சீர்கேட்டு நாவிலவன், றன் திருப்பேரைப் பதியாதார்.'' (இன்பக் கரைசாரமாட்டார்கள்)என்றுகூறியிருப்பதை நோக்குமிடத்து 'தென் திருப்பேரை' என்பதுதான் அத்தலத்தின் பெயர் எனத் தேறு கிறது. மேலும் நாராயண தீக்ஷிதர் சிறையிலிருந்த காலத்தில் அவரு டனிருந்த ஒருவர் பாடிய செய்யுள் பின்வருமாறு :—

''தென்திருப்பே ரைப்பதிக்குத் தீங்கொன்றும் வாராமல்
உன்திருப்பே ரைப்பலகா லோதினேன் - மன்றிருப்பேர்
ஆயிரம் பெற்ற வழகா ! குழைக்காதா !
நீயிரங்கிக் காப்பாய் நிதம்'' என்பது.

ஆக, மேற்கூறியவைகளை நோக்கும்போது ''திருப்பேரை'' என்ற பெயரே வழங்கிவந்தது எனப்புலப்படும்.

பிள்ளைத்தமிழ்நூலால் பெறலாகும் அரிய விடயங்கள் :

இனி, இந்தத் தென்திருப்பேரையைப்பற்றிப் பிள்ளைத்தமிழ்ப் பாடல்களில் ஆங்காங்குக் காட்டப்பட்டுள்ள சிலமுக்கியமான விஷ யங்களையறிதல் வேண்டும். அவை பின்வருமாறு :

(i) **நூற்றெண்மர் வரவு :** இராவணுதியரை வென்று இலங்கை யினின்று திரும்பிய கொற்றவல்விலிராமன் சோழநாட்டில் காவிரிப் பக்கத்தில் பதினெட்டு ஊர்களை * ஜைமினீயதலவகார ஸாமவேதி

களுக்குத்* தானம் பண்ணினான்* அவற்றில் வாழ்ந்து வந்தவர் களிலே நூற்றெண்மர் சுந்தரபாண்டிய வழுதி வேண்டுகோளுக் கிணங்கித் தென்திருப்பேரைக்கு வந்து குடியேறினர். அவர்களுக்கு அவ்வழுதி நூற்றெட்டு கிரஹதானம் செய்யுங்காலத்தில் அவர் களுள் ஒருவர் காணாமற்போகவே அவ்வரசன் பெருமாளைப் பிரார்த் திக்க, பெருமாள் "நாம் கருடனோடு அரசாழ்வார் அடியில் உள் ளோம்" என்றார். அதுகொண்டு பெருமாளையே நூற்றெட்டாவது நபராகக் கொண்டனர் சிலர். திருப்பேரைக் கலம்பக ஆசிரியர் அநந்தகிருஷ்ணையங்கார் அங்ஙனமே கொண்டார். "மாநூற் றெளிந்த மாநூற் றெண்மர், இனத்திற்றானோர் இனன்போல் விளங்கி" [திருப் : கலம்பகம் (செய் : 1)] காண்க. இனி, பெருமாளின் நியமனப்படி கருடாழ்வாரே நூற்றெண்மரில் ஒருவராய்த்தானம் ஏற்றுத் தமது கருடாழ்வார் ஸந்நிதியில் பெருமாளோடு சமபீடத்தில் எழுந்தருளி யிருக்கிறார் என்பது வரலாறு. ஆகவே, பிற விஷ்ணு ஆலயங்களிற்

---

*அந்தப்பதினெட்டு ஊர்களாவன : காவிரிக்கு வடகரையில் எட்டும், தென் கரையில் பத்தும் ஆகும். அவற்றின் பெயர்களைப் பின்வரும் வெண்பாக்களால் அறியலாம்.

"திட்டைகுடி அன்பில் திருநறையூர் ஆதனூர்
மட்டவிழ்பூந் தோகூர் வயலாலி - சிட்டர்திருக்
குன்ற மருதூர் குறைதீர்த்தார் அப்பனூர்
என்று வடகரையில் எட்டு".

"இடையாற்றி னங்குடிசீர் எப்போதும் வாழூர்
மிடைமணலூர் ஈரைந்தாம் வேலி - இடைமருதூர்
நாணமங்கை பிள்ளைமங்கை நல்லபெரு மாள்மங்கை
பாணமங்கை தென்கரையிற் பத்து".

(குறிப்பு : பாமாலைபாடிய நாராயணதீக்ஷிதர் இப் பிள்ளைமங் கையைச் சேர்ந்தவர் : பிள்ளைமங்கலம் எனவும்படும்).

* தலவகாரம் என்பது சாமவேதத்தின் சாகைகளுள் ஒன்று. "ஓதக் கடலொலிபோல எங்கும்எழுந்த நல்வேதத்தொலி நின் றோங்கு தென்திருப்பேரை" என்று நம்மாழ்வார் மங்களாசாசன மாதலின், ஸாமவேதிகளைக்குடியேற்றியது. நல்வேதம் — ஸாம வேதம் என்றது ஈடு. இனி, நூற்றெட்டு என்ற எண் மங்களகர மானது : நூற்றெட்டு உபநிடதங்கள், நூற்றெட்டுதிவ்யதேசங்கள் என்பன ஒப்புக்காண்க.

போல, தென்திருப்பேரையில் மகரநெடுங்குழைக்காதர் க்ஷேத்திரத்தின் நேரே முன்பக்கத்தில் ஸந்நிதிக்கருடன் எழுந்தருளியில்லாமல் ஸந்நிதிக்குள்ளேயே நுழைவாயிலிடத்துப் பெருமாளுக்கு இடப்புறமாகும்படி விலகியெழுந்தருளியிருக்கிறார்.

இந்த நூற்றெண்மர் வரவினைத் திருப்பேரைக்கலம்பகம் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது :—

"அம்புதி வளைந்த அம்புவி யின்கண்
தேசமர் சோழமா தேசமீ தெழில்சேர்
காவிரிந் தோங்கும் காவிரி மருங்கில்
தானமா ராமன் தானமுன் செயவே
பதினெண் பதியுட் பதிவா னவருட்
சிலரவ ணின்றுஞ் சிலம்பாற் றுவளச்
சுந்தர பாண்டியச் சுந்தர வேந்தாற்
பேரழ கார்திருப் பேரைவந் தணுகி
அளகையம் பதிபோ லளவிலாச் சீரொடு
நித்தமும் வாழு நித்தியர் போன்ற
மாநூற் றெளிந்த மாநூற் றெண்மர்
இனத்திற் றுேேனார் இனன்போல் விளங்கி
அன்னவே தன்னென அன்னவர் புகன்றிடும்
இசைமிகு கானமா விசையுநன் மறையுடன்
திரமதாப் பதின்மர்சொல் திரவிட மறையுமுட்
குழையுறக் கேட்டுங் குழைநெடுங் கன்று !
வெள்ளைச் சுரிசங் கேந்திய விமல !"

(திருப். கலம்பகம். செ : 1)

இனி, இப் பிள்ளைத்தமிழ் நூலில் நூற்றெண்மரைப் பற்றிய தொடர்களைத் தொகுத்துக் காண்போம்

'நூற்றெண்மர் சிந்தை குடிகொண்டிருக்கும் மாமாலே' (செ : 1)

'சந்நிதியில் நூற்றெண்மரும்' (3)

'நூற்றெண்மர் வாழ்வே' 26 - 34., 82, 83

'நூற்றெண்மரொடும் விளையாடும் மால் (47)

'எக்காலமும் நூற்றெண்மர் குழாம் இதயத்திருந்து' (103)

'அருநான்மறை நூற்றெண்மரும்வந் தங்கீகரித்து வடம்பிடிப்ப' (104) - என்பன.

இந்நூற்றெட்டுக் குடும்பத்தின் வழிவந்தவர்கள் இன்னும் அவ் ஊரில வாழ்ந்து வருகின்றனர். இந்நூலாசிரியருக்குத் தலவகாரசாம வேதிகள்பால் இருந்த பெருமதிப்பு புலனாகிறது.

(ii) **வருணன் வழிபாடு செய்தல் :**

இதனைப்பற்றிய தொடர்கள் முன்னரே குறிக்கப்பட்டுள்ளன.

(iii) **கூடுபுனற்றுறை :**

'குடிபுகுந் தடந்திரைப் புனல்யாவு மொருமுகங் கொண்டு வருணன்படிபடவே கூடு பொருநைத்துறை' (13)

'வருணனுதரிக்குந் திருசந்திச் சமூகதீர்த்தத்துறைத் தீம் புனல்' (66)

'அள்ளிக்குடிக்கும் தடம்பொருநை ஆற்றிற் கூடுபுனற் றுறை' (77)

'மிகமுழங்கு கூடும் புனற்றுறை' (101)

(iv) **திருவழுதிவளநாட்டின் செழுமைச்சிறப்பும், பேரையின் வளமைச் சிறப்பும :**

''தேமா நறுங்கனித்தேன் மதகினூடுபாய்
திருவழுதிவள நாடு'' (1)
''கொழுநுழைந்த பழனக்கொழுஞ் சேற்றினில்,
வரம்பிற் பாகுபடு நெட்டிலைக் கரும்பில்,
பசும்பூங்காவில் மணலினில்வாய்
மடையிற் பணிலந்தவழ்பேரை'' (31)

''முதிரவிளையுங்கொழும்பவளக்குலைசாலி மூடுதொறும் வாய் மடைதொறும் மூரிப்பகட்டுவரிவாளை வெடிதர வியலைமோதும் புனற் கேணியும், அதிருமணி மதகும் வளையுகள் வழுதிநாடு'' (65)

''கன்னிக் கமுக மிடறுடியக்
காய்க்கும் பசுங்காய்க் குலைசிதறக்
கதலிக் குலங்கள் அடிசாயக்
கயல்பாய்ந் துளைந்து வாலறையும்
செந்நெற்பழனத் திருப்பேரை'' (80)

"கானூறு பச்சைப் பசும்பூக மடல்விண்டு
கக்கும்கொழும்பிரசமும், கதலிக்கொழுங்
கனியுடைந்து வழிமதுவும், கலந்
தோடியலைமண்டி, அத்தேறுறு பாயும்
வயல்சூழ் வழுதி நாடு. (85)

"வயல்கடொறும் வாய்மடைதொறும்,
சங்காரவாரஞ்செய் தகடுளைந் தலறித்
தவழ்ந்தேறி முத்துயிர்க்கும் தண்ணந்
தடந்தாமரைப் பொகுட்டாசனத்தமனியப்
பொற்கோவிலிற் செங்காலனம்
துயிலும் வழுதி வளநன்னாடு" (89)

"தாறுபடு கதலிக் கொழுங்கனி யுடைந்துவழி
சாறும் மாங்கனியினறவும் தருமுடப்
பலவினற்கனியுடைத்துப் பெருகு தண்ணறவு
அலைமண்டியே சேறுபடு
பள்ளவயல் சூழ் வழுதிநாடு" (90)

"முதுபுனலோடையும் அகழியும் வால்வளை
மொய்க்கும் கழனியிலும் செழுமலர்
மணம் மலி வழுதி நன்னாடு" (92)

"தளைவிட்டலரும் பசும்பாளைத் தலைப்பூங்கமுகம் மணிமிடற்றுத் தாங்கும் பவளக்குலைகவிப்பத் தடஞ்சால் வழியூர்ந் தகடுளைந்து வளைமுத்துதிர்க்கும் வயற்பேரை" (94)

"வரைச்சந்தகிலும் செம்மணியும், மதவாரணக் கிம்புரிமருப்பும், மயிற்பீலியும் வெண்ணித்திலமும்வாரிச் சுருட்டிக் கரை பொருது திரைக்கும் திரைத்தண் பொருநைநதி (பாயும் நாடு) (95)

"மருவார் பொழிலிற் கேணியில் வாய்மடையில் சுழியில் படு வரம்பில் வளைமுத்துயிர்க்குந் திருவழுதிவளநாடு" (96)

"கால்வாய்ப் புனலிற் கேணியினில் கழுநீர்க்குழியில் வாய் மடையில் கருஞ்சேற்றினில் நல்லருங்கயத்தில் கமழ்பூந்துறையில் வெகுண்டெழுந்து சேல்பாய் வழுதித்திருநாடு" (97)

(குறிப்பு : இவற்ருல் ஆசிரியரின் நாட்டபிமானம் விளங்கும்).

(v) திருப்பேரையில் தமிழ்பயில வழங்கும் சீர்மை :

'பாகுபெற வடிக்கும் தமிழ்த்தென் திருப்பேரை' (28, 82)

'தெள்ளிப்பயிலுந் தமிழ்ப்பேரை (52, 54)

'தெளிக்குந் தமிழ்த்தென் திருப்பேரை (81)

'கொழிக்கும் தமிழ்த்தென் திருப்பேரை (101-104)

(vi) பிள்ளைக்குழாம் ஒலி மலிதல் :

'கண்மணியெனத்தகைய பிள்ளைக்குழாமும் மலிகாவும் சூழ் பேரை' (3)

'மகவொலியும் நாளும் வளமைபெறு' (89)

(குறிப்பு : இந்தப் பிள்ளைக்குழாம் விளையாட்டு ஒலி கேட்டும் கண்டும் இன்புறத்தான் மகரநெடுங்குழைக்காதர் தமது கருடனைச் சற்றுவிலகச்சொன்ஞர் என்பர்).

(vii) சிவபிரானைப்பற்றிய குறிப்புகள் :

'விடந்தாவு பஃறலைக் கட்செவி கிடந்தாட விரிதிரைக் கங்கையாட, வேணியாடக் காளிதன்னுடன் வாதாடும் வெள்ளிப்பொருப்பனது பாந்தள் தடந்தாரு வேரோடு புறந்தள்ள' (38)

'செக்கச் சிவக்குங் கொழும்பவள வார்கதிர் செஞ்சடாடவி மணிமுடிச் சிவசங்கரக் கடவுள்' (43)

'நதியோடரவறுகெருக்கணியுஞ்சடைக்காட்டு நம்பன் (65)

(viii) இராமபிரானைப்பற்றிய குறிப்புகள் :—

'சீதையை மணம் புணர மிதிலையம்பதி புகுந்தாதிசனகன் செஞ்சிலையிறுத்தவன் (2)

'தாரைவேல்விழிபாய் வாலிமார்புருவவொரு சரம்விடுத்துக் கொன்றவன்; தம்பிக்கு மகுடங்கவித்தரசளித்தவன்' (4)

'குண்டார் உததிப் புனலனல் குமிறக் கோதண்டம் வாங்கிக் குழையவளைத்தொரு பகழி தொடுத்தவன்' (10)

''கற்புடைச் சீதையாளை நச்சிநற்சிலை வளைக்கும் பசுந்தண் துழாய் ராமாவதார தீரன்'' (11)

"கொடியராவணன் மகுட முடிசிதற வரிசிலை குழைத்து வெஞ் சமர்முகத்துச் சிறுநாணெலிக் கொண்டு விளையாடும் மேகம்" (17)

"வாதுபுரி கொடிய சேனுபதி யிராவணன் மனவலிகள் திண் டாட ஆடியருள் (23)

"இலங்காபுரத்திறைவன் நெடியராவணன் மகுடமும் நீலி தாடகை மார்பும் மாரீசனும் பாரநெட்டூர அதிகாயனும் கொலைவளைக் கும் கும்பகன்னனும் நிகும்பனும் குறுகாத வல்லசுரரும் கொடிய வாலியும் மராமரமேழும் உருவக் குழைத்து வடிவாளிதொட வெஞ் சிலைவளைக்கும் திருக்கைத்தாமரைக் கொண்டல்" (24)

"கரதூடணன் திரிசிரர் நிகும்பன் கும்பகன்னனிந்திரசித்து கலங்காத ராவணன் மடிய லங்காபுரங் கனல்கொளுந்தப் பெருவிரற் சரடுபூட்டிச் சிலைக்கடை குழைக்குங் கொண்டல்" (35)

"உலகமுழுதும்பரதன் மணிமுடிகவிப்ப நீ வெவ்வனமேகெ னுஞ் சிறியதாய்சொற்றலைக்கொண்டு மணிநெடுஞ் சீரைசுற்றிப், பெண்ணென்ற சீதையொடும் இளையவன்றன்னொடும் பெருங்கான கத்திற்புகும் பெம்மான் சிலைக்கடை குழைத்து இலங்காபுரங்கட்டழிக் குந்தேவர்கோன்" (40).

மறலி உயிர்குடிப்பக் கருநிறத்தாடகையை வதைபடுத்தச் சிலைக்கடை குழைத்து அடுகணைதொடுத்து, ஒக்கில் பெருந்தவக் கவுசிகன் வேள்வியுஞ் சுருதிநூன்முறைமுடித்து, சொல்லரிய மிதிலா புரிச்சனகன் விற்கண்டதுண்டப்படுத்தும் எங்கோன்" (43)

முனியுமிள வலுமுடன் வரத்தன் திருத்தாளின் முளரித் துகட்கருங்கல் முனியிட்ட சாபந் தவிர்த்துமுன் னுருவெய்த முது கருணை யோடளித்துச் சனகன்மிதிலாபுரிச் சிலைவளைத்துச் சீதை தனை மணம்புணர் தண்துழாய்ச் சக்கராயுதக்கடவுள்" (47).

"சந்தப்படாமுலைத் தார்குழற் கோமளத் தையல் சானகி பொருட்டுத்தடமதி லிலங்காபுரம் பொடிபடுத்தித் தகர்த்து முடி பத்தும் மண்மேற்சிந்தச் சரந்தொட்டச்சிலை வீரராகவன்" (71)

"பரதனிந்த நாடாளுவன் : நீ காடாளநட என்றுரைத்த சிற்றவைசொல் நலமேற்றலைக்கொண்டொருப்பட்டு, கொந்தார் குழலி சனகியொடுங் கூடப்பிறந்த இளவலொடும் கொதிக்கும் பரல்வெங்கொடுங்கானம் குறுகும்பொழுதுங் குளிர்ந்தலர்ந்த செந்தா மரைப்பொற்றிருமுகத்துச்செல்வன்" (98).

குறிப்பு :— மேற்கூறிய தொடர்களை நோக்குங் காலத்து இராமாவதாரத்தில் திருமேனி கவிராசர்க்கு இருந்த ஈடுபாடு அதிகம் என்று தெரிகின்றது.

(ix) நம்மாழ்வாரிடத்தும் அவர் திருவாய்மொழியிடத்தும் ஈடுபாடு :—

"ஞானவெள்ளத்து அலைபுரட்டு திருமுத்திரைக்கைக் கோமானை, எழுதரிய சதுர்மறையும் அள்ளிக் கொழித்து வண்டமிழ்ப்படுத்திக் கூறு திருவாய்மொழியோர் நாலாயிரஞ்செய்த குருகைமுனி" (1)

"குருகையம்பதி மருவுநங்கை கண்மணி நன்குவலவன்" (59)

"குருகூரனுவந்தோதும் பழுதறு முது 'திருவாய்மொழி நூல் செவி பற்பல புகுநேயன்" (92)

(x) கதைக் குறிப்புகள் (allusions)

1. குவலயாபீடத்தை மருப்பொடித்து அழித்தது (20)

2. காளிங்கன்மேல் நடித்து 'அதனையடக்கியது (29,32,44,76)

3. கதிரை ஆழியால் மறைத்தது (30)

4. சொற்றமிழ்க்கு நற்பாய் சுருட்டிப் பின்சென்றது (32)

5. அனல்கொளுந்தக் கடல்மேல் காய்கணை தொட்டது (32)

6. கடல் கடைந்தது (34, 76)

7. பாரிஜாத மலர் கொணர்ந்தது (37, 61, 78)

8. கஜேந்திரனைக் காப்பாற்றியது (39, 50, 102)

9. அகலிகை சாப விமோசனம் (47, 72)

10. வரையெடுத்து ஆநிரை காத்தது (50)

11. திரிபுரம் எரித்தது (57)

(xi) சிறு குறிப்புகள் :—

(a) சமயம் ஆறு (29, 96)

(b) நரசிம்மாவதாரம் (12, 51)

(c) திரிவிக்கிரமாவதாரம் (41, 72, 81)

(d) தக்கன் வேள்வி (71)

(e) சகடுடைத்தது (29,56, 97)

(f) மருதிடை தவழ்ந்தது (29,56, 97)

(g) வெண்ணெய்க்களவு (12,22, 80)

(h) சீதையின் திருமணம் (49,52,56)

(i) திருப்பேரை வல்லி (15,44)

(j) கருடக்கொடிக்கம்பம், திருமேனிமண்டபம் (99)

(xii) மகரநெடுங்குழைக்காதரைக் குறிக்கும் தொடர்களிற் சில :

திருவழுதிவளநாடன், தென்திருப்பேரை நகர்க் காவலன், நூற்றெண்மர்சிந்தை குடிகொண்டிருப்பவன், வருணன்வந்தடிபரவும் ஆழிநீர் வண்ணன், புயல் வண்ணன், வானப்பிரான், நம்குலநாதன் பேரையூரன், பேரையாதிபன், துழாய்ப் பெம்மான், நிகரில்முகில் வண்ணன், பேரைவருகருணாகரக்குரிசில், தாமோதரதூயர், உறிமிசை யிருந்த அளை களவிறல் வாரியென்று ஒரு திவலை சிந்தா துணும் குலநாதன், வருணனாராதனைசெய்விமலன், செல்வத் திருப்பேரைவல்லிக்கு மணவாளன், கறந்து காய்ச்சும் தித்தித்த பாலுக்கும் இச்சித்து நின்றவன், நூற்றெண்மர் வாழ்வு, தென்திருப் பேரை வருநங்குழைக்காத முகில், பேரைச்செல்வன், திருப்பேரைக் கோ, பொருநையந்தண்துறைவன், திருப்பேரைவல்லி தடமுலைச் சுவடு பொருதுழுதமணிமார்பன், சிவனும் அயனும் தொழநின்றவன், நூற்றெண்மரொடும் விளையாடும் மால், முதுநான்மறைக்கொரு முதல்வன், தமிழ்ப்பேரைச் செல்வன், வருணன் வருடும் உபய சரணன், குருகையம்பதி நன்றுவலவன், இங்கித கவிதை கொண் டருள் மகரவண்குழை, தமிழ்க்குருகும் பெருமைப் பெருமான், பேராயிரம் பெற்றுயர்ந்த திருப்பேரைப் பெருமான், தென்பேரை மாயன், துளவுமணங்கமழும் தேவன்.

(குறிப்பு :-64- ஆஞ் செய்யுளில் ''பெருமான்'' என்ற சொல் பயிலும் தொடர்கள் பன்னிரண்டு அமைத்துள்ளார் துவாதசநாமத் திற்கேற்ப : இந்த நயம் பாராட்டத்தக்கது. மற்றும், 'குலநாதன்' என்ற சொல்லைப் பெருவாரியாக உபயோகப்படுத்தியுள்ளமை குழைக்காதர்மாட்டு கவிராசரது பேரபிமானத்தைக் காட்டுவ தாகும்.)

ஆண்பாற்பிள்ளைத்தமிழில் வரும் பத்துப் பருவங்களின் விளக்கம்

1. காப்புப்பருவம்

திருமால் முதலியோரைக் குறித்துப் பாட்டுடைத் தலைவனாகிய இந்தக்குழந்தையைப் பாதுகாக்க என்று கூறும் பருவம்! இது இரண்டாம் மாதத்திற்கூறப்படும். இந்தக் காப்புப் பருவத்தில் திருமால் சிவன் பார்வதி முதலியோர் கூறப்படுவர்; இதனை,

"மங்கலம் பொலியுஞ் செங்கண் மாலே
சங்கு சக்கரந் தரித்த லானும்
காவற் கடவு ளாத லானும்
பூவினள் புணர்த லானு முற்கூறிக்
கங்கையும் பிறையும் கடுக்கையும் புனையுமை
பங்கனென் றிறைவனைப் பகர்ந்து முறையே
முழுதுல கீன்ற பழுதறு மிமயப்
பருப்பதச் செல்வியை விருப்புற வுரைத்து
நாமகள் கொழுநன் மாமுகி லூர்தி
ஒற்றைக் கொம்பன் வெற்றி வேலன்
எழுவர் மங்கையர் இந்திரை வாணி
உருத்திரர் அருக்கர் மருத்துவர் வசுக்கள்
பூப்புனை யூர்தியிற் பொலிவோ ரனைவரும்
காப்பதாகக் காப்புக் கூறல்"

என்றது இங்குக் காணத்தக்கது.

இங்ஙனிருப்பவும், இந்தப் பிள்ளைத்தமிழ் திருமாலாகிய மகர நெடுங்குழைக்காதரைப்பற்றிய தாதலின், அத் திருமாலே பாட்டுடைத்தலைவனாயினமையின் இதன் ஆசிரியராகிய திருமேனி கவிராசர் நூலின் கௌரவத்திற்கேற்ப ஆழ்வார்கள் பன்னிருவரையும், ஆசார்ய பரம்பரையில் நடுநாயகமணியாயிலங்கும் உடையவரை (இராமநுஜர்) யும் காப்பாகக் கொண்டு இப்பருவத்தையமைத்துள்ளார். காத்தற் கடவுட்குக்காப்பு அடியார்களேயன்றோ!

2. செங்கீரைப்பருவம்

பிள்ளை தவழும்போது ஒரு காலை முடக்கி மற்றொரு காலை நீட்டிய வண்ணம் முழந்தாளையும் இருகைகளையும் ஊன்றித் தலை நிமிர்ந்து முகமசைத்து ஆடும் பருவத்தைக் கூறும் பகுதி. ஐந்தாம் மாதத்திற் கூறப்படுமென்பர். "ஐந்தாந்திங்களிற் செங்கீரையாடலும்" என்பது பிங்கலந்தை. "ஒருதா ளூந்தி யெழுந்திரு கையும் ஒருங்கு பதித்து நிமிர்ந்து, அருள் பொழி திருமுக மசைய வசைந்தினி தாடுக செங்கீரை" என்றார் குமரகுருபரர்.

இனி செங்கீரை - அழகிய கிளி இப்பொருளில், கீர என்ற வட சொல் கீரை எனத் திரிந்து வந்த தென்க. கிளி ஒரு காலைப்பதித்து ஒரு காலை யூன்றி இருபுறத்தும் தலையசைத்துச் சாய்ந்தாடுதல் போல, குழந்தை தவழும்போது ஒரு முழந்தாளையூன்றி ஒரு முந்தாளை மடித்துத் தூக்கி இரு தோளிலும் மாறி மாறித் தலையொன்றும்படி பலமுறை சாய்ந்தாடும் பருவமென்க : இப் பருவத்தில் குழந்தை இவ்வாறு ஆடுதலை, "இருகை மலரம்புவி பதித்தொரு முழந்தாளிருத்தி யொருதாள் மேல் நிமிர்த்து" என்றும், "இக்கரமும் இக்கரமும் இத்தனமும் இத்தனமும் என்று....-முகமதிகம் அசைய" என்றும் சிவஞான முனிவர் தமது "செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழில் "கூறியுள்ளார். செங்கீரைப் பருவமென்பதற்கு—செவ்விய கீரைத்தண்டு காற்றில் அசைந்தாடுவது போல ஆடும் பருவம் எனக் கூறிஞரும் உளர்.

3. தாலப் பருவம்

தாயர் குழந்தையைத் தொட்டிலிற்கிடத்தி நாவையசைத்துப் பாடும் பருவத்தைக் கூறும் பகுதி : (தாலம் - தாலு : நாக்கு) இது எட்டாம் மாதத்திற் கூறப்படும் : "எட்டாந்திங்களின் இயல் தாலாட்டலும்" என்பது, பிங்கலந்தை.

4. சப்பாணிப்பருவம்

பிரபந்தத் தலைவனாகிய குழந்தை கையுடனே கையைச் சேர்த்துக் கொட்டும் பருவத்தைக் கூறும் பகுதி. இது — ஒன்பதாம் மாதத்திற் கூறப்படும், "ஒன்பதாந்திங்களில் உயர் சப்பாணியும்" என்பது. பிங்கலந்தை.

5. முத்தப்பருவம்

முத்தந்தருமாறு குழந்தையைக் கூவியழைக்கும் பருவத்தைப் பற்றிய பகுதி; இது பதிஞேராம் மாதத்திற் கூறப்படும். "பத்தி ஞெடொன்றில் முத்தங் கூறலும்" என்பது, பிங்கலந்தை.

6. வருகைப் பருவம்

குழந்தையை அருகில் வருமாறு அழைக்கும் பருவத்தைக் கூறும் பகுதி : 'வாராணைப் பருவம்' என்றும் இது வழங்கப்படும். இது - பன்னிரண்டாம் மாதத்தில் திகழும். "ஆண்டு வரையின் ண்டு வருகென்றலும்" என்பது, பிங்கலந்தை.

7. அம்புலிப்பருவம்

பிரபந்தத் தலைவனாகிய குழந்தையோடு விளையாட வரும்படி சந்திரனையழைக்கும் பருவத்தைக் கூறும் பகுதி. (அம்புலி - அழகு புல்லப் பெற்றிருப்பது என்ற காரணம் பற்றிச் சந்திரனுக்கு வந்த பெயர்). இது, பதினெட்டாம் மாதத்திற் கூறப்படும். "மதியீ ரொன்பதில் மதியை யழைத்தலும்" என்பது, பிங்கலந்தை.

[இந்த அம்புலிப் பருவம் ஏனைய பருவங்களைக் காட்டிலும் பாடற்கு அரிய தென்பர்; "பிள்ளைக்கவிக்கம்புலி புலியாம்". அம்புலியை அழைக்கையில் சாமபேததானதண்ட வகையால் முறையே அழைப்பது கவிமரபு.]

8. சிற்றிற் பருவம்

வீடுகட்டுஞ் சிறு பெண்கள் தாம் வருந்திக் கட்டிய சிற்றிலைச் சிதைக்க வருங் குழந்தையை அவ்வாறு செய்யவேண்டாவென்று சொல்லும் பருவத்தைக் கூறும் பிரிவு. சிறுமை + இல் = சிற்றில்: சிறுமையென்னும் பண்புப்பெயர் ஈறுபோய்த் தன்னொற்று இரட்டிற்று. இத்தொடர் - சிற்றிலைச் சிதைத்தலென்னும் பொருளைத் தந்தது. சிறுபறை முதலியவற்றிலும் இங்ஙனமே காண்க. "சிறு பறை முழக்கலையும் சிற்றில் சிதைத்தலையும் சிறுதேருருட்டலையும் சிறுபறை சிற்றில் சிறுதேர் என்றார்: பெயரொடு தொழிற்கு ஒற்றுமையான்" என்ற இலக்கண விளக்கவுரை இங்கு நோக்கத் தக்கது. சிற்றில் சிதைத்தல் இரண்டாமாண்டில் நிகழும் என்ப.

9. சிறுபறைப் பருவம்

பிரபந்தத்தலைவனான குழந்தையைச் சிறுபறை கொட்டும்படி வேண்டிக் கொள்ளும் பருவத்தைக் கூறும் பகுதி. இது மூன்று மாண்டில் நிகழும்.

10. சிறுதேர்ப் பருவம்

பிரபந்தத்தலைவனாகிய குழந்தையைச் சிறுதேருருட்டி விளை யாடும்படி வேண்டும் பருவத்தைக் கூறும் பிரிவு. இது நான்கா மாண்டிற் கூறப்படும்; "நான்காமாண்டிற் சிறுதேருருட்டலும்" என்பது, பிங்கலந்தை.

டாக்டர் ஐயரவர்கள்

1855 - 1942

மகரநெடுங் குழைக்காதர் பிள்ளைத்தமிழ்

காப்புப் பருவம்

1. பூமாது குடிகொண்டு வீற்றிருந் தரசுபுரி
      பொற்புலவு பதுமாசனப்
   பொழிகருணை யொடுபெருகு ஞானவெள் ளத்தலை
      புரட்டுதிரு முத்திரைக்கைக்
கோமானை யெழுதரிய சதுர்மறையு மள்ளிக்
      கொழித்துவண் டமிழ்ப்படுத்திக்
   கூறுதிரு வாய்மொழியோர் நாலர் யிரஞ்செய்த
      குருகைமுனி யைப்பரவுதும்
தேமா நறுங்கனித் தேன்மதகி னூடுபாய்
      திருவழுதி வளநாடனைத்
   தென்றிருப் பேரைநகர்க் காவலனை நூற்றெண்மர்
      சிந்தைகுடி கொண்டிருக்கும்
மாமாலை வருணன்வந் தடிபரவு மாழிநீர்
      வண்ணனைப் புயல்வண்ணனை
   வானப் பிரானைநங் குலநா தனைப்புகழும்
      வண்டமிழ்ச் சொற்றமையவே.

இதன் பொருள் : தேமா நறுங் கனித்தேன் - இனியமணமுள்ள மாம்பழச்சாறு, (பெருக்கெடுத்து) மதகின் ஊடு பாய் - மதகுகளின் மூலமாகப் பாய்ந்திடுகின்ற, திருவழுதிவளநாடனை - அழகிய

வளமுள்ள பாண்டியநாட்டில் எழுந்தருளியுள்ளவனை, தென்திருப் பேர்நகர்க் காவலனை - தென்திருப்பேரைநகரின் காத்தற்கடவு ளாகியவனை, நூற்றெண்மர் சிந்தை குடி கொண்டிருக்கும் மா மாலை - தலவகார சாமவேதிகளாகிய நூற்றெட்டு ஸ்ரீ வைஷ்ணவர்கள் மனத்தில் நித்யவாசம் செய்து கொண்டிருக்கும் சிறந்த திருமாலை, வருணன் வந்து அடிபரவும் - வருணதேவன் (தவம் புரிய) வந்து திருவடிகளைத் தோத்தரிக்கின்ற, ஆழிநீர்வண்ணனை - கடலின்நீர் போன்ற நீலநிறத்தனை, புயல் வண்ணனை - மேகநிறத்தவனை, வானப் பிரானை - தேவர்கள் தலைவனை, நம் குலநாதனை - நம் முடைய தொண்டக் குலத்துக்கு நாதனாகிய மகரநெடுங்குழைக் காதரை, புகழும் - போற்றிப்பாடுகின்ற, வண்தமிழ்ச்சொல் தழைய - (பிள்ளைத்தமிழ்நூலில்) வளப்பம் பொருந்திய தமிழ்ச்சொற்கள் சிறந்து நிற்கும்படி - (குருகைமுனியைப் பரவுதும் என முடியும்).

பூமாது - இலக்குமிதேவி, குடிகொண்டு - வாசத்தானமாக விரும்பி யேற்றுக்கொண்டு, வீற்றிருந்து - (பிறரொருவர்க்கில்லாத) தனிச்சிறப்போடு எழுந்தருளியிருந்து, அரசுபுரி - ஆட்சிசெய்கின்ற, பொற்பு உலவு - விளக்கம் பொருந்திய, பதுமாசனம் - தாமரை யாகிய தவிசு, பொழி - மிகுதியாக வெளிப்படுத்துகின்ற, கருணை யொடு - கிருபையோடு, பெருகு - (கூடிப்) பெருகுகின்ற, ஞான வெள்ளத்து அலை - அறிவாகிய (தத்துவஞானமாகிய) வெள்ளத் தின் அலை (யெழுந்து), புரட்டு - (முன்பின்னாகத்) திருப்பிவிட்ட, திருமுத்திரக் கை-அழகிய ஞான சின்னத்தைக் காட்டுகின்ற கையை யுடைய, கோமானை - தலைவனை, எழுதரிய - ஏடுபடுத்துதற்கு இயலாத, சதுர்மறையும் - நான்கு வேதங்களையும், அள்ளிக் கொழித்து - வாரித்தெள்ளியெடுத்து ஆராய்ந்து, வண்தமிழ்ப் படுத்தி - வளப்பம் பொருந்திய தமிழில் ஆக்கி, கூறும் திருவாய் மொழி - சிறப்பித்துப் பேசப்படுகின்ற திருவாய்மொழி உள்ளிட்டு, ஓர் நாலாயிரம் செய்த - ஒப்பற்ற நாலாயிரம் பாசுரங்களையும் (பிரபந் தமாக நாதமுனிகள் மூலம்) செய்வித்த, குருகை முனியை - திருக் குருகூரில் அவதரித்த நம்மாழ்வாரை, பரவுதும் - போற்று வோம்; (எ. று).

விசேடவுரை : பாண்டியநாடு 'திருவழுதிவளநாடு' எனப் படும். நூற்றெண்மர் – ஜைமிநீய தலவகாரஸாம வேதிகள். காவிரி தீரத்திலுள்ள பதினெட்டுகிராமங்களிலிருந்து ஸாமவேதிகள் நூற் றெண்மரைச் சுந்தரபாண்டியவழுதி தென்திருப்பேரையில் குடியேற வைத்து நூற்றெட்டுக்கிரஹ தானமும் செய்தான் என்பது.

வருணன் - கடல் தெய்வம். இவன் அடிபரவுவது - அசுரர்க்குத் தான்இழந்த வருணபாசத்தைக் குழைக்காதர் அருளால் மீண்டும் பெற்றமையாலென்க. புயல்வண்ணன் - 'நிகரில்முகில் வண்ணன்' என்பதும் அவன் திருநாமம். இலக்குமிதேவிக்குக் கருணையியல்பு. ஞானமுத்திரைக்கை - சின்முத்திரைக்கை, சின்முத்திரையாவது - உபதேசக்குறியாகச் சுட்டுவிரல் நுனியைப் பெருவிரல் நுனியுடன் சேர்த்துக்காட்டும் ஞானமுத்திரை. 'புரட்டு' என்றது - 'என் மனனே !' என்று மனத்தைக் குறித்து விளித்தமை நோக்கி : 'தொழுதெழு என்மனனே' (திருவாய்மொழி 1-1-1). இன்றும் 'புரட்டு திருமுத்திரைக்கை'யைக் கச்சியில் பேரருளாளன் கோயிலின் பிராகாரத்தில் கோயில் கொண்டிருக்கும் நம்மாழ்வாரின் அர்ச்சாவிக்கிரகத்துக் காணலாம். மயர்வற மதிநலம் அருளப்பெற்றவராதலின், ''ஞானவெள்ளத்து அலை' என்றது. 'வண்தமிழ்ப்படுத்தி'— 'வேதம் தமிழ்செய்தமாறன் சடகோபன்' என்றார் நாதமுனிகள். அவருக்குத் தமது திருவாய்மொழியுள்ளிட்ட நான்கு பிரபந்தங்களோடு ஏனைய ஆழ்வார்களின் பிரபந்தங்களையும் சாட்சாத்கரிக்கும்படி உபதேசித்தவராதலின், 'ஓர் நாலாயிரஞ்செய்த' என்றது. ''நாதனுக்கு நாலாயிரமுரைத்தான் வாழியே'' என்ற இவரது வாழிதிருநாமம். (நாதன் - நாதமுனிகள்) ஈண்டு, நம்மாழ்வாரை அவயவியாகவும், மற்றையாழ்வார்களை இவர்க்கு அவயவமாகவும் கூறும் மரபும் நினைக. செய்த - செய்வித்த என்றபடி : செய்வினை செயப்பாட்டுவினைப் பொருளில் வந்தது. குருகை - திருக்குருகூர் : ஒருநாள் பிரமன் 'எங்குத் தவஞ்செய்வது' என்று சிந்தைகொண்டிருக்கையில், 'கா - பிரமனே !' குரு - (இங்குத்தவஞ்) செய்' என்று இத்தலத்தைச் சுட்டி ஆகாயவாணி மொழிந்ததனால், இதற்குக் 'குருகாபுரீ' என்று பெயர் வந்ததென்பர். இத்தலம் நம்மாழ்வார் திருவவதரித்த தலமாதல்பற்றி 'ஆழ்வார் திருநகரி' என்றுபெயர் பெறும். திருநெல்வேலிக்குக் கிழக்கே பத்தொன்பது மைலில் (30½ கிலோ மீட்டர் தூரத்தில்) உள்ளது. அவதரிக்கும்பொழுதே இயற்கையில் ஞான பக்திகளையுடைய மனனசீலராய்த் தோன்றியவராதலின், 'முனி' எனப்பட்டார். 'தழையவே பரவுதும்' என்று கொண்டுகூட்டிப் பொருள் கொள்க. நாடனை, காவலனை, மாலை, நீர்வண்ணனை, புயல் வண்ணனை, பிரானை, நாதனை,— ஒருபொருண்மேலடுக்கி வந்த பல தொடர்கள். (1)

2. அஞ்சிறைய வரிவண் டுழக்கிக் கணைக்கால்
அசைத்துப் பொலன்றுதளைந்

தடைகிடந் தாலித்து வாய்மடுத் துத்துதைந்
தளிநறவு கூட்டுண்ணமென்
பிஞ்சுமடன் முகைமுறுக் கவிழும்வெண் டாமரைப்
பீடத்தி னினிதிருக்கும்
பெடையோதி மஞ்செஞ்சொன் மடமாது வெண்
ணிறப்
பெண்ணினிரு தாடுதிப்பாம்
பஞ்சளைய பரிபுரத் தளிரடித் துடியிடைப்
பணைமுலைக் கனிவாய்மொழிப்
பைந்தொடிச் சீதையை மணம்புணர மிதிலையம்
பதிபுகுந் தாதிசனகன்
செஞ்சிலை யிறுத்தமக ரக்குழைக் கடவுளைத்
திருவழுதி வளநாடனைத்
தென்றிருப் பேரைநகர்க் காவலனை வாழ்த்துமென்
செந்தமிழ்ச் சொற்றழையவே.

(இ-ள்) பஞ்சு அனைய பரிபுரம் - பஞ்சுபோல் வெள்ளிய சிலம் பிணையும், தளிர் அடி - மாந் தளிர் போன்ற மென்மையான திருவடிகளையும். துடி இடை - உடுக்கைபோல் சிறுத்த இடுப்பினையும், பணை முலை - பருத்த கொங்கையினையும், கனிவாய் - கொவ்வைக்கனி போன்று சிவந்த வாயினையும், (கனி) மொழி - இனிய பேச்சினையும் (உடைய), பைந்தொடி சீதையை - பசிய வளையல்களையணிந்த சீதாபிராட்டியை, மணம் புணர - விவாகஞ்செய்துகொள்ள, மிதிலை அம் பதி புகுந்து - மிதிலாபுரியாகிய அழகிய நகரத்தில் புகுந்து, சனகன் - (மிதிலைமன்னனாகிய) சனகனது, ஆதி செஞ்சிலை இறுத்த - (குலத்தில்) தொன்று தொட்டு வருகின்ற செவ்விய சிவ தனுசை முறித்த, மகரக்குழைக் கடவுளை - மகர நெடுங் குழைக்காதர் என்னும் திருநாமம்படைத்த மூர்த்தியை, திருவழுதி வளநாடனை - பாண்டியநாட்டிற்குரியவனை, தென்திருப்பேரை நகர் காவலனை - தென்திருப்பேரையென்னும் நகர்க்குத் தலைவனை, வாழ்த்தும்-போற்றுகின்ற, என் செந்தமிழ்ச்சொல் - என்னுடைய செவ்விய தமிழின் சொற்கள், (இப்பிள்ளைத்தமிழ் நூலில்) தழைய - சிறந்துநிற்கும்படி,—

(வெண்ணிறப்பெண்ணின் இருதாள் துதிப்பாம் எனமுடியும்). அம் சிறைய வரி வண்டு - அழகிய சிறகுகளோடு கோடுகளையும் கொண்ட வண்டானது, உழக்கி - கலக்கி, கணைக்கால் அசைத்து - திரண்ட நாளத்தையாட்டி, பொலன் தாது அளைந்து - பொன்னிற மான மகரந்தங்களைத் துழாவி, அடை கிடந்து ஆலித்து - தாமரை யிலையிலே தங்கி ஆரவாரித்து, வாய் மடுத்துத் துதைந்து - வாய் வைத்துப் படிந்து, அளிநறவு கூட்டுண்ண - மிக்கதேனைக்கொள்ளை கொண்டு நுகர்தலாலே, மெல் பிஞ்சு மடல் முகை - மெல்லிய இளை தான பூவிதழின், முறுக்கு அவிழும் - அரும்பு கட்டுநெகிழும், வெண் தாமரைப் பீடத்தின் - வெண்மையான தாமரைமலராகிய ஆசனத் தில், இனிது இருக்கும் - நன்ருக எழுந்தருளியிருக்கும், பெடை ஓதிமம் - அன்னப்பேடுபோன்ற,செஞ்சொல் மடமாது - இனியசொற் களின் கிழத்தியாகிய, வெண்ணிறப் பெண்ணின் - வெள்ளிய நிறம் பொருந்திய கலைமகளின், இருதாள் துதிப்பாம் - உபய பாதங்களையும் போற்றிப்பணிவேன் ; (எ. று.).

(வி-ரை) சிவபெருமான் தக்கன் வேள்வியையழித்துச் சின மாறியபின்பும் இவ்வில்லைக் கையிற்கொண்டிருக்கையில் 'நம்மை ஒழித்துவிடுவாரோ ?' என்று வானவர் நடுங்கி நிற்க, அதுகண்ட பரமசிவன் சனகராசனது குலத்துத் தோன்றிய தேவராதன் என்னும் பூர்வீகராசனிடம் இதனை வைத்துப் போக, அது பரம்பரை யாக இந்தச்சனகனுக்குக் கிடைத்ததாலின் 'ஆதிசெஞ்சிலை' என்றது. கணைக்கால் - திரண்டநாளம் : "கணைக்காலலரகூம்ப" (கலித் : 119, 5). துதைதல் - படிதல் : "வெண்ணீறு துதைந் தெழு.........வயிரத்தொப்பனே" (திருவாசகம் 29, 6), தளிரடி, துடியிடை, கனிவாய் — உவமைத்தொகைகள், பணைமுலை, பைந் தொடி, செஞ்சிலை, செந்தமிழ், அஞ்சிறை, வெண்டாமரை— பண்புத் தொகைகள். உழக்கி, அசைத்து, அளைந்து, கிடந்தாலித்து, மடுத் துத்துதைந்து என்ற வினையெச்சங்கள் அடுக்கி 'கூட்டுண்ண' என்ற வினையெச்சத்தோடு தொடர்ந்து, ',முறுக்கவிழும்' என்ற வினையொடு முடியும். சரசுவதிக்கு வெண்ணிறம் பிரசித்தம் : 'படிக நிறமும்' என்ருர் கம்பரும். தாள் + துதிப்பாம் = தாடுதிப்பாம் : "ளள வேற்றுமையில் றடவும்" என்றது விதி. (நன் : மெய் யீற்றுப் : 24). (2)

3\. மண்மகளு மாய்ப்பின்னை மடமகளு மாய்மிதிலை

வருசனக னுக்குமகளாய்

மங்கலச் சொற்றிருப் பல்லாண்டு செம்பவள
வாய்திறந் தோதினேன்றன்
பெண்மகளு மாய்வந் தரங்கேசன் முதலைந்து
பேருக்கு மொருதேவியாய்ப்
பேர்பெற்று மாலைசூ டிக்கொடுத் தருளிய
பிராட்டியை வணங்கல்செய்வாம்
தண்மதியி னகடுதொடு மாடமா ளிகைநெடிய
தமனியப் பொற்குன்றமுஞ்
சதுமறைக் குரியவேள் வியும்யாக சாலையுஞ்
சந்நிதியி னூற்றெண்மருங்
கண்மணி யெனத்தகைய பிள்ளைக் குழாமுமலி
காவுஞ்சூழ் பேரையூரன்
கருணையொடு வருணனடி பரவுமக ரக்குழைக்
கடவுள்சொற் றழையவென்றே.

(இ-ள்) தண் மதியின் - குளிர்ந்த சந்திரனின், அகடு தொடு - நடுவிடம் தொடும்படியுயர்ந்துள்ள, மாட மாளிகை - மாடங்களோடு கூடிய மாளிகைகளாகிய, நெடிய தமனியப் பொன் குன்றமும் - ஓங்கிய பொன்மலையாம் மேருவும், சதுமறைக்குரிய வேள்வியும் - நான்குவேதங்களும் கோஷிப்பதற்குரிய ஓமகுண்டங்களும், யாக சாலையும் - யாகஞ் செய்தற்குரிய மண்டபங்களும், சந்நிதியின் நூற்றெண்மரும் - சந்நிதியில் சேவைக்கு எழுந்தருளியுள்ள நூற்றெட்டு சாமவேதிகளும், கண்மணி எனத் தகைய பிள்ளைக்குழாமும் - கண்ணின்மணிபோலக் காத்தற்குரிய சிறுவர்கூட்டங்களும், மலி காவும் - மிகுந்த சோலைகளும், சூழ் - சுற்றிலும் பரந்துள்ள, பேரை ஊரன் - தென்திருப்பேரை நகருடையானும், கருணையொடு வருணன் அடி பரவும் - (நன்றிக்கடன் தோன்றக்) கிருபையை வேண்டி நின்று வருணதேவன் திருவடிகளைத் துதிக்கின்ற, மகரக்குழைக் கடவுள் - மகரநெடுங்குழைக் காதரைப்பற்றிய, சொல் - சொற்கள் (இப்பிள்ளைத்தமிழ் நூலில்) தழைய என்று - சிறந்து நிற்கவேண்டு மென்று (பிராட்டியை வணங்கல் செய்வாம் எனமுடியும்). மண் மகளுமாய் - பூமிதேவியுமாய், பின்னைமடமகளுமாய் - மடப்பம்

பொருந்திய நப்பின்னைபிராட்டியுமாய், மிதிலைவரு சனகனுக்கு மக ளாய் - மிதிலாபுரியில் அரசாயிருந்த ஜனகமகாராஜனுக்குப் புத்திரி யுமாய் (சீதாபிராட்டியுமாய்), மங்கலச்சொல் திருப்பல்லாண்டு - சுபத்தையளிக்கும் சொற்களாலாகிய திருப்பல்லாண்டு என்னும் பிரபந்தத்தை, செம்பவளவாய் திறந்து - செவ்விய பவளம் போன்ற புனிதவாயினைத் திறந்து, ஓதினன்தன் - பாடியவனாகிய விஷ்ணுசித்தனென்னும் பெரியாழ்வாருடைய, பெண்மகளுமாய் - புத்திரியுமாய், வந்து - (இவ்வகையால் நாற்பட) அவதரித்து, (பிறகு) அரங்கேசன்முதல் ஐந்து பேருக்கும் - திருவரங்கன் முதலாய கட வுளர் ஐந்துபேருக்கும், ஒருதேவியாய்ப் பேர்பெற்று - (ஒப்பற்ற) ஒரே மனைவியாய்ப் புகழ்பெற்று, மாலை சூடிக்கொடுத்தருளிய பிராட் டியை - தான்சூட்டிக்கொண்ட மாலையைத்தரிக்கும்படி (வடபத்ர சாயிக்குக்) கொடுத்த கோதைபிராட்டியாகிய ஸ்ரீ ஆண்டாளை, வணங்கல் செய்வாம் - தலையால் வணங்கிப் பணிவேன் ; (எ. று.).

(வி-ரை)மாளிகை மதியின் அகடுதொடும் என்றது-மிகையுயர்வு நவிற்சியணி. தமனியம் - பொன். தமனியப்பொற்குன்று - ஒரு பொருட்பன்மொழி. மாளிகையை மேருவாக உருவகப்படுத்தியபடி. மேருவைப் பொன்மலையென்பர். வேள்வி - ஓமகுண்டங்களைக் காட்டிவந்தது. சந்நிதியில் நூற்றெண்மர் சுந்தரபாண்டிய அரசன் வேண்டுகோளுக்கு இணங்கிக் காவிரிதீரத்துப் பதினெட்டுக் கிராமங் களிலிருந்து தென்திருப்பேரைக்கு வந்து குடியேறிய ஜைமினீயதல வகாரஸாமவேதிகள் நூற்றெட்டுப்பேரும் சந்நிதி கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ளனரென்பது. கருடாழ்வாரே நூற்றெண்மரில் ஒருவ ராய்ப் பெருமாளோடு ஸமபீடத்தில் எழுந்தருளியுள்ளார் என்பர். 'பிள்ளைக்குழாம்' என்றவிடத்து,"பிள்ளைக்குழா விளையாட்டொலியும் அருத் திருப்பேரை,' என்ற நம்மாழ்வார் வாக்கு நினைக. (திரு வாய் : 7 - 3 1) இந்தப் பிள்ளைக்குழாம் காண்பதற்கன்றோ கருடனை விலகியிருக்கச் சொன்னது என்பர். முதலடியில், "பின்னைகொல்? நிலமாமகள்கொல் ? திருமகள் கொல் ? பிறந்திட்டாள்" என்ற திருவாய்மொழியின் கருத்துக்காண்க. (9 - 5 - 10). 'சனகன்மகளு மாய்' என்றது திருமகளுமாய் என்ற கருத்துப் பற்றியது : தசரதன் "இன்று திருவெய்தியது என்வயமதென்றான்" (பால : கோலங் : 33). திருப்பல்லாண்டு மங்களாசாசனம் பண்ணியருளியதாதலின் மங்கலச்சொற்சுள் பயில்வது என்றார் : ஈண்டு "கோதிலவாம் ஆழ் வார்கள் கூறுகலைக் கெல்லாம், ஆதி திருப்பல்லாண் டானதுவும் - வேதத்துக்கு ஓமென்னுமதுபோல் உள்ளதுக்கெல்லாம் சுருக்காய் தான் மங்கலமாதலால்" என்ற உபதேச ரத்தின மாலையையும்,

''உண்டோதிருப்பல்லாண்டுக்கு ஒப்பதோர் கலைதான் ?'' என்ற மாமுனிகள் ஸ்ரீ ஸூக்தியையும் நினைக. ''ஓதிஞன்றன் பெண்மகளு மாய்'' என்றவிடத்து - பட்டர்பிரான்கோதை, பெரியாழ்வார் பெண் பிள்ளையாய் ஆண்டாள்பிறந்த திருவாடிப்பூரத்தின் சீர்மை'', பெரி யாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே'' முதலியன அநு சந்தேயம். ஐந்துபேருக்கும் ஒருதேவி என்றது - ஆண்டாள் திரு வரங்கன், சோலைமலையழகன், திருவேங்கடமுடையான், வட மதுரைக் கண்ணண், வடபத்ரசாயி என்ற ஐவரையும் தனது நாச்சி யார் திருமொழியில் காதல்விஞ்சிக் குறித்திருத்தல் நோக்கியென்க''. ஆங்குவந்துள்ள ''திருவரங்கச் செல்வஞர் என்மெய்ப்பொருளும் கொண்டாரே'', ''திருமாலிருஞ் சோலைநம்பி வரிவளையில் புகுந்து வந்திபற்றும் வழக்குளதே'' ; ''வேங்கடவற்கென்னை விதிக்கிற் றியே'' ; கண்ணனென்னும் கருந்தெய்வம் காட்சிப் பழகிக்கிடப் பேனை'' ''கைத்தலம்பற்றக் கனுக்கண்டேன் தோழீநான்'' ; ''மென் னடையன்னம் பரந்துவிளையாடும் வில்லிபுத்தூருறைவான்றன், பொன்னடிகாண்பதோராசையிஞல் என்பொருகயற் கண்ணிணை துஞ்சா'' முதலியன கொண்டு தெளியலாம். 'சூடிக்கொடுத்த நாச்சியார்' என்று ஆண்டாளை வழங்குவது பிரசித்தம். கோதாதேவி யாதலின், ('கோ - வாக்கு, தா - தருபவன்) 'சொல் தழைய அவளை வணங்குவேன்' என்றது. குன்றமும் வேள்வியும் சாலையும் நூற்றெண் மரும் பிள்ளைக்குழாமும் காவும் என்றவையடுக்கி 'சூழ் ''என்பத ஞேடு இயைந்தன. பின்னை — நப்பின்னை : ஆய்மகள் எனவும்படுவள் நான்குமகளாய்வந்து ஐந்துபேரை மணந்து ஒருதேவியாஞள் என்ற நயம் ஓர்க. (3)

4. பாரரா வணனெனும் படுபழிக் கஞ்சாத
பாவிகொலை களவுகபடம்
பழகுபா தகன்மவுலி யொருபதுந் துகள்படப்
பண்டுகோ தண்டம்வாங்கும்
வீரமே கந்திருக் கோவலூ ரிடைகழியின்
வெளிநிற்ப வொவ்வொருவர்மேல்
மிகுநெருக் குண்டபுகழ் மூவரிற் பொய்கை
மென்சரண மஞ்சலிசெய்வாம்

தாரைவேல் விழிபாய் வாலிமார் புருவவொரு
சரம்விடுத் துக்கொன்றவன்
தம்பிக்கு மகுடங் கவித்தர சளிக்கின்ற
தாமோ தரக்குழகனைப்
பேரையா திபனைநங் குலநாத னைத்துழாய்ப்
பெம்மானை யம்மானையே
பேசுஞ் செழுந்தமிழ்ப் பிள்ளைக் கவிக்குள்ள
பேதைமை பொறுத்தருளவே.

(இ-ள்) தாரை-(தன் மனையாளாகிய) தாரையின், வேல் விழி பாய் வாலி - வேலாயுதம்போல் கூரிய கண்கள் விரைந்து பார்க்கின்ற வாலியின், மார்பு உருவ - (உறுதியான) மார்பில் ஊடுருவும்படி, ஒரு சரம் விடுத்துக் கொன்று - ஒரு அம்பினைச் செலுத்தி உயிர் போக்கி,அவன் தம்பிக்கு மகுடம் கவித்து-அந்தவாலியின் தம்பியாக சுக்ரீவனுக்குக் கிரீடத்தைத் சூட்டி, அரசு அளிக்கின்ற - கிட்கிந்தா ராஜ்யத்தின் அரசாட்சியைக் கொடுத்தளித்த, தாமோதரக் குழகனை- தாமோதரன் என்ற திருநாமத்தை(ப்பின்னர்க் கிருஷ்ணவதாரத்தில்) பெறப்போகின்ற அழகனாகிய இராமபிரானை, பேரை ஆதிபனை-தென் திருப்பேரையின் தலைவனை, நம் குலநாதனை - நமது குலத்துக்குத் தலைவனாகுபவனை, துழாய்ப் பெம்மானை - துளசி மாலையைத் தரித்துள்ள பெருமானை, அம்மானை - கடவுளாகுபவனை, (அதாவது மகர நெடுங் குழைக்காதனை) பேசும் - குழந்தையாகப் பாவித்துப் பாடப்போகின்ற, செழுந்தமிழ்ப் பிள்ளைக்கவிக்கு - செவ்விய தமிழிலான பிள்ளைத்தமிழ்ச் செய்யுட்களுக்கு, உள்ள - ஏற்படக்கூடிய, பேதைமை - அறியாமையாகிய குற்றத்தை, பொறுத்தருள - மன்னிக்னிக்கும்படி வேண்டி (அஞ்சலி செய்வாம் என முடியும்) : படுபழிக்கு அஞ்சாத - மிக்க பழிச் செயல்களைச் செய்வதற்குப் பயப்படாத (நாணமில்லாத), பார ராவணனெனும் பாவி - கொடுமை மிகுந்த இராவணனெனும் பாவி, கொலை களவு கபடம் பழகு பாதகன் - கொலை திருடு வஞ்சனை முதலிய இழி செயல்களில் பயின்று பழகிய பாதகனுவன் : (அப்படிப்பட்ட அவனது) மவுலி ஒருபதும் துகள்பட - தலைகள் பத்தும் புழுதியில் உருளும்படி, பண்டு - முன் திரேதாயுகத்தில், கோதண்டம் வாங்கும் வீரமேகம் - கோதண்டமென்னும் (பேர்படைத்த) தன் வில்லை வளைத்த மேகம்போற் கரியசெம்மலாகிய இராமபிரான், (திருமாலானவன்) திருக்கோவலூர் இடைகழியில்,

வெளிநிற்ப - திருக்கோவலூரென்னும் (நடுநாட்டுத்) திருப்பதியில் (மிருகண்டு மகாமுனிவரது திருமாளிகையின்) இடைக்கட்டுக்கு வெளியே (மழையில் இருளில்) நின்றுகொண்டிருப்ப, (அதே சமயத்தில்) ஒவ்வொருவர் மேல் மிக நெருக்குண்ட புகழ் மூவரில்-ஒருத்தர்க் கொருத்தரிடை மிகவும் நெருக்கமுறும்படியான புகழைப் பெற்ற மூவர்க்குள்ளே, பொய்கையார் - (முதலவராகிய) பொய்கையாழ்வாரின், மெல் சரணம்-மென்மையான திருவடிகளை, அஞ்சலி செய்வாம் கைகூப்பி வணங்குவேன் ; (எ. று.).

(வி-ரை) தாரை - வாலியின் மனைவி. அவளது வேலாகிய விழி பாயும் மார்பினையுடையவன் வாலியென்றது நயம். இராமபிரானைத் 'தாமோதரன்' என்றது பின்னரெடுத்த கிருஷ்ணாவதாரத்தை நோக்கியென்க. யசோதையால் வயிற்றிற் கட்டுண்டவனாதலின் தாமோதரனாயினன். (தாமம் - கயிறு : உதரம் - வயிறு) குழகன் - அழகன். அம்மான் - கடவுள். பேதைமை - தோஷம் : சொற்குற்றம் பொருட்குற்றம் போன்றவை. பாரம் - கொடுமை. பூமிக்குச் சுமை எனினுமாம். வீரராகவனை வீரமேகம் என் உருவகஞ்செய்தபடி, திருக்கோவலூர் - நடுநாட்டிலுள்ள திருப்பதி. 'கோபாலன்' எனப்படுகிற ஆயனார் எழுந்தருளியிருக்குந் திவ்வியதலமாதல்பற்றி, இதற்குத் 'திருக்கோவலூர்' என்று திருநாமமாயிற்று, 'பாவருந் தமிழாற் பேர் பெறுபனுவல் பாவலர் பாதிநாளிரவில், மூவரு நெருக்கி மொழி விளக்கேற்றி முகுந்தனைத் தொழுத நன்னாடு' என்று புகழ்ந்து கூறும்படி முதலாழ்வார் மூவரும் ஒருவரையொருவர் சந்தித்து அந்தாதி பாடினதலம் அந்த விவரம்தான் ஈண்டு குறிக்கப்படுவது. "பாட்டுக் குரிய பழையவர் மூவரில் முதல்வராதலின், பொய்கையாரைத் தமது பிள்ளைக்கவிக்குள்ள குற்றத்தைப் பொறுத்தருள வேண்டுகிறாரென்க. வேல்விழி - உவமைத்தொகை. திருத்துழாய் மாலை தான் சர்வ ரக்ஷகன் என்பதைக் காட்டுவது. பேதைமை-அறியாமை : அதனாலாகும் குற்றத்திற்குப் பண்பாகுபெயர். "தராதலத்தினுள்ள தமிழ்க் குற்றமெல்லாம், அராவும் அரமாயிற்றன்றே.... கம்பநாட்டாழ்வான் கவி" என்ற வரிகளை யீண்டு ஒரு சார் ஒப்பு நோக்குக. கொலை களவு கபடம் - உம்மைத்தொகை. கோதண்டம் - இராமபிரான் வில்லுக்குப் பெயர். வாங்குதல் - வளைத்தல். இடைகழி - இடைக்கட்டு : இக் காலத்து "ரேழி" எனப்படும். (4)

5. ஆரணப் பொருளுணர்கும் யோகமோ ரெட்டுநூல்

ஐந்தொடைந் தெட்டுநியம

மாறுதொண் ணூற்ருறு தத்துவஞ் சித்தியெட்
டைம்புல னடக்கிஞானக்
காரணச் சுடர்விளக் கொளிகொண்டு பரவுமொரு
கரைகண்டு புகழ்கொண்டசொற்
கருணு கரக்குரிசி லுயர்பூத வாழ்வார்
கழற்கால் வணங்கல்செய்வாம்
பூரணக் கலைமதியி னிலவொழுக வாம்பன்மென்
புரிமுறுக் கவிழ்வாவியம்
புனல்படியும் வன்கரா வதுவந் திழுக்கவப்
பொழுதாதி மூலமென்றே
வாரணப் பகடலறி வீரிடக் காத்தருள்செய்
மையாழி நீர்வண்ணனை
வானப் பிரானைநங் குலநாத னைப்புகழும்
வண்டமிழ்ச் சொற்றழையவே.

(இ - ள்) பூரணக்கலை மதியின் - பதினறுகலைகளும் நிரம்பியுள்ள முழுச்சந்திரனின், நிலவு ஒழுக - நிலாவெளிச்சம் விழுதலால், (அதற்கு) ஆம்பல் மென்புரி முறுக்கு அவிழ் - ஆம்பலினது மெல்லியதான மொட்டு நன்குமலர்ந்த, வாவி அம் புனல் படியும் - தடாகத்தின் அழகிய நீரிற் றங்கியிருந்த, வன் கரா அது - வலிய முதலையானது, வந்து இழுக்க - கரைக்குவந்து பற்றியீர்க்க, அப்பொழுது ஆதிமூலம் என்று - அந்தச்சமயத்தில் ஆதிமூலமே! என்று [எடுத்து], வாரணம் பகடு அலறி வீரிட- [கஜேந்திரனென்னும்) ஆண் யானை கதறியோலமிட, காத்து அருள்செய் மை ஆழிநீர் வண்ணனை - [முதலையைக் கொன்று] (அதனைப்) பாதுகாத்துத் திருவருள் புரிந்த கரியகடலினீர் போன்ற நிறத்தவனை, வானப் பிரானை - தேவர்களின் தலைவனை, நம் குலநாதனை - நமது குலத்துக்குத் தலைவனுகுபவனை, [அதாவது மகரநெடு குழைக்காதனை] புகழும் - போற்றுகின்ற, வண்தமிழ்ச் சொல் - வளப்பம் பொருந்திய தமிழ்ச் சொற்கள் [இப்பிள்ளைத்தமிழ்நூலில்] தழைய - சிறந்துநிற்கவேண்டி [வணங்கல் செய்வாம் என முடியும்]

ஆரணப்பொருள் நான்கும் - வேதப் பொருள்களாகிய நான்கு புருஷார்த்தங்களும், யோகம் ஓர் எட்டும் - இயமம் முதலாகிய அஷ்டாங்க யோகமும், ஐந்தொடைந்து எட்டு நூல் (உம்) - பதினெட்டுப் புராணங்களும் (அஷ்டாதசபுராணங்களும்),ஆறு நியமம் (உம்)- செய்கடன்கள் ஆறும், தொண்ணூற்ருறு தத்துவம் (உம்) - தொண்ணூற்ருறு உண்மைப்பொருள்களும், சித்தி எட்டு (உம்)- எண்வகைச் சித்திகளும்(அஷ்டசித்திகளும்), [கைவரப்பெற்று] (மேலும்)ஐம்புலன் அடக்கி - பஞ்சேந்திரியங்களையும் அடங்கச் செய்து, ஞானச்சுடர் விளக்கொளி காரணம் கொண்டு - ஞானமாகிய ஒளிவிளக்கினை யேற்றி அதனை மூலமாகக் கொண்டு, பரவும் ஒரு கரை கண்டு -துதிக்கின்ற வகையினைச் செவ்வன் அறிந்து (அதன் எல்லைகண்டு), புகழ் சொல் கொண்ட - புகழப்படுகின்ற வார்த்தைகளை (த் தமக்குரித்தாக)க் கொண்ட, கருணாகரக் குரிசில் உயர் பூத ஆழ்வார் - தயைக் கிருப்பிடமாய்ச் சிறந்துயர்ந்த பூதத்தாழ்வாரின், கழற்கால்- அணிகலன் பூண்ட பாதங்களை, வணங்கல்செய்வாம் - (வீழ்ந்து) வணங்குவேன் ; (எ. று.).

(வி-ரை) சந்திரனைக் கண்டு ஆம்பல் மலரும். ஆதிமூலமே! என்று கதறிய கஜேந்திரனை முதலை வாயினின்று காக்கத் திருமால் சக்கரப்படை கொண்டு அம் முதலையைக் கொன்று உயிரளித்தமை பிரசித்தம். (இந்தக் கதையைப் பின்னர் 39ஆஞ் செய்யுளினுரையில் பரக்கக் காண்க.) பூதத்தாழ்வாரும் "தொடரெடுத்த மால்யானை சூழ் கயம்புக் கஞ்சி, படரெடுத்த பைங்கமலங்கொண்டன்- நிடரடுக்க ஆழியான் பாதம் பணிந்தன்றே வானவர் கோன், பாழிதா னெய்திற்றுப் பண்டு' என்று அருளிச்செய்துள்ளார். நான்கு ஆரணப்பொருள் - தர்மார்த்தகாம மோட்சம் : (அறம் பொருளின்பம் வீடு). யோகம் எட்டு - இமயம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன. பதினெண் புராணங்களாவன - சிவபிரானைப்பற்றிய பத்து, திருமாலைப்பற்றிய நான்கு, பிரமனைப் பற்றிய இரண்டு, அக்னியைப்பற்றிய ஒன்று, சூரியனைப்பற்றிய ஒன்று ஆக பதினெட்டுத் தலைமைப் புராணங்கள் (ஐந்தொடு ஐந்து எட்டு- $5+5+8=18$) நியமம் ஆறு - தவம், விரதம், தூய்மை, தத்துவ மோதல், மனமுவந்திருத்தல் (Contentment), தெய்வவழிபாடு என்பன. தொண்ணூற்ருறு தத்துவம் - உட்கருவிகள் 36 + புறக்கருவிகள் 60 ஆக 96ஆம். (விவரம் :- **உட்கருவிகள் 36 :-** பூதம் 5, ஞானேந்திரியம் 5, தன்மாத்திரை 5, கன்மேந்திரியம் 5, அந்தக்கரணம் 4, வித்யாதத்துவம் 7, சுத்த தத்துவம் 5. **புறக்கருவிகள் 60 :-** பிருதிவியின் கூறு 5, அப்புவின்

கூறு 5, தேயுவின் கூறு 5, வாயுவின் கூறு 5 ஆகாயத்தின் கூறு 5, பிருதிவியின் வழி நாடி 10, வாயுவின் வழிநாடி 10. ஆகாயத் வழி ஏடணை, 3. வாக்காதியின் வழி தொழில் 5. பிரகிருதியின் வழி குணம் 3, விந்துவின் வழிவாக்கு 4. ஆக தத்துவங்கள் 96) இவற்றின் முழு விவரம் வல்லார் வாய்க்கேட்டுணர்க. சித்தி எட்டு-அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பன. புலனடக்குதல் - இந்திரிய நிக்கிரஹம் செய்தல்.

"ஞானச் சுடர்விளக்கேற்றினேன் நாரணற்கு ஞானத் தமிழ் புரிந்த நான்" என்று பூதத்தாழ்வார் தொடங்கியமை காண்க. கரை காணுதல் - எல்லாச் செய்திகளையும் செவ்வனறிதல், எல்லைகாணுதல் என்றபடி. கரை கண்டமை - இரண்டாந் திருவந்தாதி நூறு வெண்பாக்களிலும் என்க. "கடல் வண்ணன் பூதம்", "மறுத்திருமார்பன வன்றன் பூதம்" என்றவாறு எம்பெருமானை அறிதலாலே தமது உளனுகையையுடையவராதலால், இவருக்குப் பூதத்தாழ்வார் என்று திருநாமம். கருணைகரக்குரிசில் - இருபெயரொட்டு. குரிசில்-ஆண்பாற் சிறப்புப் பெயர். பூதத்தாழ்வார் "பெருந்தமிழன்" ஆதலின், அவர் கழற்காலில் வணங்குகிறுர். (5)

6. தெளிக்குங் கொழும்பிரச மூற்றிருக் குங்கலுழி
திரைமண்டி மடுநிறையவே
தேக்கெறியும் வெள்ளப் பெருக்கிற் பொலன்ருது
சிந்தக் குடைந்துபம்பிக்
களிக்குஞ் சிறைச்சுரும் பிசைமுரல் முகைவிண்ட
கடிகமழ் பசுந்தண்டுழாய்க்
கடவுடிரு வந்தாதி புகலுமயி லையர்கோன்
கழற்கால் வணங்கல்செய்வாம்
துளிக்குந் திரைப்பொருநை மதகினெலி யுட்டபூஞ்
சுருதிமறை யவர்களொலியுஞ்
சொல்லரிய பிள்ளைக் குழாவொலியு மங்கலத்
தூயமுர சத்தொடுபரீஇ

மளிக்குந் திருப்பேரை மணிவண்ணனைப்புயல்
மகரக் குழைக்கடவுளை
வானப் பிரானைநங் குலநாதனைப்புகழும்
வண்டமிழ்ச் சொற்றழையவே.

(இ-ள்) துளிக்கும் திரைப் பொருநை - தோன்றுகின்ற அலைகளை யுடைய தாமிரபர்ணி நதியின்நீர் பாயும், மதகின் ஒலியும் - மதகு களினின்று எழும் ஆரவாரமும், பழஞ்சுருதி மறையவர்கள் ஒலியும் - பழையவேதங்களை யோதும் பிராம்மணர்களின் வாயொலியும், சொல்லரிய பிள்ளைக் குழாம் ஒலியும் - (இப்படித்தென) சொல்லு தற்கியலாத சிறுவர் கூட்டங்களின் ஆரவாரமும், தூய மங்கலம் முரசத்தொடு - பரிசுத்தமான மங்கல முரசத்தினொலியொடும் கூடி, பரீஇமளிக்கும் – சிறப்பையடையச் செய்யும் திருப்பேரை - தென் திருப்பேரை நகரிலுள்ள, மணிவண்ணனை - நீலமணிபோன்ற நிறத் தவனை, வானப்பிரானை - தேவர்களின் தலைவனை, நம் குல நாதனை - நமது குலத்துக்குத் தலைவனாகுபவனை, புயல் மகரக்குழைக் கடவுளை – மேகத்தையொத்த மகரநெடுங்குழைக்காதனை, புகழும் - போற்றுகின்ற வண்தமிழ்ச் சொல் - வளப்பம் பொருந்திய தமிழ்ச் சொற்கள் [இப்பிள்ளைத்தமிழ் நூலில்] தழைய - சிறந்துநிற்கவேண்டி, [வணங்கல் செய்வாம் என முடியும்]: தெளிக் கும் கொழும் பிரசம் ஊற்று - கொப்புளித்தெழும்படி மிகுதியான தேனைக் கொண்ட ஊற்றானது, இருக்கும் - பெருக்குகின்ற, கலுழிதிரை மண்டி –கலங்கலின் அலைகள் நெருங்கி, மடுநிறைய தேக்கு எறியும் வெள்ளப்பெருக்கில் - மடுக்கள் உள் நிறையும்படி செய்து வெளிவருகின்ற வெள்ளத்தின் ஒழுக்கினிலே, பொலன் தாது சிந்த - பொன்னிற மகரந்தங்கள் சிந்தும்படி, குடைந்து - மலர் களினுட்புகுந்து கிண்டி, பம்பிக்களிக்கும் - செறிந்து மகிழும், சிறை சுரும்பு - இறகுகளைக் கொண்ட வண்டுகள், இசை முரல - ரீங்காரஞ் செய்ய, முகைவிண்ட - முறுக்கு அவிழ்ந்த, கடிகமழ் பசுந் தண் துழாய் - மிக்கவாசனை வீசுகின்ற பச்சைநிறமுடைய குளிர்ந்த துளசிமாலையைத்தரித்த, கடவுள் - திருமாலைப்பற்றி, திருவந்தாதி புகலும் - மூன்றுந்திருவந்தாதி என்ற பிரபந்தத்தை யருளிச்செய்த, மயிலையர் கோன் - திருமயிலையில் [மயிலாப்பூரில்] அவதரித்த தலைவராகிய பேயாழ்வாரின், கழற்கால் - அணிகலன் பூண்டபாதங் களை, வணங்கல் செய்வாம் - (வீழ்ந்து) வணங்குவேன் ; (எ. று.)

(வி - ரை) "பிள்ளைக்குழா விளையாட்டொலியும் ,அருத்திருப் பேரை" என்றார் நம்மாழ்வாரும் (திருவாய் : 7-3-1) பரிமளித்தல் - மணக்கச் செய்தல், சிறப்படையச் செய்தல் : பரீஇமளிக்கும் என அளபெடுத்தது ஓசைநயம்பற்றி. பிரசம் - தேன் : அது ஊற்றெடுப்பது தேன் கூடுகளினின்று என்க. கலுழி- கலங்கனீர். முதலடியில் உயர்வுநவிற்சியணிபடக் கூறியது. பம்புதல் - செறிதல், நிறைதல் ; ஒலித்தல் எனினுமாம்' வண்டு ரீங்காரஞ் செய்தலை 'இசை முரலுதல்' என்பது மரபு ; "வண்டுபாட" என்றார், சம்பந்தரும். அந்தாதி - மூன்றுந் திருவந்தாதி : "திருக்கண்டேன் பொன் மேனிகண்டேன்" என்று தொடங்கி நூறு வெண்பாக்களைக் கொண்டது, பேயாழ்வார் திருமயிலையில் ஆதிகேசவப்பெருமாள் கிணற்றிலேயுண்டானதொரு செவ்வல்லிப்பூவிலே நந்தகமென்கிற வாட்படையின் அம்சமாய் ஐப்பசிமாதத்துச் சதயநட்சத்திரத்தில் திருவவதரித்தார் : ஆதலின், அவரை ''மயிலையர்கோன் என்றது''. பேயாழ்வார் ''தமிழ்த்தலைவன்'' ஆதலின், அவர்கழற்காலில் வணங்குகிறார். (6)

7\. கொந்தார் பசுந்துளவு பமுதுதள் ளிச்செழுங்
குளிர்நறுந் தொடையல் சேர்த்து
குலவுமணி முடிமீது கைபுனைந் தாழிமால்
குரைகழலி னங்கத்திரு
அந்தாதி யொடுதிருச் சந்தநூற் றிருபதையும்
அமுதூறு திருவிருத்தம்
ஆகச்சொன் மாலையணி யோகப் பிரான்மழிசை
ஆதிபனை யேபரவுதும்
நந்தா வளம்பெற்ற திருவழுதி நாடும்வளர்
நகரமு முரியகோமான்
நாரணன் பூலோக காரண னச்சுதன்
நந்தகோ விந்தன்முற்றும்
வந்தா தரித்துவரு ணன்பரவு மாழிநீர்
வண்ணனிகர் முகில்வண்ணனை

வானப் பிரானதிர் வளைக்கைமக ரக்குழை
மாதவன் சொற்றழையவே.

(இ-ள்) நந்தா வளம் பெற்ற - குறையாத வளப்பத்தையுடைய, திருவழுதிநாடும் - பாண்டியநாடும், வளர்நகரமும் - (அதற்குள் சிறந்ததாக) வளர்ந்துபரந்துபட்ட திருப்பேரைநகரமும், உரிய கோமான் - (தனக்கே) சொந்தமாகக்கொண்ட தலைவனும், நாரணன் - நாராயணன் என்று நாமம்பெற்றவனும், பூலோக காரணன் - உலகசிருஷ்டிக்கு மூலபுருஷனானவனும், அச்சுதன் - ஆச்ரிதர்களை நழுவவிடாதவனும், நந்த கோவிந்தன் - நந்தகோபனுடைய குமாரனும் கோவிந்தனென்னும் நாமம் பெற்றவனும், வருணன் - வருண பகவான், முற்றும் வந்து - முழுக்க ஓடிவந்து, ஆதரித்து - விரும்பி, பரவும் - துதிக்கின்ற, ஆழி நீர்வண்ணன் - கடல்நீரின் நிறங்கொண்டவனும், வானப்பிரான் - தேவர்களுக்குத் தலைவனும், அதிர் வளை கை - முழங்குகின்ற சங்கையேந்திய கையையுடைய, மகரக்குழை, மாதவன் - மகரக்குழைக்காதர் என்னும் திருநாமம்படைத்து இலக்குமிக்குக் கணவனுகுபவனும் ஆகிய, நிகர்முகில் வண்ணனை - நிகரில் முகில்வண்ணன் என்று திருநாமம் பூண்டவனைப் பற்றிய, சொல் - சொற்கள் (இப்பிள்ளைத்தமிழ்நூலில்) தழைய - சிறந்துநிற்கும்படி (மழிசையாதிபனையே பரவுதும் என முடியும்) : கொந்து ஆர் பசும் துளவு பழுது தள்ளி - கொத்துக்களைக்கொண்ட பச்சைத் துழாய்மலர்களில் கோதுகளை நீக்கி, செழும் குளிர் நறும் தொடையல் சேர்த்து - தழைத்துக் குளிர்ந்த வாசனையுள்ள மாலையாகக்கட்டி, குலவு மணி முடிமீது - விளங்குகின்ற அழகிய சிரசின்மேல், கைபுனைந்து - நன்ருகச்சூட்டி, ஆழி மால் குரை கழலில் - சக்கரத்தையேந்திய கையையுடைய திருமாலின் ஒலிக்கின்ற கழலணிந்த பாதங்களில், அங்கத் திருவந்தாதியொடு - அழகுமிகுந்த 'நான்முகன் திருவந்தாதி' யென்னும் பிரபந்தத்துடன், திருச்சந்தம் நூற்றிருபதையும் - திருச்சந்தவிருத்தம் என்னும் பிரபந்தத்தின் நூற்றிருபது செய்யுட்களையும், அமுது ஊறும் திருவிருத்தம் ஆக - தேவாமிர்தம் போல் இனிமைசுரக்கும் திருச்சந்தவிருத்தப்பாக்களாக, சொல் - அருளிச்செய்த, மாலை - பாமாலையையும், அணி - சூட்டியலங்கரித்த, யோகப்பிரான் மழிசை ஆதிபனை - யோகியர்க்கெல்லாம் தலைவனுகிய திருமழிசைப் பிரானை, பரவுதும் - துதிப்பேன் ; (எ. று).

(வி-ரை) நிகர்முகில்வண்ணன் - நிகரில் முகில்வண்ணன் என்ற திருநாமம் சுருங்கிற்று. வளை - சங்கு : பாஞ்சன்னியம் எனப்

படுவது. பசுந்துளவு நறுந்தொடையலொடு சொன்மாலையும் அணிவித்த திருமழிசைப்பிரான் என இயையும். அங்கம் - அழகு, திருவந்தாதி-நான்முகன் திருவந்தாதி: 96 வெண்பாக்களாலாகியது. இனி, அங்கம் - என்பதை உடலங்கம் எனக்கொண்டு, அங்கத்திரு வந்தாதி என்றவிடத்து, பின்வரும் அந்தாதிப் பாடலை யநுசந் தக்கவும்.

"வாழ்த்துகவாய் காண்ககண் கேட்க செவிமகுடம்
தாழ்த்தி வணங்குமின்கள் தண்மலரால் - சூழ்த்த
துழாய் மன்னு நீள்முடி என்தொல்லைமால் தன்னை
வழாவண்கை கூப்பி மதித்து"

(நான்முகன் திருவந்தாதி—செ : 11)

"எழிற் சந்தவிருத்தம் நூற்றிருபதீந்தான் வாழியே" என்றது இவரது வாழிதிருநாமமும். 4700 வருட காலம் பூலோகத்தில் வாழ்ந்திருந்து யோகநிலை பயின்றவராதலின், 'யோகப்பிரான்' என்றது. திருமழிசை இவரது அவதாரத் தலம். சென்னைக்கடுத்த பூவிருந்தவல்லிக்கு அருகாமையிலுள்ளது. அதிபன்- ஆதிபன் என நீண்டது. கோமான் நாரணன், காரணன், அச்சுதன், கோவிந்தன், ஆழிநீர் வண்ணன், வானப்பிரான், மாதவன் என்று பல பெயர்கள் ஒரு பொருண்மேல் அடுக்கி வந்து 'நிகர் முகில் வண்ணன்' என்பதோடு முடிந்தன. கொந்து-கொத்து என்பதன் மெலித்தல் விகாரம். பழுது தள்ளுதல் புழு பூச்சி முதலியன அரித்த பகுதிகளைக் கிள்ளியெறிதல், வாடிய-வற்றைக்களைதல் போல்வன. ஆழி - சக்கரம் : சுதரிசனம் எனப்படும் கழல் - தானியாகுபெயர். கைபுனைந்து - கை தமிழுபசர்க்கம். ஆதிபனையே - ஏகாரம் தேற்றம். பரவுதும் - தன்மைப் பன்மை. அந்தாதியொடு'என'ஒடு' கொடுத்துப்பிரித்தார் யாப்பின் வேறுபாடு நோக்கியென்க. (அந்தாதி வெண்பாவாலாகியது. திருச்சந்தம் விருத்தத்தாலாகியது.) (7)

8. வள்ளைவாய் நெகிழத் துளிக்கும் பசுந்தேறன்
மலர்மங்கை திகழ்வஞ்சியும்
வளமைதரு குடநாடும் ஆன்பொருநை
யுங்கொல்லி
வரையுமுரி மைச்சேரர்கோன்

புள்ளவா வுறுநீல மாலிகை கிடந்தபுய
பூதரன் குலசேகரன்
பொருசிலையை நெடியவட வரைமிசை
பொறித்தவன்
புகழ்வேந்த னினிதுகாக்க
அள்ளல்வாய்ப் பழனத் தடந்தொறுஞ் சுரிசங்கம்
அகடுளைந் தீன்றமுத்தும்
அம்பொற் பசும்பாளை தளையவிழ் கருங்கமுகின்
அணிமுத்தும் நிலவுகாலக்
கள்ளரு நறுமலர்க் குமுதம்விரி பேரைவரு
கருணை கரக்குரிசிலைக்
கடவுளைக் குலநா தனைப்புகழ்ந் தேத்துமென்
கவிதையின் சொற்றழையவே.

(இ-ள்) அள்ளல் வாய் பழனத் தடம் தொறும் - சேறு பொருந்திய வயலிடங்களிலெல்லாம், சுரிசங்கம் - சுழிதலைக்கொண்ட சங்குப்பூச்சிகள் (கருக்கொண்டு) அகடு உளைந்து - வயிறு நொந்து, ஈன்ற முத்தும் - பெற்ற முத்துக்களும், அம் பொற் பசும் பாளை தளை அவிழ்- அழகிய பொலிவுபெற்ற பசிய நிறம்படைத்த பாளையின் கட்டு விரிந்த, கரும் கமுகின் - கரிய கமுகங்களின் (உண்டாகிய), அணி முத்தும் - அழகிய முத்துக்களும், நிலவுகால - நிலாப்போன்ற வெளிச் சத்தைக் கொடுக்க, (அதனால்) கள் அரு நறுமலர்க் குமுதம் - தேன் நீங்கப்பெறாத வாசனை பொருந்திய ஆம்பல்மலர்கள், விரி - மலர் கின்ற, பேரை - தென்திருப்பேரை நகரில், வரு - கோயில் கொண் டெழுந்தருளியுள்ள, கருணைகரக் குரிசிலை - தயைக்கிருப்பிடமாகிய சிறந்தோனை, கடவுளை - தெய்வமாகுபவனை, குலநாதனை - (நம்) குலத்துக்குத் தலைவனாகுபவனை, (அதாவது மகரநெடுங்குழைக் காதனை), புகழ்ந்து ஏத்தும் - தோத்தரித்துப்பாடுகின்ற, என் கவி தையின் சொல் - என்பாடல்களின் சொற்கள், (இப்பிள்ளைத்தமிழ் நூலில்) தழைய - சிறந்து நிற்கவேண்டி (வேந்தன் இனிதுகாக்க என முடியும்) வள்ளை வாய்நெகிழ - வள்ளைக்கொடியில் மலர்கள் மலர்தலால், பசும் தேறல் - இனிய தேன், துளிக்கும் - துளிதுளி

யாத்க தோன்றுகின்றது : (அப்படிப்பட்ட வளப்பத்தைக் கொண்ட தாய்), மலர்மங்கை திகழ் வஞ்சியும் - (செல்வத்திற்கு அதிதேவதை யாகிய) இலக்குமிதேவி விளங்குகின்ற வஞ்சிமாநகரையும், வளமை தரு குடநாடும் - செழிப்பைக்கொண்ட சேரநாட்டையும், ஆன்பொரு நையும் - ஆன்பொருந்தம் என்னும் நதியையும், கொல்லி வரை யும் - கொல்லிமலையையும், உரிமை - தனக்கே சொந்தமாகக் கொண்ட, சேரர் கோன் - சேரநாட்டுக்கு அரசனும், புள் அவாவுறு நீல மாலிகை - வண்டுகள் (தேனை) விரும்பி மொய்க்கின்ற கருங் குவளை மாலை, கிடந்த புயம் - தரிக்கப்பட்டுள்ள தோள்களையுடைய, பூதரன் - பூவுலகத்துக்கே அரசனும், பொருசிலையை - போர்செய்யும் வில்லின் குறியை. நெடிய வடவரைமிசை - நீண்டுள்ள இமயமலை யின்மீது, பொறித்தவன் - (தன்வெற்றிக்கு அடையாளமாக) இலாஞ்சனையிட்டவனும், (ஆகிய) புகழ்வேந்தன் குலசேகரன் - கீர்த்திபடைத்த மன்னனாகிய குலசேகரப்பெருமாள், இனிதுகாக்க - நன்மையுறக் காப்பாற்றுவாராக ; (எ. று.).

இக் காப்புச் செய்யுள் கொல்லிகாவலன் குலசேகரனைத் தமது நூலைக் காக்க வேண்டியபடி. குலசேகரன் - குலசேகராழ்வார். இவர்சேர நாட்டு மன்னர், சேரநாடு - குடநாடு எனப்படும். (குடக்கு - மேற்கு) வஞ்சி என்பது இதன் தலைநகரம், இதனைக் கருவூர் என்பதுமுண்டு. ஆன்பொருநை - இதனை ஆன்பொருந்தம் என்னும் பிங்கலந்தை, இது சேர நாட்டிலோடும் ஓர் யாறு என்பதை ''நெடுந் தேர்க் கோதை, திருமா வியனகர்க் கருவூர் முன்றுறைத், தெண்ணீ ருயர்கரைக் குவைஇய, தண்ணான்பொருநை மணலினும் பலவே'' என்ற நக்கீரனாரது அகநானூறுப் பாடலால் தெளியலாம் (செ : 93), கொல்லிமலை சேரர்க்குரியதென்பதை ''வெல் போர் வானவன் கொல்லிமீமிசை'' (அகம் 33), 'வெல்போர் வான வன் கொல்லிக் குடவரை' (அகம், 213), 'பசும்பூட் பொறையன்.... மாயிருங் கொல்லி' (அகம் 303), 'பொறையன் அகலிருங்கானத்துக் கொல்லி போல'' (அகம் 338) என்பவற்றால் தெளியலாம். [வான வன், பொறையன் - சேரனைக்காட்டும் பெயர்கள்] புள் - வண்டு. நீலம் - கருங்குவளை. பூ தரன் - பூமியைத் தாங்குபவன் என்ற காரணம் பற்றி அரசனுக்காகும். சேரமன்னர் இமயமலையில் தமது வெற்றிக்கு அடையாளமாகத் தமக்கேயுரித்தான விற்குறியைப் பொறித்துவைத்தனர் என்பது மரபு. இதனை ''பேரிசைத் தொன்று முதிர் வடவரை வணங்குவிற் பொறித்து, வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன் வஞ்சியன்ன வென்னலம்தந்து'' என்றதனாலும் (அகம், 396) ''சேரலாதன்........இமயத்து முன்னோர் மருள வணங்

குவிற் பொறித்து" என்றதனாலும் (அகம், 127) அறியலாம். வட வரை - இமயமலை, காக்க - வியங்கோள்வினைமுற்று.

சூல்கொண்ட சங்கினிடத்தும் கமுகினிடத்தும் முத்துப்பிறக்கும் என்பர். சந்திரனொளி கண்டு ஆம்பல் மலருமாதலின், முத்தினொளியைச் சந்திர நிலவென மயங்கி ஆம்பல் மலர்ந்தன என்றவிடத்து **மயக்கவணி** காண்க. குமுதம் - ஆம்பல், சுரிசங்கம் - உரிச்சொற்றொடர் : சுரிதல் - சுழிதல். வள்ளை - வள்ளைக் கொடி : இது அதன் மலருக்கு முதலாகுபெயர். வள்ளை - தாமரையென லாகாது : "வளைக்கைமகளிர் வள்ளை கொய்யும், முடந்தை நெல்லின் விளை வயல் பரந்த" என்ற பதிற்றுப்பத்து நோக்குக (செ : 29). (8)

9\. விடங்காலும் வாளரா வரசுக்கு முணர்வரிய
மிக்கசங் கத்தமிழினன்
மீனவன் மதிப்பவரி யாசன மிருந்தினிது
வென்றுமூ தூர்மதுரையின்
அடங்காத பரசமய மதமறுத் துக்கிழி
அறுத்துவே ழப்பிடரிருந்
தாழிமா லைக்கண்டு வாழிபா டும்பெரிய
ஆழ்வார் தமைத்துதிப்பாம்
தடங்கா வடுக்கிடக் கின்றகல் லுருத்தவிர
தவமுனிவன் பின்னடந்து
சரணபங் கேருகத் துகளளிக் கும்பசுந்
தண்டுழாய்க் கொண்டல்கேணிக்
கிடங்கான திற்பகட் டிளவாளை துள்ளமைக்
கெண்டைவிளை யாடுபுனல்சூழ்
கெழுதகைய தென்பேரை வளமலி தருந்தூய
கேசவன் சொற்றமிழையவே.

(இ-ள்) தட கா - விசாலமான சோலையிடத்து, வடு கிடக்கின்ற கல் - பழிபட்டுக் கிடக்கின்றதோர் கருங்கல்லே, உரு தவிர - கல்லுருநீங்கும்படி (நீங்கிப்பெண்ணுருவாகும்படி) தவமுனிவன் பின் நடந்து - தவத்திற்சிறந்த விசுவாமித்திரமுனிவன் பின்னே நடந்து சென்று, சரணம் பங்கேருகம் துகள் - தாமரைமலர் போன்ற மெல்லிய திருவடிகளினின்று எழுந்த தூளி, அளிக்கும் - சாபநீக்கஞ் செய்து கருணைசெய்யும், பசும் தண் துழாய்க் கொண்டல் - பசிய குளிர்ந்த துளசிமாலையைத்தரித்த மேகம்போன்றவனும், கேணி கிடங்கானதில் - சிறுகுளமே அகழியைப்போல் ஆழ்ந்திருத்தலில் (ஆழமான அகழியில்), பகட்டு இள வாளை துள்ள - பருத்த இளைய வாளைமீன்கள் துள்ளிக்குதிக்கும்படி, மை கெண்டை விளையாடு புனல் சூழ் - கறுத்த கெண்டைமீன்கள் (மகிழ்ச்சியோடு) விளையாடும்படியான நீர் சூழ்ந்து, கெழுதகைய - விளங்குகின்ற, தென் பேரை - தென்திருப்பேரை நகரின், வளம் மலிதரும் - செழிப்பு மிகும்படி யருள்செய்யும், தூய கேசவன் - பரிசுத்தனான திருமாலும், (ஆகிய மகரநெடுங் குழைக்காதரைப்பற்றிய இப் பிள்ளைத்தமிழ் நூலில்) சொல் - பயிலும் என் சொற்கள், தழைய - சிறந்துநிற்க வேண்டி, (பெரிய ஆழ்வார்தமைத் துதிப்பாம் என முடியும்): விடம் காலும் வாள் அரா அரசுக்கும் - விஷத்தைக்கக்குகின்ற கொடிய பாம்புகட்கரசனாகிய ஆதிசேடனுக்கும், உணர்வு அரிய - (செவ்வன்) அறிதற்கு இயலாத, மிக்க சங்கத் தமிழினால் - சிறப்புமிகுந்த செந்தமிழ்ப்புலமையினால், மீனவன் மதிப்ப அரியாசனம் இருந்து - பாண்டியன் கொண்டாடச் சிம்மாசனத்தில் (ஒக்க) வீற்றிருந்து, இனிது வென்று - (வாதிட்ட) சமயவாதிகளை ஜெயித்து, மூதூர் மதுரையில் - பழமையான நகரமாகிய மதுரையில், அடங்காத பரசமய மதம் அறுத்து - வரம்புமீறிய புறச்சமயங்களின் செருக்கினை யடக்கி யொழித்து, கிழி அறுத்து - (பாண்டியன் கட்டிவைத்த) பொற்பொதியை (வாதில்வென்று) தனதாக்கிக்கொண்டு, வேழம் பிடர் இருந்து - யானையின் கழுத்திலேறியிருந்து, (ஊர்வலமாக வந்து), ஆழிமாலைக்கண்டு - சக்கரப்படையேந்திய திருமாலின் திவ்யமங்களவிக்ரஹத்தைக் கண்டு, வாழி பாடும் - மங்களாசாசனமாகப் பல்லாண்டுபாடிய, பெரிய ஆழ்வார்தமை - (பட்டர்பிரான் என்னும்)பெரியாழ்வாரை, துதிப்பாம்-போற்றிவணங்குவேன்;(எ.று).

(வி - ரை) 'வடுக்கிடக்கின்ற கல் உருத்தவிர' என்றவிடத்து அகலிகைசாபவிமோசனம் பேசப்பட்டது. இராமபிரானது திருவடிப் பொடி சேர்ந்த அகலிகை சாபமொழிந்து கல்லுருவம் மாறி நல்லுருவம் பெற்றாளென்பது பிரசித்தம். 'கோதமன்றன் பன்னிக்கு முன்னை

யுருக்கொடுத்ததிவன், போது நின்றதெனப் பொலிந்த பொலன்கழற் காற் பொடி கண்டாய்" என்றார் சனகனிடம் விசுவாமித்திர முனிவர். வாளை துள்ளுதல், கெண்டைவிளையாடுதல் இவை - நீர்வளங்குறித்து நிலவளங்காட்டுவது, கேசவன் - பிரமனையும் உருத்திரனையும் தன் அங்கத்திற் கொண்டவ னென்று பொருள் படும் : க - பிரமன், ஈச - சிவன் ; "பிறைதங்கு சடையானை வலத்தே வைத்துப் பிரமனைத்தன்னுந்தியிலே தோற்றுவித்து" என்றார் திருமங்கையாழ்வாரும். இனி, இதற்கு - அழகிய மயிர்முடியை யுடையவனென்றும், கேசியென்னும் அசுரனைக் கொன்றவ னென்றும் பொருள்கள் உண்டு, அறிவிற் சிறந்தவன் ஆதிசேடன் என்பர், அவனுக்கும் உணர்வரிய சங்கத் தமிழ் என்றது உயர்வு நவிற்சிபடக் கூறியதெனக் கொள்க. இனி, பெரியாழ்வாரைக் கருடாம்சமானவர் என்றதால் இங்ஙன் கூறியபடி யெனக்கொள் ளலாம்: "வைநதேயம் ச ஸம்பூதம் விஷ்ணு சித்தம் அஹம் பஜே" "பாண்டியன் கொண்டாட" என்றது தனியன், பாண்டிய னவையில் பரசமயக்களையறுத்து, திருமாலின் பரத்துவத்தைநிலை நாட்டிப் பரதத்துவ நிர்ணயஞ் செய்தவர் பெரியாழ்வாராதலினால் "வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான்" என்றது தனியன். 'ஆழிமாலைக் கண்டு - ஸர்வேச்வரனும் பிராட்டிஸஹித னாய்க் கரியதிருமேனியுடன் பெரிய திருவடிமேலேறி. திவ்யாயுத னாய், ப்ரஹ்மருத்ராதிகளெல்லாரும் ஸேவிக்க நின்ற நிலையைக் கண்டு என்றபடி. வேழப்பிடரிருந்து என்றது - யானைக்கழுத்தின் மேல் கிடக்கும் மணிகளையே தாளமாகக்கொண்டு மங்களாசாஸ நம் பண்ணியருளியமை குறித்து என்க. வாழிபாடுவது - பல்லாண்டு பாடியேத்துவது : மங்களாசாஸநம் எனப்படுவது இதுவே. "மங்களாசாசனத்தில் மற்றுள்ள ஆழ்வார்கள், தங்களார்வத்தளவு தானன்றி - பொங்கும், பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றான், பெரியாழ்வாரென்னும் பெயர்" என்றார் மாமுனிகளும் (உபதேசரத்தினமாலை, 18), சரணபங்கேருஹம் - திருவடித் தாமரை : வடமொழித் தொடர் : இருபெயரொட்டுப்பண்புத் தொகை, துழாய்க் கொண்டல் - உருவகம். மதிப்ப, இருந்து, வென்று, அறுத்து, [கிழி] அறுத்து, இருந்து, கண்டு என்ற வினை யெச்சங்கள் அடுக்கி 'பாடும், என்ற பெயரெச்சத்தோடு முடிந்தன. (9)

10\. பண்டா லிலையிற் கண்டுயில் ஞான
பராபரர் காவிரிநீர்
படியு மரங்கர்க் குச்சொன் மாலை
பணிந்தடி யிற்சூட்டி
வண்டார் துளவத் தொடைமுடி சூட்டி
வணங்குந் தவராசன்
மண்டங் குடிவாழ் தொண்ட ரடிப்பொடி
வரமுனி யைத்தொழுவாம்
குண்டா ருத்திப் புனலனல் குமிறக்
கோதண் டம்வாங்கிக்
குழைய வளைத்தொரு பகழி தொடுத்தருள்
கோமே தகநீலந்
தண்டா மரைமல ரும்பே ரையில்வரு
தாமோ தரதூயர்
தமிழ்தெரி பிள்ளைக் கவிவழு வாதெழு
தரணியி னிலைபெறவே.

(இ-ள்) குண்டு ஆர் உததிப்புனல் - ஆழம் பொருந்திய சமுத்திர நீரானது, அனல் குமிற - நெருப்புப்பற்றி யொலிக்க, கோதண்டம் வாங்கி - கோதண்டமென்னும் தமது வில்லினைக் கையிலெடுத்து, குழைய வளைத்து - நன்கு வளையவைத்து, ஒரு பகழி தொடுத்தருள் - ஒருஅம்பு (ஆக்நேயாஸ்திரத்தைத்) தொடுத்துவிடுத்த, கோமேதகம் - கோமேதகமணி போன்றவனும், (இராமபிரானுருபவனும்) நீலம் தண் தாமரை மலரும் பேரையில் - கருங்குவளையும் குளிர்ந்த தாமரைப்பூவும் (ஒருங்கே) மலர்கின்ற தென்திருப்பேரை நகரில், வரு தாமோதர தூயர் - எழுந்தருளியிருக்கின்ற தாமோதரனென்னும் திருநாமம்படைத்த புனிதரும் (ஆகிய மகரநெடுங்குழைக்காதரைப்) பற்றிய, தமிழ் தெரி பிள்ளைக்கவி - தமிழ்லெழுதும பிள்ளைத்தமிழ்ப்பாடல்கள், வழுவாது-பிழைபடாமல், எழு தரணியில் நிலைபெற - தோன்றிய இப்பூமியில் (மங்காது என்றும்) நிலைத்துநிற்கும்படி, (வரமுனியைத் தொழுவாம்

என முடியும்). பண்டு - முற்காலத்தில் (மகாபிரளயத்தின் போது) ஆலிலையில் கண்துயில் ஞானபராபரர் - இளம் ஆலந்தளிரில் பள்ளி கொள்ளும் தத்துவஞானப் பரம்பொருளாயிருக்கும், காவிரிநீர் படியும் அரங்கர்க்கு - காவிரியின் நீர் அடிவருடப் பள்ளிகொள்ளும் ஸ்ரீரங்கநாதனுக்கு, சொல் மாலை - சொற்களாலாகிய பாமாலையை (ப்பாடி), பணிந்து - (சாஷ்டாங்கமாக) வீழ்ந்துவணங்கி, அடியில் சூட்டி - திருவடிகளில் சமர்ப்பித்து அணிவித்து, (மேலும்) வண்டு ஆர் துளவத்தொடை - வண்டுகள் மொய்த்து நிறைந்த திருத்துழாய் மாலையை, முடி சூட்டி - (அரங்கனது) திருமுடியில் மகுடமாக அணிவித்து, வணங்கும் தவராசன் - தண்டனிட்டு வணங்கும் தவச்சிரேட்டராகிய, மண்டங்குடி வாழ் - திருமண்டங்குடியென்னுந் திருப்பதியில் வாழ்கின்ற, தொண்டரடிப் பொடி வரமுனியை - தொண்டரடிப்பொடி யென்னும் பெயர்பெற்ற சிறந்த ஆழ்வாரை, தொழுவாம் - (கைகூப்பி) வணங்குவேன் ; (எ. று.).

(வி-ரை) உததிப்புனல் அனல்குமிற கோதண்டம் வளைத்துப் பகழிதொடுத்த விவரம் - இராமபிரான் வருணனைப்பிரார்த்தித்தும் அவன் உபேக்ஷயாயிருக்க, ஸ்ரீராமன் அதுகண்டு கோபங் கொண்டு, அனைவரும் நடந்துசெல்லும்படி கடலைவற்றச்செய் வேனென்று ஆக்நேயாஸ்திரத்தைத் தொடுக்கத் தொடங்கியவள விலே, அதன் உக்கிரத்தால் வருணன் அஞ்சி நடுங்கி ஓடிவந்து அப் பெருமானைச் சரணமடைந்து கடல்வடிவமான தன்மேல் அணை கட்டு தற்கு உடன்பட்டு ஒடுங்கிநின்றனென்பது. கோமேதகம் - நவமணி களுளொன்று : (Sardony). எழுதரணி - ஏழுபுவனங்களிலும் எனினு மாம். பராபரர் - பரம்பொருள். ஞானபராபரர் - இயற்கையுணர் வினளய் முற்றுமுணர்ந்தவர், ''மண்டங்குடியதனில் வாழவந்தோன் வாழியே'' என்பது வாழிதிருநாமம். தொண்டரடிப்பொடி - இவர் இயற்பெயர் விப்பிரநாராயணர் என்பது. இவர் பகவத்பாகவதபக்தி தலையெடுக்கப்பெற்று, ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய ஸ்ரீ பாததூளியாய் அவர்கட்குக் கீழ்ப்படிந்து அடிமைபூண்டொழுகி, அதனல் தமக்கு அதுவே நிருபகமாக ''தொண்டரடிப்பொடி''என்று திருநாமம் பெற்ற னர். வடமொழியில் 'பக்தாங்க்ரிரேணு' எனப்படுவர். இவர் அரங் கனுக்குப் பூவிடுதலையும் திருத்துழாய் சாத்துதலையுமே திருப்பணி யாகக் கடைப்பிடித்து வந்தனராதலின், 'சொன்மாலையடியிற்சூட்டி' என்றும் 'துளவத்தொடை' முடியிற்சூட்டி' என்றும், கூறப்பட்டன : ''தொடையொத்ததுளவமும் கூடையும் பொலிந்து, தோன்றிய தோள் தொண்டரடிப்பொடி''என்றார் இவர் தம்மையே தமது 'திருப் பள்ளியெழுச்சி' பிரபந்தத்தில். இவர்பாடியருளிய மற்றொரு பிரபந்தம்

'திருமாலை' என்பது. (திருப்பள்ளியெழுச்சி பத்துப் பாசுரங்களையும், திருமாலை நாற்பத்தைந்து பாசுரங்களையும், கொண்டது). "பாவை யர்கள் கலவிதன்னைப் பழித்த செல்வன்" ஆதலின், 'தவராசன்' என்றும்'வரமுனி' என்றும் பாராட்டப்பட்டார். குண்டு -ஆழம். குமிறல் - ஒலித்தல். இராமபிரானைக் 'கோமேதகம்' என்றது உருவகம். தாமோ தரதூயர் - இருபெயரொட்டு. கவிக்கு வழுவாவது - சொற்குற்றம், பொருட்குற்றம், தொடைக்குற்றம், நடைக்குற்றம், யாப்பமைதி யின்மை முதலியன, ஞானபராபரர் - வடசொற்றொடர், "சுடராழி யான் அடிக்கே சூட்டினேன் சொன்மாலை" என்றார் பொய்கை யாரும். (10)

11. வச்சிரக் குலிசபதி முனிவரிமை யவர்சது
மறைக்கடவுள் மழுவலாளன்
வந்தடி பணிந்துதொழு மெந்தைக்கு முத்திதரு
வைகுண்டப் பதவியானுக்
கச்சுதப் பச்சைமா லுக்கரு மறைப்பொருட்
கருமணிக் கண்மலர்புடைத்
தமலனு திப்பொரு ளுரைக்கின்ற குரிசில்பா
ணாழ்வாரை யேபரவுதும்
கச்சறப் பொருமிப் புடைத்துச் சினத்துக்
கனத்தடி பரந்துவிம்மிக்
கண்கறுத் தமிர்தம் பொதிந்தகுங் குமமுலைக்
கற்புடைச் சீதையாளை
நச்சிநற் சிலைவளைக் கும்பசுந் தண்டுழாய்
ராமாவ தாரதீரன்
நாராய ணன்வழுதி நாடனங் குலநாதன்
நற்றமிழ்ச் சொற்றழைவே.

(இ - ள்) கச்சு அற பொருமி - இரவிக்கையறும்படி பூரித்து, புடைத்து - பருத்து, சினத்துக் கனத்து - வீங்கிச் சிவந்து கடி மைாகி, அடி பரந்து விம்மி - கீழ்ப்பாகம் அகலவெழுந்து, கண்

கறுத்து - முலைக்கண்கள் கருநிற மடைந்து, அமிர்தம் பொதிந்த - பால் கட்டியுள்ள, குங்குமமுலை - செஞ்சாந்து பூசிய கொங்கை களையுடைய, கற்புடைச் சீதையாளை - கற்பினுக்கணியாகிய சீதா பிராட்டியை, நச்சி - (மணக்க) விரும்பி, நற்சிலைவளைக்கும் - நல்லசிவதனுசை வளைத்து நாணேற்றிய, பசும் தண் துழாய் ராமா வதார தீரன் - பச்சைநிறத்ததான குளிர்ந்த திருத்துழாய்மாலை யையணிந்த இராமபிரானாய் அவதரித்த வீரனும், நாராயணன் - நாராயணன் என்ற திருநாமம் படைத்தவனும், வழுதி நாடன் - பாண்டியநாட்டுக்குத்தலைவனும், நம் குல நாதன் - நமது குலத்துக் குத்தலைவனுகுபவனும் (ஆகிய மகரநெடுங்குழைக் காதனைப், பற்றிய இப்பிள்ளைத்தமிழ் நூலில்) நல் தமிழ்ச்சொல் - நல்ல (செவ்விய) தமிழ்ச்சொற்கள், தழைய - சிறந்து நிற்க வேண்டி [பாணாழ்வாரையே பரவுதும் எனமுடியும்] : வச்சிரக் குலிச பதி - உறுதியான வச்சிரப்படையையுடைய இந்திரன், முனிவர் - இருடி கள், இமையவர் - தேவர்கள், சதுமறைக்கடவுள் - நான்கு வேதங் களையும் ஓதும் பிரமதேவன், மழுவலாளன் - மழுப்படையையேந் திய சிவபிரான் (ஆகிய இன்னோர்) வந்து அடிபணிந்து தொழும் எந்தைக்கு - ஒருங்கு வந்து திருவடிகளை வணங்கித் துதிக்கும் என் தந்தையாகும் கடவுளுக்கு, முத்தி தரு வைகுண்டப்பதவி யானுக்கு - மோட்சத்தையளிக்கின்ற வைகுண்டவாசனுக்கு, அச் சுதப் பச்சை மாலுக்கு - ஆச்ரிதர்களை நழுவவிடாத பச்சைவண்ணத் திருமாலுக்கு, அருமறைப்பொருட்கு – வேதங்கள் காண்டற்கரிய பரம்பொருளுக்கு, அருமணிக் கண்மலர் புடைத்து - பெறுதற்கரிய கருமணியைக்கொண்ட மலர்போன்ற கண்களை அகல விரித்துக் காட்டி, அமலனாதிப்பொருள் உரைக்கின்ற-அமலனாதிபிரான் என்று தொடங்கும் திவ்யபிரபந்தத்தில் அடங்கிய பழமறையின் பொருளை யெடுத்துச்சொல்லிய, குரிசில் - மிகச்சிறந்தோராகிய, பாணாழ் வாரையே - திருப்பாணாழ்வாரையே, பரவுதும் - தோத்தரிப்பேன் ; (எ.று).

(வி-ரை) சனகமகாராசன் கந்யாசுல்கமாகவைத்த சிவதநுசை முறித்து இராமபிரான் சீதா பிராட்டியைக் கடிமணம் புரிந்தமை கூறப்பட்டது. குலிசம் - வச்சிராயுதம் : அதற்குரிய பதி - இந்திரன் : சரணமாகுந்தனதாளடைந்தார்க்கெல்லாம், மரணமானல் வைகுந்தம் கொடுக்கும்பிரான் என்ருர் நம்மாழ்வாரும் (திருவாய் : 9 - 10 - 5) பச்சைமால் - 'பச்சைமாமலை போல்மேனி' என்ருர் தொண்டரடிப் பொடியாழ்வாரும். (திருமாலை - உ). புடைத்தல் - பூரித்தல் : அகல விரித்தல். மறைப்பொருட்குக் கண்மலர் புடைத்தலாவது - கரிய வாகிப்புடைபரந்து மிளிர்ந்து செவ்வரி யோடி நீண்ட அப், பெரிய வாய கண்கள்" என அகல விரித்துக் கூறியபடி, அமலனுதிபிரான்-

இப்பிரபந்தம் பத்துப்பாசுரங்களைக் கொண்டது : முதற் குறிப்பினுற் பெயர் பெற்றது. அணியரங்கனது திவ்விய மங்களவிக்கிரகத்தைப் பாதாதி கேசம் கண்குளிரச் சேவித்து அதில் ஆழ்ந்த அகத்த ராய் அதனழகையனுபவித்து அவ்வநுபவாதிசயத்தைப் பின்புள் ளார்க்கும் விசதமாக்குதற் பொருட்டு "அமலனுதிபிரான்" என்ற இந்தத் திவ்விய பிரபந்தத்தைத்திருவாய்மலர்ந்தருளினுர். இதன் 'பொருள்' என்றது - இப்பிரபந்தத்தினிறுதியில் "அணியரங்க" னென்னமுதினைக் கண்ட கண்கள் மற்ருென்றினைக் காணுவே என்று துணிந்து கூறியதை. மறைமுடித்தேசிகனுரும் "காண்பனவு முரைப்பனவும் மற்ருென்றின்றிக் கண்ணனையே கண்டுரைத்த கடிய காதற், பாண்பெருமாள் செய்த பாடல்பத்தும் பழமறையின் பொரு ளென்று பரவுமின்கள்" என்றருளியுள்ளமை நினைக. (அமிருதா சுவாதினி, செ : 37). 'எந்தைக்கு' முதலியநான்கனுருபுப் பெயர்கள் அடுக்கி 'கண்மலர் புடைத்து' என்பதனேடு இயையும். புடைத்து - புடைக்க வைத்து என்றபடி. பாணுழ்வார் - சோழவளநாட்டிலே உறையூரிலே ஒர் அந்தணுளனது கழனியிலே நெற்பயிர்க்கதிரிலே அவதரித்த தெய்வக்குழந்தையை அவ்வூரிற் பாணர்குலத்துப் பிறந்தானெருவன் உண்பித்துப் போஷித்துவந்தமையால், பாணர்" என்றே பேர் கூறப்பட்டார். பின்னர் ஆழ்வார் என வழங்கப் பட்டு "திருப்பாணுழ்வார்" ஆயினுர். (11)

12. சிறியதிரு மடல்பெரிய திருமடற் றிருமொழி
செழுந்தமிழ் நெடுந்தாண்டகஞ்
சிறக்கின்ற சொற்குறுந் தாண்டகம் விதிமுறை
தெளித்தவெழு கூற்றிருக்கை
நறியதுள வணியுமுகி லுக்குரைக்கு மங்கை
நாற்கவிப் பெருமானைமுன்
நான்மறைப் பொருளுக்கு மெட்டா வரும்பொரு ளின்
நற்பொருட் கவர்கள்வனைப்
பறிமுதல் திரும்பக் கொடாதழைத் துந்திருப்
பணிசெயும் புகழ்வேந்தனைப்
பலகாலு நெஞ்சில்வைத் தவனடிக் கமலமலர்
பரிவொடு பணிந்தேத்துதும்

உறிமிசை யிருந்தவளை களவினால் வாரியென்
றொருதிவலை சிந்தாதுணும்
உயர்புகழ்ப் பேரைவரு குலநாதன் முதுகவிதை
உலகெங் கணுந்தழையவே.

(இ - ள்) உறிமிசை இருந்த அளை - உறியின்மேல் வைத்திருந்த வெண்ணெயை, களவினால் - திருட்டுத் தொழிலினால், வாரி என்று - செல்வம் கிடைத்தது என்று (மகிழ்ந்து), ஒரு திவலை சிந்ாது உணும் - ஒருதுளிகூடக் கீழே சிந்தாதபடி முழுவதையும் விழுங்கும், உயர் புகழ் பேரை வரு குலநாதன் - மிக்க புகழை யுடைய திருப்பேரை நகரில் எழுந்தருளியுள்ள நம்குலத்துக்குத் தலைவனாகுபவனைப்பற்றிய, முதுகவிதை - செவ்வி முதிர்ந்த பிள்ளைத்தமிழ்ப் பாடல்கள், உலகு எங்கணும் தழைய - பூவுலக மெங்கும் சிறந்து நிற்கவேண்டி, (பணிந்தேத்துதும் என முடியும்.) சிறிய திருமடல் - சிறிய திருமடல் என்னும் பிரபந்தத்தையும், (அதனோடு) பெரிய திருமடல்—, திருமொழி - பெரிய திருமொழி, செழுந்தமிழ் நெடுந்தாண்டகம்-வளமுள்ள தமிழில் திருநெடுந்தாண்டகம், சொல் சிறக்கின்ற குறுந்தாண்டகம் - சொற்கள் சிறப்புறும்படி யமைந்துள்ள திருக்குறுந்தாண்டகம், விதிமுறை தெளித்த எழுகூற்றிருக்கை - யாப்பிலக்கண விதிமுறைக்கேற்ப அமைந்து தெளிவுறுத்திய திருஎழுகூற்றிருக்கை என்னும் பிரபந்தங்களையும், நறியதுளவு அணியும் முகிலுக்கு - வாசனை வீசுகின்ற திருத்துழாயைத்தரித்த மேகம்போன்ற திருமாலுக்கு, உரைக்கும் - (உரித்தாம்படி) பாடியருளிய, மங்கை நாற்கவிப் பெருமானை - மங்கை நாட்டுக்குத் தலைவனாய் நாலுவகைக் கவிகளைப்பாடுதலில் வல்லவனுமான பெருமை யுடையவனை, முன் - முன்னொருகால், நான் மறைப் பொருளுக்கும் எட்டா அரும்பொருளின் - நால்வேதங்களின் விஷயங்களுக்கும் உணரமுடியாத அரிய பரம்பொருளாகிய மகா விஷ்ணுவின், நற்பொருள் கவர் கள்வனை - நல்ல செல்வங்களை (வாள்வலிகாட்டிக்) கொள்ளையடித்த திருடனை, பறிமுதல் -தான் கொள்ளையடித்துக் கவர்ந்த செல்வங்களை, அழைத்தும் - உரிய வனைக்கூவியழைத்தும், திரும்பக்கொடாது-திருப்பி (உரியவனிடமே) கொடுக்காமல், திருப்பணி செயும் புகழ் வேந்தனை - கோயில் கைங்கரியங்களைச் செய்து புகழ்சம்பாதித்த (மங்கை) மன்னனை, பலகாலும் நெஞ்சில் வைத்து - எப்போதும் மனத்தினால் தியானித்து, அவனடிக் கமலமலர் - அவனது திருவடித்தாமரைகளை, பரிவொடு - அன்போடு (பக்தியோடு), பணிந்து ஏத்துதும் - வணங்கித் தோத்தரிப்பேன் ; (எ. று.)

(வி - ரை) அளை - வெண்ணெய். வாரி - செல்வம் (wealth). 'களவினால் உணும்' என்றவிடத்து "உண்ட வாய் களவினால் உறிவெண்ணெய் உண்ட வாய்" என்ற சிலப்பதிகாரம் நினைக. இக் களவுநினைந்தன்றோ நம்மாழ்வார் ஆறுமாதம் மோகித்துகிடந்தது. வாரியென்று அளையைக் களவினால் கவர்ந்து உண்டவனது நற்பொருளை இந்தக்கள்வனாகிய மங்கைவேந்தன் கவர்ந்தான் என்ற பொருத்தம் காண்க: 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' திருமங்கையாழ்வார் பாடிய ஆறுபிரபந்தங்கள் - சிறிய திருமடல், பெரிய திருமடல், பெரியதிருமொழி, திருநெடுந்தாண்டகம், திருக்குறுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை என்று ஈண்டு முறை பிறழவைத்தமை செய்யுள் நோக்கி என்க. பெரிய திருமொழியைப்பாடி முடித்தபின் தமது ஆராதவன்பு அடங்காமையால் மற்றும் ஐந்து பிரபந்தங்களையருளிச்செய்தார் என்பர். திருநெடுந்தாண்டகம் கடைசி பிரபந்தமாகும். இதனை ஆழ்வார் ஸ்ரீரங்கத்துக்கு எழுந்தருளி அரங்கன் சந்நிதியிலே தேவகானத்திற் பாடினார் என்பர். ஈண்டு, சிறிய திருமடல், பெரிய திருமடல், திருஎழுகூற்றிருக்கை இம் மூன்று பிரபந்தங்களும் இயற்பாவினைச் சேரும் என்பது குறிக்கொள்ளத்தக்கது. ஆறுபிரபந்தங்களும் வேதாங்கங்கள் ஆறினுக்கும் நிகரென்பர்; "மாறன் பணித்த தமிழ் மறைக்கு மங்கையர்கோன், ஆறங்கம் கூற அவதரித்த" என்றார் மாமுனிகளும் (உபதேசரத்தினமாலை, 9). எழுகூற்றிருக்கை சித்திரகவி வகையினைச் சேர்ந்து ரதபந்தத்தில் அமைக்கப்படுமாதலின், 'விதி முறை தெளித்த' என அடைமொழி கொடுக்கப்பட்டது. விதி முறை - யாப்பமைதி முறை. அஃதாவது - "ஒன்று முதலா ஓர் ஏழ் ஈறாச், சென்ற எண் ஈரேழ் நிலம் தொறும் திரிதர, எண்ணுவ தோன்றும் எழுகூற் றிருக்கை: (மாறனலங்காரம், சூ. 297) (மேலும்) அவைதாம், இரதபந்தத்தினில் இடை அறை யிரண்டாய்ச் சரதம துறநடை சார்தரு பான்மையின், ஒன்றுபன் றுன்காய் ஒருபன் னிரண்டாய், நின்றயல் ஏனவும் நிலம் தொறும் உபயம், குன்றுவ தாய்த்தொகை கூடிஒன் றிலிறும்" (—மாறனலங்காரம், சூ, 298) நாற்கவி-ஆசு, மதுரம், சித்திரம், விஸ்தாரம் என்பன, இவை நான்கிலும் வல்லவராதலின் திருமங்கையாழ்வார் "நாலுகவிப்பெருமாள்" எனப்படுவர். 'வேதப்பொருளுக்கும் எட்டா அரும்பொருள்' என்றவிடத்து "யதோ வாசே நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ" என்றது வேதமும். நற்பொருள் - வஸ்திர ஆபரணங்கள். காலில் அணிந்துள்ள மோதிரத்தையும் விடாமற் பற்களாலே கடித்து வாங்குதலால் 'பறிமுதல்' என்றார். உரியவனை அழைத்தது என்னையெனில் - பறித்த பொருள்களையெல்லாம் சுமையாகக் கட்டி வைத்து எடுக்கப்பார்க்கையில் அப்பொருட்குவை இடம்விட்டுப்

பெயராமல் பர்வதம் போல அசைக்கமுடியாதிருந்தமையால். (அழைத்து 'நீ என்ன மந்திரவாதம் பண்ணிறுய்' என்று வாட் படையைக்காட்டி. அச்சுறுத்திநெருக்க, அப்போது உரியவனுன சர்வேசுவரன் அஷ்டாக்ஷர மஹாமந்திரத்தை இவன் செவியிலே உபதேசித்தார். அதனுல் பின்னர் திருப்பணிசெய்யும் புகழ்வேந்த னுயினுன் என்பது அறியவேண்டுவது. செய்த திருப்பணியாவது - ஸ்ரீரங்கத்தில் திருமதிள் முதல் சிகரபர்யந்தமான கைங்கரியங்களைச் செய்வித்தல், 'பலகாலும்' என்றது - இடைவிடாமை குறிப்பது; இச்சொல் ,பரகாலன்'என்பதைச் சூசிப்பிக்கும். முகில் - உருவகம். துளவணியும் முகில், என்றது - பிறகுறிப்பு : திருமாலைக்காட்டுவது. முகிலுக்கு உரைக்கும் - நான்கனுருபு தகுதிப்பொருளது, அடிக் கமலம் - உருவகம். கமலமலர் - இருபெயரொட்டு. (12)

13. முடிக்கும் பசுந்துழாய்ச் சக்கிரா யுதக்கடவுள்
முளரியங் கண்ணனுக்கு
முதுமறை தெரிந்துதிரு வந்தாதி யாசிரிய
முறைவழா வடிதொறுஞ்சொல்
வடிக்குஞ் செழுந்தமிழ்ப் பாடலா யிரமுமகிழ்
மாறனுறை செய்தருளவே
வரிசையொடு பட்டோலை யெழுதுமொரு மதுரகவி
வரமுனிவ னைப்பரவுதும்
குடிபுகுந் தடந்திரைப் புனல்யாவு மொருமுகங்
கொண்டுவரு ணன்படியவே
கூடுபொரு நைத்துறைக் குலநாத னுயர்மாட
கூடங்க டோறுநெடுவான்
இடிக்குங் கருங்கொண்டல் கண்படுக் கும்பேரை
எம்பிரான் வானப்பிரான்
இருசரண மலர்சூடு மெனதுதண் கவிதையுல
கெங்கணுந் தழையவென்றே,

(இ - ள்) குடிபுகும் தட திரை புனல் யாவும் - (எல்லாவுலகங் களினின்றும் புறச்சூழல்களினின்றும்) வந்துசேருகின்ற பெரிய அலை

களின் நீரெல்லாம் ஒருமுகம் கொண்டு - ஒருங்குதிரண்டு ஒரு பெருக்காய் வந்து, வருணன் படியவே - (கடலரசனாகிய) வருண பகவான் தன்னிடத்தில் நீராடும்படி, கூடு பொருநைத்துறை - இணையும் கூடுபுனற்றுறை என்றுபெயர் பெற்ற தாமிரபர்ணி நதித் துறையிலெழுந்தருளியிருக்கும், குலநாதன் - நம்குலத்துக்குத் தலைவனாகுபவனும், உயர் மாட கூடங்கள்தோறும் - ஓங்கியுயர்ந்துள்ள உபரிகைகள் ஒவ்வொன்றினிடத்தும், நெடு வான் இடிக்கும் கருங் கொண்டல் - பெரிய ஆகாயத்தில் முழங்கும் கரிய மேகங்கள், கண் படுக்கும் - தங்கி யுறங்கும்படியான பேரை - திருப்பேரைநகருக்கு எம்பிரான் - தலைவனாகுபவனும், வானப்பிரான் - தேவர்களுக்குத், தலைவனாகுபவனும், (ஆகிய மகரநெடுங்குழைக்காதரின்) இரு சரண மலர் சூடும் எனது - இரண்டு பாததாமரைகளையும் (தலைக்கணியாக்) கொள்ளும் என்னுடைய, தண் கவிதை - இனிய பாட்டுக்கள், உலகு எங்கணும் தழைய என்று-இந்நிலவுலகு முழுதும் சிறந்துநிற்கவேண்டுமென்று வேண்டி, [மதுரகவி வரமுனிவனைப் பரவுதும் என முடியும்]: பசுந்துழாய் முடிக்கும் - பச்சைத்திருத்துழாய்மாலையைச் சூடும், சக்கிராயுதக்கடவுள் - சுதரிசனம் என்னும் சக்கரப்படையை [வலக் கையில்] ஏந்தியுள்ள திருமாலாம், முளரியங் கண்ணனுக்கு-தாமரை மலர்போன்ற திருக்கண்களையுடைய கண்ணனுக்கு (புண்டரீகாக்ஷனுக்கு) ஏற்குமென்று, முதுமறை தெரிந்து - பழையவேதங்களையாராய்ந்தறிந்து, திருவந்தாதி-பெரியதிருவந்தாதியையும், ஆசிரியம்-திருவாசிரியத்தையும், முறைவழா அடிதொறும் சொல் வடிக்கும் - (யாப்பு) நெறி தவறாதபடி அடியொவ்வொன்றிலும் தக்க சொற்களைச் சாரமாகப்பெய்தமைக்கும், செழுந்தமிழ்ப் பாடல் ஆயிரமும் - செவ்விய தமிழ்ச்செய்யுட்கள் ஆயிரமேற்கொண்ட திருவாய்மொழியையும், மகிழ் மாறன் உரைசெய்தருள - மகிழமாலையைத்தரித்த நம்மாழ்வார் உபதேசித் தருள, (அப் பிரபந்தங்களை) வரிசையொடு - சிறப்போடு, பட்டோலை எழுதும் - ஓலையிலே எழுதிக் கொண்ட, ஒரு - ஒப்பற்ற, மதுரகவி வர முனிவனை - மதுரகவியென்று பேர் படைத்த சிறந்த ஆழ்வாரை, பரவுதும் - தோத்தரிப்பேன் ; (எ.று).

(வி - ரை) வருணன் திருப்பேரை எம்பெருமானை வணங்கி வழிபட்டமை முன்னரே குறிக்கப்பட்டது. நம்மாழ்வார் உபதேசித் தருளியதாக மூன்று பிரபந்தங்களே ஈண்டு குறிக்கப்பட்டிருப்பினும், திருவிருத்தத்தையும் உபலட்சணத்தாற் கொள்ளவேணும். இந்த நான்கு பிரபந்தங்களும் நான்கு வேதங்களின் சாரம். இருக்கு யஜுஸ் அதர்வணம் என்ற மூன்று வேதங்களின் ஸாரார்த்தத்தைத் திருவிருத்தம் திருவாசிரியம்பெரியதிருவந்தாதியென்ற மூன்று பிரபந்தங்களின் மூலமாகவெளியிட்டு, அவ்வேதங்களுள் சிறந்ததும் பகவானது

சொருபமாகவே உள்ளதுமான ஸாமவேதத்தின் தத்துவப்பொருளைக் கடைசிபிரபந்தமான திருவாய்மொழியால் அருளிச்செய்து, அவற்றை மதுரகவிகளுக்கு உபதேசித்தருளினர் என்பது அறியவேண்டுவது, திருவிருத்தம் - நூறுபாடல்கள் கொண்டது : திருவாசிரியம் - ஏழு பாட்டுக்கள். பெரிய திருவந்தாதி - எண்பத்தேழு வெண்பாக்கள்: திருவாய்மொழி - ஆயிரத்துநூற்றிரண்டு செய்யுட்கள். இவற்றைப் பட்டோலைகொண்டு உலகுய்ய ஈந்தார் மதுரகவிகள். பட்டோலை கொள்ளுதல் - பெரியோர் சொல்லிவர ஓலையில் எழுதிவரல். 'வரிசை' என்பது இங்கே சிறப்பினைக்காட்டிவந்தது. மகிழமாலை[வகுளமாலை] நம்மாழ்வார்க்குரியது : இந்த மாலை ஆழ்வார்பக்கல் திருவுள்ள முவந்து பொலிந்துநின்ற பிரான் பிரசாதித்தருளினது. மதுரகவி அந்தணராதலின் 'வரமுனிவன்' எனப்பட்டார். கண்ணனுக்கு - நான்கனுருபு தகுதிப்பொருளது, கொண்டல் கண்படுக்கும் மாட கூடங்கள் என்றது - மிகையுயர்வுநவிற்சியணி. இருசரணம் - உபய பாதம். சரணமலர் - உருவகம்.

மூன்ருமடியில் குறிக்கப்படும் வரலாறு :- ஒரு காலத்தில் அசுரர் வருணபாசத்தைக்கவர்ந்து போயினர். அதனைத்திரும்பப் பெறவேண்டுமென்று வருணன், பொருநையாற்றங்கரையையடைந்து மகரநெடுங்குழைக்காதரை நோக்கித் தவம் புரிந்தான் : அப்பெருமானருளால் திரும்பவும் பாசம் கிடைக்கப்பெற்ருன் அந்நன்றிக்காக வருணன், தான்நின்று தவம்செய்தஅத்தீர்த்தத்தில் ''எல்லாவுலகங்களிலுமுள்ள சகலதீர்த்தங்களின் மகிமையும் கூடுவதாக'' என்று அருள்செய்தமையால், இத்தலத்திலுள்ள அத்திருமஞ்சனத்துறை ''கூடுபுனற்றுறை'' (ஸமூகதீர்த்தம்) எனப்பெயர்பெற்று இத்துறையில் பெருமாள் உகந்த அற்புத மகரகுண்டலம் அகப்பட்டமையால் இஃது மாகரிக (ஸமூக) தீர்த்தமெனவும் வழங்கப்படும். நம்மாழ்வாரும் ''கூடுபுனல் திருப்பேரையிற்கே காலம்பெற என்னைக்காட்டுமின்கள்'' என்று விதந்தெடுத்துப் பேசியுள்ளார். (திருவாய் ; 7-3-6) (13)

14. முதியகவி நாவலவர் தம்பிரான் றிருஞான
முத்திரைக் கடவுள்திருவாய்
மொழிதனக் குரைவிரித் தெழுதும்பிர புடவாக்கி
முழுதுமன் பர்க்குவாழ்வு
புதுநறவு கக்கித் துளிக்குஞ் சரோருகப்
பொற்கழற் கருணைகரன்

புகலரிய பரசமய திமிராரி வண்புகழ்ப்
பூதூர னைப்பரவுதும்
சதுமறையு மறிவரிய குலநாத னமுதொடலை
தத்துந் தடம்பொருநையான்
தருமநெறி தவருத திருவழுதி வளநாடு
தழையவரு கருணைமேகம்
விதிமுறையி னொடுதொழுது வருணனு ராதனைசெய்
விமலன்மக ரக்குழையன்மால்
விரவுஞ் செழுந்தமிழ்ப் பிள்ளைக் கவிக்குள்ளம்
மிக்கசொற் றழையவென்றே.

(இ-ள்) சதுமறையும் அறிவரிய குலநாதன் - நான்குவேதங்களாலும் அறிதற்கு அரிய நமது குலத்துக்குத் தலைவனுகுபவனும், அமுதொடு அலை தத்தும் தடம் பொருநையான் - தேவாமிர்தம் போல் இனிய நீர்கொண்டு அலைகள் பாயும் பரந்த தாமிரபர்ணி தீரத்தில் எழுந்தருளியிருப்பவனும், தருமநெறி தவருத திருவழுதி வளநாடு - தருமமார்க்கத்தினின்று (சிறிதும்) பிறழாத பாண்டிய நாடு, தழைய வரு - செழிப்புறுமாறு அவதரித்துள்ள, கருணை மேகம் - தயைபொழியும் மேகம் போன்றவனும், வருணன் - (கடல் தெய்வமாகிய) வருணன், விதிமுறையினொடு தொழுது - வழிபடுங் கிரமத்தோடு வணங்கி, ஆராதனை செய் விமலன் - ஆராதிக்கும் புனிதனும் (ஆகிய) மகரக்குழையன்மால் - திருமாலாம் மகரக்குழைக்காதன், விரவும் - பிரபந்தத்தலைவனுகப் பொருந்தி வருகின்ற, செழுந்தமிழ்ப் பிள்ளைக்கவிக்கு - செவ்வியதமிழில்எழுதும் பிள்ளைத்தமிழ்ப்பாடல்களுக்கு (ஏற்ற) உள்ளம் மிக்க சொல் - மனப் பரிவு மிகுந்த சொற்கள், தழைய என்று - சிறந்து நிற்கவேண்டுமென்று வேண்டி, (பூதுரனைப்பரவுதும் என முடியும்). முதியகவி நாவலவர் தம்பிரான் - செவ்விமுதிர்ந்த பாடல்களைப் பாடவல்ல நாவீறுபடைத்தவர்களின் தலைவராகுபவரும், திருஞான முத்திரை கடவுள் - அழகிய ஞானமுத்திரையைக் கொண்ட தெய்வமாகுபவரும், திருவாய்மொழிதனக்கு - (சாமவேதசாரமாகிய) திருவாய்மொழி பிரபந்தத்துக்கு, உரைவிரித்து - விரிவுரை செய்து (பரக்க வியாக்கியானித்து), எழுதும் - (திருக்குருகைப்பிரான்பிள்ளானைக் கொண்டு) எழுதுவிக்கும், பிரபுட வாக்கி - கம்பீரமான வாக்கினையுடையவரும், அன்பர்க்கு - தன்பக்தர்களுக்கு, முழுதும் வாழ்வு - முற்றும் பாதுகாப்பாய் இருப்பிடமாகுபவரும் (ரட்சகராகுபவரும்)

புது நறவு கக்கித் துளிக்கும் - புதிய தேன் கசிந்து சொட்டுகின்ற, சரோருகம் - தாமரைமலர் போன்ற, பொற் கழல் கருணாகரன் - அழகிய பாதங்களையுடைய தயைக்கிருப்பிடமாகுபவரும், புகலரிய பரசமய திமிர அரி - சொல்லுதற்கும் வாய் கூசுகின்ற புறச்சமயங்களாகிய இருட்டினை அழித்தவரும், (ஆகிய) வண்புகழ் பூதூரனை - வளப்பத்தில் புகழ்பெற்ற ஸ்ரீபெரும்பூதூரில் அவரித்தவராகிய இராமநுசரை, பரவுதும் - தோத்தரிப்பேன் ; (எ.று)

(வி - ரை) ' நாவலவர் தம்பிரான் ' என்றவிடத்து ''பல்கலையோர்தாம் மன்னவந்த இராமாநுசன் ''என்றதும் காண்க. (இராமா: நூற்றந் : 1) ஞானமுத்திரை - சின்முத்திரை : உபதேசக்குறியாகச் சுட்டுவிரல் நுனியைப்பெருவிரல்நுனியுடன் சேர்த்துக்காட்டும் ஞானமுத்திரை : இராமாநுசரை ஞானமுத்திரைக்கோலத்துடன் திருமலையில் திருவேங்கடமுடையான் சந்நிதியில் இன்றும் ஸேவிக்கலாம். எழுதும் - எழுதுவித்த ; பிறவினைப் பொருளில் வந்தது. திருக்குருகைப்பிரான் பிள்ளான் என்ற தம் சீடரைக் கொண்டு எழுதுவித்த திருவாய்மொழி வியாக்கியானம் ஆறுயிரப்படி எனப்படும். இது ஆறுயிரம் கிரந்தங்களைக் கொண்டது. (கிரந்தம் — ஒற்றொழித்து உயிரும் உயிர்மெய்யுமாகக் கொள்ளப்படும் முப்பத்திரண்டு எழுத்தின் கூட்டம்.] திருவாய்மொழி வியாக்கியானங்களுள் முந்தியது. இதனை ''முந்துறவேபிள்ளான் முதலானோர் செய்தருளும், அந்த வியாக்கியைகளன்றாகில் - அந்தோ ! திருவாய்மொழிப்பொருளைத்தேர்ந்துரைக்கவல்ல,குருவார் இக்காலம் நெஞ்சே! கூறு '' (உபதேசரத் : 40) '' தெள்ளாரும் ஞானத் திருக்குருகைப் பிரான், பிள்ளான் எதிராசர் பேரருளால் - உள்ளாரும், அன்புடனே மாறன்மறைப்பொருளை அன்றுரைத்தது, இன்பமிகும் ஆறுயிரம்'' (உபதேசரத் : 41) என்ற மணவாளமாமுனிகள் வாக்கினாலறியலாம். எனவே, பிள்ளான் திருவாய்மொழியைக்காத்த குணவாளராவர் : காக்கச்செய்தவர் இராமாநுசர். பிரபுடம் - சுத்தம், கம்பீரம். வாக்கி- பெயர்ச்சொல் : இகர விகுதி ஆண்பால்காட்டுவது. வாழ்வு - இருப்பிடம் : சரணாலயம் என்றபடி. ஸரஸ்+ருஹம் = ஸரோருஹம் : குளத்தில் முளைப்பது : தாமரைக்குக் காரணவிடுகுறி. புகலரியதிமிரம் என இயைத்து. உட்செல்லமுடியாது செறிந்த இருள் எனினுமாம். திமிரம் - இருள். அரி-பகை. திமிராரி – வடசொற்றொடர்.. 'செங்கயல்வாவிகள் சூழ்வயல்நாளும் சிறந்த பெரும்பூதூர்ச்சீமானிளையாழ்வார் 'ஆதலின், வண்புகழ்ப்பூதூரன்' எனப்பட்டார். 'பரசமயதிமிராரி' ''என்றவிடத்து-சாருவாகமதம் நீறுசெய்து சமணச்செடிக்கனல் கொளுத்தியே சாக்கி யக்கடலை வற்றுவித்து மிகுசாங்கி யக்கிரி முறித்திட, மாறு செய்திடு, கணாதவாதியர்கள் வாய்தகர்த்தற மிகுத்துமேல் வந்தபாசுபதர்சிந்தி யோடும்வகை வாதுசெய்த

எதிராசனார், கூறுமாகுருமதத்தொடோங்கியகுமாரிலன் மதமவற்றின் மேல் கொடியதர்க்கசரம் விட்ட பின் குறுகிமாயவாதியரை வென்றிட, மீறிவர்திஸ்வருபாற்கரன் மதவிலக் கடிக்கொடியெறிந்து போய் மிக்கயாதவமதத்தைமாய்த்தபெருவீரர்'' என்றும், சங்கரபாற் கரயாதவபாட்டப்ரபாகரர்தங்கள்மதம் சாய்வுற வாதியர்மாய்குவ ரென்று சதுமறைவாழ்ந்திடுநாள்'' என்றும் மா முனிகள் அருளிச் செய்தவை அநுசந்தேயம் (ஆர்த்திப்ரந்தம், 29, 32). கருணை மேகம் - உருவகம். விதிமுறை ஆராதனை -திருவாராதனக் கிரமம். குழையன் + மால் - குழையமால் : ''சிலவிகாரமாம் உயர்திணை.(14)

செங்கீரைப்பருவம்

15\. வானுட ரும்பொற் பொகுட்டா சனப்பற்ப
மண்டபத் : தரசிருக்கும்
மறைக்கிழவ னுஞ்சடை முடிக்கடவு ளுங்குலிச
வச்சிரா யுதத்தலைவனும்
பூநாறு வெட்சியந் தெரியல்புனை குமரனும்
புகர்முகத் தவனுமதியும்
பொங்குசுட ரிரவியுந் துங்கமுனி வருநெடும்
பொற்கோயில் வலம்வந்துநம்
கோனுகும் வருணனு ராதனைசெய் மஞ்சனக்
கொலுவில்வந் தடிவணங்கிக்
கும்பிட்டு நின்றுசே விப்பநற் சேவைபுரி
கோசலைக் கிருகண்மணியே!
தேனுறு பச்சைப் பசுந்துழாய் மேகமே!
செங்கீரை யாடியருளே
செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள!
செங்கீரை யாடியருளே.

(இ - ள்) வான் - தேவலோகத்திலும், நாடு அரும் - தேடிக் காண்பதற்கரிய, பொன் பொகுட்டு - அழகிய கொட்டையையுடைய, பற்ப ஆசன மண்டபத்து - தாமரையாகிய தவிசினையிட்ட கொலு

மண்டபத்தில், அரசு இருக்கும் - மன்னனாய் வீற்றிருக்கும், மறைக் கிழவனும் - பிரமதேவனும், சடைமுடிக் கடவுளும் - கபர்த்த மென்னும் சடாபாரத்தையுடைய சிவபெருமானும், குலிச வச்சிராயுதத் தலைவனும் - வயிரம் போலுறுதி கொண்ட வச்சிரப்படையை யேந்திய இந்திரனும், வெட்சி பூ நாறு அம் தெரியல் - வெட்சிப்பூவின் வாசனை வீசுகின்ற அழகிய மாலையை, புனை - தரித்துள்ள, குமரனும் - முருகனும், புகர் முகத்தவனும் - புள்ளிகளையுடைய யானையின் முகத்தைக் கொண்ட விநாயகனும், மதியும் - சந்திரனும், சுடர் பொங்கு இரவியும் - ஒளிமிக்க சூரியனும், துங்க முனிவரும் - தூய இருடிகளும், நெடும் பொற் கோயில் வலம் வந்து - நீண்ட பெரிய அழகிய கோயிலைப் பிரதட்சிணமாக வந்து, (மேலும்) நம் கோனாகும் வருணன் - நமக்கெல்லாம் தலைவனாகும் (மழைக்கடவுளான) வருணபகவான், ஆராதனைசெய் - திருவர்ராதனம் செய்து வழிபடுகின்ற, மஞ்சனக் கொலுவில் வந்து - திருமஞ்சனமண்டபத்தில் (சூழ) வந்திருந்து, அடி வணங்கி - பாதங்களில் பணிந்து, கும்பிட்டு நின்று சேவிப்ப - கைகூப்பி நின்று சேவிக்கும்படி, நல் சேவை புரி - நன்றாகத்தரிசனம் கொடுக்கின்ற, கோசலைக்கு இரு கண்மணியே - கௌசல்யாதேவிக்கு இருகண்களிலுள்ள மணிபோல் போற்றக் கூடிய மகரநெடுங்குழைக்காதரே ! தேன் நாறு பச்சைப் பசுந்துழாய் மேகமே - தேன்வாசனைவீசுகின்ற பசிய இளைய திருத்துழாய்மாலையை யணிந்துள்ள புயல் வண்ணனே ! செங்கீரை ஆடியருள் - முழந்தாளிட்டு முகமசைத்து ஆடுவாயாக ; செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள - சகல சௌபாக்யங்களுக்கும் உரிய தென்திருப்பேரை நாச்சியாருக்குக் கணவனாகுபவனே ; செங்கீரை ஆடியருள்—; (எ. று.)

பொகுட்டு - தாமரைப்பூவிலுள்ள கொட்டை ; (pericarp of the lotus flower); "இதழகத்து அரும் பொகுட்டனைத்தே அண்ணல் கோயில்" (பரிபாடல் - மதுரையைப்பற்றிய கடைசி பாடல்). ஈண்டு, "நான்முக வொருபற்பயந்த பல்லிதழ்த், தாமரைப் பொகுட்டிற் காண்வரத்தோன்றி" (பெரும்பாண்: 403 - 404) என்பதனையும் ஒருசார் ஒப்புநோக்குக. மறைக்கிழவன் - வேதம் ஓதுபவனாதலின் பிரமனைக்காட்டிற்று, குலிசம் - வயிரம் (Diamond) 'குலிசம்' என்பதற்கே வச்சிரப்படை என்றும் பொருளுண்டாதலின், 'குலிசவச்சிராயுதம்' என்றது ஒருபொருட்பன்மொழியாகிச் சிறப்புற்றதென்க. வெட்சி - குறிஞ்சிநிலப்பூ ; முருகனுக்குரியது, இது காட்டில் தழைத்து வளர்வது, "கடற்றிற் கலித்த முடச்சினை வெட்சி" என்றது குறுந்தொகை. இந்தப் பூவின்மொட்டு சிவலின் கால்முள்ளைப் போன்றிருக்கும் என்பதை "இதல் முள்ளொப்பின் முகை முதிர்வெட்சி" என்ற அகநானூற்றடியால் அறிக. புகர் -

புள்ளி. புகர்முகம் - யானை : (பரிபாடல், 6 வரி 25.) "புகர்முகயானை யின் உரிவை போர்த்த" என்றார் கம்பரும். 'துங்கமுனிவர்' -சப்த ரிஷிபோன்றவர். இராமபிரான் திருமாலின் அவதார மாதலின் மகரநெடுங்குழைக்காதரை "கோசலைக்கிரு கண்மணியே" என்றார். "பச்சைப்பசுந் துழாய்" என்றது - பச்சைப்பசேலென்று விளங்குதல் நோக்கி. மேகம் - சியாமளநிறத்தன் என்றபடி, வல்லி - வல்லிக் கொடி போன்றாளுக்கு உவமவாகுபெயர். (15)

16. முருகொழுகு பங்கயத் தடமுநீள் குளனுமலை
மோதும் புனற்சுழியினும்
முதிராத விளமணலு நடைவரம் புஞ்செய்ய
முதுகுரம் புங்கரும்பும்
அருகுநெட் டிலைமுடத் தாழைநீ ழலும்வேலி
அடருஞ் செழுஞ்சோலையும்
அம்பொற் பசும்பாளை தளையவிழ்க் குங்கமுகின்
அணிவனமு மதகினூடுஞ்
சொருகுகுழல் மகளிர்குட முலையசைய நுணுகிடை
சுமக்கின்ற பொற்குடத்துஞ்
சுடர்மணிப் பொற்றடந் தேரோடும் வீதியும்
சுரிமுகச் சங்கமூரும்
திருவழுதி நாடாள ! பரமபத வீடாள!
செங்கீரை யாடியருளே
செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள!
செங்கீரை யாடியருளே.

(இ - ள்) முருகு ஒழுகும்-தேன் பெருகுகின்ற, பங்கயத் தடமும்-தாமரைத்தடாகங்களிலும், நீள் குளனும் - நீண்டகுளங்களிலும், அலைமோதும் புனல் சுழியினும் - சிற்றலைகள்வீசுகின்ற தண்ணீர்ச் சுழிகளிலும், முதிராத இளமணலும் - கெட்டிப்பட்டிராதஇளையமணல் மேடுகளிலும் (வாலுகங்களிலும்), நடை வரம்பும்-நடக்கின்ற (கழனி) வரப்புகளிலும், செய்ய முது குரம்பும் - செவ்விய பழைமையான நீர்ப் பாசனஅணைக்கட்டுகளிலும், கரும்பும் - கருப்பந்தோட்டங்களிலும்,

அருகு - (அவற்றின்) சமீபத்திலுள்ள,நெடு இலை முடத் தாழை நீழலும் - நீண்ட ஓலைகளையுடைய வளைந்த தென்னைமரங்களின் நிழலிலும், வேலி அடரும் செழும் சோலையும் - வேலிகள் நெருங்கச்சூழ்ந்துள்ள செழிப்பான சோலைகளிலும், அம் பொன் பசும் பாளை தளை அவிழ்க்கும் - அழகிய பொன்போலொளிரும் இளைய குலைகள் முறுக்கவிழ்ந்துநிற்கும், கமுகின் அணிவனமும் - பாக்குமரங்களின் அழகிய சோலைகளிலும், மதகின் - மதகுகளிற்பாயும் நீர்போல, ஊடும் - புலக்கின்ற, சொருகு குழல் மகளிர் - கூந்தலையெடுத்துச் செருகிமுடிக்கின்ற பெண்டிரின், குடமுலை அசைய - குடம்போல்பருத்தகொங்கைகள் அசையும்படி, நுணுகு இடை சுமக்கின்ற - மிகநுண்ணிதாகிய இடுப்பிலே தாங்கியுள்ள, பொன் குடத்தும் - (நீர்முகந்து கொண்டு வரும்) பொன்போல் ஒளிரும் குடங்களிலும், சுடர் மணிப் பொன் தடம் தேரோடும் வீதியும் - ஒளிவிடுகின்ற மணிகளைக்கொண்ட அழகிய விசாலமானதேர்கள் ஓடும்படியான பெரிய தெருக்களிலும், சுரிமுகச் சங்கம் ஊரும் - சுழிந்தமுகத்தைக் கொண்ட சங்குப்பூச்சிகள் மெல்ல நகர்ந்து செல்லுகின்ற, திருவழுதிநாடு ஆள! - பாண்டிய நாட்டின் தலைவனுய மன்னனே ! பரமபத வீடு ஆள ! - பரமபதமென்கின்ற மோட்சத்தையாள்கின்ற கடவுளே ! - செங்கீரை ஆடியருள் — ; செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள! சகலசௌபாக்யங்களுக்கும் உரிய தென்திருப்பேரை நாச்சியாருக்குக் கணவனுகுபவனே ! செங்கீரை ஆடியருள் — ; (எ.று).

தடத்திலும், குளத்திலும், சுழியிலும், மணலிலும், வரம்பிலும், குரம்பிலும், கரும்பிலும், தாழைநீழலிலும், சோலையிலும், கமுகவனத்திலும், பொற்குடத்திலும், வீதியிலும் என அடுக்கி நின்று 'சுரிமுகச் சங்குப்பூச்சிகள் ஊரும்' என் இயையும். சங்கம் ஊர்தல் - நிலவளம் புனல்வளம் தெரிப்பது 'உழவர் முன்றில்தோறும் நந்து ஊரும் புனல் நாடு' என்றுர் வில்லியும். "சுழியாரும் கனசங்கம் கலந்தெங்கும் நிறைந்தேறி, வழியாரமுத்தீன்று வளம் கொடுக்கும் திருநறையூர்" என்றுர் திருமங்கைமன்னனும். (பெரியதிரு ; 6-9-2) "மரணமானல் வைகுந்தம் கொடுக்கும் பிரான்' ஆதலின், 'பரமபத வீடாள !' என்றுர். குரம்பு - ஆற்றிலிருந்து நீரைப் பாய்ச்சும் பாசனக் கால்களிலுள்ள அணைக்கட்டு : (artificial bund). மதகின், இன் - ஐந்தனுருபு ஒப்புப்பொருளது. 'சொருகுகுழல் மகளிர்' என்றவிடத்து, 'முருகிக்சிவந்த கழுநீரும், முற்று இளைஞர் ஆருயிரும், திருகிச் செருகுங்குழல் மடவீர் "என்ற கலிங்கத்துப்பரணியடிகள் நினைக. குடமுலையசைய சுமக்கின்ற பொற்குடம் என்றது நயம். மகளிரை வருணித்தது - "ஒப்பவரில்லா மாதர்கள் வாழும்" என்றது போலக் கொள்க. சுரிமுகம் என்றுலே 'சங்கு' என்று பொருள்.

எனவே, இது, இயற்கையடைமொழியாகும். "ஊரும்" என்றது சூல்கொண்டு முத்தீனும் நிலையிலிருப்பதால். வழுதிநாடு - பாண்டிய நாடு. (16).

17. அறுகால் வரிச்சுரும் படைகிடக் குங்குழல்
அரக்கிமண் டோதரிகழுத்
தழகுதா லிச்சரடு தரையில்வீ ழப்பருந்
தாயவெண் கழுகுமொய்ப்ப
மறுகா னெடுஞ்சிகர மாடமா ளிகையிடிய
வலதுகட் கடைதுடிப்ப
வர்சரெறும் நெய்தலம் பறைகொட் டலங்கை
யழன்
மண்டிவான் முகடுதாவக்
குறுகாத வல்லசுரர் செவியடைப் பக்கொழுங்
குருதிவாய் கொப்பளிப்பக்
கொடியரா வணன்மகுட முடிசிதறவரி சிலை
குழைத்துவெஞ் சமர்முகத்துச்
சிறுநா ணொலிக்கொண்டு விளையாடு மேகமே!
செங்கீரை யாடியருளே
செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள!
செங்கீரை யாடியருளே.

(இ - ள்) அறுகால் வரிச் சுரும்பு - ஆறுகால்களையும்புள்ளிகளையும் கொண்டுள்ள வண்டுகள், அடை கிடக்கும்-நெருங்கிப்படிந்திருக்கும், குழல் - கூந்தலினையுடைய, அரக்கி மண்டோதரி - ராட்சசியாகிய மண்டோதரியின், கழுத்து அழகு தாலிச்சரடு - கழுத்திலே அழகுற அணிந்திருந்த தாலிவடம், தரையில் வீழ - பூமியில் அறுந்து விழும்படியும், பருந்தாய வெண்கழுகு மொய்ப்ப—பருந்துமுதலாய வெள்ளியகழுகுகள் நெருங்கிச் சூழும்படியும், மறுகால் - தெருக்கள் தோறும், நெடும் - நீண்ட, சிகரம் - உச்சிகளைக்கொண்ட, மாடமாளிகைகள் இடிய - மாடங்களோடு கூடிய பெருமனைகள் இடிந்து விழும் படியும், வலது கண் கடை துடிப்ப - (மண்டோதரியின்) வலக்கண்

ணின் ஓரம் துடிக்கும்படியும், வாசல் தொறும் - ஒவ்வொருவீட்டுமுன் றிலிடந்தோறும், நெய்தல் அம் பறை கொட்ட - சாப்பறை யடிக்கும் படியும், லங்கை அழல் மண்டி - இலங்கா நகரில் நெருப்புப்பற்றியெழுந்து வான் முகடு தாவ - ஆகாயஉச்சிவரை பாயும்படியும், (அதனால்) குறுகாத - (இலங்கையை) நெருங்கமுடியாத, வல் அசுரர் - கொடிய, அரக்கர்கள், செவி அடைப்ப -(அழலொலிதாங்காமல்) தங்கள் காது களைப்பொத்திக்கொள்ளும்படியும், வாய் கொழுங் குருதி கொப்பளிப்ப -வாயிலிருந்து பெருத்த இரத்தம் பீறிடும்படி, கொடிய ராவணன் மகுடமுடி சிதற - துஷ்டனான இராவணனின் தலையிலணிந்துள்ள கிரீடம் துகளாகும்படியும், வரிசிலை குழைத்து - வரிந்துகட்டப்பட்ட வில்லினை வளைத்து, வெஞ்சமர் முகத்து - கொடிய போரினிடத்து, சிறுநாணொலிக்கொண்டு - மெல்லிதாக டங்காரத் தொனியை யெழுப் பிக் கொண்டு, விளையாடும் மேகமே ! - [பெரும்போரினை] ஓர் விளை யாட்டைப்போலச்செய்த மாரிபோன்றவனே ! செங்கீரை ஆடி யருள்—; செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள—, செங்கீரை ஆடியருள்—; (எ.று).

இராமன் இராவணனோடு செய்த பெரும்போரினை ஓர்விளையாட் டாகக் கொண்டதால் இராமனின் பெருவீரம் தெரித்தபடியென்க. இந்த விளையாட்டுப்போரினால் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை ஒருங்கே கூறு கிறார் என்க. தாலிச்சரடு - திருமாங்கலியம், மங்கலநாண். இது தரையில்விழுதலாவது, கணவனையிழந்தமையால் என்க. இராவணன் மாண்டமையால் அவனதுமனைவி மண்டோதரி மங்கலநாணிழந் தாள் என்றபடி. பருந்து, கழுகுமுதலியன மொய்ப்பது போர்க்களத்து இறந்தவீரர்களின் தசையை உண்பதற்கென்க. பெண்டிர்க்கு வலக் கண் துடித்தல் அபசகுனம் என்ப : எனவே மண்டோதரிக்காகியது. நெய்தற்பறைகொட்டல் அரக்கர் பலர் இறந்தமையாலாகும். நெய் தற்பறை – சாப்பறை இலங்கை நெருப்பில் வெந்து அழிய என்றார் : நெருப்புப்பற்றியது சிலைவளைத்து அக்னிக்கணையெய்தமையால் என்க. அப்போது எழுந்த பேரொலியால் வல்லசுரர் செவியடைத்தனர். இராவணன் மகுடமுடி சிதறியபோது அவன்வால் குருதிகொப்பளித் ததென்க. நாணொலி - வில்லின் நாணைத் தெறித்தலாய்எழும் ஒலி : இதனை டங்காரத்தொனி என்பர். வீழ, மொய்ப்ப, இடிய, துடிப்ப, கொட்ட, தாவ, அடைப்ப, கொப்பளிப்ப, சிதறஎன்ற வினையெச்சங் கள் அடுக்கி 'குழைத்து' என்ற வினையெச்சத்தோடு இயைந்து, பின் னர் 'விளையாடும்'' என்ற பெயரெச்சத்தோடு முடியும் என அறிக. மேகம் - உருவகம். இராமாவதாரம் செய்தவர் மகரநெடுங் குழைக் காதராகிய திருமாலே என்பது வலியுறுத்தப்பட்டது என்க : இங்ஙன மேல்வரும் 24ஆம் செய்யுளிலும் காணலாம். கூந்தலின்வண்டுகிடப் பது அதன் பரிமளம் நுகர்தற்கு. (17)

18. இருகுழையு மணிகுதம் பையுமாட வெயில்விரிந்
திலங்குறு முறுவலாட
இணைதிருக் கையிலணி வளையாட மென்சுரும்
பிசைபயில்செய் துளவமாடப்
பொருவுமிரு சிலைநுதலில் வேர்வாட வேபொங்கு
புழுதிதிரு மேனியாடப்
புழுகொழுகுங் கரியகுழல் சரியவரை வடமுநூ
புரமுந் தயங்கியாட
முருகுவிரி தருநறுங் கமலமதி முகவட்ட
முழுநிலா வீசியாட
முதியவா னவர்முனிவரமரர்கோன் வாலவள
முறையொடுங் காணவந்தார்
திருவரையின் மணியசைந் தாடக் குழைந்தினிது
செங்கீரை யாடியருளே
செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள!
செங்கீரை யாடியருளே.

(இ - ள்) இருகுழையும் - இரண்டு குண்டலங்களும், மணி குதம்பையும் - மணியாலாகிய காதுபெருக்குஞ்சுருளும், ஆட - (மெதுவாக அசைந்து) ஆடவும், வெயில் விரிந்து இலங்குறு முறுவல் ஆட - ஒளிபரந்து விளங்குகின்ற புன்சிரிப்பு தெரியும்படி வாய் அசையவும், இணை திரு கையில் அணி வளை ஆட - அழகிய இரண்டு கைகளிலும் தரித்துள்ள காப்புகள் ஆடவும், மெல் சுரும்பு இசை பயில்செய் துளவம் ஆட - மென்மையான வண்டுகள் தங்கி ரீங்காரஞ் செய்கின்ற திருத்துழாய்மாலையாடவும், பொருவும் இரு சிலை நுதலில் வேர்வு ஆட - ஒன்றற்கொன்று ஒத்துள்ள இரண்டு புருவங்களைக் கொண்டுள்ள நெற்றியில் குறு வேர்வை துளித்துச் சொட்டவும், பொங்கு புழுதி திருமேனி ஆட - படிந்துள்ள மிகுதியான தெருமண்துகள் அழகிய உடம்பினின்று உதிரவும், புழுகு ஒழுகும் கரிய குழல் சரிய - புனுகு பூசப்பட்டு வாசனை வீசுகின்ற கருமையான தலைமயிர் கலையும்படி, அரை

வடமும் - அரை ஞாணும், நூபுரமும் - காற்சிலம்பும், தயங்கி ஆட - மெல்லொலியொடு விளங்கியாடவும், முருகு விரிதரு நறுங்கமலம் - அழகு பரவி பரிமளம் வீசுகின்ற தாமரை மலர்போன்று, மதி முகவட்டம் - பூர்ண சந்திரன் போல் வட்டமாயுள்ள முகம், முழு நிலா வீசி ஆட - முற்றும் ஒளிபரப்பும்படி அசைந்து ஆடவும்,

(இவற்ருல் ஏற்படுகின்ற) வாலவளம் - இளமையழகின் செழுமையை, காண - பார்த்து ரசிப்பதற்காக, முதிய வானவர் - (அறிவு) முதிர்ந்த தேவர்களும், முனிவர் - இருடிகளும், அமரர் கோன் - தேவேந்திரனும், முறையொடும் - வரிசையாக, வந்தார் - வந்து சேர்ந்துள்ளார்கள் ; (ஆகவே) திரு அரையின் மணி அசைந்து ஆட - அழகிய இடுப்பில் கட்டியுள்ள மணிவடம் அசைந்து ஆடும்படி, குழைந்து - வளைந்து, இனிது - (கண்ணுக்கு) இனிமையாக, ; செங்கீரை ஆடியருள் ;— செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள!—, செங்கீரை ஆடியருள் —; (எ.று.)

'ஆட' என்ற எச்சம் எட்டுமுறை யடுக்கி வந்து 'காணவந்தார்' என்ற முற்ருேடு முடியும். வாலவளம் - இளமை யழகின் செழுமை ; அதாவது குழந்தை ஐந்தாம் மாதத்தில் முகமசைத்து செங்கீரையாடுமாதலின், அந்த அழகினைக்காட்ட வந்தது. ''ஐந்தாந் திங்களிற் செங்கீரையாடலும்'' என்பது பிங்கலந்தை. முறுவல் ஆட – புன்சிரிப்பு ஒளிர என்றபடி, புழுதி - தெருவில் விளையாடும் போது படிந்துள்ள மண்துகள். ''விளையாடு புழுதியுங் கொண்டு'' என்ருர் பெரியாழ்வாரும். கமலம் முகத்தினழகுக்கும், மதி அதன் வட்டவடிவுக்கும் உவமையாக வந்துள்ளன எனக் கொள்க. விரிதரு, தா - துணைவினை. குதம்பை - காதுபெருக்குவதற்காக இடும் ஓலை சீலைமுதலியவற்றின் சுருள். (18)

19. சந்தன கதம்பப் படீரகுங் குமமுலைத்
தையல்மர கதவல்லிசெஞ்
சடிலேசர் வாமத் திருப்பநான் மறைபரவு
சதுர்முகப் பிரமனுவில்
இந்துநுதல் வாணி சந்ததமி ருப்பப்பணிந்
திருசரண மலர்சூடுவோர்
இதயதா மரைமலரின் நூற்றெண்மர் சிந்தையினும்
இசைபாடி வண்டுகிண்டக்

கொந்தவிழ் நறுங்கமல மலராச னக்கோவில்
குடி யிருக் கும்பரிமளக்
கோமளக் கொடிவல்லி மாமதுர வாயாள்
குழைக்காத னுயகியெனுஞ்
சிந்துரப் பிடியொடும் விளையாடு மழகளிறு !
செங்கீரை யாடியருளே
செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள !
செங்கீரை யாடியருளே.

(இ - ள்) சந்தனம் கதம்பம் படீர குங்குமம் - சந்தனத்தையும் கதம்பமாலையையும் சிவப்புகுங்குமத்தையும் அணிந்துள்ள, முலைத் தையல் மரகதவல்லி-கொங்கைகளையுடைய அழகிய பார்வதி தேவி, செஞ்சடில ஈசர் - சிவந்த சடாபாரத்தையுடைய சிவ பிரானின், வாமத்து இருப்ப - இடப்பக்கத்தில் எழுந்தருளியிருப்ப, நான்மறை பரவும் சதுர்முகப்பிரமன் நாவில் - நான்குவேதங்களையும் ஓதிக்கொண்டிருக்கும் நான்குமுகங்களைக்கொண்டுள்ள பிரமதேவ னின் நாக்கினில், இந்துநுதல்வாணி - சந்திரன்போல் ஒளிவிடும் நெற்றியையுடைய - சரசுவதிதேவி, சந்ததம் இருப்ப - நிரந்தரமாக எழுந்தருளியிருப்ப,— (இக் குழைக்காதர்மட்டும்) பணிந்து - தம்மை வணங்கி, இரு சரணமலர் சூடுவோர் - இரண்டு திருவடித் தாமரைகளையும் (தமதுசிரசில்) தரிப்பவருடைய, இதய தாமரை மலரின் (உம்)- ஹ்ருதயகமலங்களிலும், நூற்றெண்மர் சிந்தையினும் - நூற்றெட்டுப் பக்தர்களுடைய மனத்திலும், (தமது நாயகியொடு விளையாடுகின்ற மழகளிருவன் என மேல் இயையும்). வண்டு இசை பாடி கிண்ட - வண்டுகள் ரீங்காரஞ்செய்து கிளர் தலாலே, கொந்து அவிழ் - இதழாகிய கொத்துக்கள் கட்டுவிடு கின்ற, நறுங்கமல மலராசனக் கோவில் - பரிமளம் மிக்க செந்தா மரை மலராகிய தவிசினைக் கொண்ட மனையில், குடியிருக்கும் - தங்கியிருக்கின்ற, பரிமளக் கோமளக் கொடி வல்லி - வாசனை வீசும் அழகுடன் கூடிய வல்லிக்கொடிபோன்றவளும், மா மதுர வாயாள்- சிறந்த இனிப்பான வாயினையுடையவளும், குழைக்காதன் நாயகி எனும் - குழைக்காதஞச்சியார் என்னும் பெயரினையுடைய வளும் (ஆகிய), சிந்துரப் பிடியொடும் விளையாடும் - சிந்தூரமென் னும் ஒருவகைச் செம்பொடியாலாகிய திலகத்தையணிந்துள்ள

பெண்யானையோடும், விளையாடும், மழ களிறு -(மகிழ்ந்து) விளையாடுகின்ற இளமையுள்ள ஆண்யானை போன்றவனே ! செங்கீரை ஆடியருள் —; செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள !—; செங்கீரை ஆடியருள் - ; (எ. று.).

பார்வதி வாமத்து வாளாவிருப்ப, வாணிநாவில் வாளா இருப்ப, உன்நாயகிமட்டும் உன்னோடு குலாவிமகிழ்ந்து விளையாடுகின்றாள் என்று அவ் விலக்குமியின் தனிச்சிறப்புக் கிளந்தவாறு. 'பச்சைக் கொடி விடையானொரு பாகந்திறை கொண்டாள்' என்றார் வில்லி யாரும். பார்வதிநிறம் மரகதம்போல் பச்சையாயிருக்கும். இதய தாமரைமலரினும் சிந்தையினும் விளையாடும் மழகளிறு என இயைத்துப் பொருள் கொள்ளவேணும் என்பது நோக்கத்தக்கது, மலரின் ஈற்றில் உம்மை தொக்கது. ''சிந்தூரத்திலக நுதற்சிந்துரம்'' என்றார் வில்லியும் (உத்தி : கிருட் ; தூது : செ : 11) இலக்குமிதேவி செந்தாமரைமலரை இருப்பிடமாகக்கொண்டு இருப்பவள் என்பது மரபு. பிடி, களிறு - உருவகித்தபடி. கொந்து - கொத்து என்பதன் மெலித்தல். படீரம் -சிவப்பு. (19)

20. ஒள்ளொளி விரித்தசெறு கிண்கிணிய நூபுரமும்
உபயசர ணத்திருட
ஒளிர்மணிப் பட்டாடை யாடவரை வடமாட
உச்சியின் மிலைச்சுபரிதி
நள்ளிடை வயங்குபொற் சூழியத் தொகையாட
நகுநிலா முறுவலாட
நவமணிச் சுட்டியொடு கட்டுபொற் பட்டமு
நன்னுதற் பொட்டுமாடத்
துள்ளியெறி திரைமகர சலராசி படுசெழுந்
துய்யசெம் பவளமேனி
தொய்யக் குழைந்தாடு பண்டியுந் தொந்தியுந்
துணைநெடுங் குழையுமாடத்
தெள்ளமுத மணிவாயி னுள்ளொழுகி வழியவே
செங்கீரை யாடியருளே
செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள!
செங்கீரை யாடியருளே.

(இ-ள்) ஓள் ஒளி விரித்த - மிக்கவொளிபரவவிடுத்த, செறு கிண்கிணிய - நெருங்கிய கிண்கிணிச் சதங்கையோடுகூடிய, நூபுரமும் - சிலம்பும், உபய சரணத்தின் ஆட - இருபாதங்களிலும் ஆடியொலிக்கவும், ஒளிர்மணிப் பட்டாடை ஆட - விளங்குகின்ற அழகிய வெண்பட்டாடை இடுப்பில் விளங்கவும், அரை வடம் ஆட - அரையிற்கட்டிய ஞாண்கயிறு அசையவும், உச்சியின் மிலேச்சு - தலையின்மேல் சூட்டியுள்ள, பரிதி - வட்டவடிவமாய் உள்ளதும், நள்ளிடை வயங்கு பொன் - நடுநிசியில் மிக்குஒளிர்கின்ற பொன் போல உள்ளதுமான, சூழியத்தொகை - உச்சிக் கொண்டையிலணிந்துள்ள ஆபரணத்தின் சேர்க்கை, ஆட - ஒருங்கு அசைந்து ஆடவும், நகு நிலா முறுவல் ஆட - விளங்குகின்ற நிலவுபோன்ற புன்சிரிப்பு தோன்றி ஒளிரவும், நவமணிச் சுட்டியொடு - ஒன்பது வகை மணிகளும் பதித்த சுட்டியென்னும் ஆபரணத்தோடு, கட்டு பொன் பட்டமும் - நெற்றியில் (அழகுறக்) கட்டியுள்ள பொன்னாலாகிய தகடும், நன்னுதல் பொட்டும் ஆட - நல்லநெற்றியில் இட்டுள்ள திலகமும் ஒளிரவும், துள்ளி எறி திரை - பொங்கிவந்து கரையின்மேலெறிகின்ற அலைகளையும், மகரம் - மீன்களையும் கொண்ட, சலராசி - சமுத்திரத்தில், படு - உண்டாகின்ற செழும் துய்ய செம் பவளம் - செழிப்பான பரிசுத்தமான சிவந்த பவளம் போன்ற, மேனி - உடம்பு, தொய்ய - தளர்வுபடும்படி, குழைந்து ஆடும் - நெகிழ்ந்து அசைகின்ற, பண்டியும்- வயிறும், தொந்தியும் - தசைமடிப்பும், துணைநெடுந் குழையும் ஆட - இரண்டுநீண்ட காதணிகளோடும் ஆடியசையவும், தெள் அமுதம் - தெளிந்த தேவாமிர்தம் போல் இனிய சொள்ளுநீர், மணி வாயினுள் ஒழுகி வழிய - அழகிய வாயினின்று பெருகி வழியும்படியும், செங்கீரை ஆடியருள்—; செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள !—; செங்கீரை ஆடியருள் - —; (எ. று.).

'ஆட' என்ற வினையெச்சம் ஏழுமுறை அடுக்கி 'ஆடியருள்' என்ற வினைமுற்றோடு முடிந்ததென்க. 'ஆட' என்ற சொல்லுக்குச் சந்தர்ப்பத்திற்கேற்பப் பொருள் கொள்ளப்பட்டது. சூழியம் - உச்சிக்கொண்டையிலணியும் ஆபரணம். நவமணிகளாவன - கோமேதகம், நீலம், பவளம், மரகதம், மாணிக்கம், முத்து, புருடராகம், வைடூரியம், வயிரம் ஆகிய ஒன்பதுவகை ரத்தினங்கள். பட்டம் - பொற்றகடு. பொட்டு -திலகம். சலராசி - சமுத்திரம். துய்ய- தோஷமில்லாத என்றபடி. சண்டி - வயிறு. தொந்தி - தசைமடிப்பு, உபயசரணம் - வடசொற்றொடர். (20)

21. நிரையும்ப சும்பொனணி மாடகூ டமுமேடை
நிழன்மணிச் சாளரத்து
நெடுநிலா முற்றத்தும் வாவிதொறு நீராடி
நிறைநறுந் தாதுபூசி
வருமந்த மாருதத் திளையமென் காலசைய
மாவிளங் குயில்கள்கூவ
மயிலாட வளிபாட வேனில்வே ளரசுபுரி
வழுதிவள நாடுதழைய
விரையுந் தடம்புனல் பெருக்கா றெடுத்தோட
வெழின்மயிற் றழைபீலியும்
இணையிலா மணியு மாரமும்யானை வெண்கோடும்
எற்றியெற் றிச்சுருட் டித்
திரைவந்து தரைமோது பொருநையந் தண்டுறைவ!
செங்கீரை யாடியருளே
செல்வத் திருபேரை வல்லிக்கு மணிவாள!
செங்கீரை யாடியருளே.

(இ - ள்) பசும் பொன் அணிமாட நிரையும் - பைம்பொன் னலழகு பெற்ற மாடங்களின் வரிசையிலும், கூடமும் - மேலிடங் களிலும், மேடை - வேதிகைகளிலும், மணி நிழல் சாளரத்தும் - (பதித்துள்ள) மணிகளினொளியைப் பிரதிபலிக்கின்ற பலகணி களிலும், நெடு நிலா முற்றத்தும் - நீண்டநிலா வெளிச்சம் பயிலும் முற்றங்களிலும், (தங்கி வந்து பின்பு) வாவி தொறும் நீராடி - நீர் நிலைகளொவ்வொன்றிலும் படிந்து, நிறை - (தன்மேனி) நிறைய, நறுந் தாது பூசி - பரிமளம் மிகுந்த மகரந்தத் துகள்களைப்பூசிக் கொண்டு, வரும் - மெல்ல (நடையிட்டு) வரும், மந்த மாருதத்து இளைய மென் கால் அசைய - மெல்லிய தென்றலின் முதிராத மென்மையான சிறுகாற்று வீச, (இளவேனில் வருதல்கண்டு) மா இளங் குயில்கள் கூவ - (துளிர்த்த) மாமரங்களில் இளைய குயிற் பறவைகள் இனிமையாகக் கூவ, (அதனிசைகேட்டு) மயில் ஆட - மயிற்பறவைகள் (தமது தோகைகளை விரித்து) ஆட, அளி பாட -

(அவற்றின் ஆட்டத்திற்கேற்ப) வண்டுகள் பண்களைப்பாட, (இங்ஙனம்) வேனில் வேள் அரசு புரி - இளவேனிற்பருவத்தின் தலைவனாகிய மன்மதன் அரசாட்சி செய்கின்ற, வழுதிவள நாடு தழைய - பாண்டி வளநாடு செழிக்கும்படி, விரையும் - வேகமாகப் பாய்ந்து வருகின்ற, தடம் புனல் பெருக்காறு - மிக்கநீரைக் கொண்டு பெருகும் ஆறானது, எடுத்து ஓட - அடித்துக்கொண்டு ஓடி வர, (அதனால்) எழில் மயில்தழை பீலியும் - அழகுமிக்க மயிலினது பீலித்தொகுதிகளும், இணையிலா மணியும் - ஒப்பற்ற இரத்தினங்களும், ஆரமும் -சந்தனக்கட்டைகளும், யானை வெண்கோடும் - யானையினுடைய வெள்ளிய தந்தங்களும், எற்றி எற்றிச் சுருட்டி - மோதிமோதிச் சுருட்டிக் கொண்டு. திரை - அலைகள், வந்து - வீசிவந்து, தரை மோதும் - கரையிலே தாக்கி யொதுக்கும், பொருநை - தாமிரபர்ணி நதியின், அம் தண்துறைவ ! அழகிய குளிர்ந்த நீர்த்துறைகளை - யுடையவனே! செங்கீரை ஆடியருள்—; செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள ! —, செங்கீரை ஆடியருள்—; (எ. று.)

மந்த மாருதம் - இளைய தென்றல், பாண்டிநாட்டுப் பொதிகை. மலை தென்றலுக்குப் பிறப்பிடம் என்பர். 'தென்றல் தவழும் மலை என்பர் அதனை. வேனில்வேள் - மன்மதன். அவனுக்குத் தென்றலைத் தேர் என்ப : குயில் அவனது காகளம். குயில் வசந்தகாலப்பறவை : மயில் கார்காலங்கண்டு களிப்பதாயினும் இளவேனிலிலும் குயில் கூவவே அதற்கு ஏற்ப ஆடியது என்க. "குயில் கூவ மயிலாலும் ஆரூர்" என்றார் அப்பர்சுவாமிகளும். 'தென்றல் வரத் தேமா தளிர் காட்டும்' என்பர். அந்த மாந்தளிர்களைக் குயில்கள் கோதியுண்ணும் என்பர். "வண்டுபாட மயிலாட" என்றார் சம்பந்தரும் பெருக்காறு - பொருநை : தாமிரபர்ணி (21).

22. எத்திக்கும் வண் புகழ் தழைத்ததிரு வாய்ப்பாடி
இடையர்தம் குடில்கடோறும்
இடுகயிற் றுறியடுக் கியமணி கலசத்
திருக்குமந் தயிர்க்கட்டிகண்
டொத்திக்கை யிட்டுரல் மிதித்தேறி யடிகுந்தி
ஒருதிவலை சிந்தாமலே
ஒண்பவள வாய்மடுத் துண்டிடுங் கள்வனென்
றுரலொடு கட்டி யவர்கை

மத்திட் டடிப்பவிரு கண்பிசைந் தழுதரையின்
மணிபொத்தி யோடிமறுகால்
வாயூறி யச்சுவை கனிந்தாச்சி யாடைபட
வற்றக் கறந்துகாய்ச்சுந்
தித்தித்த பாலுக்கு மிச்சித்து நின்றவா!
செங்கீரை யாடியருளே
செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள!
செங்கீரை யாடியருளே.

(இ-ள்) எ திக்கும் - எல்லா விடங்களிலும், வண்புகழ் தழைத்த-வளப்பம்பொருந்திய புகழ் பரவும்படி செழித்த, திருவாய்ப்பாடி இடையர் - கோகுலத்திலிருந்த ஆயர்கள், தம் குடில்கள்தோறும் - தமது குடிசைகள் ஒவ்வொன்றிலும், இடு-கட்டிவைத்துள்ள, கயிற்று உறி - கயிற்றினாலாகிய உறிகளில், அடுக்கிய - ஒன்றன்மேலொன்றாக அடுக்கியுள்ள, மணி கலசத்து - அழகியபானைகளில், இருக்கும் - தோய்ந்திருக்கும், அம் தயிர் கட்டி கண்டு - நேர்த்தியான கட்டித் தயிர்களைப் பார்த்து ஒத்தி - தொட்டு, கை இட்டு - (தன்) கைகளை உள்ளே வைத்து (அது முற்றும் எட்டாமல் இருப்பவே), உரல் மிதித்து ஏறி - (அங்கிருந்த பொத்தை) உரலைக்கவிழ்த்து அதன் மேலே மிதித்து ஏறி, அடி குந்தி -பாதங்களைக்கொண்டு உட்கார்ந்து, ஒரு திவலை சிந்தாமலே - ஒருதுளி தயிர்கூடக் கீழே சிந்தாதபடி (சாமர்த்தியமாக), ஒண் பவள வாய்மடுத்து - அழகிய பவளம் போன்ற இதழ்களையுடைய வாயினை நெருங்கவைத்து, உண்டிடும் கள்வன் என்று - சுவைத்துண்ணும் திருடனென்று (பட்டங்கட்டி), உரலோடு கட்டி - (ஆங்கிருந்த) உரலோடு (கண்ணிநுண்சிறுத்தாம் பினால்) பிணித்து, அவர் -அந்தஇடையர்கள், கைமத்திட்டு அடிப்ப-(தமது) கைகளால் மத்தினைக்கொண்டு அடிப்பதுபோல் மிரட்ட (அதனைக்கண்டு அஞ்சியவன்போல) இருகண் பிசைந்து அழுது - (தனது) இரண்டு கண்களையும் (தனது கைகளால்) கசக்கி யழுது, அரையின் மணி பொத்தி - (தனது) இடுப்பில் அரைஞாணில் கட்டியிருந்த சிறுமணியின் நாக்கினை (அது ஒலிசெய்யாதவாறு) பிடித்துக் கொண்டு, ஓடி - தெருவிலே ஓடிப்போய், (சிறிதுநேரம் கழித்துத் திரும்பிவந்து)— மறுகால் - மறுபடியும், ஆச்சி - ஆயர்மகள் (யசோதை), வற்றக் கறந்து - (பசுவின்மடியில் சிறிதுபாலும் இல்லாதவாறு) முற்றக்கறந்து, ஆடை படக் காய்ச்சும் - பாலேடுஉண்

டாகும்படி நன்கு காய்ச்சுகின்ற, தித்தித்த பாலுக்கும் - இனிப்பான (ஆவின்) பாலுக்கும், வாய் ஊறி – வாயில் (பருகும் அருத்தியினால்) நீர்சுரந்து, அ சுவை கனிந்து - அந்த நீரின் சுவை முற்றி, (அந்தப் பாலுக்கும்) இச்சித்து நின்றவா ! - விரும்பி நின்ற கள்வனே !, செங் கீரை ஆடியருள்—; செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள !—, செங்கீரை ஆடியருள்—; (எ. று.).

'தயிர்க்கட்டி யுண்டிடுங்கள்வன்' என்றவிடத்து, "வெண்தயிர் தோய்ந்த செவ்வாயும்", "மோரார்குடமுருட்டி", தாயெடுத்த சிறு கோலுக்குளைந்தோடித் தயிருண்ட, வாய்துடைத்த மைந்தனுக்கு இழந்தேன் என் வரிவளையே ! முதலியன அநுசந்திக்கவும். உரல் **மிதித்தேறி'** என்றது - இவன் பாதம் பட அது செய்த பாக்கியம் வியந்தபடி. "வேதமும் உரலும் தொடர" என்றார் வில்லியும். 'மத்திட் டடிப்ப' என்றது அபிநயம் ; "அஞ்சவுரப்பாள் அசோதை ஆணுட விட்டிட்டிருக்கும்" என்றது ஆண்டாள் வாக்கு. 'அரையின் மணி பொத்தி' என்றவிடத்து அறியவேண்டிய நயம் இஃது ; — யசோதையார் இந்தக் கள்வன் ஓடும் திசை தெரிந்தால் பிடித்துக் கொள்ளலாம் என்று அவன் அரைஞாணில் ஒருசிறு மணியைக்கட்டி வைத்தாள், அதன் ஒலிகேட்டு ஓடும் திசையறியலாம் என்று. ஆனால் அவன் சர்வஜ்ஞனாயிற்றே, தான் ஓடும்போது அந்த மணி ஒலிக்காதவாறு அதன் நாக்கைத் தன் கையால் இறுகப் பொத்திக் கொண்டு ஓடுவான் என்பது. இதனை அழகர் பிள்ளைத்தமிழ் கொண்டும் அறியலாம். ஆங்கு "நெட்டுறியின் அளவுகாட்ட நிமிர்ந்து வெண்ணெய் அருந்தும் அளவில், அவள் அதுகண்டு அடிக்குந் தாம்புக்கு அஞ்சியழுது அரையிலார்க்கும் மணி பொத்தி" என வந்துள்ளமை ஒப்புநோக்குக. "பாலுக்கும்"— உம்மை, இறந் தது தழீஇய எச்சவும்மை. தயிரேயன்றி பாலுக்கும் என்றபடி—; வைணவசம்பிரதாயத்திலேயே "வெண்ணெய்க்காடும் பிள்ளை" என்று கொண்டாடுவர் : இதனைப்பாடவந்த நம்மாழ்வார் "மத்துறு கடை வெண்ணெய்களவினில் உரவிடை யாப்புண்டு, எத்திறம் உரலினொடிணைந்திருந்தேங்கிய எளிவே" என்று வாய்வெரீஇ ஆறு மாதம் மோஹித்துக் கிடந்தார். "தித்தித்த பாலுந் தடாவினில் வெண்ணெயும், மெத்தத் திருவயிறார விழுங்கிய அத்தன்" என்று ஈடுபட்டார் பெரியாழ்வார். (22)

23. தாதவிழ் பசுந்துளவ மாலையா டச்சிறிய
தமனியச் சுட்டியாடத்
தருணமர கதவயிர வலயமா டப்பொற்
றடந்திருத் தோள்களாடக்
காதுதரு மணிமகர குண்டலமு மாடக்
கவின்பொலியு மேனியாடக்
கதிர்முத்து வடமாட மதுரித செந்தமிழ்க்
கற்றவர்கள் கொண்டாடவே
வாதுபுரி கொடியசே னுபதி யிராவணன்
மனவலிகள் திண்டாடநீள்
வானத் திருந்துதுந் துபியாட மலர்மாரி
வானவர் பொழிந்தாடவோர்
சீதர முகுந்தபே ராயிர முகந்தவா !
செங்கீரை யாடியருளே
செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள !
செங்கீரை யாடியருளே.

(இ - ள்) தாது அவிழ் பசும் துளவமாலை ஆட - புறவிதழ்கள் விரிந்து பசிய திருத்துழாய்மாலை மார்பினில் ஆட, தமனிய சிறிய சுட்டி ஆட - பொன்னாலாகிய சிறிய சுட்டியென்னும் தலையுச்சியாபரணம் ஆட, தருண மரகத வயிர வலயம் ஆட - ஏற்ற அழகு பொருந்திய மரகதம் வயிரம் இவற்றாலாகிய கைவளையங்கள் ஆட, பொன் தட திரு தோள்கள் (வலயம்) ஆட - அழகிய பரந்த சிறந்த தோள்களில் வளையங்கள் ஆட, காது தரு மணி மகர குண்டலமும் ஆட - காதுகளில் தொங்குகின்ற மணிகளாலாகிய மகரகுண்டலங்களும் ஆட, கவின் பொலியும் மேனி ஆட - அழகு விளங்குகின்ற உடம்பும் ஆட, கதிர் முத்து வடம் ஆட - ஒளி வீசும் முத்துச்சரம் மார்பில் ஆட, மதுரித செந்தமிழ் - இனிமையான செவ்விய தமிழ் மொழியை, கற்றவர்கள் - பயின்றமகான்கள், கொண்டாட-(நும்மைப்) பாராட்ட, வாதுபுரி - (விதண்டா) வாதஞ் செய்தலில் வல்ல, கொடிய சேனுபதி - கொடுமையையுடைய சேனைத்தலைவனாகிய பிரகஸ்தன், இராவணன் - அவனுக்கும் தலைவனாகிய இராவணன் (இவர்களது),

மனவலிகள் திண்டாட - மனுேதிடங்கள் சிதறுண்டு அலைய, (அதுகண்டு) நீள் வானத்திருந்து துந்துபி ஆட - நீண்ட ஆகாசத்திலிருந்து துந்துபியென்ற தேவ வாத்தியம் முழங்க, வானவர் மலர் மாரி பொழிந்து ஆட - தேவர்கள் பூமழை சொரிந்து (ஆனந்தத்தால்) கூத்தாட, ஓர் பேர் ஆயிரம் உகந்தவா - ஒப்பற்ற ஆயிர நாமங்களை (சகஸ்ரநாமங்களை) விரும்பி யேற்றுக் கொண்டவனே! சீதர - திருமகளை மார்பில் தரித்தவனே. முகுந்த - முகுந்தனே! செங்கீரைஆடியருள்—;செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள!— செங்கீரை ஆடியருள் —; (எ. று.)

'ஆட,' என்ற வினையெச்சம் ஏழுமுறையடுக்கி மேல் வந்த 'கொண்டாட, திண்டாட, பொழிந்தாட,' என்ற வினையெச்சங்'களோடு ஒருங்கியைந்து அனைத்தும் 'ஆடியருள்' என்ற வினைமுற்ருேடு முடிந்தன என்க. தோள்களாட - முன்வந்த 'வலயம்' ஈண்டும் கூட்டப்பட்டது: தோள் வலயங்கள் ஆட என்றபடி, மதுரிதம் - மதுரமாயிருக்குந்தன்மை: இனிமை: "இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும்" என்றது பிங்கலந்தை. செந்தமிழ் - செவ்விய இலக்கணமுடைய மொழியாதலின் என்க. செந்தமிழ்க்கற்றவர்கள் - நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் போன்றவர்கள், 'மனவலிகள்' என்று பன்மைவந்திருத்தலால், சேனுபதி, இராவணன் என இரு நபர்களைக் குறிப்பதாகக் கொண்டமை பொருந்தும், இனி வாதுபுரி சேனைக்குப் பதியாகிய இராவணன் எனக் கொள்ளினுமாம். இராவணன் திண்டாடவே, அது கண்டு தேவதுந்துபி முழங்கின, வானவர் மலர் மாரி பொழிந்து மகிழ்ந்தன ரென்க. முகுந்தன் என்பதற்கு - முத்தியுலகவின்பத்தையும் இவ்வுலகவின்பத்தையும் (தன் அடியார்க்குத்) தருபவனென்று பொருள் ; மு - முக்தி, கு- பூமி, த - கொடுப்பவன். (23)

24. அலைவளைக் குங்கருங் கடலும்வான் முகடுதொடும்
அம்பொற் கொடிக்குழாமொய்த்
தாதவன் பொற்றடந் தேர்தடுக் குஞ்செம்பொன்
அணிமாட கூடங்களும்
நிலைவளைக் கும்புக ழிலங்கா புரத்திறைவன்
நெடியரா வணன் மகுடமும்
நீலிதாடகைமார்பும் மாரீச னும்பார
நெட்டூர வதிகாயனுங்

கொலைவளைக் குங்கும்ப கன்னனு நிகும்பனும்
குறுகாத வல்லசுரரும்
கொடியவா லியுமரா மரமேழு முருவக்
குழைத்துவடி வாளிதொடவெஞ்
சிலைவளைக் குந்திருக் கைத்தா மரைக்கொண்டல் !
செங்கீரை யாடியருளே
செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள !
செங்கீரை யாடியருளே.

(இ - ள்) அலை வளைக்கும் கருங்கடலும் - அலைகள் சூழ்ந்து வரும் கரிய கடலும் ; வான்முகடு தொடும் அம் பொன் கொடிக் குழாம் மொய்த்து - ஆகாயமுகட்டினை யெட்டும் அழகிய பொன் போல் ஒளிரும் துவசத் தொகுதிகள் நெருங்கி, ஆதவன் பொன் தேர் தடுக்கும் - சூரியனின் அழகிய தேரினைச் செல்லவிடாது தடை செய்யும், செம் பொன் அணி மாட கூடங்களும் - சிறந்த பொன்னி லாகிய அழகிய உபரிகைகளும் கோபுரங்களும் ; நிலைவளைக்கும் புகழ் - பூமிமுற்றும் பரவியுள்ள கீர்த்தியையுடைய, லங்கா புரத்து இறைவன் - இலங்கை நகரின் அரசனாகிய, நெடிய ராவணன் மகுடமும் - உயரமான இராவணனின் கிரீடத்தையும் ; நீலி தாடகை மார்பும் - கரிய தாடகையின் உரத்தினையும்; மாரீசனும் - (மாயமானாகவந்த) மாரீசனையும் ; பார நெட்டூர அதிகாயனும் - பருத்தகொடிய அதிகாயனையும் ; கொலை வளைக்கும் கும்ப கன்னனும் - கொலைகளைமிகுதியாகச்செய்யும் கும்பகர்ணனையும் ; நிகும்பனும் - (அவன் மகனாகிய) நிகும்பனையும் ; குறுகாத வல்லசுரரும் - போர்க்களத்துவாராத கொடிய அசுரர்களையும் ; கொடிய வாலியும் - கொடிய வாலியையும் ; மராமரம் ஏழும் - ஏழுஆச்சா மரங்களையும் ; உருவ - ஊடுருவிச்சென்று பாயும்படி, வடி வாளி - கூர்மையான அம்பினை, குழைத்து தொட - தழையச் செய்து விடுப்பதற்கு, வெம் சிலை வளைக்கும் - கொடிய கோதண்டம் என்னும் வில்லை வளைக்கும், தாமரை திருக்கை - தாமரை போன்ற அழகிய கைகளையுடைய, கொண்டல் - மேகம்போன்றவனே ! செங்கீரை ஆடியருள்—; செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள !— செங்கீரை ஆடியருள்—; (எ. று.)

கடலும் மாடகூடங்களும் மகுடமும் மார்பும் மராமரமேழும் உருவ என அஃறிணைப் பொருள்களோடு மாரீசனும் அதிகாயனும் கும்பகன்னனும் நிகும்பனும் வல்லசுரரும் வாலியும் உருவ என உயர் திணைப் பொருள்களையும் ஒருசேரவைத்துக் கூறிய நயம் பாராட் டத்தக்கது. இவையனைத்தோடு இவர்களையும் ஊடுருவும்படி வாளி தொடுத்த ஒருவில்வீரன் இராமபிரான் என அவன்புகழ்கிளந்த வாறு. அத்தகைய இராமாவதாரஞ் செய்தவன் இந்த மகரநெடுங் குழைக்காதராகிய திருமால்தான் என்பது ஈண்டும் வலியுறுத்தப் பட்டது, முன்னர்ச்செய்யுள் 17-நினைக. கைத்தாமரை - உருவகம்.

கொண்டல் - விளி : கொண்டல் போன்றானுக்கு உவமவாகு பெயர். கைத்தாமரைக் கொண்டல் - இல்பொருளுருவகம் எனலாம். வாளியால் உருவப்பட்டவற்றை முறைபிறழவைத்திருப்பது செய் யுள் நோக்கி யென்க. வான்முகடு தொடும் கொடிக்குழாம் ஆதவன் தேர் தடுக்கும் என்றது - **மிகையுயர்வுநவிற்சியணி.** தாடகை மார்பில் உருவியதைக் கம்பர் "கல்லாப் புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற்றன்றே" என்று நயம்பட ஓர் உவமையால் பெறவைத்தார். நெட்டூரம் - நிஷ்டூரம் : wickedness. **கொடியவாலி** என்றது - தம்பியாகிய சுக்ரீவனின் மனைவியை அபகரித்தமை பற்றியென்க. குழைத்தல் - தழையச் செய்தல் : to cause to shoot forth. (24)

தாலப்பருவம்

25. கயங்கொண் டலம்பித் திரையெறியுங்
கடல்சூ ழுலக முழுவதும்வெண்
கவிகை நிழற்கீ ழினிதடக்கிக்
கருணை புரிந்து நாடொறுநின்
றியங்குஞ் சரங்க ளனைத்தையுமற்
றெல்லா வுயிருந் தன்னுயிர்போல்
இரங்கிக் காக்கு மரசர்பிரான்
எங்கோன் றசர தப்பெருமான்
முயங்கும் பிராட்டி மாமூவர்
அவர்க்குண் முதன்மைத் தலைவியெனும்

முற்று முலைக்கோ சலைவயிற்றில்
முளைத்து மடிமேற் கிடந்துதனி
வயங்குங் கிரண மரகதமா
மணியே! தாலோ தாலேலோ
மகரக் குழையே! யென்னிருகண்
மணியே! தாலோ தாலேலோ.

(இ-ள்) கயம் கொண்டு - யானைச்சேனையைக் கொண்டு, அலம்பி - (பகையரசர்களைக்) களைந்துவென்று, திரை எறியும் கடல் சூழ் உலகம் முழுவதும் - அலைகள் வீசுகின்ற கடல் சூழ்ந்த நில வுலகம் முழுவதையும், வெண் கவிகை நிழற்கீழ் இனிது அடக்கி - (ஒற்றை) வெண்கொற்றக்குடையின் நிழலின்கீழே தங்குமாறு (ஏக சக்ராதிபதியாய்) சுகம்பெறப் பணியவைத்து, கருணை புரிந்து - அருள்கொண்டு ஆட்சிசெய்து, நாள்தோறும் - தினந்தோறும், நின்று - நிமிர்ந்து நின்று, இயங்கும் - சஞ்சரிக்கின்ற, சரங்கள் அனைத்தையும் - மக்கள்போன்று நடமாடும் ஜீவன்களெல்லா வற்றையும், மற்று - மேலும், எல்லா உயிரும் - ஏனைய விலங்குபோல் (குறுக்காக வளரும்) பிராணிகளையும், தன்னுயிர்போல் இரங்கிக் காக்கும் - தனக்குரித்தாய உயிர்போல் கருணையொடு பாதுகாக் கின்ற, அரசர் பிரான் - மன்னர்மன்னனும், எம் கோன் - எங்கட்குத் தலைவனுமாகிய, தசரதப்பெருமான் - தசரதமகாசக்கரவர்த்தி, முயங்கும் - தழுவும், பிராட்டி - தேவியர், மா மூவர் - சிறந்த மூன்று பேராவர் : அவர்க்குள் - அம் மூவர்க்குள், முதன்மைத் தலைவி யெனும் - முதல் பட்டமகிஷியென்று வழங்கப்பெறும், முற்று முலைக் கோசலை வயிற்றில் - முதிராத (இளையவாய) கொங்கைகளைக் கொண்ட கௌசல்யா தேவி திருவுதரத்தில், முளைத்து - தோன்றி, மடிமேல் கிடந்து - (அவளது) மடியின்மேல் படுத்து வளர்ந்து, தனி வயங்கும் - தனிப்பட (ஏனையோர்க்கில்லாதபடி) விளங்குகின்ற, கிரணம் – பொலிவுடன் கூடிய, மரகத மா மணியே ! - (பச்சைநிறம் படைத்த) சிறந்த மரகத மணியைப் போன்றவனே ! தாலோ தாலேலோ—; மகரக்குழையே ! மகரக்குழைக்காதனே !, என் இரு கண்மணியே ! - என்னுடைய இரண்டு கண்ணுள்மணிபோல் போற் றத்தக்கவனே ! தாலோ தாலேலோ—; (எ. று.).

கயம் - கஜம் : யானை. இனி, கயம்-கீழ் மக்கள் எனக்கொள்ளினு மாம் : (The mean, the wicked, the vicious):"இரும்பிற் பிணிப்பர்

கயத்தை (நான்மணி : 12), 'நின்று இயங்கும் சரங்கள்' என்றதால்— மனிதர்களேயும், 'மற்றெல்லாவுயிரும்' என்றதால்— திர்யக்குகளேயும் காட்டுவதாகும். இனி, தாவரஜங்கமங்களாகிய சராசரங்களனைத்தையும் கொண்டாலும் இழுக்காது, ''வையகம் முழுவதும் வறிஞேம்புமோர் செய்யெனக்காத்தினிது அரசு செய்கின்றன்' என்றர் கம்பரும். கிரணம் - ஒளி, பொலிவு. மணியே ! - உருவகம் தாலோ தாலேலோ என்றது - குழந்தையைத் தாலாட்டுவார் கூறும் ஒருவகை வாய்பாடு என்பர். (25)

26. பண்ணுர் மதுரம் பழுத்தொழுகிப்
பாகூற் றிருந்து கனிந்தமொழி
பவளத் திருவாய் மணிமுறுவற்
பங்கே ருகக்குங் குமச்சுவட்டுப்
பெண்ணு ரமுதத் திருமடந்தை
பிரியா மருமத் தினிதிருக்கும்
பேரா யிரம்பெற் றுடையதிருப்
பேரைப் பிரானே ! முறுக்கவிழ்பூந்
தண்ணுர் துளவப் புயசயில
தாமோ தர ! சீதர ! முகுந்த !
தமரக் கடலிற் புனல்முகந்து
தழைக்குங் கமஞ்சூற் கார்மேக
வண்ணு ! வுலகன் றளந்தநெடு
மாலே ! தாலோ தாலேலோ
மகரக் குழையே ! நூற்றெண்மர்
வாழ்வே ! தாலோ தாலேலோ.

(இ - ள்) பண் ஆர் மதுரம் பழுத்து ஒழுகி - இராகம் பொருந்தி இனிமைமுதிர்ந்து பெருகி, பாகு ஊற்றிருந்து - வெல்லப்பாகினில் ஊறியிருந்தது போல் சுவையொடுகூடி, கனிந்த மொழி - கொஞ்சும் மொழியினையுடைய, பவளத்திருவாய் - பவளம் போற்சிவந்த இதழ்களைக்கொண்ட அழகிய வாயினிற்றேன்றும், மணி முறுவல் - அழகிய புன்சிரிப்பினைக்கொண்ட, குங்குமச் சுவட்டுப் பங்கேருகம் -

குங்குமக்குழம்பு பூசப்பட்ட குறிகளையுடைய தாமரைமொட்டினையும் கொண்ட, பெண்ணார் அமுதத் திருமடந்தை - பெண்ணுக்குரிய நற் பண்புகள் அனைத்தும் நிறைந்த தேவாமிர்தம்போன்ற இலக்குமிதேவி, பிரியா - (இறையேனும்) விட்டுப்பிரியாதபடி, மருமத்து - மார் பினில், இனிது இருக்கும் - சுகமாக எழுந்தருளியிருக்கும், பேராயிரம் பெற்றுடைய - சகஸ்ரநாமங்களைக்கொண்ட, திருபேரைப்பிரானே ! - தென்திருப்பேரை நகர்க்குத் தலைவனே ! முறுக்கு அவிழ் பூந் தண்ணார் துளவம் - கட்டவிழ்ந்த பூந்தாதுகளைக்கொண்டு குளிர்ச்சி பொருந்திய திருத்துழாய்மாலையைத்தரித்த, சயிலபுய - மலைபோன்ற தோள்களையுடைய, தாமோதர ! - தாமோதரனே ! சீதர !- சீதரனே ! முகுந்த - முகுந்தனே ! தமரக்கடலில் - (எப்போதும்) ஒலிக்கின்ற கடலினின்று, புனல்முகந்து - நீரை மொண்டு மொண்டு,தழைக்கும் - செழிக்கும், கமம் சூல்-நிறைந்த கருப்பத்தைக் கொண்ட, கார்மேகம் - கருநிறங்கொண்ட மேகத்தைப்போன்ற, வண்ணா ! - நிறம் படைத் தவனே !அன்று உலகு அளந்த நெடுமாலே ! - திரிவிக்ரம அவதாரம் எடுத்த போது மூவுலகங்களையும் ஈரடியால் அளந்திட்ட நீண்ட திருமாலே ! தாலோ தாலேலோ — ; மகரக்குழையே - ! நூற்றெண்மர் வாழ்வே ! - நூற்றெட்டுச் சாமவேதிகளுடைய நல் வாழ்ச்சிக்குக் காரணமாகுபவனே ! தாலோ தாலேலோ — ; (எ.று)

"அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல் மங்கையுறை மார்பா" என்ற ஸ்ரீஸூக்தி இரண்டாமடியில் காணத்தக்கது. புயசயிலம் - உருவகம். தாமோதரன் - வயிற்றில் (யசோதைகட்டிய) கயிற்றால் கட்டுண்டவன் என்றபடி. ஸ்ரீ - திருமகளை, தரன் - தாங்குபவன் என்பது பதப்பொருள், 'கமம் நிறைந்தியலும்' (தொல்: சொல் : உரி : 59) (26)

27. முளைக்குந் தவளக் கற்றைநிலா
முழுவெண் டிங்கட் டிருவதன
முற்று முலைக்கோட் டரமகளிர்
முதுபே ராயத் தவர்மருங்கிற்
கிளைக்குங் கொடிபோற் கொடிநுடங்க
வெழின்மா மணிச்சூளி கைமுகட்டி
னிணைக்கும் பசிய மரகதங்கான்
றெறிக்குங் கிரணக் கொழுந்தோடிக்

கிளைக்குந் துணர்க்கற் பகச்சோலைக்
கிடையே தளைய வாகாச
கெங்கைக் கரையிற் பசும்புல்லெனக்
கிட்டிச் சுரபி மணிநாவால்
வளைக்கும் பசும்பொற் றலங்கள்மலி
வளஞ்சேர் நாடா ! தாலேலோ
மகரக் குழையே ! நூற்றெண்மர்
வாழ்வே ! தாலோ தாலேலோ.

(இ - ள்) முளைக்கும் தவளக் கற்றை நிலா - உதிக்கின்ற வெண்மையான நிலாத்தொகுதியைக்கொண்ட, முழு வெண் திங்கள் - வெள்ளிய பூர்ணசந்திரன்போன்ற, திரு வதனம்-அழகிய முகத்தினையும்,முற்று முலைக்கோட்டு-முதிராத (இளைய) கொங்கையுச்சிகளையும் உடைய, அரமகளிர் - தேவமாதரின், முது பேராயத்தவர் - பழகிப் பயின்ற பெரியதோழியர் கூட்டத்தினரின், மருங்கிற்கு - (சிறிய) இடைக்கு, இளைக்கும் - தோற்றுப்போன, கொடிபோல் - பூங்கொடி போல் (வெட்கி),கொடி நுடங்க-(மாளிகைகளின்மேல் நாட்டியுள்ள) துவசங்கள் அசைய, எழில் மா மணி சூளிகை முகட்டின் - அழகு பொருந்திய பெரிய பளிங்குமணிகள்பதித்த உச்சியறைகளின் மேற்பகுதியில், இணைக்கும் - இசைவுறப் பதித்திருக்கும், பசிய மரகதம் பச்சை மரகதமணிகள், கான்று - கக்கி, எறிக்கும் - வெளிச்சொரியும், கிரணக்கொழுந்து ஓடி - ஒளியின்கீற்றுக்கள் பரவியோடி, கிளைக்கும்-முளைத்துள்ள, துணர் - கொத்துக்களைக்கொண்ட, கற்பகச்சோலைக்கு இடையே - கற்பகக் காவினுக்கு நடுவிலே, தளைய - தடைபட்டு நிற்க [அவற்றை] ஆகாசகங்கைக் கரையில் பசும்புல்லென - ஆகாய கங்கையின் கரையிலேமுளைத்துள்ள பச்சைப்புல்லென்று மயங்கி, சுரபி கிட்டி - காமதேனுவாகிய பசு நெருங்கி, மணி நாவால் வளைக்கும் -(அதனையுண்ணத் தனது) அழகிய நாக்கினால் வளைக்கும்படியான, பசும்பொன் தலங்கள் மலி - பசியபொன்னிடங்கள் (பலவாகச்) செறிந்துள்ள, வளம்சேர் நாடா !— வளப்பம் பொருந்திய பாண்டி நாட்டுக்குத் தலைவனே !— தாலேலோ—; மகரக் குழையே !—, நூற்றெண்மர் வாழ்வே !—, தாலோ தாலேலோ—; (எ. று,).

தேவமகளிரது ஆயத்தவர் இடைக்கு மென்மையிலும் துவட்சியிலும் பூங்கொடி தோற்றுப்போய் நுடங்கும் ; அதுபோலவே மாளி

கைகளின் மேல் நாட்டியுள்ள கொடிகளும் (துவசங்களும்) நுடங்கும் என்றார். மரகதத்தின் ஒளியைப் பச்சைப்புல்லென்று மயங்கிக் காம தேனு தன் மணிநாவை வளைக்கின்றது என்றவிடத்து **மயக்கவணி யோடு** சேர்ந்த **அதிசயவணி** காண்க. பாண்டிநாட்டுத் தென்திருப் பேரையில் தேவலோகம்வரை ஓங்கியுள்ள மாளிகைகள் உள என்பது கருத்து. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழில் குமரகுருபரரும் இதே கருத்தினைக் கூறியுள்ளமை காணலாம்: அங்கு "உயர் சூளிகை யின் மரகதத்தின் ஒளிகால்வீசத் தெளிவிசும்பிற், பல்குஞ் சுரபி தரங்கநெடும் பாகீரதியின் கரைக்கிளைத்த பசும்புல்லெனச் செந்நா வளைக்கும் பைம்பொற்றலங்கள் பலகோடி மல்கும்" என்று வந்துள் ளது. 'ஓடி' என்பது 'தளைய' என்பதோடு இயையும். (27).

28. இடிக்குங் கடுஞ்சொற் கொடும்பாவி
இழைக்குந் தறுகட் கஞ்சன்விடுத்
திடுகோக் களிற்றின் புகர்முகத்தின்
ஏந்தும் பிறைக்கிம் புரிமருப்பை
ஒடிக்குந் தடக்கைச் செழும்புயலே!
உணர்வுக் குணர்வே!யென்னுயிரே!
ஒழியாப் பிறவிக் கடல்சுவற்றி
உயர்வீ டளிக்கும் பெருமானே!
முடிக்கும் பசுந்தண் டுழாய்மாலை
முடிக்குங் குழகா! வானவர்க்கும்
முதுநான் மறைக்கு மெட்டாத
மூலப் பொருளே! பாகுபெற
வடிக்குந் தமிழ்த்தென் றிருப்பேரை
மாலே! தாலோ தாலேலோ
மகரக் குழையே! நூற்றெண்மர்
வாழ்வே! தாலோ தாலேலோ.

(இ - ள்) இடிக்கும் கடுஞ்சொல் - (கேட்போர்) காதில்வந்து மோதும்படி கொடிய சொற்களைப் பேசுகின்ற, கொடும் பாவி- துஷ்டனான பாவி, தறுகண் இழைக்கும் கஞ்சன் - கொலைகளைச் செய்யும் கம்சன், விடுத்திடு - (தன்னைக் கொல்லும்படி) ஏவிய, கோ

களிற்றின் - பட்டத்து யானையாகிய குவலயாபீடத்தின். புகர் முகத்தின் - புள்ளிகளையுடைய முகத்திலே, ஏந்தும் – தாங்கியுள்ள (முளைத்துள்ள), கிம்புரி பிறை மருப்பை - பூணிட்ட பிறைச்சந்திரன் போல் வளைந்துள்ள தந்தத்தை, ஒடிக்கும் - முறித்த, தட கை செழும் புயலே ! - நீண்ட (வலிய) கைகளையுடைய செழித்த மேகம் போன்றவனே ! உணர்வுக்கு உணர்வே ! - ஆன்மாவுக்கு ஆன்மா போன்றவனே ! என் உயிரே - எனது (அரிய) உயிர் போன்றவனே ! ஒழியா பிறவிக்கடல் சுவற்றி - நீங்காத பிறவிகளாகிய கடலையும் வற்றச் செய்து, உயர் வீடு அளிக்கும் பெருமானே ! - மேலான பரமபத்தை வழங்கும் இறைவனே ! முடிக்கும் – சிரசுக்கும், பசும் தண் துழாய் மாலை - பசுமையான குளிர்ந்த திருத்துழாய்மாலையையே, முடிக்கும் - சூடும், குழகா ! - அழகனே ! வானவர்க்கும் - தேவர்களுக்கும், முது நான்மறைக்கும் - பழைய நான்கு வேதங்களுக்கும், எட்டாத - அறிய, முடியாத, மூலப்பொருளே ! - முதற்காரணனே ! , பாகு பெற- இனிமையுண்டாகும்படி, வடிக்கும் - திருத்தமாகச் செய்த, தமிழ் - தமிழ்மொழி பயில்கின்ற, தென்திருப்பேரை மாலே ! — தாலோ தாலேலோ—; மகரக்குழையே ! —, நூற்றெண்மர் வாழ்வே ! —, தாலோ தாலேலோ ; (எ. று.).

தறுகண் - கொல்லுகை : ''தறுகண் பூட்கை'' (சிறுபாண் ; 141) கிம்புரி – யானைத் தந்தத்திற்கிடும் பூண். உணர்வு - ஆன்மா : 'ஒண்டாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு' (திவ்ய : முதல்திரு : 67) உணர்வுக்கு உணர்வு – பரமான்மா என்றபடி. ''பிறவிப் பெருங்கடல் நீந்துவர்'' என்றார் வள்ளுவனாரும் மார்புக்குத் திருத்துழாய்மாலை தரித்தலோடு சிரசிலேயும் அதனையே மகுடமாகச் சூடுபவன் திருமால் என்றபடி ; திருமாலுக்கு உரியது திருத்துழாய் : அது பரத்துவம் காட்டுவது. நான்மறைக்கும் எட்டாத மூலப்பொருள் - ''யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ'' எனப்பிற்காலிட்டுத் திரும்பியது வேதம் என்பர். வடித்தல் - திருத்தமுறச் செய்தல் : இலக்கண வரம்புடையதாதல். தடக்கை - உரிச்சொற்றொடர். புயல் - உருவகம்.

குவலயாபீடத்தின் மருப்பையொடித்து அதனையழித்த கதை :-

வில்விழாவென்கிற வியாஜம் வைத்துக் கம்சனால் வரவழைக்கப் பட்ட ஸ்ரீகிருஷ்ணபலராமர்கள் கம்சனரண்மனையை நோக்கிச் செல்லுகையில், அவனது அரண்மனை வாயில் வழியில் தம்மைக் கொல்லும்படி அவனால் ஏவி நிறுத்தப்பட்ட குவலயாபீடமென்னும் மதயானை கோபித்துவர, அவ்யாதவ வீரர் அதனையெதிர்த்து

அதன் தந்தங்களிரண்டையும் சேற்றிலிருந்து கொடியையெடுப்பது போல எளிதிற் பறித்து அவற்றையே ஆயுதமாகக் கொண்டு அடித்து உயிர் தொலைத்து உள்ளே போயினரென்பது. (28).

29. கருதுஞ் சமய மோராறுங்
களிக்கும் பொருளே ! யுவட்டெறியுங்
கருணைக் கடலே ! செழுங்கமலக்
கண்ணா ! கண்ணி னுண்மணியே !
திருக்குஞ் சினவா ளவுணர்பட
சிலைக்கால் வளைத்துப் போர்முகத்துச்
செல்லும் புயலே! யுறியில்வெண்ணெய்
திருடுங் குழகா! பேய்முலைப்பால்
பருகும் பவளக் கனிவாயா!
பசுந்தார்த் துளவ மணிமுகுந்த!
பங்கே ருகச்செஞ் சரணா! நெடும்
படப்பாந் தளின்மே னடித்துநெட்டை
மருதந் தவழ்ந்து சகடுதைத்த
மாலே! தாலோ தாலேலோ
மகரக் குழையே! நூற்றெண்மர்
வாழ்வே! தாலோ தாலேலோ.

(இ-ள்) கருதும் சமயம் ஓர் ஆறும் - (யாவராலும்) எண்ணப்படுகின்ற ஆறுவகைப்பட்ட மதங்களும், களிக்கும் பொருளே !— மகிழ்ந்து (ஏற்றுக்) கொள்ளும் பரம்பொருளே ! உவட்டு எறியும் கருணைக் கடலே ! - பெருக்கெடுத்து வீசும் தயாசமுத்திரமே ! செழுங் கமலக் கண்ணா !— வளமுள்ள செந்தாமரைமலர்போன்ற கண்களை யுடையவனே ! கண்ணின் உள் மணியே !—கண்களுக்குள்ளிருக்கும் மணிபோன்றவனே !.

திருக்கும் - மாறுபாடுடைய, சின வாள் அவுணர் - கோபிக்குந் தன்மையுள்ள கொடிய அரக்கர்கள், பட - அழியும்படி, சிலைக்கால் வளைத்து - வில்லின் தண்டத்தை (நாணேற்றி) வளைத்து, போர்

முகத்துச் செல்லும் - போர்க்களத்துக்குச் செல்லும், புயலே - மேகம் போன்றவனே !, உறியில் வெண்ணெய் திருடும் குழகா ! • உறியின் மேல் (நன்கமைய வைத்த) வெண்ணெயைத் திருடியுண்ணும் இளை யோனே !, பேய் முலைப்பால் பருகும் பவளக் கனிவாயா ! - (தாய் போல்வந்த) பூதனையென்னும் பேயின் முலைப்பாலை (அவளுயிரோடு ஒருசேர)ப்பருகிய சிவந்த கனிபோன்ற வாயினையுடையவனே ! பசும் தார் துளவம் அணி முகுந்த !— பச்சைத்திருத்துழாய் மாலையைத் தரித்த முகுந்தனே !, பங்கேருகம் செஞ் சரண !— தாமரை மலர் போன்ற செவ்விய பாதங்களையுடையவனே ! நெடும் படப் பாந்தளின்மேல் நடித்து - பெரிய படத்தையுடைய காளியனென்னும் நாகத்தின் தலையின்மேல் நடனஞ்செய்து, நெட்டை மருதம் தவழ்ந்து - உயர்ந்து வளர்ந்திருந்த இரண்டு மருதமரங்களினிடையே தவழ்ந்துசென்று, (பின்பு) சகடு உதைத்த - சகடாசுரனை யழியும்படி உதைத்த, மாலே ! - திருமாலே !, தாலோ தாலேலோ—; மகரக் குழையே !—, நூற்றெண்மர் வாழ்வே !—, தாலோ தாலேலோ; (எ. று.)

சமயம் ஆறு என்றது - ஒன்றோடொன்று மாறுபட்ட வைஷ்ணவம், சைவம், சாக்தம், சௌரம், காணபதம், கௌமாரம் என்னும் ஆறு வைதிகமென்னலாம் ; இனி, கபிலமதம், கணாதமதம், பதஞ்சலி மதம், அக்ஷபாதமதம், வியாசமதம் ஜைமினிமதம் என்னும் ஆறு வேதாந்தமதங்களையும் ; பௌத்தம், ஜைநம், பைரவம், காளாமுகம், லோகாயதம், சூநியவாதம் என்னும் ஆறு புறச்சமயங்களையும் குறிக்கும் என்னலாம் ; இவற்றிற்கெல்லாம் ஏற்ற அந்தந்தத் தெய்வமாய் திருமால் வீற்றிருக்குந் தன்மையை "சமயமோராறும் களிக்கும் பொருளே !" என்பதால் பெறவைத்தார். "இறைஞ்சுவாரிறைஞ்சப் பற்பல் தேவருமாகி" என்றார் வில்லியாரும். திருக்கு - மாறுபாடு : (perverseness, crookedness of mind). புயல் - உருவகம். புயல் மழைத்தாரைகளைச் சொரிவதுபோல மேகவண்ணனாகிய இராமபிரான் தனது வில்லினின்று அம்புமாரிகளைப் பொழிவான் என்றபடி. "சார்ங்கமுதைத்த சரமழைபோல்" என்றதும் நினைக. காளியன் மேல் கூத்தாடியது, இரட்டைமருதிடை தவழ்ந்தது,சகடு உதைத்தது எல்லாம் கிருஷ்ணவதாரத்தில். (29).

30. சொல்லற் கரிய கிரணநெடுஞ்
சுடரா ழியினாற் கதிர்மறைத்த
சுருதிப் பொருளே! குருகூரன்
சொற்பா வமிர்தங் கனிந்தசெவிச்

செல்வக் குழகா! பாட்டயர்ந்து
சிறைவண் டலம்பிக் கண்படுக்குஞ்
செழுந்தார்த் துளவு மணங்கமழுஞ்
சிகரப் புய! பூ தர! முகுந்த!
அல்லிக் கமலப் பொகுட்டுமட
அனஞ்சேர் வழுதித் திருநாடா!
அடிவைத் தொருமூ வுலகமுமன்
றளக்கும் புயலே! சேறுடைக்கு
மல்லற் பழனத் திருப்பேரை
மாலே! தாலோ தாலேலோ
மகரக் குழையே! நூற்றெண்மர்
வாழ்வே! தாலோ தாலேலோ.

(இ - ள்) சொல்லற்கு அரிய - பேச்சுக்கு நிலமல்லாத, கிரண நெடும் சுடர் ஆழியினால்-ஒளிக்கற்றைகளை வெளிவிடுகின்ற பேரொளியைக் கொண்ட சக்கரப் படையினால், கதிர் மறைத்த - சூரியனை மறையவைத்த, சுருதிப் பொருளே ! - வேத முதல்வனே ! குருகூரன் - நம்மாழ்வாரின், சொற் பா அமிர்தம் கனிந்த - நல்ல சொற்களாலாகிய திருவாய்மொழிப் பாசுரங்களாகிய அமிர்தத்தைக் கேட்டுக் கேட்டுச் சுவைத்துப் பழுத்த, செவிச் செல்வக் குழகா ! - செவிச்செல்வத்தையுடைய அழகனே ! சிறை வண்டு - இறகுகளையுடைய வண்டுகள், அலம்பி - ஒலித்து, பாட்டயர்ந்து - இசைப் பாட்டுக்களைப்பாடி, கண்படுக்கும் - (பின்னர்) உறங்குகின்ற, துளவுச் செழுந்தார் மணம் கமழும்-செழித்த திருத்துழாய் மாலையின் வாசனை வீசும், சிகரப் புய ! — உயர்ந்த தோள்களையுடைவனே ! பூ தர ! - பூமியைத் தாங்குபவனே ! முகுந்த - முகுந்தனே ! அல்லிக் கமலப் பொகுட்டு - புறவிதழ்களைக் கொண்ட தாமரைக் கொட்டையில், மட அனம் சேர் - மென்மையான அன்னப் பறவைகள் தங்கும், வழுதித் திருநாடா ! — பாண்டி நாட்டுக் குரியவனே ! அன்று - (மாவலிபாற் சென்ற) அன்றையதினம், அடி வைத்து - உன்சிறுகாலடியைக்காட்டிவைத்து, ஒரு மூவுலகமும் - ஒப்பற்ற மேல் கீழ்நடு என்ற மூவுலகங்களையும், அளக்கும் புயலே ! - [திரிவிக்கிரமனாகி] அளந்து கொண்ட மேகவண்ணனே ! சேறு உடைக்கும் - சேறுகக்குழையும்படி உழுது மண்ணுண்டைகளை

யுடைக்கும்படியுள்ள, மல்லல் - வளப்பத்தையுடைய, பழனம் - கழனிகளைக் கொண்ட, திருப்பேரை மாலே ! — ; தாலோ தாலே லோ — ; மகரக் குழையே ! —, நூற்றெண்மர் வாழ்வே ! —, தாலோ தாலேலோ — ; (எ. று.)

சுருதிப்பொருள் - வேதத்தினாலே பிரதிபாதிக்கப்பட்ட பரம் பொருள். குருகூரன் - திருக்குருகூரென்னும் ஆழ்வார்திருநகரியில் அவதரித்தவராதலின் நம்மாழ்வாருக்கு இப் பெயர் வழங்கும். அவர் பாடியவை நான்கு பிரபந்தங்களாயினும் சிறப்பாகத் திருவாய்மொழியை 'சொற்பா அமிர்தம் கனிந்த செவிச்செல்வம்' என்றார் என்க. ஏனைய மூன்றும் இயற்பாவிற்சேர, இத் திருவாய்மொழி 'யாழினிசை வேதத்தியல்', என்று இசைப்பாவாகிச் சாமவேதத்திற்குச் சமானமாகக் கருதப் படுவதாதலின் என்க. "செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்" : செவிச் செல்வம்- செவியான் வருஞ் செல்வம் : அதாவது - கேள்வியான் எல்லாப் பொருளையும் அறிதல் : இது தலையாய செல்வமாகும், திருவாய்மொழியைக் கேட்டுப் "பெருமாள் மகுடம் சாய்க்கும்படி"யுள்ளது என்றார் ஒருவர். "பெருமாள் மகுடம் சாய்க்கும்படி கவி பாடிய ஞானத் தமிழ்க்கடலே" என்றார் அவர். 'பாட்டயர்ந்து' என்ற விடத்துக் கம்பன் "வண்டு தமிழ்ப்பாட்டிசைக்குந் தாமரையே" என்றதை நினைக. சிகரம் - மலையுச்சி : இங்கே உயர்ச்சி குறிப்பது. புயல் - உருவகம். சேறுடைக்கும் பழனம் - தொளியுழவுக்காக நீர் கட்டப்பட்ட நிலம், தொளி - சேறு. இதனைச் சேடைவைத்தல் என்பர் "மாறில் வன்பகட் டேர் பலநெருங்கிட வயல்கள், சேறுசெய்பவர்" என்றார் சேக்கிழாரும். **சுடராழியினால் கதிர் மறைத்த கதை** -: மகாபாரதயுத்தத்திற் பதின் மூன்றும் நாளிலே அருச்சுனகுமாரனான அபிமன்யுவைத் துரியோதனனது உடன்பிறந்தவள் கணவனான சயத்திரதன் கொன்றுவிட, அங்ஙனம் தன்மகனைக் கொன்ற சயத்திரதனை மற்றைநாட் சூரியாஸ்தமனத்திற்குள் தான் கொல்லாவிடின் தீக்குதித்து உயிர் விடுவதாக அருச்சுனன் சபதஞ்செய்ய, அதனையறிந்த பகைவர்கள் பதினான்காம் நாள் பகல் முழுவதும் சயத்திரதனை வெளிப்படுத்தாமற் சேனையின் நடுவே நிலவறையில் மறைத்து வைத்திருக்க, அருச்சுனனது சபதம் பொய்த்து விடுமேயென்று சிந்தித்துக் கண்ணபிரான் சூரியனை அஸ்தமித்தற்குச் சிலநாழிகைக்கு முன்னமே தன் சக்கராயுதத்தால் மறைத்துவிட, அப்பொழுது எங்கும் இருளடைந்ததனால், அருச்சுனன் அக்கினிப் பிரவேசஞ் செய்தலைக் களிப்போடு காணுதற்குத் துரியோதனாதியருடனே சயத்திரதன் வந்து எதிர் நிற்க, அச்சமயத்திற் கண்ணன் திருவாழியை வாங்கிவிட, பகலாயிருந்ததனால், உடனே அருச்சுனன் சயத்திரதனைத் தலைதுணித்தனனென்பதாம். (30)

31. இடையிற் றொடியக் கனத்தடிகொண்
டிளகித் ததும்பிப் பணைத்திறுமாந்
தேந்துங் களபப் புளகமுலை
இலவத் துவர்வா யம்புயப்பொற்
பெடையைத் தழுவி யனுதினமும்
பிரியா திருக்குந் திருமார்பா!
பெருவா ரிதிசூழ் நிலவலயப்
பெண்ணுக் கிணங்கும் புயசயில!
படையிற் சுமந்த கொழுநுழைந்த
பழனக் கொழுஞ்சேற் றினில்வரம்பிற்
பாகு படுநெட் டிலைக்கரும்பிற்
பசும்பூங் காவில் மணலினில்வாய்
மடையிற் பணிலந் தவழ்பேரை
மாலே! தாலோ தாலேலோ
மகரக் குழையே! நூற்றெண்மர்
வாழ்வே! தாலோ தாலேலோ.

(இ-ள்) இடை இற்று ஒடிய - இடுப்பு கட்டுவிட்டு ஒடியும்படி, கனத்து - பாரமாகி, அடி கொண்டு - அடி புடைத்து, இளகி - (அதனால்) நெகிழ்ந்து, பணைத்து - பருத்து, இறுமாந்து - செருக்கி, ஏந்தும் - நிமிர்ந்து நிற்கும், களபம் புளகம் முலை - சந்தனம் பூசப் பட்டு மயிர்க்கூச்செரியும் கொங்கைகளையும், இலவம் துவர் வாய் - இலவம் பூப்போலச்சிவந்த பவளம்போன்ற வாயினையும் உடைய, அம்புயப்பொன் பெடையைத்தழுவி - இலக்குமியைத் தழுவி, அனு தினமும் - தினந்தோறும் (எப்போதும்), பிரியாதிருக்கும் - (அவளை விட்டு) - நீங்காதிருக்கும், திருமார்பா ! - அழகிய மார்பினையுடைய வனே ! பெரு வாரிதி சூழ் நிலவலயப் பெண்ணுக்கு - பெரியகடல் சூழ்ந்த பூமிதேவிக்கு, இணங்கும் - தழுவுதற்குப் பொருத்தமா யிருக்கிற, சயில புய!—மலைபோன்ற தோள்களையுடையவனே !,

படையில் சுமந்த கொழு - உழுபடைக்கலப்பையில் பொருத்தப் பட்ட கொழுமுனை, நுழைந்த - ஊடுருவிச்சென்ற, பழனக் கொழும் சேற்றினில் - வயலிலுள்ள குழைந்த சேற்றினிலும், வரம்பில் - வரப்பு களிலும், பாகு படு நெடு இலை கரும்பில் - வெல்லப்பாகு உண்டாக்கு கின்ற நீண்டஇலைகளையுடைய கரும்புகளிலும், பசும் பூங்காவில் - பசுமையான பூஞ்சோலைகளிலும், மணலினில் - மணலிலும், வாய் மடையில் - மதகினிடங்களிலும், பணிலம் தவழ் - சங்குப்பூச்சிகள் தவழ்கின்ற (வளப்பமுடைய), பேரை - தென்திருப்பேரையென்ற நகரில் எழுந்தருளியுள்ள, மாலே !—திருமாலே ! தாலோ தாலேலோ—; மகரக்குழையே !—, நூற்றெண்மர் வாழ்வே !—, தாலோ தாலேலோ—; (எ. று.).

பொன் - இலக்குமி. பெடையென்றது அன்னப்பேடை நோக்கி யென்க : இவன் தழுவுதலால் 'அகலகில்லேன் இறையுமென்று அலர் மேல்மங்கையுறைகின்றனளாதலின், "அனுதினமும் பிரியாதிருக்குந் திருமார்பா !" என்றார். மார்பிற்கு அணி ஸ்ரீதேவியும், தோளுக்கு அணி பூதேவியும் ஆவள் என்றபடி. "இன்துணைபதுமத்தலர்மகள் தனக்கு இன்பன், நற்புவிதனக்கு இறைவன்" என்றார் கலிகன்றியும். சேற்றிலும் வரம்பிலும் கரும்பிலும் காவிலும் மணலிலும் மடை வாயிலும் பணிலம் தவழும்பேரை என்றதால் அந்நகரின் நீர்வளம் நிலவளம் பெறவைத்தபடி. "நந்து ஊரும் புனல் நாடு" என்றார் வில்லியும். (31.)

32. அடியார் பிறவிக் கடல்சுவற்றி
அழியாப் பரம பதங்கொடுக்கும்
ஆழிப் புயலே! பணுமகுடத்
தடல்வா ளரவின் கண்பிதுங்க
நடியா நிற்கு மொருகுழக!
நாரா யண! சீ தர! முகுந்த!
நண்ணும் புலவன் கணிகணன்பின்
நற்பாய் சுருட்டிச் சொற்றமிழ்க்குப்
படிமே னடக்கு மிருசரண
பங்கே ருக!வன் றனல்கொளுந்தப்

பாவைக் கொருகாய் கணைதொடுத்த
பாரப் புய! பூ தரத்திலங்கும்
வடிவார் திகிரிப் படைசுமந்த
மாலே! தாலோ தாலேலோ
மகரக் குழையே! நூற்றெண்மர்
வாழ்வே! தாலேலோ.

(இ-ள்) அடியார் பிறவிக்கடல் சுவற்றி - (தனது) பக்தர்களது பிறவியாகிய சாகரத்தை வற்றச்செய்து, அழியாப்பரம பதம் கொடுக்கும் - என்றைக்கும் அழிவில்லாத மேலான மோட்சபதவியைக் கொடுக்கும், ஆழிப்புயலே! - திருப்பாற்கடலில் படிந்துள்ள மேகமே! பணு மகுடத்து அடல் வாள் அரவின் – படங்கள் (ஐந்தினைத்) தலையிற் கொண்ட வலிய கொடிய காளியனென்னும் பாம்பின், கண் பிதுங்க - கண்கள் வெளிவந்துவிடும்படி (துரிதமாகவும் அழுத்தமாகவும்) நடியாநிற்கும் - (அதன் தலைகளின்மேல் கால்களால்) நடனஞ்செய்யும், ஒரு குழக - ஒப்பற்ற அழகுடையவனே! நாராயண—!, ஸ்ரீதர—!, முகுந்த—!, நண்ணும் புலவன் கணிகணன் பின்- (உன்னை நம்பிக்கச்சி) சேர்ந்த கணிகண்ணன் என்னும் புலவனுக்குப் பின்னாலே, சொல் தமிழ்க்கு - அவன் ஆசிரியர் திருமழிசையாழ்வார் சொன்ன தமிழ்ப்பாடலுக்காக, நல்பாய் சுருட்டி - நல்ல பாயாகிய ஆதிசேடனைச்சுருட்டி (த்தலைமேல் வைத்துக்கொண்டு எருத்து அலைப்ப), படிமேல் நடக்கும் - தரையில் நடந்துசென்ற, பங்கேருக இரு சரண! -தாமரைமலர்போன்ற உபயபாதங்களையுடையவனே! பாவைக்கு - சீதாபிராட்டிக்காக, அன்று - (அணை கட்டிச்செல்ல நினைத்த) அன்றைத்தினம், அனல் கொளுத்த - நெருப்புப்பற்றியெரியும்படி, ஒருகாய் கணை தொடுத்த - ஒப்பற்ற (ஆக்னேயாஸ்திரமாகிய) சுடுசரத்தைத் தொடுக்கச் சித்தமாயிருந்த, பாரப் புய! - வலிய தோள்களையுடையவனே! பூதரத்து இலங்கும் - மலையைப்போல விளங்குகின்ற, வடிவார் - வலியவுருக்கொண்டுள்ள, திகிரிப்படை - சுதரிசனம் என்னும் சக்ராயுதத்தை, சுமந்த - வலக்கையில் தாங்கியுள்ள, மாலே!— திருமாலே! தாலோ தாலேலோ—; மகரக்குழையே!—, நூற்றெண்மர் வாழ்வே!—, தாலோ தாலேலோ—; (எ. று.).

அழியாப் பரமபதம் - 'அழிவில் வீடு' எனப்படும். ஆழி - சக்கரப் படை எனினுமாம். நாராயண நாமம் ஆயிரநாமங்களினும் சிறந்தது. 'நான்கண்டு கொண்டேன் நாராயணாவென்னும் நாமம். "நானுஞ் சொன்னனேன் நமர்களும் சொல்லுமின் நமோ நாரணமே" முதலிய

நினைக. புயல் - உருவகம். பணமகுடம், சரண பங்கேருகம் - வட மொழித்தொடர்கள். பூதரம் - மலை.

பணமகுடத் தரவின்மேல் நடித்த கதை :-

யமுனைநதியில் ஓர்மடுவில் இருந்துகொண்டு தன் விஷாக்கினியினால் குடித்தற்கு ஏற்றதாகாதபடி செய்த **காளியனென்னும்** கொடிய ஐந்தலைநாகத்தைக் கிருஷ்ணன் தண்டிக்க வேண்டுமென்று எண்ணி, அம்மடுவிற்குச் சமீபத்திலுள்ளதொரு கடம்ப மரத்தின்மேலேறி அம்மடுவிற் குதித்து, கொடிய அந்நாகத்தின் படங்களின் மேலேறித்துவைத்து அதன் கண்பிதுங்கும்படி நர்த்தனஞ் செய்து நசுக்கி வலியடக்குகையில், மாங்கலிய பிக்ஷையிட்டருள வேண்டுமென்று தன்னை வணங்கிப் பிரார்த்தித்த நாககன்னிகைகளின் விண்ணப்பத்தின்படி அந்தக்காளியனை உயிரோடு கடலிற் சென்று வாழும்படி விட்டருளினன் என்பதாம்.

சொற்றமிழ்க்கு நற்பாய்சுருட்டிப் பின் போன வரலாறு :- கணிகண்ணன் என்பவன் திருமழிசையாழ்வாரின் சீடன். அவன்கச்சியில் ஆழ்வாரோடு திருவெஃகா எம்பெருமானை வழிபட்டுவந்தான், ஒரு நாள் அவ்வூர்ப்பல்லவராசன் கணிகண்ணனைப் பாத்துத்தன்னைப் பாடவேண்டுமென்று வற்புறுத்த, அவன் ''நரஸ்துதி செய்வேனல்லேன்'' என்ன, உடனே நகரைவிட்டு வெளியே போகும்படி ஆணையிட்டான். அதன்படியே கணிகண்ணன் செய்யத்தொடங்கி, தன் ஆசிரியரிடமும் சென்று செய்திதெரிவிக்க, அவர் திருவெஃகா எம்பெருமானைக்கிட்டித் திருவடிதொழுது'' கணிகண்ணன் போகின்றான் காமருபூங்கச்சி, மணிவண்ணா நீ கிடக்கவேண்டா — துணிவுடைய, செந்நாப்புலவனும் போகின்றேன் நீயுமுன்றன், பைந்நாகப் பாய் சுருட்டிக்கொள்'' என்று பிரார்த்தித்தவளவிலே, அந்த எம்பெருமானும் ஆழ்வாரின்அபிமதப்படி யோகநித்திரையைவிட்டு எழுந்து வர, மூவரும் அவ்வூரைவிட்டு அருகிலுள்ளதோர்இடத்தையடைந்து அங்குவசித்தனர். [இஃது பாலாற்றங்கரையில் உள்ள ''ஓரிருக்கை'' என்ற இடமாகும்]. மூவரும் சென்றபின் கச்சிப்பதி பொலிவிழக்கவே பல்லவஅரசன் அவர்களைத்தேடிவந்து கணிகண்ணன் காலில் விழுந்து தன் பிழையைப் பொறுத்தருளுமாறுவேண்ட, அவனும் மீண்டெழுந்தருளும்படி ஆழ்வார்பக்கல் விண்ணப்பஞ்செய்ய, அவரும் அதனையங்கீகரித்து அரவணைச் செல்வனைநோக்கி, ''கணிவண்ணன் போக்கொழிந்தான் காமருபூங்கச்சி, மணிவண்ணா நீகிடக்கவேண்டும்-துணிவுடைய, செந்நாப்புலவனும் போக்கொழிந்தேன் நீயுமுன்றன், பைந்நாகப்பாய் படுத்துக் கொள்'' என்று முன்பு பாடியபாட்டை

மாற்றிப் பாடி வேண்ட, எம்பெருமானும் அதற்கு உடன்பட்டு ஆழ்வாரும் கணிகண்ணனும் உடன்வர மீண்டெழுந்தருளித் திருவெஃகாவையடைந்து தான் இவ்வாறுசெய்தது பின்புள்ளார்க்கும் பிரதியட்சமாகவேணுமென்று முன்புபோல வலத்திருக்கை கீழாகவன்றி, இடத்திருக்கை கீழ்ப்படக் கண் வளர்ந்தருளினன் என்பது. குமரகுருபரரும் இவ்வரலாற்றை'' பணிகொண்ட முடவுப் படப்பாய்ச் சுருட்டுப் பணைத்தோள் எருத்தலைப்பப், பழமறைகள் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டலே'' என்று பாராட்டுகின்றார். (மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் : காப்பு : 1 ;)

அனல் கொளுந்தக் காய்கணை தொடுத்த கதை :-

இராவணனாற் கவரப்பட்ட சீதாபிராட்டி இலங்கையிலிருக்கின்ற செய்தியை அனுமான் சென்று அறிந்து வந்து சொன்னபின்பு இராமபிரான் வாநரசேனையுடனே புறப்பட்டுச்சென்று கடற்கரையையடைந்து, கடலைக்கடக்க உபாயஞ்சொல்லவேண்டுமென்று அக்கடலரசனாகிய வருணனைப் பிரார்த்தித்து அங்குத் தருப்பசயனத்திலே படுத்து ஏழுநாளளவும் பிராயோபவேசமாகக் கிடக்க, சமுத்திரராசன் அப்பெருமானது மகிமையையறியாமல் உபேக்ஷையாயிருக்க, ஸ்ரீராமன் அதுகண்டு கோபங்கொண்டு, அனைவரும் நடந்துசெல்லும்படி கடலைவற்றச் செய்வேனென்று ஆக்கிநேயாஸ்திரத்தைத் தொடுக்கத்தொடங்கியவளவிலே, அதன் உக்கிரத்தால் வருணன் அஞ்சி நடுங்கி ஓடிவந்து அப்பெருமானைச் சரணமடைந்து கடல் வடிவமான தன்மேல் அணைகட்டுவதற்கு உடன்பட்டு ஒடுங்கிநிற்க, பின்பு இராமன்வாநரங்களைக் கொண்டு மலைகளால் சேதுபந்தனஞ் செய்தனன் என்பதாம். (32).

33. கருணை பெருகி யுவட்டெறியுங்
கண்ணா! நிரையின் பின்னடந்து
கானந் தழைப்பத் துணைக்கமல
கழற்கால் பின்னிக் கன்றொடுகுன்
றுருகும் படிவேய்ங் குழல்வாய்வைத்
தூதும் புயலே! அடியவர்தம்
ஒழியாப் பிறவித் துயரகற்றி
உள்ளத் திருக்குந் திருக்கறுத்து
நிருதர் குலமும் வேரறுத்த
நிமலா! சமரார்த் திடுந்திகிரி

நீலக் குழகா ! மணநாற
நிறைக்கும் பசுந்தண் டுழாய்முகுந்த !
வருணன் பரவு மிருசரண !
மாலே !தாலோ தாலேலோ
மகரக் குழையே ! நூற்றெண்மர்
வாழ்வே ! தாலோ தாலேலோ.

(இ - ள்) கருணை பெருகி உவட்டு எறியும் கண்ணு ! - தயை மிகுந்து வெள்ளமிடும் கண்ணு ! நிரையின் பின் நடந்து - பசுக் கூட்டங்களின்பின்னால் நடந்து சென்று, கானம் தழைப்ப - (அவைகள்) மேயும் காடுகள் செழிக்கும்படி, துணைக் கமலக் கழல் கால்பின்னி-இருதாமரைமலர் போல் மெல்லிய கழலணிந்த பாதங்கள் மாறவைத்து, கன்றொடு குன்று உருகும்படி - பசுங்கன்றுகளும் (கடினமான) குன்றுகளும் (கேட்டு) நெகிழ்ந்து நீராகும்படி, வேய்ங்குழல் வாய்வைத்து ஊதும் புயலே ! - புல்லாங்குழலை வாயிதழிலே [யிட்டு இசைக்கும் மேகமே ! அடியவர்தம் - பக்தர்களுடைய, ஒழியாப் பிறவித்துயர் அகற்றி - நீங்காத பிறவித்துன்பத்தைப் போக்கடித்து, உள்ளத்து இருக்கும் திருக்கு அறுத்து - மனத்திலேயிருக்கும் மாறுபாட்டினை நீக்கி, நிருதர் குலமும் வேர் அறுத்த - அரக்கர் குலத்தையும் அடியோடு தொலைத்த, நிமலா ! — புனிதனே ! சமர் - போரில், ஆர்த்திடும் - ஆரவாரித்திடும், திகிரி - சக்கரப் படையையுடைய, நீலக் குழகா ! - நீலரத்தினம் போன்ற நிறமுடைய அழகனே ! மணம் நாற நிறைக்கும் - வாசனை வீசும் படிசெய்து எங்கும் பரப்பும், பசும் தண் துழாய் முகுந்த ! — பச்சை நிறமுடைய குளிர்ந்த திருத்துழாய் மாலையையணிந்துள்ள முகுந்தனே ! வருணன் பரவும் இரு சரண ! — வருணபகவான் துதிக்கும் உபயபாதங்களையுடையவனே !— மாலே - திருமாலே ! தாலோ தாலேலோ— ; மகரக்குழையே! — , நூற்றெண்மர் வாழ்வே ! —, தாலோ தாலேலோ ;(எ. று.).

'கன்றொடு குன்று உருகும்படி' என்றது - சேதன அசேதனங்களோடு வாசியற நெகிழும்படி என்பது கருத்து. கண்ணன் குழலூதும் சிறப்பினைப் பெரியாழ்வார் திறம்படப் பாடியுள்ளார். 'கழற்கால் பின்னி' என்றவிடத்து "இடவணரை இடத் தோளொடு சாய்த்து இருகைகூடப் புருவம் நெரிந்தேற, குடவயிறுபட வாய் கடைகூட "என்ற பெரியாழ்வார் ஸ்ரீஸூக்தி நினைக. மற்றும் 'கன்று உருகும்படி' என்றவிடத்து "கறவையின் கணங்கள்

கால்பரப்பிட்டுக் கவிழ்ந்திறங்கிச் செவியாட்டகில்லாவே'' என்றதையும் நினைக. புயல் - உருவகம். மேகம் மழை சொரிவது போல இவன் வேய்ங்குழலால் இசைத்தாரைகள் சொரிந்தான் என்றபடி. திருக்கு - மாறுபாடு : மயக்கத்தாலுண்டாவது. 'சமர் ஆர்த்திடும் திகிரி' என்றவிடத்து - 'மாயவன் தீயவரைக் கூராழி கொண்டு குறைப்பது' (இராமாநுச : நூற் : 74) நினைக. (33).

34. விடவா ளரவக் கயிறுசுற்றி
வெற்பிற் பிணித்து விசித்திறுக்கி
விரைதெண் டிரைநீர்க் கடன்முகட்டின்
விண்ணோ ரமுதங் கடைந்தவந்நாள்
அடருங் கிரணக் கவுத்துவமும்
அருமைத் திருவுந் தடமார்புக்
கமைத்துத் திருப்பா லாழியினும்
அரங்கத் தினுங்கண் டுயில்பெறுங்
குடவால் வளைசூ லுளைந்துசெந்தேன்
கொழிக்கும் பொலன்று மரைப்பொகுட்டிற்
குளிர்முத் துயிர்ப்பக் கருவென்னக்
கொணர்ந்தஞ் சிறைய விளம்பேட்டு
மடநா ரைகள்கூண் டடைசெறிக்கும்
வளஞ்சேர் நாடா! தாலேலோ
மகரக் குழையே! நூற்றெண்மர்
வாழ்வே! தாலோ தாலேலோ.

(இ - ள்) விடம் வாள் அரவும் கயிறு சுற்றி - விஷத்தைக் கொண்ட கொடிய வாசுகி யென்னும் பாம்பைக் கடைகயிருகச் சுற்றி, வெற்பில் பிணித்து - மந்தரமலையில் (அதனை மத்தாகக் கொண்டு) பூட்டி, இறுக்கி விசித்து - நெருக்கியிழுத்து, விண்ணோர் - தேவர்கள், விரை தெண் திரை நீர்க் கடல் முகட்டில் - (கொந்தளித்து) விரைகின்ற தெள்ளிய அலைகளையுடைய கடலின் மேலிடத்து, அமுதம் கடைந்த அந்நாள் - அமுதமெழும்படி

கடைந்த அக்காலத்து, அடரும் கிரணம் கவுத்துவமும் - செறிந்த ஒளிக்கற்றைகளைக் கொண்ட கௌஸ்துப மணியையும், அருமைத் திருவும் - (பெறுதற்கு) அரிய இலக்குமியையும், தட மார்புக்கு அமைத்து - விசாலமான மார்பினுக்கு அணியாக வைத்து, திருப் பாலாழியினும் அரங்கத்தினும் கண் துயில் பெறும் - திருப்பாற் கடலிலும் திருவரங்கத்திலும் யோகநித்திரை செய்கின்ற, (நாடா ! என மேலியைத்துப் பொருள்கொள்ளவேணும்.). (இனி), குட வால் வளை - குடம்போல் சுழிந்த வாலினைக்கொண்ட சங்குப்பூச்சிகள், சூல்உளைந்து - கருக்கொண்டு வருந்தி, செந்தேன் கொழிக்கும் பொலன் தாமரைப் பொகுட்டில் - நல்லதேனைப் பெருக்குகின்ற அழகிய தாமரைக்கொட்டையில், குளிர் முத்து உயிர்ப்ப - குளிர்ச்சி பொருந்திய முத்துக்களை யீன, (அவற்றை) அம் சிறைய இளம் பேட்டு மட நாரைகள் - அழகிய சிறகுகளைக்கொண்ட இளைய மென்மை பொருந்திய பெண்நாரைகள், கரு என்னக்கொணர்ந்து - (தமது) கருமுட்டைகள் என எண்ணிக் கொண்டுவந்து, கூண்டு அடை செறிக்கும் - தமதுகூடுகளில் அடைகாக்கும்படியான, வளம் சேர் நாடா ! - வளப்பமுடைய பாண்டி நாட்டுக்குத் தலைவனே ! தாலேலோ—; மகரக்குழையே — !, நுற்றெண்மர் வாழ்வே !—, தாலோ தாலேலோ—; (எ. று.).

கடல் கடைந்த கதை :

துருவாசமுனிவன் இட்ட சாபத்தால் தேவேந்திரன் ஐசுவரியங் களெல்லாம் கடலில் ஒளித்துவிட, அவன் தேவர்களோடு திருமாலைச் சரணமடைந்து, அப்பிரான் அபயமளித்துக் கட்டளையிட்டபடி அசுரர்களையும் துணையாகக்கொண்டு, மந்தரமலையை மத்தாக நாட்டி, வாசுகியென்னும் மகாநாகத்தைக் கடைகயிறுகப்பூட்டிப் பாற் கடலைக்கடையலாயினர். அதனினின்று எழுந்த ஆலகாலவிடத்தைச் சிவபிரான் உண்டார். பின்னர் எழுந்த கவுத்துபமணியையும் திருமகளையும் திருமால் தன் மார்பினில் ஆபரணமாகக் கொண்டார். பின்னர் எழுந்த அமுதத்தை விண்ணோர்க்குப் பங்கிட்டுத் திருமால் ஈந்தார் என்பது வரலாறு. பாலாழி திருப்பாற்கடல் ; "பாலாழி நீகிடக்கும் பண்பையாம் கேட்டேயும் காலாழும்" என்றார் நம்மாழ்வார். இறுதியடிகளில் **மயக்கவணி** காண்க. மடம் - பேதைமை, மென்மை.

(34).

சப்பாணிப் பருவம்

35. அரமகளிர் தங்கழுத் தணியுநா ணகலாமல்
ஐந்தரு வடிக்கொடாமல்
அயிரா பதப்பெரும் பகடொளித் தோடிநீள்
அலைகடற் புக்கிடாமல்
திரளவடி கொண்டதெள் ளமுதமது கொள்ளை போய்த்
தேவர்கள் நடுக்குறாமல்
தேவேந்தி ரனுக்கரசு மகுடபங் கம்வந்து
சிறைச்சாலை யுட்புகாமற்
கரதூ டணன்றிரி சிரர்நிகும் பன்கும்ப
கன்னனிந் திரசித்து
கலங்காத ராவணன் மடியலங் காபுரங்
கனல்கொளுந் தப்பெருவிரற்
சரடுபூட் டிச்சிலைக் கடைகுழைக் குங்கொண்டல்!
சப்பாணி கொட்டியருளே
சந்தனச் சோலைசெறி தென்றிருப் பேரைமுகில்!
சப்பாணி கொட்டியருளே.

(இ - ள்) அரமகளிர் - தேவமாதர்கள், தம் கழுத்து அணியும் நாண் - தங்களது கழுத்துகளில் பூண்டுள்ள மங்கலநாண், அகலாமல் - நீங்காதபடியும்; ஐந் தரு அடிக்கொடாமல் - பஞ்சதருக்களும் வேரொடு சாயாதபடியும்; அயிராபதம் பெரும் பகடு - பெரிய ஐராவதமென்னும் யானை, ஒளித்து ஓடி - மறையவோடி, நீள் அலைகடல் புக்கிடாமல் - நீண்ட அலைகளையுடைய பாற்கடலில் புகுத்திடாதபடியும்; திரள வடிகொண்ட தெள் அமுதம் அது - நன்கு திரளும்படி வடிக்கட்டிய தெளிந்த தேவாமிர்தமானது, கொள்ளை போய் - கொள்ளையடிக்கப்பட்டு, தேவர்கள் நடுக்குறாமல் - தேவர்கள் பயப்படாமலிருக்கும்படியும்; தேவேந்திரனுக்கு —, அரசு மகுட பங்கம் வந்து - அரசுக்குரிய கிரீடத்திற்குக்கேடு விளைந்து, (சிறைபிடிக்கப்பட்டு) சிறைச்சாலையுள் புகாமல் - சிறைச்சாலையுள் செல்லாதபடியும்; (ராவணன் மடிய சிலைக்கடைக் குழைக்கும் கொண்டல்! என

மேலியைத்துப் பொருள் கொள்ளவேணும்) [இனி], கரன் தூடணன் திரிசிரர் நிகும்பன் கும்பகன்னன் இந்திரசித்து கலங்காத ராவணன் —, (இவர்கள்) மடிய - இறந்துபோக, லங்காபுரம் கனல் கொளுந்த - இலங்கை நகரம் அனல்பற்றியழிய, பெருவிரல் சரடு பூட்டி - பெரு விரலினைக்கொண்டு (வில்லின்) நாணினைப்பூட்டி, சிலைக்கடை குழைக்கும் - வில்லினை நன்கு வளையச் செய்துவிடும், கொண்டல் - மேகமே ! சப்பாணி கொட்டியருள் - ஒரு கையுடனே மற்றொரு கை யைச்சேர்த்துத் தட்டுவாயாக ; சந்தனச்சோலை செறி தென் திருப் பேரைமுகில் - சந்தனமரங்களைக்கொண்ட பொழில்கள் அடர்ந்த தென்திருப்பேரையில் தங்கியிருக்கும் மேகமே ! சப்பாணி கொட்டி யருள் —; (எ.று)

இராவணன் மடிதலால் தேவலோகத்துக்கு ஏற்பட்ட நன்மை களைக் கூறினார். இல்லையேல், அரமகளிர் மங்கல நாண் இழக்க நேரிட்டிருக்கும் ; ஐராவதம் திருப்பாற்கடலிலிருந்து வந்தது போலவே அதனுள் ஓடியொளியநேரிட்டிருக்கும்; தேவர்கள் நடுங்கும்படி அமுது கொள்ளைபோயிருக்கும் ; இந்திரன் அரசபதவியிழந்து சிறைபுகுந் திருப்பன் : இவையொன்றும் நிகழாதபடி இராவணன் தன்குலத் தோடு இராமன்விட்ட சரத்தால் மடிந்தான் என்றார். கரன் - இது வடமொழிப் பெயர் : கொடியவனென்று பொள்படும் : இவன் - இரா வணனுக்குத்தம்பிமுறையாகும் ஓர் அரக்கன். தண்டகாரண்யத்தில் ஜநஸ்தானம் என்னுமிடத்தில் தன் தங்கை சூர்ப்பணகைக்குக் காவ லாகஇராவணனால் நியமிக்கப்பட்ட அரக்கர்சேனைக்கு முதல்தலைவன். இவனுக்கு முக்கியசேனாதிபதிகள் தூஷணன் திரிசிரா என்பவர். இம்மூவரும் உறுப்பறுபட்ட சூர்ப்பணகைக்காக இராமனுடன் போரி டவந்து மாண்டுபோயினர். நிகும்பன் - கும்பகர்ணன் மகன். கும்ப கன்னன்கும்பகர்ணன் : இராவணன் தம்பி. இந்திரசித்து - இரா வணன் மகன் : இலக்குமணனால் கொல்லப்பட்டான். எனினும், இராமனுக்கும் அவ்வென்றிச் சிறப்பு சேரும். கொண்டல், முகில் - உருவகம். சப்பாணி கொட்டுதல் - கையோடு கை தட்டுதல். தென் திருப்பேரை முகில் என்றது - அத்தலத்துத் திருமாலின்பெயர்களுள் **நிகரில் முகில்வண்ணன்** என்பதும் பிரசித்தமானதொன்றாகும்.

குறிப்பு

[மேலும் கீழும் பாட்டுக்களில் ' புயலே , முகிலே, மேகமே, மழையே, காளமேகமே, கரியமேகவண்ணனே முதலாக விளி அடிக்கடியமைத்திருப்பதும் இதுபற்றியென்பது அறிக]. (35).

36. அமரர்கின் னரர்முனிவர் கிம்புருட ரும்பரவும்
அயிரா பதப்பாகனும்
அம்பரத் திடையுலவு கங்கைப் பெரும்பாவு
அலையெறிய விட்டசடிலத்
துமையையொரு பங்குடைக் கடவுளுந் தொழுதுளம்
உவப்பவம ராடுசுடர்வேல்
ஊறுபடு நயனப் படீரகுங் குமமுலைக்
கொல்குமொரு நுண்மருங்குற்
குமுதவாய் மடமங்கை தேவகிக் குள்ளங்
குழைந்துகண் களிகூரவே
கோசலைக் கினியகைக் கோமளக் குழவியே !
கோதிலா மழைவள்ளலே !
தமரவரி வண்டடை கிடந்தமுள ரிக்கைகொடு
சப்பாணி கொட்டியருளே
சந்தனச் சோலைசெறி தென்றிருப் பேரைமுகில் !
சப்பாணி கொட்டியருளே.

(இ - ள்) அமரர் - தேவர்கள், கின்னரர் - கின்னரசாதியினர், முனிவர் - இருடிகள், கிம்புருடரும் - கிம்புருடர்களும், பரவும் - துதிக்கின்ற, அயிராபதப்பாகனும் - தேவேந்திரனும், அம்பரத்திடை - ஆகாசத்திலே, உலவு - ஓடுகின்ற, கங்கை - கங்கையாற்றினது [ஆகாசகங்கையினது], பெரும் பாவு அலை எறிய விட்ட - பெரிதும் பரவிவருகின்ற அலையை [த்தன்சிரசில்] வீசும்படி விட்டுக், கொண்ட, சடிலத்து [க்கடவுளும்] - ஜடாபாரத்தையுடைய இறைவனும், உமையை ஒரு பங்கு உடை கடவுளும் - உமாதேவியை வாம பாகத்தில் உடையவனாகிய இறைவனும் [ஆகிய] சிவபெருமானும், தொழுது உளம் உவப்ப - வணங்கி மனங்களிக்கும்படி உள்ள, கோதிலா மழை வள்ளலே ! — மொய்த்தலில்லாத மழைபோன்ற வண்மையுடைய திருமாலே ! அமர் ஆடு சுடர்வேல் ஊறுபடு நயனம் - போரில் பயன்படுகின்ற ஒளிரும் வேலாயுதமும் புண்பட்டு வருந்தும்படியுள்ள கண்களையும், படீரம் குங்கும முலைக்கு ஒல்கும் - சிவப்புநிறம்பொருந்திய குங்குமக்குழம்பு பூசப்பட்ட கொங்கைகளின்

பாரத்தைத் தாங்கமாட்டாது நுடங்கியசைகின்ற, ஒரு நுண் மருங்குல் - நுண்ணியதோர் இடையினையும், குமுத வாய் - ஆம்பல் போல் குளிர்ந்த வாயினையும் உடைய, மடமங்கை தேவகிக்கு - மென்மை பொருந்திய தேவகிப் பிராட்டிக்கு, உள்ளம் குழைந்து கண் களி கூர - மனம்நெகிழ்ந்து இருகண்களும் கண்டு மகிழும் படி, (சேஷ்டிதங்கள் செய்த) கோதிலா மழை வள்ளலே ! —, (மேலும்) கோசலைக்கு இனிய கைக்கோமளக் குழவியே ! - கௌசல் யாதேவிக்கு இனிய அழகு பொருந்திய கைக்குழந்தையாயிருப் பவனே ! (இராமபிரானே !)

தமரம் வரி வண்டு - ஒலிக்கின்ற கோடுகளையுடைய கைவளை யல்கள், அடைகிடந்த - செறிய இடப்பட்டுள்ள, முளரிக் கைகொடு - தாமரைப் பூப் போல் மெல்லிய கைகளைக் கொண்டு, சப்பாணி கொட்டியருள் —; சந்தனச் சோலை செறி தென்திருப்பேரை முகில் ! —, சப்பாணி கொட்டியருள் — ; (எ. று.).

கின்னரர் கிம்புருடர் - தேவ கணங்களைச் சேர்ந்தவர். பாகன் - தலைவன் : இந்திரன். பாவுதல் - பரவுதல், வியாபித்தல். இந்திரனும் சிவபெருமானும் தொழுது உளம் உவப்ப மழை வள்ளலே ! எனக் கூட்டிப் பொருண் முடிவு செய்க. அஃதே போல் "தேவகிக்கு உள்ளங்களிகூர மழை வள்ளலே ! "என இயைத்துப் பொருட் பொருத்தமுறச் செய்க. வேல் ஊறுபடுதலாவது - வேல் மனம் புண் படுதல் : நமக்கு இவளது கண்ணழகு இல்லையே என்று வருந்துதல். வேல் கூர்மைக்கும் ஆடவரை வருத்தும் தன்மைக்கும் உவமை யாக வரும், படீரம் - சிவப்பு. குமுதவாய் - உவமைத்தொகை. கோமளம் - மென்மை, இளமை, அழகு. மழைக்குக் கோதாவது - பொய்த்தல். வண்டு - கைவளையல் : bracelet. அடைகிடத்தல் - செறிதல். முளரிக்கை - உவமைத்தொகை. (36).

37. வேதங்க ளோடைந்து பூதங்க ளுமயன்
விதிக்கின்ற பல்லுயிர்களும்
மிக்கவைம் பொறிகளு மெட்டெழுத்துநின்று
விளையாடு மொருகுழவியே!
ஏதங்க ளைந்தடிய ரிருவினை தணந்துபே
ரின்பத் திருத்துமொளியே!
இலகுசுடர் வேல்விழி துரோபதை தனைச்சிறிதும்
எண்ணாது துகிலுரிதரும்

போதந்த வேளைவந் துதவுசீ தர! துழாய்
பூதரப் புயமுகுந்தா!
பொருவரிய வண்டகோ ளகைமுகடு கீறியப்
பொன்னுலகு மேவுபாரி
சாதங் கொணர்ந்தருட் பின்னைக் களித்தவன்!
சப்பாணி கொட்டியருளே
சந்தனச் சோலைசெறி தென்திருப் பேரைமுகில்!
சப்பாணி கொட்டியருளே.

(இ-ள்) வேதங்களோடு - நான்கு வேதங்களோடு, ஐந்து பூதங்களும் - பஞ்சபூதங்களும், அயன் - பிரமதேவன், விதிக்கின்ற - படைக்கின்ற, பல் உயிர்களும் - பல ஜீவராசிகளும், மிக்க ஐம்பொறிகளும் - (அடக்கமுடியாது) மிகுந்த பஞ்சேந்திரியங்களும், எட்டு எழுத்து நின்று - அஷ்டாக்ஷர மகாமந்திரமாகிய "ஓம் நமோ நாராயணாய" என்றதில் நிலைத்து நிற்கும்படிசெய்து, விளையாடும் - (இந்த லீலா விபூதியிலே) விளையாடுகின்ற, ஒரு குழவியே ! - ஒப்பற்ற குழந்தைவடிவினனே ! அடியர் - (தனது) பக்தர்களின், ஏதம் களைந்து - துன்பங்களை நீக்கி, இருவினை தணந்து - (அவர்களது) நல்வினைதீவினைகளையும் நீக்கி, பேரின்பத்து இருத்தும் - ஆனந்தமயமாகிய மோட்சத்திலே நிலைபெறவைக்கும், ஒளியே ! - பிரகாசமானவனே !

இலகு சுடர் வேல்விழி துரோபதை தனை - விளங்கியொளிரும் வேலாயுதம்போன்ற கண்களையுடைய திரௌபதியை, சிறிதும் எண்ணாது - இறையேனும் மைத்துனியாயிற்றே என்று உறவுமுறையும் பாராதே, துகிலுரிதரும் போது - (பாவி துச்சாதனன்) ஆடையைக் களைந்தபோது, அந்த வேளை வந்து உதவும் சீதர ! - அந்தச்சமயத்திலே (தோன்றாத்துணையாக) வந்து ஆடைவளரும்படி உதவிசெய்த சீதரனே ! துழாய் -திருத்துழாய் மாலையை, பூதரப் புயம்-மலைபோன்ற தோள்களிலே தரித்திருக்கும், முகுந்தா ! - முகுந்தனே !

பொருவு அரிய - ஒப்பற்ற, அண்டகோளகை முகடு கீறி - ஆகாயமேல்வட்டத்தின் உச்சியைப்பிளந்து, அ பொன் உலகு மேவு - அந்த இந்திரலோகத்து இருந்த, பாரிசாதம் கொணர்ந்து - பாரிஜாத தருவை எடுத்துந்து, அருள் - கருணையோடு, பின்வனைக்கு அளித்தவன் ! - சத்தியபாமைக்குக் கொடுத்தவனே ! சப்

பாணி கொட்டியருள்—; சந்தனச்சோலைசெறி தென்திருப்பேரை முகில்!—, சப்பாணி கொட்டியருள்—; (எ. று,).

எட்டெழுத்து - நாராயண நாமத்தைக் கொண்ட பிரணவத்தோடு கூடியமந்திரம். நாராயணன் என்றது - நாரங்களுக்கு அயநமாயிருப்பவன் ; நாரங்களை அயநமாகவுடையவன் என்று பொருள்படும். இதன்பொருளை ஸ்ரீவசனபூஷணம் கொண்டு தெளியலாம், அங்குள்ளபடி—"நாராயணன் என்றது -நாரங்களுக்கு அயநமென்றபடி : நாரங்களாவன : நித்யவஸ்துக்களினுடைய திரள் : அவையாவன : ஜ்ஞாநாநந்தாமலத்வாதிகளும், ஜ்ஞாநசக்தியாதிகளும், வாத்ஸல்யசௌசீல்யாதிகளும், திருமேனியும், காந்திசௌகுமார்யாதிகளும். திவ்யபூஷணங்களும், திவ்யாயுதங்களும், பெரியபிராட்டியின் தொடக்கமான நாச்சிமார்களும், நித்யசூரிகளும், சத்ரசாமராதிகளும், திருவாசல்காக்கும் முதலிகளும், கணுதிபரும், முக்தரும், பரமாகாசமும், ப்ரக்ருதியும், பக்தாத்மாக்களும், காலமும், மஹதாதிவிகாரங்களும், அண்டங்களும், அண்டத்துக்குட்பட்ட தேவாதிபதார்த்தங்களும் அயநமென்றது - இவற்றுக்கு ஆச்ரயமென்றபடி. அங்ஙனன்றிக்கே, இவைதன்னை ஆச்ரயமாகவுடையனென்னவுமாம்" என்பது, இருவினை - நல்வினை, தீவினை : இந்த நல்வினையும் தீவினையைப் போலவே ஒருவனுக்கு ஞானத்தைத்தடுத்துப் பந்தமுறுத்துவதிற் பொன்விலங்கும் இரும்புவிலங்கும்போலத் தம்முள் ஒப்பனவாம் ஆதலின் "இருவினை தணந்து" என்றார் : "இருள்சேர் இருவினையும்' என்றார் வள்ளுவனாரும். ஆங்கு பரிமேலழகரும் "நல்வினையும்பிறத்தற்கு ஏதுவாகலான் 'இருவினையுஞ்சேரா' என்றுங் கூறினார்" என்றதுங் காண்க. ஒளி - உருவகம். துரோபதை - திரௌபதி என்பதன் சிதைவு. பூதரப்புயம் - உவமைத்தொகை. பின்னை - சத்தியபாமை - ருக்மிணிக்குப் பின் தாரமானவள் என்றபடி. (நப்பின்னை என்று கொள்ளக் கூடாது).

கண்ணபிரான் பாரிஜாத தருவைக் கொணர்ந்த வரலாறு :

கண்ணன் நரகாசுரனையழித்தபின்பு சத்தியபாமையுடனே கருடன்தோள்மேலேறித் தேவலோகத்துக்குச் செல்ல, அங்கு இந்திராணி சத்தியபாமைக்குச் சகல உபசாரங்களைச்செய்தும் தேவர்க்கேயுரிய பாரிஜாதபுஷ்பம் மானுடப்பெண்ணாகிய இவளுக்குத் தகாதென்று சமர்ப்பிக்கவில்லையாதலின், அவள் அதனைக்கண்டு விருப்புற்றவளாய்க் கண்ணனைப்பார்த்து "சுவாமியே ! இந்தப்பாரிஜாத தருவைத் துவாரகைக்குக் கொண்டுபோகவேண்டும்" என்றதைக் கண்ணன் திருச்செவிசாத்த, உடனே அந்தத் தருவை வேரோடு பெயர்த்துக் கருடன் தோளின் மேல் வைத்தருளி, அப்பொழுது: இந்திராணி தூண்டிவிட்டதனால் வந்து மறித்துப் போர் செய்த

இந்திரனைத் தேவசைனியங்களுடன் சங்கநாதத்தினாலே பங்கப் படுத்தி, பின்பு பாரிஜாதமரத்தைத் துவாரகைக்குக் கொண்டுவந்து சத்தியபாமை வீட்டுப் புறங்கடைத் தோட்டத்தில் நாட்டி யருளினனென்பதாம். இந்த வரலாற்றினை ஓவியமாக வரைந்துள்ள னர் (National Museum, Delhi - Kāngrā school, 18th Century A . D.) ஐந்து பூதங்கள் - நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பன. ஐம்பொறி - மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன. வேல்விழி - உவமைத்தொகை. (37)

38. அடங்காத வெழுபது வெள்ளஞ்சே னையுங்கை
அமைக்கும் படைத்தலைவரும்
அநுமன் முதலாய சுக்கிரீப னுஞ்சென்றுகடல்
அணைகட்டி லங்காபுரந்
தொடர்ந்தேறி யொருசிலைக் கடைகுழைத் தடுகணை
துரந்திரா வணன்மகுடமுந்
துகள்படுத் திச்சனகி சிறைமீட்ட தண்ணந்
துழாய்க்காள மேகம்!கொடு
விடந்தாவு பஃறலைக் கட்செவி கிடந்தாட
விரிதிரைக் கங்கையாட
வேணியா டக்காளி தன்னுடன் வாதாடும்
வெள்ளிப் பொருப்பன்னபாந்தள்
தடந்தாரு வேரோடு புறந்தாளக் கொணர்ந்தமால்!
சப்பாணி கொட்டியருளே
சந்தனச் சோலைசெறி தென்திருப் பேரைமுகில்!
சப்பாணி கொட்டியருளே.

(இ - ள்) அடங்காத எழுபது வெள்ளம் சேனையும் - அடக்க முடியாது கிளர்ந்தெழும் எழுபது வெள்ளம் வாநர சேனையும், கை அமைக்கும் படைத் தலைவரும் - கையைச்சைகை காட்டி (அவற்றை) அடக்கியாளும் சேனைத்தலைவர்களும், அனுமன் முதலாய சுக்கிரீ பனும் சென்று - அனுமனையுள்ளிட்ட சுக்கிரீவமகாராஜனும் போய், கடல் அணை கட்டி - சமுத்திரத்தில் சேதுபந்தனஞ்செய்து, லங்கா

புரம் தொடர்ந்து ஏறி - இலங்கை நகருக்குள் வரிசையாக ஏறிச் சென்று, (இராமபிரான்) ஒரு சிலை கடை குழைத்து - ஒப்பற்ற (தன்) வில்லை நன்குவளைத்து, அடுகணை துரந்து - கொல்லும் பிரமாத் சுதிரத்தைத் தொடுத்து, இராவணன் மகுடமும் துகள்படுத்தி இராவணனுடைய கிரீடத்தையும் தூளாக்கி, சனகி சிறை மீட்ட - ஜானகிப் பிராட்டியைச் சிறையினின்று விடுவித்து மீட்டுவந்த, தண் அம் துழாய்க் காளமேகம் - குளிர்ச்சி பொருந்திய அழகிய திருத் துழாய்மாலையைத்தரித்த கரியமேகம் போன்றவனே !

கொடு விடம்தாவு - கொடிய விஷம் கக்குகின்ற, பல்தலைக் கட்செவி - பல தலைகளையுடைய பாம்புகள், கிடந்து ஆட -திருமேனி யில் தங்கியிருந்து ஆடவும், விரிதிரைக் கங்கை ஆட - பரந்த அலைக ளையுடைய கங்காநதி ஆடவும், வேணி ஆட - (கபர்த்தம் என்னும்) சடாபாரம் ஆடவும், (அப்போது) காளிதன்னுடன் வாதாடும் - (சிவனுக்கு எதிராகப் போட்டியிட்டு நடனமாடும்) காளிதேவியோடு வாதிடுகின்ற, வெள்ளிப் பொருப்பன்ன பாந்தள்- கைலாயமலையைப்போன்ற (சிவனது) பாம்பு, தட தாரு - பெரிய மரத்தை, வேரோடு - அடியிலுள்ள வேருடனே, புறம் தாள - (தரையினின்று பெயர்த்து) முதுகிலே பொறுத்துவர (அதனைக்) கொணர்ந்த மால் !— கொண்டுவந்த திருமாலே ! சப்பாணி கொட்டி யருள் —; சந்தனச் சோலை செறி தென்திருப்பேரை முகில்— ! சப் பாணி கொட்டியருள் — ; (எ. று.)

வெள்ளம் - ஒரு பேரெண். கையமைத்தல் - கையால் சைகை காட்டி அடக்குதல். அடுகணை - வினைத்தொகை. கருங்குன்று போல் முகங்குத்தி வீழ்ந்தபோது இராவணன் மகுடம் துகளாயது என்க. மேகம் - விளி. தாரு - மரம். ' தாரு கொணர்ந்த மால்' என்றவிடத்து வரலாறு கேட்டறிக. 'காளிதன்னுடன் வாதிடும் என்றவிடத்தும் வரலாறு கேட்டறியவும். மகரநெடுங்குழைக்காதர் ஈசாந்யருத்ரனுக்குப் ப்ரத்யக்ஷம் என்பர். (38).

39. மண்டுதிரை யெறிமகர சலராசி யேழுநெடு
வரையேழு மகிலமேழும்
வானகமு முயர்திசையும் வயிறடங் கப்பவள
வாய்மடுத் தங்காந்துமுன்
உண்டுமிழு நீனிறக் குழவி ! நெடு வாலிமார்
புருவவொரு சரம்விடுக்கும்

ஒண்டிறச் செங்கைத் தடங்குரிசில்! வேதாந்த
உபநிடத ஞானதீபம்!
புண்டரிக மலர்முகை முறுக்கவிழு மோடையிற்
புக்கிடங் கர்க்குவெருவிப்
போரானை மூலமென் றோதாமுன் னோடியொரு
புள்ளரசு மீதுவருபைந்
தண்டுழாய் புனைகொண்ட லண்டர்நா யகனினிது
சப்பாணி கொட்டியருளே
சந்தனச் சோலைசெறி தென்றிருப் பேரைமுகில்!
சப்பாணி கொட்டியருளே.

(இ - ள்) மண்டு திரை எறி - நெருங்கி வருகின்ற அலைகள் வீசுகின்ற, மகர சல ராசி ஏழும் - மீன்களைக் கொண்ட கடல்களேழும், நெடுவரை ஏழும் - பெரிய மலைகளேழும், அகிலம் ஏழும், புவனங்களேழும், வானகமும் - ஆகாசத்தினிடமும், உயர்திசையும் - உயர்ந்த அட்டதிக்குக்களும், வயிறு அடங்க - தன் வயிற்றிலே (மகாபிரளயத்தின்போது) அடங்கும்படி, பவளவாய் மடுத்து - பவளம்போற் சிவந்த வாயினிலிட்டு, அங்காந்து - வாய்திறந்து, முன் உண்டு - முன்னர் புசித்து, உமிழும் - (பின்னர்) உமிழ்ந்த- நீல் நிறக் குழவி! - கருநிறம் பொருந்திய குழந்தையே!

நெடு வாலி மார்பு உருவ - பெரிய வாலியினுடைய மார்பு ஊடுருவும்படி, ஒரு சரம் விடுக்கும் - ஒப்பற்ற (இராம) பாணத்தை விடும், ஒண் திறம் செங்கைத்தடம் - மிக்க சாமர்த்தியம் பொருந்திய சிவந்தகைகளையுடைய, குரிசில்! - சிறந்தோனே! வேதாந்த உப நிடத ஞான தீபம் - வேதாந்தங்களாகிய உபநிடதங்களாலே பிரதிபாதிக்கப்பட்ட ஞானவொளி விளக்கே!

புண்டரிகம் மலர் முகை - தாமரையாகிய பூவின் அரும்பு, முறுக்கு அவிழும் - தன்கட்டவிழ்ந்து மலரும் ஓடையில் புக்கு, தடாகத்தில் புகுந்து இறங்கி, இடங்கர்க்கு வெருவி - (ஆங்கிருந்த) முதலைக்குப் பயந்து, போரானை - (அதனோடு போராடும்) கஜேந்திரனாகிய யானை,மூலம்என்று ஓதா முன்-ஆதிமூலமேயென்று கதறி ஓலமிட்டவுடனே, ஒரு புள் அரசு மீது ஓடிவரு - ஒப்பற்ற கருடனின் மேலேறி ஓடிவந்த, பைந்தண் துழாய் புனை கொண்டல்! -

பசிய குளிர்ந்த திருத்துழாய் மாலையையணிந்த மேகமே! அண்டர் நாயகன் - தேவர்களின் தலைவனே! இனிது-இனிமைபட, சப்பாணி கொட்டியருள் —; சந்தன்ச்சோலை செறி தென் திருப்பேரை முகில்—!, சப்பாணி கொட்டியருள் — ; (எ.று.)

ஏழுகடல்கள் - உவர்நீர், கருப்பஞ்சாறு, கள், நெய், தயிர், பால், நன்னீர் என இவற்றின் மயமானவை. வரை ஏழு - கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி என்பன. அகிலம் ஏழு - ஜம்பூ, பிலட்சம், குசம், கிரௌஞ்சம், சாகம், சால்மலி, புஷ்கரம் என்னும் ஏழுதீவுகளாகவுள்ளவை. [குறிப்பு : ஏழுதீவுகளும் ஏழுகடல்களும் தனித்தனி ஒவ்வொன்றுற் சூழப்பட்டுள்ளனவென் பதுபுராணக்கொள்கை]. வேதாந்த உபநிடதம் - இருபெயரொட்டு. ஞானதீபம் - உருவகம் : விளி. இடங்கர் - முதலை, "ஓலா" என்றும் பாடமிருக்கலாம், ஓதா முன்ஓடி என்றது விரைவுகுறிக்கவந்தது. கொண்டல், நாயகன் - அண்மை விளிகள்.

போரானை மூலமென்றேதாமுன் ஓடிவந்த கதை :- இந்திரத்யும் நனென்னும் அரசன் மிக்க விஷ்ணு பக்தியுடையவனாய் ஒருநாள் விஷ்ணுபூசை செய்கையில் அகஸ்திய முனிவர் அவரிடம் எழுந் தருள், அப்பொழுது அவன் தன் கருத்துமுழுவதையும் திருமாலைப் பூசிப்பதிற் செலுத்தியிருந்ததனால் அவ்விருடியின் வருகையை அறிந்திடானாய் அவனுக்கு உபசாரமொன்றுஞ் செய்யா திருக்க, அம்முனிவன் தன்னை அரசன் அலட்சியஞ்செய் தானென்று மாறாகக் கருதிக்கோபித்து," நீ யானைபோலச் செருக் குற்றிருந்ததனால் யானையாகக்கடவை" என்று சபிக்க, அங்ஙனமே அவன் ஒரு காட்டில் யானையாகத்தோன்றினான். ஆயினும், முன் செய்த விஷ்ணுபக்தியின் மகிமையால் அப்பொழுதும் விடாமல் நாள் தோறும் ஆயிரந் தாமரை மலர்களைக் கொண்டு திருமாலை அருச்சித் துப் பூசித்துவருகையில் ஒருநாள் பெரியதொரு தாமரைத்தடாகத் தில் அருச்சனைக்காகப் பூப்பறிப்பதற்குப்போய் இறங்கியபொழுது அங்கே (முன்பு நீர்நிலையில் நின்று தவஞ் செய்துகொண்டிருந்த தேவலனென்னும் முனிவனது காலைப்பற்றியிழுத்து அதனால் கோபங்கொண்ட அவனது சாபத்தாற்) பெரிய முதலையாய்க் கிடந்த ஹூஹூ என்னுங் கந்தருவன் அவ்யானையின் காலைக் கௌவிக் கொள்ள, அதனை விடுவித்துக் கொள்ளமுடியாமல் கஜேந்திரன் 'ஆதிமூலமே!, என்று கூவியழைக்க உடனே திருமால் கருடாரு டனாய் அங்கு எழுந்தருளித் தனது சக்கராயுதத்தைப் பிரயோகித்து முதலையைத் துணித்து யானையை அதன் வாயினின்றும் விடுவித்து இறுதியில் அதற்கு முத்தியை அருள் செய்தனனென்பதாம். (39)

40. வண்ணந் தளைந்தகட லுலகமுழு தும்பரதன்
மணிமுடி கவிப்பநீவெவ்
வனமேகெ னுஞ்சிறியதாய்சொற் றலைக்கொண்டு
மணிநெடுஞ் சீரைசுற்றிப்
பெண்ணென்ற சீதையொடு மிளையவன் றன்னொடும்
பெருங்கான கத்திற்புகும்
பெம்மா னறுந்துளவ மாலிகா பரணன்முது
பேரின்ப வீடளிக்குங்
கண்ணன் சிலைக்கடை குழைத்திலங் காபுரங்
கட்டழிக் குந்தேவர்கோன்
கருணைப் பெருக்கா றுவட்டெடுத் தலைமண்டு
காளமே கந்துளிபடுந்
தண்ணந் தடந்திரைப் பொருநையந் தண்டுறைவ !
சப்பாணி கொட்டியருளே
சந்தனச் சோலைசெறி தென்றிருப் பேரைமுகில் !
சப்பாணி கொட்டியருளே.

(இ - ள்) "வள் நந்து அளைந்த - வளப்பம் பொருந்திய சங்குப்பூச்சிகள் துழாவுகின்ற, கடல் உலக முழுவதும் - கடல் சூழ்ந்த நில்வுலக முழுவதையும், பரதன் மணிமுடி கவிப்ப - (என்) மகன் பரதன் இரத்தினங்கள் பதித்த கிரீடத்தைச் சூடிட, நீ - (இராமனாகிய) நீ, வெவ் வனம் ஏகு - கொடிய கானகம் செல் வாய்" எனும் - என்று ஆணையிட்ட, சிறிய தாய் சொல் தலைக் கொண்டு - சிற்றன்னை கைகேயியின் சொற்களைச் சிரசாவகித்து, மணி நெடும் சீரை சுற்றி - அழகிய பெரிய மரவுரியை இடுப்பில் கட்டி, பெண்ணென்ற சீதையொடும் - பெண்மைக்குரிய குணங்க ளோடு கூடிய சீதையாகிய மனைவியோடும், இளையவன் தன் னொடும் - தம்பியாகிய இலக்குவனோடும், பெரும் கானத்தில் புகும் - பெரிய காட்டினுள் (நடந்து) செல்லும், பெம்மான் - பெருமானும், துளவ மாலிக ஆபரணன் - திருத்துழாய் மாலையை அணியாகக் கொண்டவனும், முது பேரின்ப வீடு அளிக்கும் கண்ணன் -

பழயதாகி வரும் பேரின்பந்தரும் மோட்சத்தைக் கொடுக்கும் கண்போலினியவனும், சிலைக் கடை குழைத்து - (தனது) வில்லின் முனைகளைச் சேர்த்து வளைத்து, லங்காபுரம் கட்டவிழ்க்கும் தேவர் கோன் - பகைவனுன [இராவணனின்] இலங்காநகரினைச் சிதைத் தொழிக்கும் தெய்வத்தலைவனும், கருணைப் பெருக்காறு உவட்டு எடுத்து - தயையாகிய பேராறு வெள்ளமிட்டு, அலை மண்டு காள மேகம் - அலைவீசும் கரிய மேகம் போன்றவனும், [ஆகிய] துளி படும் - மழை துளித்தலால் தோன்றும், தண் அம் தடந் திரைப் பொருநை - குளிர்ந்த அழகிய பெரிய அலைகளைக் கொண்ட தாமிர பரணிநதியின், அம் தண் துறைவ ! - அழகிய குளிர்ச்சி பொருந் திய நீர்த்துறைகளுக்கு உரியவனே ! சப்பாணி கொட்டியருள் —; சந்தனச் சோலை செறி தென்திருப்பேரை முகில் ! — , சப்பாணி கொட்டியருள்—; (எ. று.).

'வண்ணம் தளைந்த' என்றே கொண்டு நீலநிறம் செறிந்த என் றும் பொருள் கொள்ளலாம் 'ஆழிசூழுலகமெல்லாம் பரதனேயாள நீபோய் ... பூழிவெங்கானம் நண்ணு' என்று கூறிய கம்ப ராமாயணம் நினைக. சீரை - மரவுரி. பெண்ணுக்குரிய லட்சணம் - ''தற்காத்துத் தற்கொண்டாற் பேணி தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்'' என்ற குறள் கொண்டு தெளிக. ''குணங் களையென் கூறுவது கொம்பினைச் சேர்ந்து அவையுய்யப் பிணங் குவன'' என்றார் கம்பரும். மாலிக + ஆபரணன் = மாலிகாபரணன் : தீர்க்கசந்திபெற்ற வடமொழித்தொடர். முதுபேரின்பவீடு - அந்த மிலின்பத்து அழிவில் வீடு என்பர். கண்ணன் - கிருஷ்ணுவதாரம் செய்தவன் என்னவுமாம். தேவர்கோன் - தேவர்களுக்குத் தலைவன் என்றதால் தெய்வத்தலைவன் என்றபடி. ''கருணாகுஸ்த:'' என்ற தும் நினைக. பெம்மான், மாலிகாபரணன், கண்ணன், தேவர்கோன், காளமேகம் - ஒருபொருண்மேல் வந்த பலபெயர்கள். இவை 'துறைவ !' என்ற விளியோடு இயைந்தன. (40).

41. உடுக்குந் திரைக்கருங் கடலாடை நிலவலயம்
உதரத்தி னுள்ளடக்கி
ஒருசிறிய குறளுருவ மைந்தநெடு நேமிமால்
உபயசர ணரவிந்தத்
தெடுக்கும் பனிக்குறுந் திவலைபடு மலரிட்
டிறைஞ்சிவரு ணன்பரவுவோன்

இசைபாடி யொருகோடி யறுகாலு தைந்தாடும்
ஈர்ந்துழாய்ப் படலைமாயன்
மடுக்குங் கொழுஞ்சுடர்ப் பரிதிவா னவனுதய
வரைபசும் புரவிபூட்டி
வருமணிப் பொற்றடந் தேருக்கி டுஞ்சித்திர
வட்டாழி யெட்டிமுட்டித்
தடுக்கும் பொலம்புரிசை சூழ்வழுதி நாட! வொரு
சப்பாணி கொட்டியருளே
சந்தனச் சோலைசெறி தென்திருப் பேரைமுகில்!
சப்பாணி கொட்டியருளே.

(இ-ள்) திரைக் கருங்கடல் ஆடை உடுக்கும் - அலைகளையுடைய கரியகடலை ஆடையாகச் சுற்றியுடுக்கும், நிலவலயம் - நிலவுலகத்தை, உதரத்தினுள் அடக்கி - வயிற்றினுள் அடங்க வைத்து, ஒரு சிறிய குறளுரு அமைந்த - ஒருசிறிய குள்ள உருவம் (வாமனாய்) எடுத்த, நேமி நெடு மால் - சக்கரப்படையேந்தி திரிவிக்கிரமனாக வளர்ந்த திருமாலின், உபயசரண அரவிந்தத்து - இரண்டு பாததாமரைகளில், எடுக்கும் - பறித்தெடுக்கும், பனி குறுந் திவலைபடு மலர் இட்டு - குளிர்ந்த சிறிய பனித்துளி பட்டுள்ள பூவினையிட்டு அருச்சித்து, வணங்கி-இறைஞ்சி, வருணன் - வருணபகவானால், பரவுவோன் - தொழப்பட்டுத்துதிக்கப்படுவோனும், ஒரு கோடி அறுகால்-ஒருகோடி வண்டுகள், இசைபாடி உதைந்து ஆடும் - ரீங்காரம் செய்து கால் களால் துவைத்து அசைகின்ற, ஈர்ந்துழாய் படலை மாயன் - ஈரமா யுள்ள (குளிர்ந்த) திருத்துழாய்மாலையையுடையமாயனும், (ஆகிய) கொழும் சுடர் மடுக்கும் பரிதி வானன் - பரவிய ஒளியை மிகுவிக் கும் சூரியனாகிய தேவன், பசும் புரவி பூட்டி - பச்சைக்குதிரைகள் (ஏழினைப்) பூட்டி, உதய வரை - உதயகிரியிலே, வரு - வருகின்ற மணி பொன் தட தேருக்கு -அழகிய பொன்போல் ஒளிர்கின்ற பெரிய தேரினுக்கு, இடும் சித்திர வட்டாழி - மாட்டியுள்ள வேலைப்பாடு அமைந்த வட்டமாகிய சக்கரங்கள், எட்டி - தமக்கு எட்டி, முட்டி - (தம்மோடு) மோதி (அதனால்) தடுக்கும் - தடைப்பட்டுப்போகும், பொலம் புரிசை சூழ் - பொலிவு பெற்ற (உயர்ந்த) மதில்கள் சூழ்ந்த. வழுதி நாடன் - பாண்டிய நாட்டுக்கு உரியவனே! ஒரு சப்பாணி கொட்டியருள்—; சந்தனச் சோலை செறி தென் திருப்பேரைமுகில் —சப்பாணி கொட்டியருள்—(எ. று.).

உபயசரணாரவிந்தம் - வடமொழித்தொடர். சரணாரவிந்தம் - தீர்க்கசந்திபெற்று வந்தது : உருவகம். அறுகால் - வண்டுக்குப் பண்புத்தொகையன்மொழி. படலை - படலைமாலையென ஒருவகை, ''பச்சைமாஏழும் ஏறப்போய்'' என்றார் கம்பரும். ஆழிதடுக்கும் புரிசையென்றது - மிகை உயர்வுநவிற்சியணி. சிறிய....நெடு - முரண் தொடை. பரிதி வானவன் - இருபெயரொட்டு. (41).

42. மானவே லரசர்தொழு மிதிலா புரிச்சனகன்
மாதேவி மணிமுன்கைமேல்
வைத்துமுத் தாடும் பசுங்கிளி யெனத்தூய
மஞ்சனஞ் செய்துசெம்பொன்
மேனிமுழு வதுநலங் கிடுசெய்து கொங்கைக்கு
மென்களப மள்ளியப்பி
விரைநறுந் தார்குழலின் மீதணிந் தஞ்சனம்
விளங்குகட் கடையினெழுதிக்
கூனிளம் பிறைநுதற் கத்தூரி தீட்டிநற்
குளிர்மணிச் சுடிகைநாற்றிக்
கோலவளை திருத்திமணி மேகலை மருங்கினிற்
கொய்துகோ தினிதுடுக்குஞ்
சானகி பெருங்காம வெள்ளத் திளைத்தவன்
சப்பாணி கொட்டியருளே
சந்தனச் சோலைசெறி தென்றிருப் பேரைமுகில் !
சப்பாணி கொட்டியருளே.

(இ - ள்) மானம் வேல் அரசர் தொழும் - பெருமைபொருந்திய வேலாயுதத்தையேந்திய அரசர்கள் வணங்கும், மிதிலாபுரிச்சனகன் - மிதிலைநகர்க்குப் பேரரசனாகிய சனகமகாராசனுடைய, மா தேவி - முதற் பட்டமஹிஷி, மணி முன்கை மேல் வைத்து- (தனது) அழகிய முன்னங்கையின் மேலே தூக்கிவைத்துகொண்டு, முத்தாடும் பசுங்கிளி - முத்தங்கொடுத்துக் கொஞ்சும் பச்சைக்கிளியாவள் என்று சொல்லும்படி, தூய மஞ்சனம் செய்து- பரிசுத்தமான நீரிலே ஸ்நானம் செய்வித்து, செம் பொன் மேனி முழுவதும்

நலங்கிடு செய்து - சிவந்த பொன் போன்ற உடல் முற்றும் நலங்கு பூசுஞ் சடங்கு செய்து, கொங்கைக்கு மென் களபம் அள்ளி அப்பி - முலைகளுக்கு மென்மையான சந்தனக்குழம்பை நிறைய யப்பிவைத்து (தொய்யிலெழுதி) விரை நறும் தார் - மிக்க வாசனை வீசுகின்ற மாலையை, குழலின்மீது அணிந்து - கூந்தலின் மேல் சூட்டி யணிவித்து, விளங்கு கண்கடையின் அஞ்சனம் எழுதி - ஒளிர்கின்ற கடைக்கண்களில் மைதீட்டி, கூன் இளம் பிறை நுதல் கத்தூரி தீட்டி - வளைந்து இளம்பிறை போலிருக்கின்ற நெற்றியில் கஸ்தூரித் திலகம் இட்டு, நல் குளிர் மணிச்சுடிகை நாற்றி - நல்ல குளிர்ச்சி யையளிக்கின்ற முத்தினாலாகிய சுட்டியைத்தொங்கவிட்டு, கோலம் வளை திருத்தி-அழகிய வளையல்களைத்திருத்தமுற அணிவித்து, மருங் கினில் - இடுப்பினில், மணிமேகலை -மணிகள் கோத்த புடைவையை, கோதி - சிக்கின்றியெடுத்து, கொய்து - கொசுவி, இனிது உடுக்கும்- அழகுற உடுத்திக்கொண்டிருக்கும், சானகி - சீதாபிராட்டியுடன், பெரும் காம வெள்ளம் திளைத்தவன் - மிக்க காமவிளையாட்டுப் பெருக் கில் மூழ்கியநுபவித்தவனே ! சப்பாணி கொட்டியருள் —; சந்தனச்சோலை செறி தென்திருப்பேரை முகில் !—, சப்பாணி கொட்டியருள் — ; (எ.று).

சீதாபிராட்டிக்குக் கடிமணம் புரிதற்கு முன் கோலஞ்செய்த விதம் மிகவும் திறம்படக்கூறப்பட்டுள்ளமை பாராட்டத்தக்கது, நலங்கிடு- நலங்கிடுதல் என்ற தொழிற்பெயர் முதனிலைபெற்று நின்றது, நலங் கிடுதல்-கலியாணத்துக்கு முன்னால் மணமகளுக்கும் மணமகனுக்கும் அவரவருடைய மனைகளில் எண்ணெய், சீயக்காய்தூள், மஞ்சட் பொடி, நலங்குமா என்பவற்றைப் பாதங்களில் பூசுஞ்சடங்கு செய் தல்.கொங்கைக்குக்களபம் அள்ளியப்பித்தொய்யிலெழுதியவிடத்துக் கம்பன் "பல்லியல்நெறியிற் பார்க்கும் பரம்பொருளென்ன யார்க்கும் இல்லையுண்டென்ன நின்ற இடையினுக்கு இடுக்கண் செய்தார்" என்று நயம்படக் குறித்தார். மையிட்டவிடத்து " அஞ்சன நிறமோ அண்ணல் வண்ணமோ அறிதல் தேற்றும்" என்றார். நெற்றியில் திலகமிட்டபோது கவிச்சக்கரவர்த்தி "வையகமடந்தைமார்க்கும் நாகர்கோதையர்க்கும் வானத் தெய்வமங்கையர்க்குமெல்லாம் திலகத்தைத்திலதஞ் செய்தார்" என்று திறம்பட உரைத்தார். கோதுதல் - சிக்கெடுத்தல் ; "கோதிச்சிக்கின்றி முடிக்கின்ற........குழலி", (பெருந்தொகை, 1323). கொய்தல் - கொசுவுதல் "கோடிப்பூந்துகில் கொய்து" (பெருங்கதை ; இலாவாண : 5, 165) : மணிமேகலைஎன்ற விடத்து 'இடையணியாபரணமும்' அடங்கும், சானகி - தத்திதாந்த நாமம். - 'காமவெள்ளம் திளைத்தவன்' என்றவிடத்து, "ஒன்றிய போகமும் யோகமும் ஒத்தார்" என்பது போலக் கொள்க. (42)

43. கக்கக் கொழுங்குருதி நரிபிடுங் கத்தசை
கவர்ந்துயிர் குடிப்பமறலி
கருநிறத் தாடகையை வதைபடுத் தச்சிலைக்
கடைகுழைத் தடுகணைதொடுத்
தொக்கிற் பெருந்தவக் கவுசிகன் வேள்வியுஞ்
சுருதிநூன் முறைமுடித்துச்
சொல்லரிய மிதிலா புரிச்சனகன் விற்கண்ட
துண்டப் படுத்துமெங்கோன்!
செக்கச் சிவக்குங் கொழும்பவள வார்கதிர்
செஞ்சடா டவிமணிமுடிச்
சிவசங் கரக்கடவுள் கண்களி கூரச்
சிறந்தருள் புரிந்துசங்கு
சக்கர துணைச்செங்கை யொக்கச் சிவப்பவொரு
சப்பாணி கொட்டியருளே
சந்தனச் சோலைசெறி தென்றிருப் பேரைமுகில் !
சப்பாணி கொட்டியருளே.

(இ - ள்) கொழுங் குருதி கக்க - மிகுதியாக இரத்தம் பீறிட்டு வர, நரி தசை பிடுங்க - நரிகள் சதையைப் (பற்களால்) பிடுங்கி யிழுக்க, மறலி - யமனுனவன், கவர்ந்து உயிர் குடிப்ப - உயிரைப் போக்கும்படி, கருநிற தாடகையை வதைபடுத்த - கருநிறம் பொருந் திய தாடகையரக்கியைக் கொன்றெழிக்க, சிலை கடை குழைத்து - வில்லை முனைசேர வளைத்து, அடுகணை தொடுத்து - கொல்லும் அம்பினை விடுத்து, ஒக்கு இல் -, ஒப்பில்லாத பெருந்தவக் கௌசிகன் வேள்வியும் - பெரிய தவத்தைச்செய்த விசுவாமித் திரனது யாகத்தையும், சுருதி நூல்முறை - வேத நூலில் கூறி யுள்ளபடியே, முடித்து - நிறைவேறவைத்து, (பின்னர்) சொல் லரிய - பேச்சுக்கு நிலமல்லாது சிறப்புற்ற, மிதிலாபுரிச் சனகன் - மிதிலைமாநகரின் மன்னனாகிய ஜனகனின், வில் கண்டதுண்டப்படுத் தும் - சிவதனுசைத் துண்டுதுண்டாகச் சிதையும்படி செய்யும், எம் கோன் - எமது தலைவனான இராமபிரானே !.

செக்கச் சிவக்கும் கொழும் பவளம் வார் கதிர் - மிகச்சிவப்பு நிறம்பொருந்திய செழித்த பவளம்போல் நீண்ட ஒளிக்கற்றைகளை யுடைய, செஞ்சடா அடவி - சிவந்த ஜடாபாரத் தொகுதியை, மணி முடி - அழகிய சிரசில்கொண்ட, சிவசங்கரக் கடவுள் - சங்காரக் கடவுளாகிய சிவபெருமான், கண் களி கூர - கண்களும் மகிழ்ச்சி மிகும்படி, சிறந்து அருள்புரிந்து - சிறப்புறக் கருணைசெய்து, சங்கு சக்கரம் துணைச்செங்கை - சங்கினையும் சக்கரத்தையும் ஏந்திய இரண்டு செவ்விய கைகளும், ஒக்கச் சிவப்ப — தம்முள் ஒத்திருக்கும் படி சிவக்குமாறு, ஒரு சப்பாணி கொட்டியருள் — ; சந்தனச் சோலை செறி தென்திருப்பேரை முகில் ! —, சப்பாணி கொட்டியருள் —; (எ. று.).

ஒருவில்வளைத்துத் தாடகையைக்கொன்று கௌசிகன் வேள்வி முடித்தது மற்றொருவில்வளைத்திறுத்துச் சீதையை மணவேள்வி செய்து கொண்டது என்க. சிவன் கண்களிகூர அவனுக்கு அருள் புரிந்த வரலாற்றினைக் கேட்டறிக. சடாடவி - சடைக்காடு : அடவி - காடு : இங்கே சடைத்தொகுதியென்றபடி. (43);

44. படநடுங் கக்கண் பிதுங்கப் பணமுடிப்
பஃறலைக் கட்செவியின்மேற்
பதறிமுறு கித்திருகி நடனஞ் செயுஞ்சரண
பங்கேரு கக்குழகன்வெவ்
விடரகற் றிச்செனன வலையறுத் துத்தொண்டர்
ஈடேறி வீடுகுடிபுக்
கெக்கால முமர சிருப்பக் கடைக்கண்நோக்
கின்னருள் புரிந்தநெடுமால் !
மடமயிற் சாயற் பசுங்கிள்ளை யங்குதலை
மணிவல்லி தூயவல்லி
வளருந் திருப்பேரை வல்லிகுங் குமமிருக
மதசந்த னப்பாளிதத்

தடமுலைச் சுவடுபொரு துழுதமணி மார்ப! ஒரு
சப்பாணி கொட்டியருளே
சந்தனச் சோலைசெறி தென்றிருப் பேரைமுகில் !
சப்பாணி கொட்டியருளே.

(இ - ள்) பணுமுடிக் கட்செவியின் மேல் - படங்களையுச்சியிற் கொண்ட காளியனென்னும் பாம்பின் மேல், படம் நடுங்க - (அதன்) படங்கள் நடுக்க முறும்படியும், கண் பிதுங்க - கண்கள் வெளிவந்து விடும்படியும், பதறி - கலங்கச் செய்து, முறுகி கடுமையான விசை யோடு, திருகி - முறுக்கி, நடனம் செய் - நர்த்தனம் செய்கின்ற, சரணபங்கேருகம் - திருவடித்தாமரைகளையுடைய, குழகன் ! அழகனே !

வெவ் இடர் அகற்றி - கொடிய பாபங்களைப் போக்கி, செனனம் வலை அறுத்து - பிறவியாகிய வலையை யறுத்துப் போக்கி, தொண் டர் - (தனது) அடியவர்கள், ஈடேறி - (சம்சாரத்திலிருந்து) உய்ந்து தப்பித்து, வீடு குடி புக்கு - மோட்சலோகத்தில் சென்று புகுந்து தங்கி, எக்காலமும் அரசு இருப்ப - எப்போதும் மன்னராய்ச் சுகத் தோடு வீற்றிருக்கும்படி, கடைக்கண் நோக்கு இன் அருள் புரிந்த- கடைக்கண்பார்வையினால் இனிய கருணையைச் செய்கின்ற, நெடு மால் - ஓங்கியதிருமாலே !

மடமயில் சாயல் - மடப்பம் பொருந்திய மயில் போன்ற மென் மையினையும், பசும் கிள்ளை அம் குதலை - பச்சைக்கிளியின் அழகிய பேச்சினிமையையும் கொண்ட, மணி வல்லி - மணிக்கொடி போன்றவளும், தூய வல்லி - பரிசுத்தமான வல்லிக்கொடி போன் றவளும் (ஆகிய), வளரும் திருப்பேரை வல்லி - என்றும் ஓங்கித் திகழும் திருப்பேரைநாச்சியாரின், குங்குமம் மிருகமதம் சந்தனம் பாளிதம்- குங்குமம் கஸ்தூரி சந்தனம் இவற்றைக் குழம்பாகப் பூசி யுள்ள, தட முலைச் சுவடு - பெரிய முலையின் அடையாளங்கள் (பதியும்படி), பொருது - கலவிப்போர்செய்து, உழுத - அழுந்த வைத்த, மணிமார்பன் - அழகிய மார்பையுடையவனே ! ஒரு சப் பாணி கொட்டியருள் — ; சந்தனச்சோலை செறி தென்திருப்பேரை முகில் ! -, சப்பாணி கொட்டியருள் — ; (எ. று.).

நெடுமாலின் கடைக்கண் அருளுக்கு பிறவிப்பிணியறுத்து மோட்சமளிக்கும் என்றபடி. சரணபங்கேருகம் - உருவகம் : வட மொழித்தொடர், "சாயல் மென்மை" (தொல் : சொல் : உரி : 29) மணிவல்லி, தூயவல்லி, திருப்பேரை வல்லி - ஒருவரைக் கூறும்

பன்மைக்கிளவி : ஒருபொருண்மேல் வந்த பலபெயர்கள். **மிருக மதம் - கஸ்தூரி** பாளித்தல் - குழம்பாகப் பூசுதல். **கடைக்கண் -** முன்பின்னாகத்தொக்க ஆரும்வேற்றுமைத்தொகை. **(44.)**

முத்தப்பருவம்

45. சொற்றநான் மறைபுக் கிருக்குமிட மாதலாற்
சுரிசங் கிடம்புரிவதால்
துய்யமலர் மாளிகைச் செல்விபே ரமுதந்
துளிக்குமென் றின்புறுதலான்
மற்றுலகின் வாழ்பல் லுயிர்க்கிரங் குஞ்சத்திய
வாய்மைகுடி கொண்டுறைதலான்
மங்கலப் புனிதமாஞ் சகலமுந் திருவுள
மகிழ்ந்திரங் கிச்சிறிதுநீ
முற்றுமதி யோடரவு வறுகெருக் கம்பூவும்
மொய்க்குஞ் செழுங்கொன்றையும்
மூரித் திரைப்பாய் சுருட்டித் தருங்கங்கை
முதுநீரும் விரவுசோதிக்
கற்றைவார் சடைமுடிச் சிவனுமய னுந்தொழக்
கனிவாயின் முத்தமருளே
காவுசூழ் தென்பேரை யாழிநீர் வண்ண! நின்
கனிவாயின் முத்தமருளே.

(இ-ள்) சொற்ற நான்மறை புக்கு இருக்கும் இடம் ஆதலால் - சிறப்பித்துப்பேசப்படுகின்ற நான்குவேதங்களும் தங்கியிருக்கும் இடம் நுமது கனிவாய் ஆதலாலும், சுரி சங்கு இடம் புரிவதால் - சுழிந்த பாஞ்சன்னியம் என்னும் வலம்புரிச்சங்கு (நுமதுவாயிடத்து) விரும்பி இடங்கொண்டு சுவைத்தலாலும், துய்ய மலர் மாளிகைச் செல்வி - பரிசுத்தமான செந்தாமரைவீட்டில் எழுந்தருளியிருக்கும் இலக்குமிதேவி, பேரமுதம் துளிக்கும் என்று இன்புறுதலால் - (நுமது வாயினிடத்து) மிக்க அதரவமுதம் ஊற்றெடுக்கும் என்று மகிழ்வத னாலும், மற்று - மேலும், உலகின் வாழ் பல் உயிர்க்கு - நிலவுலகத்தில்

வாழ்கின்ற பல ஜீவராசிகளுக்கும், இரங்கும் - கருணைகொண்டு இரக்கப்படும், சத்தியவாய்மை குடிகொண்டு உறைதலால் - உண்மையான சத்தியம் (நுமது வாயினிடத்து) நிலைபெறப் பயிலுவதாலும், சகலமும் மங்கலப் புனிதமாம் - அனைத்தும் மங்களகரமான பவித்திரமுடையனவாகும் ; (அத்தகைய சிறப்புக்களையுடைய) நீ — , திருவுளம் மகிழ்ந்து - மனமகிழ்ச்சியோடு, சிறிது இரங்கி - கொஞ்சம் (இந்த எளியனுக்கு) இரக்கமுற்று, (கனிவாயின் முத்தம் அருள் என மேலியையும்). (இனி), முற்று மதியோடு - வளர்ந்துவரும் பிறைச் சந்திரனோடு, அரவு அறுகு எருக்கம்பூவும் - பாம்பும் அறுகம்புல்லும் எருக்கம்பூவும், மொய்க்கும் செழுங்கொன்றையும் - அடர்ந்து வளவிய கொன்றைப்பூவும், மூரி - வலிமையையுடைய, திரைப்பாய் - அலைகளாகிய பாயினை, சுருட்டித்தரும் - சுருட்டி வழங்கும் (அலைகளைவீசும் என்றபடி), கங்கை முது நீரும் - கங்கையினுடைய தொன்றுதொட்டுப் பெருகும் நீரும், விரவு - சேர்ந்து (அளிக்கின்ற) சோதி - பேரொளியினையுடைய, கற்றை வார் சடை முடி - தொகுதிப்பட்ட நீண்ட சடைமுடியையுடைய, சிவனும் - சிவபெருமானும், அயனும் - பிரமதேவனும், தொழ - வணங்கிவழிபட, காவுசூழ் - சோலைகள் சூழ்ந்த, தென்திருப்பேரை - தென்திருப்பேரைநகரில் எழுந்தருளியுள்ள, ஆழிநீர் வண்ண ! - கடல்நீர்போல் நீலநிற வண்ணனே ! கனிவாயின் முத்தம் அருள் - கொவ்வை கனிபோற் சிவந்த வாயிடத்து முத்தம் கொடுப்பாயாக ; நின் - உன்னுடைய, கனிவாயின் முத்தம் அருள் — ; (எ. று.).

நான்மறை, பாஞ்சசன்னியம், இலக்குமி, சத்தியம், இவை திருமாலின் வாயில் எப்போதும் பரவுதலால், சகலமும் மங்கலப் புனிதமாகின்றன. "சுரிசங்கு இடம்புரிவதால்" என்றவிடத்து "உண்பது சொல்லில் உலகளந்தான் வாயமுதம்" என்ற கோதையார் வாக்கு நினைக. வாயமுதம் துளித்தலை - பேரமுதம் துளிக்கும் என்றது. சத்தியவாய்மை - ஒருபொருட்பன்மொழி. நான்மறைபுக்கிருக்குமிடமாதலின், சத்தியவாய்மை குடிகொண்டுறைதல் விசதம். அரவு அறுகு என்பதோடு உம்மையைக் கூட்டிக்கொள்க. கனிவாய் - உவமைத்தொகை. (45)

46. தழைமடற் பச்சைப் பசும்பூக மணிமிடறு
தளையவிழ்க் கும்பாளைவாய்
தருமுத்த மும்பச் செனக்கிரண மடகுமுது
தாற்றிளங் கதலிவாழை

உழைமுத்து முடலிழுக் குண்டுரியு மென்கரும்
பொளிர்முத்து மாலைவாயிட்
டுடனெருக் கும்பொழுது கணுவினில் வெடித்து திரும்
முத்தும்வான் முகடுதூங்கும்
மழைமுத்த முந்துளி படும்போது செவ்வுக்கு
வாராத வடிவுதரும்
வளர்புண்ட ரீகப் பொகுட்டுமுத் துஞ்சிறைய
வண்டுகால் கொடுதுவைக்குங்
கழைமுத்த முங்கதிர் வெதுப்புண்டு வீணுமொரு
கதிர்முத்து நிகரல்லவே
காவுசூழ் தென்பேரை யாழிநீர் வண்ண! நின்
கனிவாயின் முத்தமருளே.

(இ-ள்) தழைமடல் பச்சைப் பசும் பூகம் - தழைந்த மடலைக் கொண்ட பசுநிறம் மிக்குப் பொருந்திய கமுகின், மணி மிடறு - அழகிய கழுத்து, தளை அவிழ்க்கும் - குலையின்கட்டு விரிக்கும், பாளை வாய் தரு முத்தமும் -பாளையிடத்து உண்டாகும் முத்தும், பச்செனக் கிரணம் அட - பளிச்செனச் சந்திரகிரணங்கள் பட, குமுது (உழை முத்தும்) - ஆம்பலிடத்துண்டாகும் முத்தும், இளங்கதலி வாழை தாற்று உழை முத்தும் - இளைய வாழைக்குலையினிடத்து உண்டாகும் முத்தும், உடல் இழுக்குண்டு உரியும் மென்கரும்பு ஒளிர் முத்தும் - (தன்) தண்டுப்பகுதிகள் தளர்வுற்று உரிந்து போகும் மெல்லியகரும்பு வெளிவிடும் ஒளிவிளங்கும் முத்தும், ஆலை வாய் இட்டு உடல் நெருக்கும் பொழுது - ஆலையிலிட்டுத்தண்டுகளை நெருக்கிப்பிழியும்போது, கணுவினில் வெடித்து உதிரும் முத்தும் - (அதன்) கணுக்களினின்று வெடித்துப்புறமேயுதிரும் முத்தும், வான் முகடு தூங்கும் மழை முத்தமும் - ஆகாயத்தின் உச்சியில் தவழும் மேகத்தினின்று உண்டாகும் முத்தும், துளி படும்போது - மழைத் துளி நேரே விழும்போது, செவ்வுக்கு வாராத வடிவு தரும் - அளவுக்குட்படாத வடிவத்தைக்கொடுக்கும்படி, வளர் - வளர்கின்ற, புண்டரீகப் பொகுட்டு முத்தும் - தாமரையின் கொட்டையில் தோன்றுகின்ற முத்தும், சிறைய வண்டு - சிறகுகளைக்கொண்ட வண்டுகள், கால்கொடு துவைக்கும் - தமது ஆறுகால்களைக்

கொண்டு மிதிக்கின்ற, கழை முத்தமும் - மூங்கிலில் உண்டாகும் முத்தும், கதிர் வெதுப்புண்டு ஈனும் ஒரு கதிர் முத்தும் - சூரியனால் வெம்மையாகி அதனொளியுண்டாக்கும் பிரகாசம்பொருந்தியதோர் முத்தும், நிகரல்ல - உன் வாய்முத்துக்கு ஒப்பாகாது : (ஆகவே) காவு சூழ் தென்பேரை ஆழிநீர் வண்ண ! —, நின் கனி வாயின் முத்தம் அருள் —; (எ. று.).

கமுகு, சந்திரன், வாழை, கரும்பு, மேகம், தாமரை, மூங்கில், சூரியன் என்னும் எட்டுஇடங்களிற்பிறக்கின்ற முத்துக்களும் உன் கனிவாயினின்று வழங்கும் முத்துக்கு (முத்தத்துக்கு) நிகரில்லை யென்றார். இது ஒரு கவிமரபு எனலாம். திருச்செந்தூர்முருகன் பிள்ளைத்தமிழிலும் அதன் ஆசிரியர் பகழிக்கூத்தர் "கத்தும் தரங்கம் எடுத்தெறிய" என்று தொடங்கும் பாடலில், ஏனைய இடங்களில் பிறக்கும் முத்துக்களுக்கு விலையுண்டு, ஆனால் முருகா ! உன்கனிவாய் முத்தந்தனக்கு விலையில்லை" என்று கூறியுள்ளதையும் ஈண்டு நினைக.

முத்துப் பிறக்கும் இடங்கள் இருபது என்பர். இதனை "தந்தி வராகமருப்பிப்பி பூகந்தனிக்கதலி, நந்து சலஞ்சலமீன்றலைகொக்கு ஒளினன்மின்னார், கந்தரஞ்சாலி கழைக்கன்னலாவின்பல் கட்செவி கார், இந்துவுடும்புகரா முத்தமீனும் இருபதுமே" என்றதனாலறிக. முத்து - சிலேடையால் இருபொருளைத்தந்தது. ஆம்பல் சந்திரனைக் கண்டால் மலரும்பூவாதலின் அதன்மூலம் முத்தீனும் எனக் கொள்க. குமுது-குமுதம் ; ஆம்பல். தாறு - குலை. கதலிவாழை - இருபெயரொட்டு : ஒருபொருட்பன்மொழியென்னவுமாம், உழை - ஏழனுருபு. இழுக்கு - தளர்ச்சி. இழுக்குண்ணுதல் - அகப்பட்டுத் தளர்தல், மழை - மேகம் : "கார்" என்றதையும் கீழ்ச்செய்யுளில் நோக்குக. செவ்வு - முத்துக்களின் அளவுவகை. "பத்துச்செவ்வு முத்துவாங்கினேன்" (a unit in Counting pearls). அளவுபடாத வடிவு என்றது - மிகப்பெரியமுத்து என்றபடி. கமுகின்கழுத்து பச்சைப்பசேல் என இருக்கும். கமுகு - பாக்குமரம். (46).

47. முனியுமிள வலுமுடன் வரத்தன் றிருத்தாளின்
முளரித் துகட்கருங்கல்
முனியிட்ட சாபந் தவிர்த்துமுன் னுருவெய்த
முதுகருணை யோடளித்துச்

சனகன்மிதி லாபுரிச் சிலைவளைத் துச்சீதை
தனைமணம் புணர்தண்டுழாய்ச்
சக்கரா யுதக்கடவுள் ! குலநந்தீன முத்தொடலை
தத்துந் தடம்பொருநையான் !
இனியசதுர் மாமறைக் கொருமுதல்வன் !
வருணன்வந்
தெக்கால மும்பரவுவோன் !
இலகுகொடி மணிமாட வழுதிவள நாட ! னூற்
றெண்மரொடும் விளையாடுமால் !
கனியுமமு தும்பாகு மூறிக் கலந்தசொற்
கனிவாயின் முத்தமருளே
காவுசூழ் தென்பேரை யாழிநீர் வண்ண ! நின்
கனிவாயின் முத்தமருளே.

(இ - ள்) முனியும்-விசுவாமித்திரமுனிவனும், இளவலும் - தம்பியாகிய இலக்குமணனும், உடன் வர - கூட வர, தன் முளரித்திருத் தாளின் துகள் - தனது தாமரைமலர்போன்ற அழகிய பாதங்களினின்று எழுந்த புழுதிப்பொடி, கருங்கல்-கரியகல்லுருவாய் இருந்த அகலிகைக்கு, முனியிட்ட சாபம் தவிர்த்து - (அவள் கணவனாகிய) கௌதமமுனிவரிட்ட சாபத்தை நீக்கி, முன் உரு எய்த - முன்னாலே யிருந்த பெண் வடிவத்தையே அடையும்படி, முதுகருணையோடு அளித்து - மிக்க அருளோடு வழங்கி, (பின்னர்) சனகன் மிதிலாபுரிச் சிலை வளைத்து - ஜனகமகாராஜனின் [தலைநகராகிய] மிதிலை நகரில் [கந்யா சுல்கமாக வைத்த] வில்லை வளைத்து, சீதைதனை மணம் புணர் - சீதாதேவியைத் திருமணஞ்செய்து கொண்ட, தண் துழாய் சக்கராயுதக்கடவுள் ! - குளிர்ந்த திருத்துழாய் மாலையைத் தரித்த சக்கரப்படையையுடைய கடவுளாகிய [திருமாலின் அவதாரமான] இராமபிரானே ! குல நந்து ஈன - சிறந்த சங்குப்பூச்சிகள் பெற்ற, முத்தொடு - முத்துக்களோடு, அலைதத்தும் - அலைகள் தத்திப்பாய்கின்ற, தடம் பொருநையான் !- அகலமான தாமிரபரணி நதியையுடையவனே ! இனிய சதுர்மா மறைக்கு ஒரு முதல்வன் ! - (காதுக்கு) இனிமையான நான்கு சிறந்த வேதங்களுக்கு ஏற்ற ஒப்பற்ற முதற்கடவுளே ! வருணன் வந்து எக்காலமும் பரவுவோன் ! - வருணபகவான் வந்து எப்போதும் போற்றித்துதிக்கும்படியுள்ள

வனே ! இலகு கொடி மணி மாடம் - விளங்குகின்ற கொடிகள் நாட்டிய அழகிய மாடங்களைக்கொண்ட, வழுதி வள நாடன் ! - பாண்டிய வள நாட்டுக்குத்தலைவனே ! நூற்றெண்மரொடும் விளையாடும் மால் ! - நூற்றெட்டுப் பக்தர்களோடும் திருவிளையாடல்புரியும் திருமாலே ! கனியும் அமுதும் பாகும் ஊறி கலந்த சொல் - பழமும் பாலும் வெல்லப்பாகும் சேர்ந்து ஊறித்தம்முள் கலப்புற்றுச்சுவைக்கும் சொற்களைப்பேசும், கனிவாயின் முத்தம் அருள் — ; காவு சூழ்தென் பேரை ஆழிநீர் வண்ண ! —, நின் கனிவாயின் முத்தம் அருள் — ; (எ. று.)

அகலிகை சாபவிமோசன வரலாறு :-

கௌதமமுனிவனது பத்தினியான அகலிகையினிடத்தில் பல நாளாய்க்காதல்கொண்டிருந்த தேவேந்திரன் அம்முனிவர் இல்லாத சமயம் பார்த்து அவருருக்கொண்டு ஆச்சிரமத்துட்சென்று அவளிடஞ்சேர்கையில், அதனை ஞானக்கண்ணினால் அறிந்து உடனே மீண்டுவந்த அம்முனிவன் அவளைக்கருங்கல் வடிவமாம்படி சபித்து, உடனே அவள் அஞ்சி நடுங்கிப் பலவாறு வேண்டியதற்கு இரங்கி, "ஸ்ரீராமனது திருவடிப் பொடி படுங்காலத்து இக்கல்வடிவம் நீங்கி நிஜவடிவம் பெறுக" என்று அநுக்கிரகிக்க, அவ்வாறே கல்லுருவமாய்க்கிடந்த அகலிகை ஸ்ரீராமலக்ஷ்மணர் விசுவாமித்திரனோடு மிதிலைக்குச் செல்லும்போது இராமபிரானின் திருவடித்துகள் பட்ட மாத்திரத்திலே கல்வடிவம் நீங்கி இயற்கைநல்வடிவம் அடைந்தனள் என்பதாம் : " கோதமன்றன் பன்னிக்கு முன்னையுருக் கொடுத்ததிவன், போதுநின்ற தெனப்பொலிந்த பொலன்கழற்காற் பொடிகண்டாய் " என்றான் விசுவாமித்திரனும். 'குலநந்து' என்றதால் அவனது பாஞ்சசன்னியம் போன்ற சங்கு என்னவுமாம். இனி, குலம் - கூட்டம் எனினுமாம். (47).

48. பொருதிரை சுருட்டுமணி மகரசல ராசிதரு
புதுமுத்த முங்கைதொடேம்
புலவுநா றிச்சுற வெறிந்துடல முவரிப்
புனற்பங்க மூடெழுதலாற்
பருகமது ரித்தபா கூற்றிருந் தொழுகும்
பசுங்கரும் பீன்றமுத்தும்

பலமொழிக் கவடுபடு மாதலா லதனையும்
படுபழி யறிந்துவேண்டேம்
இருநிலத் துச்சிவத்துக் கண்டமுங் கறுப்
பென்றுவேய் முத்தந்தொடேம்
இனிமேலு நினதுகனி வாய்முத்தி னுக்குவமை
ஏதெடுத் துக்கூறுவேன்
கருதுமுது நான்மறைக் கொருமுதல்வ னே ! செழுங்
கனிவாயின் முத்தமருளே
காவுசூழ் தென்பேரை யாழிநீர் வண்ண ! நின்
கனிவாயின் முத்தமருளே.

(இ - ள்) புலவு நாறி - புலால் நாற்றம் வீசி, சுறவு எறிந்து - சுறுமீனினால் ஒதுக்கப்பட்டு, உடலம் - அதன் உடம்பு, உவரிப் புனல் பங்கம் ஊடு எழுதலால் - கடல்நீரின் சேற்றினின்று தோன்றி யெழுதலால், பொரு திரை சுருட்டும் அணி மகர சலராசி - மோதுகின்ற அலைகளைச் சுருளவரச்செய்யும் அழகிய மீன்களையுடைய கடலானது, தரு - கொடுக்கின்ற, புது முத்தமும் - புதிய முத்துக்களையும், கை தொடேம் - கையால் தொடமாட்டோம் : பருக - உண்பதற்கு, மதுரித்த - ருசியாகச் செய்த, பாகு - வெல்லப்பாகு, ஊற்றிருந்து ஒழுகும் - உள்ளே ஊறியிருந்து பெருகும், பசும் கரும்பு ஈன்ற முத்தும் - வளமுள்ள கரும்பு பெற்ற முத்தும், பல மொழி - பல கணுக்களிலிருந்து, கவடுபடும் ஆதலால் - பிரிவுபட்டுச் சிதறுகின்றனவாதலால், அதனையும் - அந்தக் கரும்புஈன்ற முத்தினையும், படுபழி அறிந்து - அது உண்டாகும் பிறப்பிடத்தின் இழிவு தெரிந்து, வேண்டேம் - விரும்பமாட்டோம் : (இனி) இரு நிலத்து - தாங்கள் இருக்கும் தரையில், சிவத்து - (அடிப்பக்கம்) சிவந்து, கண்டமும் கறுப்பு என்று - கழுத்தும் (மேல்பாகமும்) கறுப்பு நிறம் பொருந்தியதென்று, வேய் முத்தம் - மூங்கிலீன்ற முத்துக்களை, தொடேம் - (கையினாலும்) தொடமாட்டோம் ; இனி மேலும் - இவைகளுக்கு மேலே, நினது கனிவாய் முத்தினுக்கு - உன்னுடைய கோவைக்கனிபோற் சிவந்த வாயினாற் கொடுக்கும் முத்தத்திற்கு, உவமை ஏது எடுத்துக் கூறுவேன் - ஒப்பாகசொல்லுதற்கு எதனைச்சிறப்புறவெடுத்துக் கூறமாட்டுவேன் ; (எதுவும் இல்லையே) : (ஆகவே) கருதும் முது நான் மறைக்கு ஒரு முதல்வனே ! - [யாவராலும்] சிறப்பாக நினைக்கப் படுகின்ற பழைய நான்குவேதங்களுக்கு ஏற்ற ஒப்பற்ற முதற்

கடவுளே ! செழும் கனிவாயின் - பழுத்துச் சுவைமுதிர்ந்தபழம் போன்றவாயினால், முத்தம் அருள் —; காவு சூழ் தென்பேரை ஆழி நீர் வண்ண ! —, நின் கனிவாயின் முத்தம் அருள் —; (எ.று)

ஏதுகாட்டிச்சில முத்துக்களைத்தொடேம் என்றும், வேண்டேம் என்றும் வெறுத்தொதுக்கி, உன் கனிவாயின் முத்துக்கு ஏது உவமை காட்டுவேன் என்று அவன் கொடுக்கும் முத்தத்தைப் பாராட்டிய நயம் சுவைக்கத்தக்கது. பங்கம் - சேறு. "கலக்கினும் தண்கடல் சேருகாதே" என்தற்குமாருக ஈண்டுசேறு என்றது ஆழத்திலிருக்கக் கூடிய குழைமண்சேற்றினையென்க. பாகு ஊற்றிருந்தொழுகும் என்றது - பாகு எடுத்தற்குச் சிறந்ததாயிருந்த என்றபடி. மொழி - மரமுதலியவற்றின் கணு : மொழியுமினியீர்...... மதுரக் கழைகாள்!". (அழகர்கலம் : 67). கவடுபடுதல் - பிரிவுபடுதல். (To be separated) கணுக்கள் பலவற்றினின்றும் பிரிந்து உதிர்தலால், அது உண்டாம் வகை இழிந்தது என்றுரென்க. படுபழி - மிக்க பழியென்பது த்வனி. மூங்கிலின் அடிசிவத்து நுனி பசுங்கருமையாயிருக்கும்என்ருர். இந்நிறவேறுபாடுகருதி அதன் முத்தினையும் தொடேம் என்ருர் என்க. இச்செய்யுளில் வேற்றுமையணி காண்க. தொடேம், வேண் டேம் - உளப்பாட்டுத்தன்மைப்பன்மை. கூறுவேன் - தன்மை யொருமை. (48)

49. உலைவளைக் குங்கொழுங் கனல்வாய் துருத்திவைத்
தூதவெம் பொறிசிந்தவெந்
துருகுங் கருங்கல் லுருக்கொ டிரும்புவைத்
தொன்ரு யடித்துநீட்டித்
தலைமடுத் ததைமுனைப் படுத்திக் குணக்கறத்
தட்டியர மிட்டராவிச்
சமைந்தொப்ப மிட்டுக் கடைந்தவடி வேல்பொரு
தடங்கட் செழுங்குமுதவாய்
மலைவளைக் குஞ்செழுங் களபகுங் குமமுலை
மடந்தைதெய் வீகமோக
மடமயிற் சீதைப் பிராட்டியை மணம்புணர
வளமருவு மிதிலாபுரிச்

சிலைவளைக் கும்பசுந் தண்டுழாய் மேகமே!
திருவாயின் முத்தமருளே
தென்றிருப் பேரைவரு நங்குழைக் காத! நின்
திருவாயின் முத்தமருளே.

(இ - ள்) உலை வளைக்கும் கொழுங்கனல் வாய் - கொல்லனது உலை சூழளரியும் பெருத்த நெருப்பினிடத்து, துருத்திவைத்து - உலைத்துருத்திப்பையை வைத்து, ஊத - (அதன் வாயினால்) ஊத, வெம் பொறி சிந்த - வெப்பமான நெருப்புப்பொறி சிதற, வெந்து உருகும் கருங்கல் உருக்கொடு - கொதிப்படைந்து உருகுகின்ற கருங்கல்லில் [உளியாற் செய்த] சித்திரவேலையோடு, இரும்பு வைத்து ஒன்ருய் அடித்து - எஃகிரும்பினை வைத்து [இணையும் படி] ஒரு சேர ஒன்ற (சம்மட்டியால்) அடித்து, நீட்டி - நீளச் செய்து, தலை மடுத்து - தலைசேர்த்து, அதை முனைப் படுத்தி - அதனைக் கூராக முனையுண்டாக்கி, குணக்கு அற - கோணல் நீங்க, தட்டி - சுத்தியால் தட்டி, அரமிட்டு அராவி - அரத்தினாலே உரசி, சமைந்து - பொருத்தமுறச்செய்து, ஒப்பம் இட்டு - துலங்க வைத்து, கடைந்த - நன்குமுடிவுறச்செய்த, வடிவேல் - கூரிய வேலாயுதத்தை, பொரு - ஒத்திருக்கின்ற, தட கண் - விசாலமான பெரிய கண்களையும், செழுங் குமுத வாய் - வளமுள்ள ஆம்பல் மலர் போன்ற வாயினையும், மலைவளைக்கும் - மலையைப் போல் கனத்துப்பருத்த, செழும் களபம் குங்குமம் முலை - இனிமையான சந்தனக்கலவையும் குங்குமக் குழம்பும் பூசிய முலையினையும் உடைய, மடந்தை - பெண்ணாகிய, தெய்வீக மோக மடமயில் சீதை பிராட்டியை - தெய்வத்தன்மை பொருந்திய (கண்டார்க்கு) ஆசையை விளைவிக்கின்ற மடப்பம்பொருந்திய மயில்போன்ற சாயலினை யுடைய சீதாப்பிராட்டியை, மணம் புணர - திருமணஞ்செய்து கொள்வதற்காக, வளம் மருவு மிதிலாபுரி - வளப்பம் பொருந்திய மிதிலை மாநகரில், சிலை வளைக்கும் - (கந்யாசுல்கமாகவைத்த) வில்லை வளைத்த, பசும் தண் துழாய் மேகமே! - பச்சையாயுள்ள குளிர்ந்த திருத்துழாய் மாலையையணிந்த மேகம் போன்றவனே! (இராமா வதாரம் செய்த திருமாலே!) திருவாயின் - (உனது) அழகிய வாயினது, முத்தம் அருள்—; தென்திருப்பேரை வரு நம் குழைக் காத! - தென்திருப்பேரை நகரில் எழுந்தருளியிருக்கின்ற நமது மகரகுழைக்காதராம் இறைவனே! நின் திருவாயின் முத்தம் அருள்—; (எ. று.)

கடைந்த வடிவேல் போன்ற பெரிய கண்களையும், குமுதம் போன்ற வாயினையும், மலையைப்போன்ற கொங்கையினையும், மயில் போன்ற சாயலினையும் உடைய சீதை என அவள் அழகினைக் கிளந்தவாறு. கம்பரும், "அழகிவளைத் தவஞ்செய்து பெற்றது காண்" எனத் திறம்படக் கூறினூர். மற்றும் "கடலினும் பெரிய கண்கள் "என்றும் கூறியுள்ளார். மேகமே ! - விளி : உருவகம். "வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே" என்றபடி, கொல்லன் தன் உலைக்களத்து வேல்வடித்துக் கொடுக்கும் பக்குவத்தை வெகு திறம்படக் காட்டியுள்ளார் ஆசிரியர். இஃது அவரது கூர்ந்துநோக்கும் நுண்பார்வையினைக் காட்டுவதாகும். (observation power) மடுத்தல் - சேர்த்தல், (to unite, to join) குணக்கு -கோணல் "நாயின்வாலைக் குணக்கெடுக்கலாமா". அராவுதல் -தேய்த்தல், உரசுதல். ஒப்பமிடுதல்- துலக்குதல், (புறநா 147,7) [to polish]இனி, சமமாக்குதல் என்னவுமாம்(to make even) (49)

50. பம்புதிரை வாரிதி வடிம்பலம் பத்துளி
படுங்கன முகடுகோத்துப்
பரக்கும் படிக்குமுன் பெய்தகன மாரியிற்
பதறியா னிரைகெடாமல்
தம்பமற் றிடையர்மடி யாதேழு நாளுமுது
தடவரை யெடுத்தேந்துமென்
தாமரைச் செங்கைத் தடங்குரிசி லே ! சங்கு
சக்கரா யுதக்கடவுளே !
கம்பமத மால்யானை மூலமென் றேதவொரு
கருடன் பிடர்த்தலைவருங்
காராழி மணிவண்ண ! பேராயி ரம்பெற்ற
கருணாக ரக்குரிசிலே !
செம்பவள முங்குமுத முங்கவிரு மொத்தநின்
திருவாயின் முத்தமருளே
தென்றிருப் பேரைவரு நங்குழைக் காத ! நின்
திருவாயின் முத்தமருளே.

(இ - ள்) பம்பு திரை வாரிதி வடிம்பு அலம்ப -தத்திப் பாய்கின்ற அலைகளையுடைய கடல் தன் திருவடிகளைவிளக்கும்படி இராமபிரானய் நின்று, (பின்) துளிபடும் கனம் - மழையையுண்டாக்கும் மேகம், முகடு கோத்து பரக்கும் படிக்கு - ஆகாச வுச்சியிற் பின்னிப் பரவிநிற்கும்படிக்கு, முன் பெய்த கன் மாரியில் - முற்பட்டுப் பெய்த சோனைமழையில், ஆனிரை பதறி கெடாமல் - பசுக்கூட்டங்கள் நடுக்கமடைந்து அழிந்து போகாமல், தம்பம் அற்று - பற்றுக்கோடு இன்றி, இடையர் - [கோகுலத்து ஆய்ப்பாடி] ஆயர், மடியாது - இறந்து போகாமல், ஏழு நாளும்-(இந்திரன் மழையைப் பெய்வித்த) ஏழுநாட்களிலும், முது தட வரை எடுத்து ஏந்தும் - பழைய பெரிய கோவர்த்தன கிரியைக் குடையாகத்தூக்கியெடுத்து விரலில் ஏந்தி நின்ற, மெல் தாமரை செங்கைத்தடம் குரிசிலே ! - மென்மையான செந்தாமரை போற் சிவந்த கைத்தலங்களையுடைய சிறந்த கிருஷ்ண பகவானே ! சங்கு சக்கராயுதக்கடவுளே ! - சங்கு சக்கரங்களை ஆயுதமாக ஏந்தியுள்ள இறைவனுகிய திருமாலே !

கம்ப மத மால் யானை - கட்டுத்தறியிற் கட்டப்படுகின்ற மதம் பிடித்த பெரிய கஜேந்திரனென்னும் யானை [முதலைவாயினிலகப் பட்டு] மூலம்! என்று ஓத - ஆதிமூலமே ! என்று அலறிக் கூப்பிட, ஒரு கருடன் பிடர்த்தலை வரும் - ஒப்பற்ற கருடனின் கழுத்தின் மேலமர்ந்து விரைந்து வந்த, கார் ஆழி மணிவண்ண ! — மேகத்தையும் கடலினிரையும் கருமணியையும் ஒத்த சியாமளரூபனே ! பேர் ஆயிரம் பெற்ற கருணைகரக் குரிசிலே ! — சகஸ்ரநாமங்களையும் கொண்ட தயைக்கிருப்பிடமாகிச் சிறந்தோனே !

செம் பவளமும் குமுதமும் கவிரும் ஒத்த - சிவந்த பவளத்தையும் செவ்வல்லி மலரையும் முண்முறுக்கம் பூவையும் ஒத்திருக்கின்ற, நின் திருவாயின் முத்தம் அருள் — ; தென்திருப்பேரை வருநம் குழைக்காத ! —, நின் திருவாயின் முத்தம் அருள் — ; (எ. று.)

கடல் வடிம்பலம்பியது - இராமபிரான் சமுத்திரதரணம் செய்ய நினைத்தகாலத்து. கவிர் - முண்முறுக்கு : மிக்க செந்நிறம் படைத்தது. தம்பம் - பற்றுக்கோடு : support : "தம்பமில்லை நமக்கு" (உத்தரரா : இராவணன் பிறப் : 31)

வரையெடுத்தேந்திய விவரம் : திருவாய்ப்பாடியில் ஆயர்களெல்லாரும் கூடி மழையின் பொருட்டாக இந்திரனை ஆராதித்தற்கென்று வழக்கப்படி சமைத்த சோற்றைக் கண்ணபிரான்

ஒருகால் அவனுக்கிடாதபடி விலக்கிக் கோவர்த்தன மலைக்கு இடச் சொல்லித் தானே ஒரு தேவதா ரூபங்கொண்டு அமுது செய்தருள, அவ்விந்திரன் கோபத்தோடு புஷ்கலாவர்த்தம் முதலிய பல மேகங்களை யேவி, கண்ணன் விரும்பிமேய்க்கிற கன்றுகளுக்கும் பசுக்களுக்கும் கண்ணனுக்கு இஷ்டரான இடையர்க்கும் இடைச்சியர்க்கும் தீங்குதரும்படி கல்மழையை ஏழுநாள் இடைவிடாது பெய்வித்த பொழுது, கண்ணன் கோவர்த்தனமென்னும் மலையை யெடுத்துக் குடையாகப் பிடித்து மழையைத்தடுத்து எல்லாவுயிர் களையும் காத்தருளினன் என்பதாம், "இந்திரனுக்கென்று ஆயர்கள் எடுத்த எழில்விழவில் பழநடைசெய், மந்திரவிதியில் பூசனை பெறாது மழைபொழிந்திடத் தளர்ந்து ஆயர், எந்தம்மோடு இனவா நிரை தளராமல் எம்பெருமான்! அருளென்ன, அந்தமில் வரையால் மழைதடுத்தானைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே" என்ற திருமங்கைமன்னன் பாசுரம் அநுசந்திக்கவும். (50)

51. பொங்குவெண் டிங்களங் கவிகைவரு மிரணியன்
புகலவன் மதலைபெயர்
புகலாம லெந்தைநா ராயண னெனப்பெயர்
புகன்றதி லெழுந்துகோபித்
தங்கைமலர் மீதுசங் காழியேந் தியுமயன்
அவிர்சடைப் பெருமானும்
அஞ்சிப் பதுங்கித் திரிந்தனர் மறந்தனைகொல்
அரியெங் கெனப்புடைப்பப்
பங்கமுறு மக்கனகன் மார்பம் பிளந்திழி
பசுங்குடர் பிடுங்கிரத்த
பானம் பணித்தடந் தோள்மாலை சூடவே
பண்டுகளி கொண்டொர்தூணிற்
சிங்கவடி வாய்வந்த வெங்கள்குல நாத! நின்
திருவாயின் முத்தமருளே
தென்றிருப் பேரைவரு நங்குழைக் காத! நின்
திருவாயின் முத்தமருளே.

(இ - ள்) பொங்கு வெண் திங்கள் அம் கவிகை வரும் இரணியன் - ஒளிமிகுகின்ற வெள்ளிய சந்திரனை அழகிய குடையாகப் பிடித்து வருகின்ற இரணியாசுரன், புகல- கட்டளையிட்டுச் சொல்லவும், அவன் மதலை - அவனது மகனாகிய பிரகலாதாழ்வான், பெயர் புகலாமல் - (ஹிரண்யாய நம: என்று) அவன் பெயரைச் சொல்லாமல், 'எந்தை நாராயணன்' என பெயர் புகன்றதில் - என்தந்தை நாராயணன் [அவனுக்கு நம:] என்று அவன் திருநாமத்தைச் சொன்னமாத்திரத்தில், [அதாவது, நாராயணாய நம: என்று சொல்லவே], கோபித்து எழுந்து - மிக்கசினங்கொண்டு இருக்கை விட்டெழுந்து, 'அங்கை மலர் மீது சங்கு ஆழி ஏந்தியும் - அழகிய தாமரை மலர் போன்ற கைகளில் சங்கு சக்கரங்களை யேந்தியுள்ள அந்த நாராயணனும், அயன் - பிரமனும், அவிர் சடைப் பெருமானும் - விளங்குகின்ற ஜடாபாரத்தினையுடைய சிவபெருமானும், (எனக்கு) அஞ்சிப் பதுங்கித் திரிந்தனர் - பயந்து நடுங்கியொளித்து(என்கண்ணில்படாது) திரியலாயினரென்பதை,மறந்தனை கொல் - நீமறந்துவிட்டாயா? 'அரி எங்கு ? - அந்த நாராயணனாகிய பகைவன் எங்கேயுளான் ? (சொல்லு), என - என்று அதட்டி, புடைப்ப - (அப் பிரகலாதன் காட்டிய) தூணைக் கையால் அறைந்து தட்ட, (அப்போதே) அத் தூணினின்று வெளிப்பட்டு பங்கம் உறு - (தான் பொய்த்ததையெண்ணி) நாணமுற்ற, அ கனகன் - அந்த இரணியனுடைய, மார்பம்பிளந்து - உரத்தைக்கீறிப் பிளவுபடச் செய்து,' இழி பசுங் குடர் பிடுங்கி - கீழ்த்தொங்கிய பச்சைக்குடலைக் கைகளால் அளைந்து பிடுங்கியெடுத்து, ரத்த பானம் ப(ண்)ணி - [அங்கு இழிந்த] இரத்தத்தையும் குடித்து (அக்குடலை) தடந் தோள் மாலை சூடவே - விசாலமான திருத்தோள்களில் மாலையாகச் சூழவரும்படி சூடுதற்காக, பண்டு - அக்காலத்து, களிகொண்டு - வெறிகொண்டு, ஓர் தூணில் சிங்க வடிவாய் வந்த - ஒரு கம்பத்தில் சிங்கத்தின் வடிவெடுத்து [நரசிங்கமாய்] வந்த, எங்கள் குல நாத ! - எங்களுடையகுல நாதனே ! நின் திருவாயின் முத்தம் அருள்— : தென்திருப்பேரை வரு நம் குழைக்காத ! –; நின் திருவாயின் முத்தம் அருள் — ; (எ. று.)

இச் செய்யுள் நரசிங்காவதார வரலாறு கூறுவதாக அமைந்துள்ளது. இரணியன் சந்திரனையே குடையாகப் பிடிப்பவன் என்று அவன் சம்பிரமும் செருக்கும் கிளந்தவாறு. புகல+அவன்=புகலவன் : நிலைமொழியீற்று அகரங்கெட்டுப் புணர்ந்த தென்க. ஏந்தி - ஆண்பாற்பெயர். 'அயன்' பின் உம்மைதொக்கது. அரி - விஷ்ணு : பகைவன் என்றபடியுமாம். கனகன் - இரணியன் என்பதன் பரியாயப் பெயர் : இரணியன் - பொன்னிறமானவன் : [ஹிரண்யம் -

பொன். கனகம் - பொன்.] பணி - பண்ணி என்பதன் இடைக் குறை : தொகுத்தல் எனினுமாம். களி - வெறி, மதம், செருக்கு என்ற பொருள்களில் வந்தது. "புடைப்பத் தூணில் வந்த" என்ற தால் எங்கும் உளன் நாராயணன் என்று காட்டியபடி :" அந்தர் பஹிஶ்ச தத்சர்வம் வியாப்ய நாராயணஸ்தித :" என்றது சுருதியும். கொல் - ஐயப்பொருளில் வந்த இடைச்சொல். (51).

52\. மூவா முதலா யுலகமொரு
மூன்றும் பரவ வங்குரித்து
முத்திக் கொருவித் தாகவந்த
முதுநான் மறையின் குலக்கொழுந்தே !
கோவா வொளிரு மரகதமே !
கொடும்போ ரரக்கர் குலக்கூற்றே !
கோவேத் தியர ருளக்கமலங்
குடிபுக் கிருக்கும் பெருமாளே !
தாவா வளமைக் கோசலைக்கோர்
தவமே ! தவத்தின் பயனே ! யச்
சனகன் றருசா னகிவேட்ட
தடங்கைக் களிறே ! போரேறே !
தேவா ! வமிர்தங் கனிபவளத்
திருவாய் முத்தந் தருகவே
தெள்ளிப் பயிலுந் தமிழ்ப்பேரைச்
செல்வா ! முத்தந் தருகவே.

(இ - ள்) மூவா முதலா உலகம் ஒரு மூன்றும் - அந்தமும் ஆதியுமில்லாத [ஆன்மாக்கள் பயிலும்] சுவர்க்கம், மத்திமம், பாதலம் என்று மூன்று லோகங்களும், பரவ - போற்றும்படி, அங்குரித்து- முளையாகத் தோன்றி [மூலமாகி], முத்திக்கு ஒரு வித்தாக வந்த- முக்திக்கு விதையாக [முதற்காரணமாக] வந்த, முது நான்மறையின் குலக்கொழுந்தே - பழைதாகவருகின்ற நான்குவேதங்களிற் பயிலும் சிறந்தகொழுந்து போன்றவனே !

கோவா ஒளிரும் மரகதமே ! - கோக்கப்படாது விளங்குகின்ற பச்சை மரகதரத்தினமே ! கொடும் போர் அரக்கர் - கொடியயுத்தத்தைச்செய்கின்ற அரக்கர்களின், குலக்கூற்றே ! - குலங்கட்கு யமன் போன்றவனே !

கோ - இந்திரன், வேத்தி [வேதி] - பிரமன், அரர் - சிவபெருமான் (இவர்களது), உளக்கமலம் - மனத்தாமரையில், குடிபுக்கிருக்கும் பெருமாளே - தங்கிவசிக்கும் இறைவனே !

தாவா - கெடாத, வளமை - ஐசுவரியங்களையுடைய, கோசலைக்கு - கௌசல்யாதேவிக்கு, ஓர் தவமே ! - ஒப்பற்ற தவமே ! தவத்தின் பயனே ! - அந்தத்தவத்தின் பயனானவனே ! அ சனகன் தரு சானகி - அந்தப்பிரசித்த பெற்ற ஜனகமகாராஜன் வளர்த்துத் தந்த சீதாபிராட்டி, வேட்ட - திருமணஞ்செய்து கொண்ட, தட கை களிறே ! - பெரிய கைகளையுடைய ஆண்யானைபோன்றவனே! போர் ஏறே ! - போரில் சிங்கம்போன்றவனே ! தேவா ! - தேவனே! அமிர்தம் கனி - தேவாமிர்தம் போல் சுவைபழுத்த, பவளத் திருவாய் - சிவந்த திருவாயினால், முத்தம் தருக - ; தெள்ளிப் பயிலும் தமிழ்ப் பேரைச் செல்வா! " - தெளிந்து வழங்குகின்ற தமிழ்மொழியினையுடைய திருப்பேரைநகரின் செல்வனே ! முத்தம் தருக - ; (எ.று).

முதல் - ஆதி : எனவே 'மூவா' - அந்தம் ஆயிற்று. 'உலகம்' என்றது - உயிர்க்கிழவனாகிய ஆன்மாக்களைக்காட்டும் : 'உலகம் உவப்ப " என்றது போல (திருமுருகு .1). மரகதம் - நவமணியுளொன்றான பச்சையிரத்தினம் : கோவா மரகதம் என்றது - பாயா வேங்கை என்றது போல பிறகுறிப்பு. திருமாலுக்கு 'மரகத மேனியன்' என்றே பெயருண்டு. கோ - வச்சிராயுதம் (பிங்கலந்தை) அதனையுடைய இந்திரனுக்கு ஆகியது. வேதி – பிரமன் : அது 'வேத்தி' என இரட்டித்தது. அரன் - சிவன். கோவேத்தியரர்' - உம்மைத்தொகை. பெருமாளே ! - என்ற விளியால் அம்மூவர்க்கும் முதல்வனே ! எனப் பெறவைத்தபடி. வளமை - சகல சௌபாக்கியங்கள். தாவா - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம். கொழுந்தே, மரகதமே, தவமே, பயனே, களிறே, ஏறே - என்ற விளிகள் - உருவகம். சனகன் தரு சானகி - தத்திதாந்தநாமம் வந்தபடி காட்டிற்று. (52).

53. துளிக்குந் திரைப்பாற் கடன்முகட்டுத்
தூய தரங்கத் தனந்தபுரத்
தொருவா விருகண் டுயில்கூருஞ்
சோதிச் சுடரே ! பேரின்பம்
அளிக்குங் கருணைக் கருங்கடலே !
அழியா வீட்டுக் கொருவிளக்கே !
அமுதங் கடைந்து திரட்டியெடுத்
தமரர்க் குதவும் பெருமானே !
களிக்குஞ் சுரும்பர் துதைந்துழத்தேன்
கக்குங் கமல முறுக்குடையுங்
கன்னித் தடஞ்சூழ் திருநாடா !
கண்ணா ! வரி ! கே சவ ! முகுந்தா !
தெளிக்கும் பொருநைத் தடந்துறைவா !
திருவாய் முத்தந் தருகவே
தெள்ளிப் பயிலுந் தமிழ்ப்பேரைச்
செல்வா ! முத்தந் தருகவே.

(இ - ள்) துளிக்கும்-திவலைகளைத் தெளிக்கும், திரை பாற்கடல் - அலைவீசும் திருப்பாற்கடலின், முகட்டு - மேற் பகுதியிலும், தூய தரங்கத்து - பரிசுத்தமான கடலிலும், அனந்தபுரத்து - திருவனந்த புரத்திலும், ஒருவா - நீங்காதபடி (என்றைக்கும்), இரு கண் துயில் கூரும் சோதிச் சுடரே ! -இரண்டுகண்களையும் மூடி யோகநித்திரை செய்யும் பரஞ்சோதியே !

பேரின்பம் அளிக்கும் கருணைக் கருங் கடலே ! - பேரானந்த மாகிய முத்தியைக் கொடுக்கும் தயாசமுத்திரமே ! அழியா வீட்டுக்கு ஒரு விளக்கே ! - அழிவில்லாத மோட்சலோகத்திற்கு ஒப்பற்ற விளக் குப்போன்று சுயம்பிரகாசனே ! அமுதம் கடைந்து திரட்டி எடுத்து- தேவாமிருதத்தை (த்திருப்பாற்கடலிலிருந்து) கடைந்தெடுத்துத் திரளவைத்து, அமரர்க்கு - தேவர்களுக்கு (மட்டும்) உதவும் - வழங் கிய, பெருமானே ! - ;

களிக்கும் சுரும்பர் - (தேனுண்டு) வெறி கொள்ளும் வண்டுகள், துதைந்து உழ - (தம் கால்களால்) மிதித்துத்துகைத்தலால், தேன் கக்கும் கமலம் - (தம்மிடத்திள்ள) தேனை வெளியேசொரியும் தாமரை மலர், முறுக்கு உடையும் - தமதுகட்டு நெகிழ்ந்து பிரியும், தடம் சூழ்- தடாகங்கள் சூழ்ந்த, கன்னித் திருநாடா ! - பாண்டியநாட்டுக்குரிய வனே ! கண்ணு ! - கண்ணனே ! அரி ! - விஷ்ணுவே !, கேசவ ! -,, முகுந்தா !-, தெளிக்கும் பொருநைத் தடம் துறைவா !- நீர்த்துளிகளை [க்காற்றில்]வீசும் தாமிரபர்ணியின் நீர்துறைகளையுடையவனே! திரு வாய் முத்தம் தருக -; தெள்ளிப் பயிலும் தமிழ்ப் பேரைச்செல்வா ! -; முத்தம் தருக - ; (எ.று.)

" பாலாழி நீ கிடக்கும் பண்பு " (பெரிய திருவந்தாதி, 34) " கண்ணன் நின்பால் திருநெடுங்கண் வளர்தற்கு, அருமாதவம் என்ன செய்தாய் பணியெனக்கு அம்புதியே "(திருவேங்கடத்தந் தாதி, 10), "எழிலணி அனந்தபுரம், படமுடையரவில் பள்ளி பயின்ற வன் " (திருவாய்மொழி - 10 - 2 - 8) முதலியன ஈண்டு முதலடியில் அநுசந்திக்கவும். பாண்டிநாட்டுக்குக் " கன்னிநாடு " என்றும் பெயருண்டு : தடாதகைப்பிராட்டியாண்டமையால் என்பர். இனி, கன்னி - அழியாத என்றுமாம். இங்கு வந்துள்ள விளிகள் பதினொன் றும் ஆசிரியரின் பக்தி தெரிப்பனவாம். அவற்றுள், சுடரே, கடலே, விளக்கே என்பன உருவகம். (53).

54. சந்தா டவியும் பாதிரியுந்
தடந்தா மரையும் விளைவயலுஞ்
சதுரா மறையும் விழாவொலியுந்
தழைக்கும் பிள்ளைக் குழாவொலியும்
நந்தா வளமைத் திருவழுதி
நாடா ! பரம பதவீடா !
நறுந்தா தளையும் பசுந்துளவ
நாரா யண ! சீ தர ! முகுந்தா !
கொந்தார் மலர்ப்பூங் கரியகுழற்
கொவ்வைக் கனிவாய் மணிமுறுவற்
கொடிபோ னுடங்குந் துடியிடைக்கோ
மளக்கோ குலக்கோ சலையளித்த

சிந்தா மணியே மரகதமே !
திருவாய் முத்தந் தருகவே
தெள்ளிப் பயிலுந் தமிழ்ப்பேரைச்
செல்வா ! முத்தந் தருகவே.

(இ - ள்) சந்து அடவியும் - சந்தனமரக்காடுகளும், பாதிரியும் - பாதிரிமரங்களும், தடம் தாமரையும் – தடாகங்களில் தாமரைக் கொடிகளும், விளை வயலும் - (நெல்) விளைகின்ற கழனிகளும் (இவைகளோடு) சதுராம் மறையும் - நான்கு வேத கோஷங்களும், விழா ஒலியும் - திருவிழாக்களிலெழும் ஒலிகளும், பிள்ளைக்குழாம் ஒலியும் - சிறுவர்களின் கூட்டொலியும், தழைக்கும் - மிகுதியாகச் செழித்துக்காணப்படுகின்ற, நந்தா வளமை-(என்றும்) குறைவுபடாத வளப்பத்தையுடைய, திருவழுதி நாடா ! - பாண்டியநாட்டுக்கு உரியவனே ! பரமபத வீடா ! - வைகுந்த வாசனே ! , நறும் தாது அளையும் பசும் துளவ நாராயண - வாசனையுடைய மகரந்தங்கள் செறியும் பச்சைத்திருத்துழாய் மாலையையணிந்த நாராயணா, சீதர ! - இலக்குமியை (மார்பில்) தாங்குபவனே ! -முகுந்தா ! - ,

கொந்து ஆர் மலர் - கொத்துக்களாகவுள்ள பூக்களைச்சூடிய, பூங் கரிய குழல் - (அழகிய) மென்மையான கரிய கூந்தலினையும், கொவ்வைக் கனிவாய் - கோவைக்கனி போற் சிவந்த வாயினையும், மணி முறுவல் - முத்துப்போன்ற பற்களையும், கொடி போல் நுடங்கும் துடி இடை - வல்லிக் கொடிபோல் அசைகின்ற உடுக்கையை யொத்த நுண்ணிய இடுப்பினையும் உடைய, கோமளம் - இளமை அழகு படைத்த, கோகுலக் கோசலை - ஆயர்பாடியிலுள்ள யசோதை, அளித்த - வளர்த்துக் கொடுத்த, சிந்தாமணியே - ! மரகதமே ! —, திருவாய் முத்தம் தருக — ; தெள்ளிப் பயிலும் தமிழ்ப் திருபேரைச் செல்வா ! —, முத்தம் தருக — ; (எ. று.)

சந்தனம், பாதிரி, தாமரை, நெல்வயல் இவைகள் தழைத்தலோடு மறையொலியும், விழாவொலியும் பிள்ளைக்குழாவொலியும் தழைக்கும் என்றார். எங்கும் தழைக்கும் என்றபடி; கோமளம்—இளமை,மென்மை அழகு. கோகுலக்கோசலை என்றதால் 'கோசலை' என்பதை இராம பிரானைப் பெற்ற கௌசல்யாதேவியைக் காட்டாமல் 'தாய்' என்ற பொருண்மாத்திரையாய் நின்றதென்க. இனி, கோ - அரசரது குல - வமிசத்தைச் சேர்ந்த, கோசலை - கௌசல்யாதேவி என்னவுமாம், சிந்தாமணி - தெய்வீக ரத்தினம் : கேட்டார் கேட்டதை,

மாருது கொடுக்கும் மணி. சிந்தாமணியே !, மரகதமே ! - விளிகள் உருவகம். சதுராமறை, குழாவொலி - "மவ்வீறொற்றழிந்து உயிரீ றொப்பவும்" என்றபடி புணர்ந்தன. (நன் : மெய்யீற்றுப் : 16) முறு வல் - பல்லுக்காகியது. (54)

வாரானைப் பருவம்

55. விதுரன் மனையி லடிசில் நுகரும் விரதன் வருக வருகவே
விதர ணிகமு மறிவு முடைய விமலன் வருக வருகவே
அதிரு மணியு மரையின் வடமு மசைய வருக வருகவே
அழகு கரிய குழல்கள் சரிய வபிமன் வருக வருகவே
புதிய மதியின் வதன வெயர்வு பொலிய வருக வருகவே
பொழியு நறவு விரவு துளவு புனையு மனகன் வருகவே
மதுர முறுசெவ் வதர வமுத முதரம் வழிய வருகவே
வருணன் வருடு முபய சரண வரதன் வருக வருகவே.

(இ-ள்) விதுரன் மனையில் அடிசில் நுகரும் - விதுரனது வீட்டில் உணவு விரும்பிப் புசித்த, விரதன் - சங்கற்பங்கொண்டோனே ! வருக வருக - : விதரணிகமும் - சாமர்த்தியமும், அறிவும் உடைய - ஞானமும் உடைய, விமலன் - புனிதனே ! வருக வருக - ; அதிரும் மணியும் - ஒலிக்கின்ற [அரைஞாணில் கட்டிய] சிறுமணியும், அரையின் வடமும் - அரைஞாண்கயிறும், அசைய - மெலிய அசை யும்படி, வருக வருக - : கரிய அழகு குழல்கள் சரிய - கருநிறம் பொருந்தி அழகாயுள்ள தலைமயிர் தாழ்ந்துவிழும்படி, அபிமன் - அன்புமிக்கோனே !வருக வருக - :புதிய மதியின் வதனம் வெயர்வு - புதிய சந்திரன்போன்ற நெற்றியில் [துளிக்கும்]வெயர்வை, பொலிய - விளங்கும்படி, வருக வருக - : பொழியும் நறவு விரவு துளவு - சொரி

கின்ற தேன் பொருந்தியுள்ள திருத்துழாய் மாலையை, புனையும் - சூட்டிக்கொண்ட, அனகன் - அழகுள்ளவனே ! வருக வருக - ; மதுரம் உறு செவ் அதர அமுதம் - சுவை மிக்க சிவந்த உதடுகளில் ஊறும் தேறல்நீர், உதரம் வழிய வருக - வயிற்றில் ஒழுகும்படி வருக; வருணன் வருடும் உபய சரண வரதன் - வருணபகவான் [தனது] கைகளால் பிடிக்கும் இரு திருவடிகளையுடைய வரதனே ! வருக வருக - ; (எ. று.)

விதுரன்மனையில் அடிசில் உண்டதை விதந்து கூறுதற்குக்காரணம் - அவன் திருதராட்டிரன் தாயாகிய அம்பிகையின் பரிசாரிகைப் பெண்ணிடத்து வியாசனருளால் அவதரித்தவன் என்பதைப் பாரதங்கொண்டு அறியலாம். அவன் யமனமிசமானவன் ; "நீதிபுனை விதுரன், "என்றும் "ஞானகஞ்சுகம் உடையவன்" என்றும் பாராட்டப்படுபவன் : வில்லியாரும் "கண்ணபிரான் தன்னில்லில் இரண்டுதினம் வைகுதற்கு எண்ணிலாத தவமெய்தினவன் என்று பாராட்டியுள்ளார்." இந்திராதியர்க்கு நல்விருந்திட்டுவந்து விதுரன்சாலைக்கரும்புதுவிருந்தாம் மருந்தே ! தடஞ்சோலைமலையழகனே ! " என்று ஈடுபட்டார் அழகர்கலம்பகத்து ஆசிரியர். விதரணம், விதரணை-இது விதரணிகம்எனவந்தது:சாமர்த்தியம் என்றுபொருள். அரையில் மணிகட்டியவள் யசோதை : இவன் வெண்ணெய்க்களவு கண்டு ஓடும் திசை ஒலியோர்ந்து அறிவதற்காக. அபி - அபிமானம், அன்பு. மன்-உடையவன். அனகன் - அழகுள்ளவன் : (கம்பர: பால) [புனல்விளை:1 : இனி தோஷமற்றவன் என்றபடியுமாம். கரிய சரிய ; நறவு விரவு துளவு ; மதுரம் அதரம் உதரம் - இவை பிராசம் என்னுஞ் சொல்லணிபட வந்தன.

இச்செய்யுளுக்குச் சந்தக்குழிப்பு தனன தனன தனன தனன தனன தனன தனனன என்பது. (55)

56. எரியுமனல் கதுவும்விழி நிருதரடு சமர்புரியும்
இகல் தொலைய விடுகணையினன்
இருவினையு மொருசிறிது தொடரவரி தெனவருடும்
எவர்தமையு மடிமைகொளுமால்
முரிபுருவ நுதல்வனிதை சனகிமுலை முகடுழுத
முகலளித விரணமுமுளோன்
முருகுவிரி தருதுளவு மணமலிய நெடியமணி
முடியினணி பெறவனைகுவோன்

உரியசது மறையுமுனி வரருமய னொடுபரவும்
உபயபரி புரசரண! நீ
டுலகமுழு வதுமுதர மமையவொரு தனிநுகரும்
ஒளிரும்ரவி குலமரபினேன் !
நெரியமரு தமுமுதிய சகடுமுதை விதரணிகன் !
நிமலனர வணைதுயிலுமால்!
நெறியுமகி மையுமளவில் குணனும்வடி வழகு முடை
நிகரில் முகில் வணன் வருகவே.

(இ - ள்) எரியும் அனல் கதுவும் விழி நிருதர் - சுவலிக்கின்ற நெருப்புப் பற்றியதுபோற் (சினத்தால்) சிவந்த கண்களையுடைய, அரக்கர்கள், அடு சமர்புரியும் இகல் தொலைய - கொல்லும் போரைச் செய்கின்ற பகைமை யொழியும்படி, (அவர்களையழிக்க) விடு கணையினன் - தொடுக்கின்ற அம்புகளை யுடையவனும், இருவினையும் - நல்வினை தீவினையாகிய இரண்டும், ஒரு சிறிது தொடர அரிது, என - சிறிதேனும் விடாது பின்வருவது இனிமுடியாது என்னும் துணிபோடு, வருடும் எவர்தமையும் - (திருப்பாதங்களைத்) தடவும் அனைவரையும், அடிமை கொளும் மால் - ஆட்கொண்டு கைங்கரியபரர்களாக ஆக்கிக் கொள்ளும் திருமாலும், முரிபுருவம் - வளைந்த புருவத்தையுடைய, நுதல் - நெற்றியைக் கொண்ட வனிதை சனகி - பெண்ணாகிய சீதையின், முலை முகடு உழுத முகம் - கொங்கைகளின் காம்பு அழுந்தப்பட்ட மார்பிடத்து, லளித விரணமும் உளோன் - லாவண்யமான காயம் வடு உள்ளவனும் முருகு விரிதரு துளவு - அழகு விரிகின்ற திருத்துழாயை, மணம் மலிய - வாசனை மிகும்படி, நெடிய மணி முடியில் - நீண்ட அழகிய தலைமயிரில், அணி பெற வணைகுவோன் - ஆபரணமாம்படி அழகுறச் சூடுபவனும், (ஆகிய உபயபரிபுரசண ! எனமேலியையும்): உரிய சதுமறையும் - ஓதுதற்கு உரிய நான்கு வேதங்களும், முனிவரரும் - இருடிச்சிரேட்டர்களும், அயனொடு பரவும் - பிரமதேவனோடு துதிக்கின்ற, உபய பரிபுர சரண ! - இரண்டு நூபுரங்களை யுடைய பாதங்களையுடையவனே ! நீடு உலகம் முழுவதும் - பெரிய உலகத்திலுள்ள அனைத்துப்பொருள்களும், உதரம் அமைய - உமது வயிற்றினுள் அடங்கும்படி, ஒரு தனி நுகரும் - (மகாபிரளய காலத்தில்) ஒப்பற்றவனாய் உண்ட, ஒளிரும் ரவிகுல மரபினேன் - விளக்கமுற்ற சூரியகுலத்திலுதித்தவனே !

மருதமும் - இரண்டு மருதமரங்களும், முதிய சகடும் - பழைய வண்டியின் சக்கரமும், நெரிய - முறிந்து விழும்படி, உதை - (கால்களால்) உதைத்த, விதரணிகன் - சாமர்த்திய முடையவனே! நிமலன் ! - தோஷமற்றவனே ! அரவணை துயிலும் மால் ! - பாம் பணைமேல் யோகநித்திரை பயிலும் திருமாலே ! நெறியும் - ஒழுக்க மும், மகிமையும் - மேன்மையும், அளவு இல் குணனும் - எண்ணற்ற நற்குணங்களும், வடிவழகும் - நல்ல உருவழகும், உடை - உடைய, நிகரில் - ஒப்பற்ற, முகில் வணன் ! - முகில்வண்ணன் என்னும் திருநாமம் உடையவனே ! வருக — ; (எ. று.)

நிருதர் தொலையக்கணை விடுத்தது -இராமாவதாரத்தில் ''இருள் சேர் இருவினையும் சேரா'' என்றார் வள்ளுவனாரும். வருடுதல்- தடவுதல்: ''தெண்ணீர் பொன்னி திரைக்கையால் அடிவருடப் பள்ளி கொள்ளும்'' என்றது போல. பரிபுரம் - காலணிவகையுளொன்று ரவி = இரவி:சூரியன். இராமாவதாரத்தில் சூரியகுலத்தவனாயினமை யில் நோக்கு. மருதம் முரிய உதைத்ததும், சகடு உதைத்தழித்ததும் கிருஷ்ணாவதாரத்தில். குணன் - ஹேயப்ரத்யனிகன் என்றபடி. லளிதம் - லாவண்ணியம் (grace, charm) ; லீலை (sport) என்னவுமாம். (56)

57. புலருஞ்சது மறையருந்தவர் புலவர்பண்டிதர் மலர் கொடே
புதியபங்கய சரண்வணங்கிய புனித!வெண்டிரை யுததிசூழ்
செகமடங்கலு நொடியினுண்டுமிழ் திருமணந் தொளிர் மரும ! வோர்
திரிபுரந்தழல் படமுனிந்தருள் சிவனயன் தொழ வருகவே
தகரமுங்கிய பரிமளங்கமழ் தருதடம்புய சயதர !
சமர்முகந்தனி னிருதர்வெம்படை சரியடுஞ்சிலை யபிம ! னீள்
மகரகுண்டல மசையவிங்கெதிர் மகரவண்குழை ! வருகவே
வருணன்வந்திரு சரண்வணங்கிட மனமகிழ்ந் தெதிர் வருகவே.

(இ - ள்) புகல் அரும் சதுமறை - பேசுதற்கரிய (புகழையுடைய) நான்கு வேதங்களிலும் வல்ல, அருந்தவர் - சிறந்த தபசியரும், புலவர் - கவிபாடுபவரும், பண்டிதர் - அறிவாளிகளும், மலர் கொடு - (தத்தம்) கையிலே பூக்களைக்கொண்டு (அர்ச்சித்து), புதிய பங்கய சரண் வணங்கிய - புதிதாக (அப்போது) மலர்ந்த தாமரை பூப் போன்ற திருவடிகளை பணியும்படியுள்ள, புனித! - பவித்திரனே! வெண்திரை உததி சூழ் - வெண்மையான அலைகளையுடைய கடல் சூழ்ந்த, செகம் அடங்கலும் -, நிலவுலகம் முழுவதும், நொடியின் உண்டு - ஒருகணத்தில் புசித்து, உமிழ் -(மறு கணத்தில்) வெளியுமிழ் கின்ற, - திரு மணந்து ஒளிர் மரும ! - இலக்குமிதேவி பொருந்தி விளங்குகின்ற மார்பனே !

ஓர் திரிபுரம் தழல் பட முனிந்தருள் சிவன் - முப்புரங்களும் நெருப்புப் பற்றி யெரியும்படி கோபித்த சிவபெருமானும், அயன் - பிரமனும், தொழ - கைகூப்பித் தொழும்படி, வருக - ; தகரம் - மயிர்ச்சாந்து, முங்கிய - நிறையப் பூசியதால், பரிமளம் கமழ்தரு - வாசனை வீசுகின்ற, தடம் புயம் - பரந்த தோள் களையுடைய, சயதர ! - வெற்றிவீரனே ! சமர் முகம் தனில் - போரினி டத்து, நிருதர் வெம்படை சரிய - அரக்கர்களுடைய கொடிய சேனைகள் அழிந்துபோகும்படி, அடும் - கொல்லுகின்ற, சிலை - வில் லினையுடைய, அபிமன் ! - பயமில்லாதவனே ! நீள் மகர குண்டலம் அசைய - நீண்ட மகரகுண்டலங்கள் (இருகாதுகளிலும்) [மெல்ல] அசையும்படி, இங்கு எதிர் வருக - ; மகரவண்குழை ! - மகரநெடுங் குழைக்காதரே ! வருணன் வந்து இரு சரண் வணங்கிட - வருணபக வான் வந்து [உம்முடைய] இரண்டு திருப்பாதங்களையும் வணங்க (அதனால்), மனம் மகிழ்ந்து - உள்ளக்களிப்போடு, எதிர் வருக - ; (எ.று.)

தகரம் - வாசனைமரவகை : அதன் வாசனைப்பண்டம் தகரம் எனப்படும். தலைமயிரில் சாந்தாகப்பூசப்படும். அந்தத் தலைமயிர் வீழ்தலால் தோள்களிலும் அதன் மணம் வீசியதென்றபடி. புனித ! மரும ! சயதர ! அபிமன் ! மகரவண்குழை ! - இவை அண்மை விளிகள். மருமம்-மார்பு மருமத்தினெறிவேல் - கம்ப : பாலகையடை: அருந்தவர்புலவர்பண்டிதர், சிவனயன் - உம்மைத்தொகைகள். கொடு - கொண்டு என்பதன் தொகுத்தல். திரு - இலக்குமி : எப் போதும் திருமாலின் மார்பில் இருப்பவள் : அகலகில்லேன் இறையு மென்று அலர்மேல்மங்கையுறை மார்பா !' என்றார் நம்மாழ்வாரும். முங்குதல் - ஆழ்தல், நிறைந்திருத்தல். சரிய + அடும் = சரியடும் : நிலைமொழியீற்று, அகரம் கெட்டுப் புணர்ந்தது. குழை - குழையை யுடையானுக்கு ஆகுபெயர் : விளிப்பெயராக வந்தது.

திரிபுரமெரித்தது :- தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்யுந்மாலி என்னும் மூவரும் ஆகாயத்தில்பறக்கும் மூன்று பட்டணங்களைப் பெற்று அவற்றினுல் பலவிடங்களையும் பாழாக்கிவருகையில், அத் துன்பம் பொறுக்கமாட்டாத தேவர்முனிவர்வேண்டுகோளால் சிவ பெருமான்யுத்தசத்தனுய்ச் சென்று தன் புன்சிரிப்பினுலேயே அவர் களை அப்பட்டணங்களோடு அழித்தான். (57).

58. கலைமணந்தொளிர் தவளவெண்பிறை கதுவிடுஞ்சிலை நுதலினுள்

கவினலந்தரு சனகிசம்பிரம கனதனம்பொரு துழுதமால்

உலைமுகந்தனி லடிபடும்பொழு தொளிருமொண் சுடர் வயிரவா

ளொடுமுனிந்தட ரவுணர்பொன்றிட உயிரடுஞ் சமன் ! வருகவே

திலகமஞ்சரி துளவசைந்தொளி திகழவண்டின முரலவே

செழுநறுந்துகள் முகைவிரிந்தலர் சிறிய பங்கய மெனுநரு

மலர்மடந்தையு நிலமடந்தையு மருவுதிண்டிறல் வரத ! நீள்

மகரகுண்டல மசையவிங்கெதிர் மகரவண்குழை ! வருகவே.

(இ - ள்) கலை மணந்து ஒளிர் - கலைகள் பொருந்தி விளங்கு கின்ற, தவள வெண்பிறை - மிக்க வெண்மையையுடைய பிறைச் சந்திரனை கதுவிடும் - பற்றியிருக்கின்ற, சிலை -வில்போன்று வளைந்த, நுதலினுள் -புருவங்களைக் கொண்டவளாகிய, கவின் நலம் தரு சனகி – அழகினினிமை வழங்கும் சீதையின், சம்பிரமம் கன தனம் - களிப்புமிகுந்த பருத்த கொங்கைகளோடு, பொருது உழுத மால் – போரிட்டு (மார்பினுல்) கிண்டிய இராமபிரானுகிய திருமாலே !

உலைமுகம் தனில் அடிபடும் பொழுது - கொல்லனது உலைக் கூடத்தில் [சம்மட்டியினால்] ஓங்கி அடிக்கும் பொழுது, ஒளிரும் - பிரகாசிக்கின்ற, ஒண்சுடர் - ஒளிக்கதிர்ப் பொறிகளை யுடைய, வயிர வாளொடு - உறுதியான [வலிய] வாளைக் கையிலே கொண்டு, முனிந்து - சினந்து, அடர் அவுணர் - தாக்குகின்ற அசுரர்கள், பொன்றிட -இறந்தொழியும்படி, உயிர் அடும் சமன் - உயிரைக்கொண்டு செல்லும் யமன் போன்றவனே! வருக -; வண்டினம் முரல - வண்டுக் கூட்டங்கள் ஒலித்துத் துகைத்தலால், செழு நறும் துகள் முகை - செழித்த பரிமளமுள்ள மகரந்தப் பொடிகளைக் கொண்ட மொட்டு, விரிந்து அலர் - அகன்று மலர்ந்த, சிறிய பங்கயம் எனும் நறு மலர் - சிறிய (செந்) தாமரை யென்கின்ற தேன் சொரியும் மலரில், மடந்தையும் - எழுந்தருளியிருக்கின்ற இலக்குமி தேவியையும், நில மடந்தையும் - பூமிதேவியையும், திலகம் - சிறந்த, மஞ்சரி - கொத்துக்களைக் கொண்ட, துளவு அசைந்து ஒளி திகழ - துளவ மாலையசைந்து பிரகாசிக்க, மருவு திண் திறல் வரத! - தழுவுகின்ற மிக்க வலிமையையுடைய வரதனே! நீள் மகர குண்டலம் அசைய - நீண்ட மகரகுண்டலங் கள் (இரு காதுகளிலும் மெல்ல) அசையும்படி, மகரவண்குழை !- மகரநெடுங்குழைக்காதரே! இங்கு எதிர் வருக —; (எ. று.)

பிறைச்சந்திரனைக்கதுவிடுகின்ற வில்போன்ற புருவங்களை யுடையவள் சீதை என்றார். சிலை - வில் : நுதல் - புருவம் (eye brow) பிறைகதுவிடும் - இரண்டனுருபு தொக்கது. இனி, நுதல் - நெற்றி யெனக் கொண்டு கூறினுமாம். சம்பிரமம் - களிப்பு, நிறைவு. "அவு ணர் பொன்றிட உயிரடுஞ் சமன் -" அசுரகுலகாலன் என்றபடி. மலர்மடந்தை, நிலமடந்தை - ஸ்ரீதேவிபூதேவி. (58)

59. உளநெ கிழ்ந்திரு பொழுதும் வந்தனை பொடுமுவந்
தெதிர் பரவவே
உபயசெஞ்சரண் முடிபுனைந்தொளி ருயர்ப
தந்தரு கருணையால்
அளைக வர்ந்திடை மகளிர் தங்குடி லணைதருங்கயி
றதுகொடே
அடிபடும்பொழு துடல்குழைந்தழு தழுதுநின்ற
வன்! வருகவே

குளநிரம்பிய புனலினுங்கரை யருகுவண்டலு மதகு
நீள்
குவளையம்படு கருநெருங்கிய குளிர்நறும்பொழி
லிடையும் வால்
வளைமுழங்கிய குருகையம்பதி மருவுநங்கைகண்
மணி நன்னு
வலவனிங்கித கவிதை கொண்டருள் மகரவண்
குழை ! வருகவே.

(இ - ள்) உளம் நெகிழ்ந்து - மனமுருகி, இரு பொழுதும் - காலைமாலையென்ற இரண்டுபொழுதும், வந்தனையொடு உவந்து - வழிபாட்டோடு மனமகிழ்ந்து, எதிர் பரவ - எதிர் நின்று துதிக்க, உபய செஞ் சரண் - இரண்டுசெவ்வியபாதங்களையும், முடிபுனைந்து - (பரவுவோரின்) சிரசிலே சூட்டி, ஒளிர் உயர்பதம் தரு கருணையால் - (எப்போதும்) பிரகாசிக்கின்ற மேலான பரமபதத்தைக் கொடுக்கின்ற தயையினால், அளை கவர்ந்து - வெண்ணெயைக்களவுகண்டு, இடைமகளிர்தம் குடில் - இடைச்சியரது குடிசையில், அணைதரும் - பிணித்திருக்கின்ற, கயிறது கொடு - கடைகயிற்றினால், அடிபடும் பொழுது - அடிவாங்கும்போது, உடல் குழைந்து - உடல் நெளிந்து, அழுது அழுது நின்றவன் - விம்மி அழுகை ஓயாது நின்ற கண்ணனே ! வருக—;

குளம் நிரம்பிய புனலினும் - நிரம்பியுள்ள குளத்தின் நீரிலும், கரை அருகு வண்டலும் - (அதன்) கரையில் நெருங்கியுள்ள வண்டல்நீரிலும், மதகு - மதகில்தங்கியுள்ள நீரிலும், நீள் குவளை அம் படுகரும் - நீண்ட குவளைப்பூக்கள் மலர்ந்துள்ள அழகிய நீர்நிலைகளிலும், நெருங்கிய குளிர் நறும் பொழிலிடையும் - செறிந்த குளிர்ச்சி பொருந்தி வாசனையோடு கூடிய சோலைகளினிடத்திலும், வால் வளை முழங்கிய - வெள்ளிய சங்குப்பூச்சிகள் ஒலிக்கின்ற [வளம்மிக்க], குருகை அம்பதி மருவும் - திருக்குருகூர் என்னும் ஆழ்வார் திருநகரியில் வசிக்கும், நங்கை —உடையநங்கையாரின், கண்மணி-கண்ணின் மணிபோன்றவனும், நல் நாவலவன் - நல்ல நாவீறுடைய பிரானும் ஆகிய நம்மாழ்வாரின், இங்கித கவிதை கொண்டருள் - (தத்துவக்) கருத்துக்களைக் கொண்ட பாசுரங்களைக்கேட்டருள்கின்ற, மகரவண்குழை ! - மகரநெடுங்குழைக்காதரே ! வருக - ; (எ.று.)

இடையர்மனைதொறும் அளை கவர்ந்தது உயர்பதம் தருங்கருணையால் என்றது ரசிக்கத்தக்கது. 'அழுதழுது' என்ற அடுக்கு - பல

குடில்களில் கட்டுண்டு அழுததைக்காட்டும்; அழுகை ஓயாமையும் காட்டும். படுகர் - நீர்நிலை : "தத்துநீர்ப்படுகர்" (திருவிசைப் :கருவூர். 8, 9) இனி, பள்ளம் நெல் வயல் எனினுமாம்.வளைமுழங்குதல் - வளப்பம் தெரிப்பது, குருகைப்பதி – திருக்குருகூர்: ஒரு நாள் பிரமன் 'எங்குத் தவஞ்செய்வது ? என்று சிந்தை கொண்டிருக்கையில் "கா - பிரமனே ! குரு - (இங்குத் தவஞ்) செய் " என்று இத்தலத்தைச் சுட்டி ஆகாயவாணி மொழிந்ததனால், இதற்குக் "குருகாபுரி" என்று பெயர்வந்த தென்பர். இத்தலம் நம்மாழ்வார் திருவவதரித்த தலமாதல் பற்றி, 'ஆழ்வார் திருநகரி' என்று பெயர் பெறும். திருநெல்வேலிக்குக் கிழக்கே 19 - மைலில் உள்ளது (30 கிலோமீடர்). நங்கை - உடைய நங்கையார். இவர் நம்மாழ்வாரின் தாய். இவர் மலையமா நாட்டில், திருவண்பரிசாரம் என்னும் திருப்பதியிலுள்ள திருவாழ்மார்பர் என்னும் பகவத்பக்தரது தனயையாவர். இவர் குருகூரில் பொற்காரியார் என்பவர்க்குப் புதல்வராய்த் தோன்றிய காரியாரை மணந்தார். (இவர்களுக்குப் பிறந்த மாறன் என்னும் நாமம் பெற்ற நம்மாழ்வாரைத் திருக்குறுங்குடி எம்பெருமானே அவதரித்துள்ளார் என்பது துணிபு)

(குறிப்பு :- திருவண்பரிசாரம் இப்போது கேரளாவை விட்டுத் தமிழ் நாட்டிற் சேர்ந்துள்ளது). நன்னுவலவன் - "நன் மதுரகவி வணங்கும் நாவீறன் வாழியே" என்றது இவரது வாழிதிருநாமப் பாட்டு. இங்கிதக்கவிதை - தத்துவஹித புருஷார்த்தங்களை விளக்கியருளிய கவிதைகள். "பெருமாள் மகுடம் சாய்க்கும்படி கவிபாடிய ஞானத் தமிழ்க்கடலே" என்றார் ஒரு யோகி. தென் திருப்பேரை திருக்குருகூரிலிருந்து 5 மைல் தூரத்திலுள்ளது. இதனை நம்மாழ்வார் மங்களாசாஸநம் செய்துள்ளார் "வெள்ளைச்சுரி சங்கோடாழி யேந்தி" என்ற திருவாய்மொழியில். (7 - ஆம்பத்து, 3 - ஆந் திருவாய்மொழி). (59).

60. முடிமீ தொளிர்சூ ழியத்தொகையின்
முழுவெண் டிங்கட் கற்றைநிலா
மூரிக் கடல்சூழ் தருபுவனம்
முற்றுந் தழைய வடர்ந்தவளைக்
கொடிபோ லொசியுங் குழையுமணிக்
குழையுங் குழைய வுடல்குழையக்
குழைத்து நுதலி னிடுந்திலகக்
குறுவேர் வழிய விடைகழியின்

அடிமே லடிவைத் திருகைசுவர்
அதனைப் பிடித்து வருதலிற்றள்
ளாடி விழதத் தளிப்பின்மலர்
அங்கை பதித்துத் தவழ்ந்தெனது
மடிமீ திருந்து களபமுலை
வள்ளத் தமுதுண் டிடவருக
மகரக் குழையே! யென்னிருகண்
மணியே! வருக வருகவே.

(இ - ள்)முடிமீது - தலையின்மேல், ஒளிர் சூழியம் தொகையின் - விளங்குகின்ற உச்சிக்கொண்டையின் கூட்டினுல், முழு வெண் திங்கள் கற்றை நிலா - பூர்ணசந்திரனது தொகுதிப்பட்ட நிலவொளி போன்ற ஒளியானது, மூரிக்கடல் சூழ்தரு புவனம் முற்றும் தழைய - வலிமைபொருந்திய சமுத்திரம் சூழ்ந்த உலகம் முழுவதும் பரவித்தங்கும்படியும்,

அடர்ந்த வள்ளைக் கொடிபோல் - செறிந்துள்ள வள்ளைக்கொடி போல, ஒசியும் குழையும் - (மெல்ல) அசைந்து துவளும், மணிக் குழையும் - மகரகுண்டலங்களும், குழைய - தளர்ந்து தாழ்ந்து அசையும்படியும், உடல் குழைய - திருமேனி துவளும்படியும், குழைத்து - கத்தூரியில் கலந்துகுழையச்செய்து, நுதலில் இடும் திலகம் - நெற்றியில் இட்ட திலகமானது, குறுவேர்வு அழிய - துளிக்கும் வேர்வையினுல் (தெளிவுறத் தெரியாது) அழியும்படியும்.

இடைகழியில் - (மனையின்) இடைக்கட்டில்(ரேழியில்), அடிமேல் அடிவைத்து - மெதுவாகக்குறுநடையிட்டு, இருகை - இரண்டு கை களாலும், சுவர் அதனைப்பிடித்து - சுற்றுச்சுவரைப் பிடித்துக் கொண்டு, வருதலின் - வரும்போது, தள்ளாடி விழ தத்தளிப்பின் - தடுமாறித் தரையில்விழும்படி திகைக்கும்போது, மலர் அங்கை பதித்து - பூப்போல் மெல்லிய அழகிய உள்ளங்கைகளைத்தரையில் பதிய வைத்து, தவழ்ந்து - தவழ்ந்து வந்து, எனது மடி மீது இருந்து - எனது மடியின்மேலே உட்கார்ந்து, களப முலைவள்ளத்து - சந்தனம் பூசப்படும் கிண்ணம்போலுள்ள கொங்கைகளில் (சுரக்கும்), அமுது உண்டிட - பாலை (ச்சுவைத்து) உண்ண, வருக - ; மகரக்

குழையே ! - மகரநெடுங் குழைக்காதரே ! என் இரு கண்மணியே ! - எனது இரண்டு கண்மணிகளைப்போல் பாதுகாக்கத்தக்கவனே !, வருக வருக—; (எ . று .)

சூழியத்தொகையின் கற்றை நிலா தழைய, மகரக் குழையும் குழைய, உடல் குழைய, திலகமழிய, - வருதலின் என இயையும். சூழியம் - உச்சிக்கொண்டை. ஒசியும் குழையும் - இரண்டும் பெயரெச்சம் : 'மகரக்குழைஎன்பதோடு முடியும். குழையும் - உம்மை, எதிரதுதழீஇயது. 'உடல் குழைய'என மேல்வருவதனை நோக்கி. இடைகழி - தேஹளி : ரேழி என்பது வழக்கு. தள்ளாடுதல்- தடுமாறுதல். தத்தளிப்பு - திகைக்கை, மனங்கலங்குதல். முலை வள்ளம் - உருவகம் ; வள்ளம் - வட்டில் ; கிண்ணம். கண்மணி - உருவகம் : உவமவாகுபெயராயிற்று. அங்கை - உள்ளங்கை : அகம் + கை = அங்கை : "அகமுனர்ச் செவிகை வரின் இடையன கெடும்" என்பது விதி (நன் : மெய்யிற்றுப் : 19) (60).

61\. பண்டா லிலையி னரங்கத்தும்
பாலா ழியிற்கண் டுயில்கூரும்
பச்சைப் புயலே ! பணைமகுடப்
படப்பாந் தளின்கண் பிதுங்கநறுந்
தண்டா மரைச்செஞ் சரண்பெயர்த்துத்
தள்ளிக் கடைவால் பிடிக்கநெறி
தழைக்கும் படிக்கு நடம்புரிந்த
தலைவா ! கடல்சூ ழுலகமுழு
துண்டா தரவோ டுமிழ்ந்தளந்த
ஒளியே ! யொளிரு மரகதமே !
ஒருவா னுதல்பண் டுளங்களிப்ப
உயர்வான் முகடு கிழித்தெழுந்து
வண்டார் தருவின் மலர்கொணர்ந்த
மாலே ! வருக வருகவே
மகரக் குழையே ! யென்னிருகண்
மணியே ! வருக வருகவே.

(இ - ள்) பண்டு - மஹாபிரளயகாலத்து, ஆலிலையின் - (பச்சை) ஆலிலையிலும், அரங்கத்தும் - திருவரங்கத்திலும், பாலாழியில் - திருப்பாற்கடலிலும், கண் துயில் கூரும் - கண்ணைமூடி யோகநித்திரை செய்யும், பச்சைப்புயலே ! - கருநிறமேகமே ! பணைமகுடம் படம் பாந்தளின் - தலையில் பல படங்களைக் கொண்ட காளியனென்னும் விஷநாகத்தின், கண் பிதுங்க - கண்கள் வெளி வரும்படி, நறும் தண் தாமரை செஞ்சரண் பெயர்த்து - பரிமள முள்ள குளிர்ந்த தாமரை மலர்போன்ற செவ்விய திருவடிகளைத் தூக்கித் தூக்கிமாறவைத்து, தள்ளி - அந் நாகத்தைச் சற்றுக் கையினால் தள்ளி, கடை வால் பிடிக்க - அதனது வாலின் நுனியைக் கையினால் பிடித்துக் கொள்ள, (பின்னர்) நெறி தழைக் கும்படிக்கு - தருமநெறி ஓங்கும்பொருட்டு, நடம் புரிந்த - (அதனைக்கொல்லாமல்) அதன் தலைகளில் நடனம்செய்த, தலைவா !- எம்பெருமானே !

கடல் சூழ் உலகம் முழுது உண்டு - கடலாற் சூழப்பட்ட நில வுலகம் முழுவதையும் புசித்து, ஆதரவோடு - அன்போடு, உமிழ்ந்து - மீண்டும் வெளிப்படுத்தி, அளந்த ஒளியே - அதனை[ச்சிறுகாலால்] அளந்திட்ட பிரகாசமானவனே ! ஒளிரும் மரகதமே ! - விளங்குகின்ற பச்சைரத்தினமே ! பண்டு - நரகாசுரனையழித்தபின்பு, ஒரு வாள் நுதல் - ஒளிபொருந்திய நெற்றியையுடைய சத்தியபாமையானவள், உளம் களிப்ப - மனம் மகிழும்படி, உயர் வான் முகடு கிழித்து, எழுந்து - ஓங்கியவானத்தின் உச்சியினைக்கீண்டி மேலும் எழுந்து (தேவலோகத்துக்குச் சென்று ஆங்கிருந்த) வண்டு ஆர் தருவின் மலர் - வண்டுகள் ஆரவாரிக்கின்ற பாரிஜாதமரத்தில் பூத்த மலரை, கொணர்ந்த - துவாரகைக்குக் கொண்டுவந்த, மாலே ! - கண்ணபிரானாகிய திருமாலே ! வருக வருக - ; மகரக்குழையே ! –, என் இரு கண்மணியே ! -, வருக வருக - ; (எ . று .)

'நெறிதழைக்கும்படி நடம்புரிந்த' என்றது - நாககன்னி கைகளின் பிரார்த்தனையின்படி மாங்கல்யபிக்ஷையீந்து காளியனை உயிரோடு கடலிற் சென்று வாழும்படி விட்டருளினது. இந்தக் கதை விவரத்தை முன்னர்வந்துள்ள 32 - ஆஞ் செய்யுளுரையிற் காண்க. அஃதே போல் பாரிஜாத தருவைக் கொணர்ந்த வரலாறும் முன்னர் 37 - ஆஞ் செய்யுளுரையிற் காண்க. அவள் விரும்பியது பூவேயாயினும் இவன் தருவையே கொணர்ந்து அவளது வீட்டுப் புறங்கடைத் தோட்டத்தில் நட்டான் என்பது கதை, இங்கு மலரை மட்டும் குறித்தார் என்க. (61)

62. சிந்தா மணியே ! மரகதமே !
தேவே ! தேவர் பெருமானே !
தேடும் பொருளே ! நாடோறுஞ்
செய்யுந் தவமே ! தவப்பயனே !
எந்தாய் ! நந்தா விளக்கொளியே !
எங்கட் குயிரே ! பரகதியே !
எழுதா மறையின் வடிவே ! சொல்
எழுத்தெட் டினுக்கு மொருமயமே !
கொந்தார் துளவப் பசுந்தாமக்
கோவே ! நிருதர் குலக்கூற்றே !
கூடும் புனனீ ராடிவலங்
கொண்டு திருமஞ் சனக்கொலுவில்
வந்தா தரித்து வருணனடி
வணங்கும் புயலே ! வருகவே
மகரக் குழையே ! யென்னிருகண்
மணியே ! வருக வருகவே.

(இ - ள்) சிந்தாமணியே ! - (தேவலோகத்துள்ள) சிறந்த மணிபோன்றரத்தினமே ! மரகதமே -, தேவே - தேவனே !, தேவர் பெருமானே !-தேவர்களுக்கெல்லாம் தலைவனே ! தேடும் பொருளே!- (அனைவராலும்) நாடப்படுகின்ற செல்வமே ! நாள்தோறும் செய்யும் தவமே ! -, தவப்பயனே ! - அத் தவத்தின் பயனாய் விளங்குபவனே ! எந்தாய் - எனக்குத் தந்தையே ! நந்தா விளக்கொளியே ! தூண்டப்படாத தீபப்பிரகாசமே ! (சுயம்பிரகாசமானவனே !), எங்கட்கு உயிரே ! - அடியராகிய எங்களுக்குப் பிராணனாயிருப்பவனே ! பரகதியே ! - (நாங்கள் அடையவேண்டிய) மேலான கதியாயிருப்பவனே ! [உபேயமானவனே !] எழுதா மறையின் வடிவே !- அபௌருஷேயமான வேதத்தின் சொரூபமானவனே ! சொல் எட்டெழுத்தினுக்கும் ஒரு மயமே ! - அஷ்டாக்ஷரத்தினாலாகும் மந்திரச் சொல்லினுக்கு ஒப்பற்ற மையமாயிருப்பவனே ! கொந்து ஆர் துளவப் பசுந்தாமம் கோவே ! - கொத்துக்கள் நிறைந்த துளசியினாலாகிய

பச்சைமாலையைத் தரிக்கும் தலைவா ! நிருதர்குலக் கூற்றே -! அரக்கர் குலத்திற்கு யமனுகுபவனே ! வருணன் - வருணபகவான், கூடும் - (அருகிலோடும்) தாமிரபரணியின் நீர்த்துறையில் *சேர்ந்திருக்கும், புனல் நீர் ஆடி - புனிதமான தண்ணீரில் ஸ்நானஞ் செய்து, வலங் கொண்டு-கோயிலைப் பிரதட்சிணஞ்செய்து, (பின்னர் உட்புகுந்து) திருமஞ்சனக் கொலுவில் வந்து ஆதரித்து - அபிஷேகமண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் கொலுவினில் வந்து பக்தியோடு விரும்பி, அடி வணங்கும்- திருவடிகளில் தலைவைத்து வணங்குகின்ற, புயலே - மேகமே !(நிகரில்முகில்வண்ணனே !), வருக -; மகரக்குழையே ! -, என் இரு கண்மணியே ! -, வருக வருக - ; (எ. று.)

இச்செய்யுள் முற்றும் விளிப்பெயர்களால் ஆகியது. அஷ்டாதச நாமார்ச்சனை செய்வதுபோல அமைந்துள்ள நயம் பாராட்டத்தக் கது, "விண்புரக்கும் சிந்தாமணியே" என்ருர் குமரகுருபரர் (பண் டார : மும் : 12) சித்தோபாயமானவனுதலின், " தேடும் பொருளா யினுன். " தவத்தின் பயனுவது - வேண்டிய வேண்டியாங்கு எய்து தல் " விளக்கொளியை, மரதகத்தை " என்ருர் கலியனும். எங்கட்கு உயிரே ! என்றது - பரமாத்மா என்றபடி, 'மறையின்வடிவு' என்ற விடத்து "வேதத்தை வேதத்தின் சுவைப்பயனை" என்ற திருமங்கை மன்னன் வாக்கு நினைக. எட்டெழுத்து - அஷ்டாக்ஷரம் (Mantra sacred to Vishnu Consisting of eight syllables, viz ஓம் நமோ நாராயணுய; விஷ்ணுமந்திரம்.) மயமே ! - மையமே ! மையம் - நடு : Centre அஷ்டாக்ஷரத்தின் (நாராயணநாமத்தின்) மத்தியிலிருப்பவன் விஷ்ணு என்பது சித்தாந்தம். இனி, அஷ்டாக்ஷ ரத்தின்மயமாயிருப்பவனே ! எனினுமாம் கொந்து – கொத்து என் பதன்மெலித்தல். (62).

63. ஆரா வமுதொத் திலவிதழின்
அமுதத் திவலை மார்பொழுக
அரைநாண் வடமு மணியுமருங்
கசையக் குழையுங் குண்டலமுஞ்
சீரார் திருவிற் பொலியுநுதல்
தீட்டுங் குறுவேர் வரும்பவருள்
செய்யுங் கமல முகமிலங்கத்
திருந்தாட் டுணைப்பொற் றண்டையொலி

பார்மீ தெங்கள் செவிகுளிரப்
பழகு நெறிநா டொறும்வளர்க
பசுந்தார்த் துளவு மணங்கமழும்
படிநீ நடந்துன் னடிபெயர்த்தென்
வாரார் களபக் குரும்பைமுலை
வள்ளத் தமுதுண் டிடவருக
மகரக் குழையே ! யென்னிருகண்
மணியே வருக ! வருகவே.

(இ - ள்) ஆரா அமுது ஒத்து - (எவ்வளவு பருகினாலும்) திருப்தி பிறவாத தேவாமிருதத்தையொத்து, இலவு இதழின் அமுதத்திவலை - இலவம்பூப்போற்சிவந்த உதடுகளிலூறும் தேறல்நீரின் துளிகள், மார்பு ஒழுக - மார்பிடத்திலே பெருகிவர, அரை நாண் வடமும் மணியும் மருங்கு அசைய - அரைநாண்கயிறும் சிறுமணியும் இடுப்பின் பக்கத்தில் அசைந்து (மெல்லென) ஒலிக்க, குழையும் குண்டலமும்- காதுகளில் அணிந்துள்ள காதணியும் (தொங்குகின்ற) குண்டலங்களும், [அசைய - அசைந்தாட,] சீர் ஆர் சிறப்புப் பொருந்திய, திருவில் பொலியும் நுதல் - அழகிய வில்போல் வளைந்த புருவங்களையுடைய நெற்றியில், தீட்டும் – எழுதியதுபோல, குறுவேர்வு அரும்ப- சிறுவேர்வைத்துளிகள் (இலேசாகத்) தோன்ற, அருள்செய்யும் கமல முகம் இலங்க - கருணை பொழிந்து நன்மைசெய்யும் தாமரைமலர் போல் அழகிய திருமுகம் ஒளிவிட, திரு தாள் துணை - அழகிய உனது இரண்டு பாதங்களிலும், (அணிந்துள்ள), பொன் தண்டை ஒலி - பொன்னாலாகிய தண்டையின் சப்தமானது, எங்கள் செவி குளிர - எங்களுடைய இருகாதுகளும்கேட்டு ரசிக்கும்படி, பார்மீது - தரையின்மேல், பழகும் நெறி- நடைபழகுகின்ற முறைமையின் அழகு, நாடோறும் வளர்க - தினந்தோறும் ஓங்கட்டும் : (ஆகவே) பசும் தார் துளவு மணம் கமழும்படி - பச்சைத்துளசிமாலைவாசனைவீசும்படி, நீ நடந்து – நீ தளர்நடையிட்டு, உன் அடி பெயர்த்து - உனது பாதங்களை மாறிமாறித்தூக்கிவைத்து, என் - என்னுடைய, வார் ஆர் -கச்சுப்பொருந்திய, களபம் குரும்பை முலைவள்ளத்து -சந்தனம் பூசப்படும் தென்னங்குரும்பை போன்ற கொங்கைகளாகிய கிண்ணத்தில் [வட்டிலில்] (சுரக்கும்) அமுது உண்டிட - பாலைச்சுவைத்து உண்ண, வருக -; மகரக்குழையே! -, என் இரு கண்மணியே - !, வருக வருக – ; (எ. று).

இதழின் அமுதம் - வாயினின்று பெருகும் சொள்ளுநீர். இலவிதழ் - உவமைத்தொகை, 'அசைய' என்பது மத்திமதீபமாக முன்னும் பின்னுங் கூட்டப்பட்டது. வில் - வில்போன்ற புருவத்திற்கு - உவமவாகுபெயர். இனி, வில் - ஒளி என்னவுமாம். அருள்செய்யும் கமல முகம் - கருணைபொழி திருமுகம் என்றபடி. நெறி பழகுதல் - நடைபழகுதல் ; வளர்க - வியங்கோள். ஒழுக, அசைய, அரும்ப இலங்க, குளிர, என்பன அடுக்கி 'வளர்க' என்ற வினைமுற்ரேடு முடிந்தன. (63).

64. அருமைப் பெருமான் பிறவியொழித்
தருளும் பெருமான் கரதலஞ்சங்
காழிப் பெருமான் வானவர்க்கும்
அருநான் மறைக்கு மெட்டாத
தருமப் பெருமான் பசுந்துளவத்
தாமப் பெருமா னேழுலகுந்
தழைக்கும் படிக்கன் றளந்தநெடுஞ்
சரணப் பெருமான் மன்னுயிர்க்குங்
கருமப் பெருமான் முத்திவழி
காட்டும் பெருமான் பூம்பொகுட்டுக்
கமலா சனத்து வீற்றிருக்குங்
கன்னிப் பெருமான் றமிழ்க்குருகும்
பெருமைப் பெருமா னென்னருமைப்
பிள்ளைப் பெருமான் வருகவே
பேரா யிரம்பெற் றுயர்ந்ததிருப்
பேரைப் பெருமான் வருகவே.

(இ - ள்) அருமைப் பெருமான் - கிடைத்தற்கரிய பெருமானும், பிறவி ஒழித்து அருளும் பெருமான் - பிறவிப்பிணியை அகற்றிக் கருணைபுரியும் பெருமானும், கரதலம் - கைகளிடத்து, சங்கு ஆழி பெருமான் - சங்கினையும் சக்கரப்படையினையும் ஏந்திய பெருமானும், வானவர்க்கும் - தேவர்களுக்கும், அருநான்மறைக்கும் - பயிலுதற்கரிய நான்கு வேதங்களுக்கும், எட்டாத தருமப் பெருமான் - காண

முடியாது அப்பாற்பட்ட (சாக்ஷாத்) தருமமாகிய பெருமானும், பசும் துளவத் தாமம் பெருமான் - பச்சைத் திருத்துழாய்மாலையைத் தரித்த பெருமானும், ஏழ் உலகும் தழைக்கும்படிக்கு - மேலேழுலகங்களும் நல்வாழ்வு வாழும்படிக்கு, அன்று - திரிவிக்ரமனாய் வளர்ந்தகாலத்து, அளந்த - [தனது பெருங் காலால்] அளந்து கொண்ட, நெடும் சரணப் பெருமான் - நீண்ட திருப்பாதங்களையுடைய பெருமானும், மன்னுயிர்க்கும் கருமப் பெருமான் -நிலை பெற்ற ஜீவன்களுக்கும் [அவையவையநுபவிக்கவேண்டிய] கருமபலன்களை விதிக்கின்ற பெருமானும், (கருமபலன்களையநுபவித்தபின்பு அவைகளுக்கு) முத்தி வழி காட்டும் பெருமான் - மோட்ச நெறியையடைவதற்கான உபாயங்களைக் காட்டித்தருகின்ற பெருமானும், பூம் பொகுட்டுக் கமலாசனத்து - கொட்டையினை உள்ளிட்ட தாமரைப்பூவினைத் தவிசாகக் கொண்டு அதனிடத்து, வீற்றிருக்கும் - தனிச்சிறப்போடு எழுந்தருளியிருக்கும், கன்னிப் பெருமான் - இலக்குமி தேவிக்குக்கணவனாகிய பெருமானும், தமிழ்க்கு உருகும் பெருமைப் பெருமான் - (ஆழ்வார்களின் செஞ்சொல்லாகிய)திவ்விய தமிழ்ப் பாசுரங்களைக்கேட்டு உள்ளம் உருகியநுபவிக்கும் பெருமையினையுடைய பெருமானும், என் அருமை பிள்ளைப் பெருமான் - என்னுடைய அருமந்தன்ன குழந்தையாகிய பெருமானும் (ஆகிய நீ) வருக - ; பேர் ஆயிரம் பெற்று உயர்ந்த - சகஸ்ரநாமங்களைப் பெற்று மேலோங்கிய, திருப்பேரை பெருமான் - தென்திருப்பேரையிலெழுந்தருளியிருக்கும் மகரநெடுங்குழைக்காதரே ! வருக — ; (எ. று.).

ஈராறு நாமம் உரைசெய்து" என்ற படிக்கொப்ப பன்னிருதரம் "பெருமான், பெருமான்" என்று நாப்படைத்த பயனாகக் கூவியழைக்கின்றார், நான்மறைக்கும் எட்டாத - யதோவாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸாஸ : "என்று அவனை யறுதியிடச் சென்ற வேதம் திரும்பியது. 'தருமப் பெருமான்' என்றவிடத்து - " கிருஷ்ணன் தர்மம் ஸநாதநம், "சாக்ஷாத் புண்ணியத்துக்குப் பாலும் சோறும் இட்டன்றோ வளர்க்கிறோம் "(ஆறுயிரப்படி - திருப்பாவை" செ : 28) என்ற வாக்கியங்களை நோக்குக. 'கருமப் பெருமான்' என்றது - "கர்மண்யேவ அதிகாரஸ்தே மாபலேஷு காதாசந" என்றபடி (கீதை : சாங்கிய யோகம் 47) : அஃதே போல் முத்திவழிகாட்டும் பெருமான் என்றது "ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ அஹம்த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச : என்றபடி என்க. கன்னி - என்றும் அழியாதவள் என்ற பொருளில் வந்தது. (64).

அம்புலிப் பருவம்

65. மதியுடைத் தாயமண் டலம்பெற்று வானமுழு
மதிக்கடவு ளெனவருதலால்
வடியிட்ட தெள்ளமுத மயமாகி யானந்த
மகரால யத்தெழுதலால்
நதியோடர வறுகெருக் கணியுஞ் சடைக்காட்டு
நம்பனுக் கொருகண்ணதாய்
நாடொறுமுயிர்ப்பயிர் தழைப்பவருள்பொழிவதால்
நற்றுணை யுனக்கிவன்காண்
முதிரவிளை யுங்கொழும் பவளக் குலைசாலி
மூடுதொறும் வாய்மடைதொறும்
மூரிப் பகட்டுவரி வாளைவெடி தரவியலை
மோதும் புனற்கேணியும்
அதிருமணி மததும்வளை யுகள்வழுதி நாடனுடன்
அம்புலீ யாடவாவே
ஆழிநீர் வண்ணனெனும் வாழிமா தவனுடன்
அம்புலீ யாடவாவே.

(இ - ள்) மதியுடைத்தாய மண்டலம் பெற்று - சந்திர மண்டலம் என்னும் பெயர் வழங்கப் பெற்று, வானம் முழுவதும் - ஆகாச முற்றிலும், மதிக்கடவுள் என வருதலால் - சந்திரனுகியகடவுள் என்று சொல்லும்படி நீ வருதலால்,

[இக் குழைக்காதன்] மதியுடைத்தாய..........பெற்று - ஞானம் முதிர்ந்த நித்யஸூரிகள் உடைத்தாய வைகுண்டலோகத்தைப் பெற்று, வானம் - தேவர் அனைவரும், முழுமதிக்கடவுள் .... வருதலால் - பூரணஞான முடைய தெய்வமென்று சொல்லும்படி வருதலால்,

வடியிட்ட தெள்ளமுத மயமாகி - வடிக்கட்டித் தெளிந்த அமிருத மயமாகி, ஆனந்த மகராலயத்து எழுதலால் - மகிழ்ச்சியாகிய கடலில் தோய்ந்து தோன்றுவதால்,

[இக் குழையன்] வடியிட்ட ....மயமாகி – சாரமாக வெடுத்த தெள்ளிய அமிருதமயாகி, ஆனந்த......... எழுதலால் - பேரானந்தக்கடலாகிய வைகுண்டத்தில் [நித்யவாசஞ்செய்யத்] தோன்றுவதால், நதியோடு - கங்கையோடு, அரவு அறுகு எருக்கு அணியும் - பாம்பு அறுகம்புல் வெள்ளெருக்கம்பூ இவற்றை அணியாகச் சூடும், சடைக்காட்டு நம்பனுக்கு - சடாபாரத் தொகுதியையுடைய சிவபிரானுக்கு, ஒரு கண்ணதாய் - (மூன்று கண்களில்) ஒரு கண்ணாய் (இடக்கண்ணாய்) இருத்தலால், [இக் குழையன்] நதியோடு...........நம்பனுக்கு —, ஒரு கண்ணதாய் - ஒப் பற்ற கண்போன்றவனாய் இருத்தலால்.

நாள்தோறும் உயிர்ப்பயிர் தழைப்ப அருள் பொழிவதால் - தினந்தோறும் உயிருடைய பயிர்கள் செழிக்கும்படி (நிலவாகிய) கருணையை (நீ) சொரிதலால், [இக்குழையன்] நாள்தோறும்......... பொழிவதால் - தினந்தோறும ஆன்மாக்களாகிய பயிர்கள் ஈடேறு தற்குக் கருணையாகிய மழையைச் சொரிதலால், உனக்கு - [மேற் கூறிய பண்புகளையுடைய] உனக்கு, இவன் — (உன்னிட முள்ள அதே பண்புகளையுடைய) இந்த மகர குழைக்காதன், நல் துணை - உற்ற சினேகிதனாவன் ; (ஆதலால், அவனோடு அம்புலீ விளையாடவா எனமேல் இயைத்துப்பொருள்கொள்ள வேணும்).

முதிர விளையும் - நன்கு முதிர்ந்து விளைந்திருக்கின்ற, கொழும் - செழித்த, பவளக்குலை சாலி - செந்நிறக் கதிர்களைக் கொண்ட நெற்பயிர்களின், மூடுதொறும் - வேரினிடத்திலும் (அடிப்பாகத் திலும்), வாய் - கால்வாய்களின், மடைதொறும் - நீரணையினிடத் திலும், மூரி பகடு வரி வாளை - வலிமை பொருந்திய பருத்த உடற் கோடுகளையுடைய வாளைமீன், வெடிதர - தாவிப்பாய, (அதனால் அஞ்சி) வளை - சங்குப்பூச்சிகள், வியலை மோதும் - அகன்ற இடத்தைத்தாக்குகின்ற, புனல் - சிற்றலைகளைக் கொண்ட நீர் நிரம்பிய, கேணியும் - கிணறுகளிலும், அதிரும் அணி மதகும் - ஒலிக்கின்ற அழகிய மதகினிடங்களிலும், உகள் - நழுவி விழுகின்ற, வழுதி நாடனுடன் - பாண்டிய நாட்டுத்தலைவனாகிய மகரக்குழைக் காதனுடன், அம்புலீ - சந்திரனே ! ஆட வா - விளையாட வருவாய் : ஆழிநீர்வண்ணன் எனும் - கடலினீர் வண்ணன் என்னும்படியுள்ள, மாதவனுடன் - இலக்குமிகணவனாகிய மகரநெடுங்குழைக்காதனுடன், அம்புலீ - சந்திரனே ; ஆடவா - விளையாட வருவாய் ; (எ. று.) வாழி - முன்னிலையசை

இச்செய்யுள் சாமம் என்ற உபாயத்தால் வந்தது. சாமோபாய மாவது - உனக்கு அவன் சமம் (ஒப்பு ஆவன் என்பது). இச்செய்

யுளில் **சிலேடையணி** காண்க. மகராலயம் - கடல் : மீன்களுக்கு இருப்பிடம் என்பது பற்றிவந்தது. மகராலயத்து எழுதலால் என்றது திருமாலாகிய குழைக்காதனுக்கு ஆகும்போது, திருப் பாற்கடலையும் தொனியாகக் குறிக்குமெனலாம். முச்சுடரையும் முக்கண்ணுக்குக் கூறுவராதலின், சந்திரன் இடக்கண்ணாயிற்று சிவபிரானுக்கு. வலக்கண் சூரியனும், நெற்றிக்கண் அக்னியும் ஆவர். "மாலையிலொன்று வயங்கித் தோன்றும்" என்றார் நால்வர் நான்மணிமாலையில் சிவப்பிரகாச சுவாமிகளும். திருமால் சிவபிரானுக்குக்கண்ணதாய் என்றது - களைகண்ணாயிருந்து கபாலம் அகற்றியது, பஸ்மாசுரனை அழித்தது முதலிய இடங்களிற் காண்க. சந்திரன் ஸஸ்யாதிபதியாதலின் 'பயிர்தழைப்ப' என்றார். ஒத்த தோழனோடு விளையாடுதல் சிறப்பு என்பது காட்டப்பட்டது. பவளக்குலை - உவமைத்தொகை : நிறம்பற்றியது. மூடு - வேர்:(Root) "மன்னுபுனல் மூட்டில் விடக் கொப்பெலாம் தழைத் தோங்கும்" (குற்றாலத் : தல. மூர்த்தி, 17) வெடிதரல் - பாய்தல், தாவுதல் : தா - துணைவினை. வியல் - அகன்ற இடம் ; "வியலென்கிளவி அகலப் பொருட்டே" (தொல் : சொல் உரி : 68) : அது இரண்டனுருபு பெற்றுவந்தது. வயலிடத்துக் கேணிகள் தரைமட்டத்தோடு நீர் நிரம்பிச்சிற்றலைகளைக் கொண்டிருக்கும். சங்குகள் உகளுவதாவது - நழுவி விழுதல். "ஒளிமேகலை யுகளும்" (திருக்கோ : 350) 'ஆழி மாதவனுடன்' என்று பாடமிருப்பின், 'சக்கரப்படையை யுடைய மாதவன்' எனப் பொருள் பட்டுச் சிறக்கும். அம்புலி - அழகு புல்லப் பெற்றிருப்பது என்ற காரணம் பற்றிச் சந்திரனுக்கு வந்த பெயர். மா - இலக்குமி. தவன் - கணவன்.

[குறிப்பு :- முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழின் அம்புலிப் பருவப்பாடல் முதற்செய்யுளின் கருத்துக்களை இங்கு ஒப்பு நோக் கலாம்] (65)

66 இருவினைச் சனனவலைக் கட்டறுத் தழியாத
இன்பவீ டெய்தும் பொருட்
டிணைமலர்ச் சேவடி யடைந்தவர்க் குதவிடுவன்
இவன் வருணனுதரிக்குந்
திருசந்திச் சமுகதீர்த் தத்துறைத் தீம்புனல்
திவலையொரு சிறிதுபடிலோ

செகமண்ட லத்துன் முகமண்டல முயற்கறை
சிதைத்துவண் டடைகிடப்ப
முருகுவிரி தருநறுங் குமுதவாய் மடமங்கை
முகிண்முலை மணம்புணர்ந்து
முன்னுங் களங்கமற் றப்பாலும் வைகுண்ட
முத்திமண் டபமெய்தலாம்
அருமறைக் குரியவொரு பொருளா யிருப்பனவன்
அம்புலீ யாடவாவே
ஆழிநீர் வண்ணனெனும் வாழிமா தவனுடன்
அம்புலீ யாடவாவே.

(இ - ள்) இருவினை செனனவலை கட்டறுத்து - நல்வினை தீவினையாகிய பிறப்புவலையிலகப்பட்டு உழலுதலைப்போக்கி, அழியாத இன்பவீடு எய்தும் பொருட்டு - (என்றைக்கும்) சிதையாத மோட்சத்தை அடையும்பொருட்டு, இணைமலர்ச்சேவடி - இரண்டு திருப்பாதகமலங்களை, அடைந்தவர்க்கு - (நம்பி) சரண்புகுந்தவர்க்கு, உதவிடுவன் -(அவர்விரும்பியபடி) மோட்சத்தைக் கொடுத்திடுவான்: வருணன் ஆதரிக்கும் -வருணபகவான் விரும்பி நீராடும், திரு சந்திச் சமுகதீர்த்தத்துறை -[சகலதீர்த்தங்களும் கூடும் புனற்றுறையாகிய] முச்சந்திச் சமுகதீர்த்தம் என்னும் துறையிலுள்ள, தீம்புனல் - தெளிவான நீரின். திவலை ஒருசிறிது படில் - துளி சிறிதுமேனிமேல்பட்டாலும், (நீ) செகமண்டலத்து - இந்தநிலவுலகத்தில் தெரியும்படியுள்ள உன் முகமண்டல முயற்கறை - உனது முகப்பரப்பிலுள்ள முயல் போன்ற களங்கம், சிதைத்து - இல்லாது ஒழியச்செய்து, (மேலும்) வண்டு அடை கிடப்ப - வண்டுகள் நெருங்கித்தங்கியிருக்கும்படி, முருகு விரிதரு - தேன்பெருகுகின்ற, நறும் குமுதவாய் மடமங்கை - வாசனையுள்ள வாயையுடைய ஆம்பலாகிய மடப்பம் பொருந்திய பெண்ணின், முகிழ் முலைமணம் புணர்ந்து - அரும்புகின்ற (பொகுட்டாகிய) கொங்கையினைச்சேர்ந்து திருமணம் புரிந்து, (அதனால்) முன்னும் களங்கம் அற்று - முன்னினும் களங்கம் அற நீங்கப்பெற்று, அப்பாலும் - அதற்குமேலும், வைகுண்ட முத்திமண்டபம் எய்தலாம் - பரமபதத்திலுள்ள திருமாமணி மண்டபத்தையடையலாம் : அருமறைக்கு உரிய - ஓதுதற்கு அரிய வேதங்களுக்குப் பொருந்திய, ஒருபொருளாய் - ஒப்பற்ற செல்வமாய், அவன் இருப்பன் - அந்தக்குழைக்காதன் இருப்பான் :

[அப்படிப்பட்டவனோடு] அம்புலீ -, ஆட வா - விளையாட வருவாய் : ஆழிநீர் வண்ணனெனும் மாதவனுடன் -, அம்புலீ -, ஆட வா - விளையாட வருவாய் ; (எ.று) வாழி - அசை.

இச்செய்யுள் தானவுபாயத்தால் வந்தது. சமுகத்துறை என்பது கூடுபுனற்றுறைஎன்ற புண்ணியதீர்த்தம். அந்தத்தீர்த்தத்தில் காலை மத்தியானம் (உச்சி), மாலை என்ற முச்சந்திக்காலங்களிலும் நீராடுவன் வருணன் என்றபடி. வருணன் தினம்ஆராதனை செய் (81) என்றுமேல் வருதல் நோக்குக. த்ரிஸந்தி என்ற வடசொல் 'திருசந்தி எனத் தமிழில் வந்தது. (இத்துறையைப்பற்றி 13ஆம் செய்யுளுரை காண்க) நிலவுலகத்தோர் சந்திரன்களங்கத்தை 'முயற்கறை' என்பது வழக்கு. ஆம்பல் கொடியை ஒரு மங்கையாக உருவகித்தபடி. சந்திரன் தன்னொளியால் ஆம்பல்பூவை மலரச்செய்பவனாதலின் 'மணம் புணர்ந்து' என்றார். அவளை மணம் புணர்ந்ததால் முன்னும், களங்கமற்று' என்றது, ஒரு பெண்கொடியை வதைசெய்யாது வாழ வைத்தவனாதலின். முன்னும் - முன்னினும் : ஐந்தனுருபுதொக்கது. 'மறைக்குரிய பொருளாய்' என்றது -வேதத்தின் சுவைப்பயனாதலின். செனன வலை - உருவகம். ஜனனம் - பிறப்பு : இது 'செனனம்' எனப் போலி பெற்றுவந்தது. இன்பவீடு - அந்தமிலின்பத்து அழிவில்வீடு. வைகுண்டமுத்திமண்டபம் - 'வந்தவர் எதிர்கொள்ள மாமணிமண்டபத்து, அந்தமில் பேரின்பத்து அடியரோடிருந்தமை' என்றார் நம்மாழ்வாரும் (திருவாய் : 10-9-11) சேவடி-பண்புத்தொகை : வகரவுடம்படுமெய் பெற்று வந்தது : தீம்புனல் - பண்புத்தொகை. குமுதவாய் - உவமைத்தொகை, குமுதமங்கை - உருவகம் : குமுதத்தை மங்கையாக உருவகப்படுத்தியபடி. (66)

67. வெவ்வரா விடமொழுகு கறையனற் பகுவாய்

விழுங்கிமீ ளவுமுமிழ்தரும்

மிச்சிலென் றுலகிலுரை செய்வரத னாலுனுடல்

வெளுத்தற மெலிந்துகுப்புற்

றெவ்வுலக முந்திரிந் தாவதென் பெரியோரை

எளியோர் துணைக்கோடனன்

றிருகனற் கட்செவி பகைமுடித் தற்குவணன்

இவனிட்ட வேவல்கடவான்

செவ்வுபட வெட்டிரட் டித்தகலை யுடையனீ
சிந்திப்ப தற்கரியவாந்
திகழருங் கலைகளறு பத்துநா லுடையவொரு
செம்மலிவன் வைகுண்டமாம்
அவ்வுலக முந்தாகத் தருவ னஃதறிந்
தம்புலீ யாடவாவே
ஆழிநீர் வண்ணனெனும் வாழிமா தவனுடன்
அம்புலீ யாடவாவே.

(இ - ள்) வெவ் அரா - கொடிய இராகுகேதுக்கள் என்ற பாம்புகளின், விடம் ஒழுகு கறை அனல் - விஷம்பெருகிக்கறையாகி வெதுப்புகின்ற, பகுவாய் - பிளவுண்ட வாயினால், விழுங்கி - [கிரகணகாலங்களில்] விழுங்கி, மீளவும் உமிழ்தரும் மிச்சில் - மறுபடியும் வெளிக்குகின்ற எச்சில்,என்று -, உலகில் உரை செய்வர் - உலக மக்கள் பழிச்சொல் கூறுவர் : அதனால் - அதனால் நாணி, உன் உடல் வெளுத்து - உன்னுடைய மேனி வெளிறி, அற மெலிந்து - மிகவும் மெலிவுற்று, குப்புற்று - தலைகவிழ்ந்து, எ உலகமும் - எல்லாவுலகங்களிலும், திரிந்து - சஞ்சரித்து, ஆவது - ஆகும்பயன், என் - என்ன (எதுவும் இல்லை) : [ஆகவே நான் சொல்வதைக்கேட்பாயாக] : பெரியோரை - தம்மினும் மிக்க சான்றோரை, எளியோர் - அவரினும் தாழ்ந்தோர், துணைக்கோடல் நன்று - தமக்குச்சகாயமாகக் கொள்ளுதல் நல்லது : கனல் இரு கட்செவி - விஷத்தினால் வெதுப்புகின்ற இரண்டு பாம்புகளின் (இராகு கேதுக்களின்), பகை முடித்தற்கு - விரோதத்தை நீக்குவதற்கு, உவணன் -கருடன் (இருக்கிறான்) : இவனிட்ட ஏவல் கடவான் - அவனுக்குத்தலைவனாகிய இவன் சொன்ன கட்டளையை அவன் மீறமாட்டான் : நீ - நீயோ, செவ்வு பட - நேர்மையுண்டாக, எட்டு இரட்டித்த கலை உடையன் -பதினாறு கலைகளையுடையவன் : இவன்-இவனோ (இக்குழைக்காதனோ), சிந்திப்பதற்கு அரியவாம் - நினைத்தற்கும் அரியவாகிய, திகழ் அருங் கலைகள் - விளங்குகின்ற அரிய கலைகள், அறுபத்துநாலுடைய - அறுபத்து நான்கினையுடைய, ஒரு செம்மல் - ஒரு பெருமையன் ; வைகுண்டமாம் அ உலகம் - வைகுந்தமாகிய பரமபத லோகத்தையும், முந்தாக தருவன் - (தான்) முற்பட்டுக்கொடுப்பன் : அஃது அறிந்து - அந்தப் பண்பினையறிந்து, அம்புலீ -, ஆட வா - ; ஆழிநீர்வண்ணனெனும் மாதவனுடன் -, அம்புலீ -, ஆட வா - , (எ. று.) வாழி - அசை.

இச்செய்யுளின் முதலிரண்டடிகளிலும் நான்காமடியிலும் தானோ பாயமும், மூன்றுமடியில் பேதோபாயமும் அமைந்துள்ளன. மிசசில் என்றவிடத்து, '' ஒருத்தன் கரத்தின்வாரியுண்டொதுக்கியமிச்சில்'' என்ற மீனாட்சியம்மைபிள்ளைத்தமிழ் (அம்புலி : செ : 8) ஒப்புநோக்குக. 'பெரியோரை எளியோர் துணைக்கோடல் நன்று' என்றவிடத்து பெரியோனாகிய ஆழிநீர்வண்ணனை எளியோனாகிய சந்திரன் துணையாகக்கொள்ளுதல் நன்று என்று-பொதுப்பொருளாற் சிறப்புப் பொருளைச்சாதித்திருத்தலால், இது வேற்றுப்பொருள்வைப்பணி. (அர்த்தாந்தரந்யாஸாலங்காரம் என்பர் வடநூலோர்). கட்செவி - பாம்பு : இங்கு இராகுகேதுக்கள் : கிரஹணகாலத்தில் பூமியின் நிழற்சாயையில் சந்திரன் புகுதலால், அவனைப் பாம்புகவ்வுதல் என்பது புராணக் கொள்கை.

(குறிப்பு :- பூமியின் நிழற்சாயை தலைப்பகுதி பருத்து உடற்பகுதி சிறுத்துக்கொண்டே மெலிந்து கடைசியில்வால்போல் தோற்றம் இருக்குமென்பராதலால் இதனைப்பாம்புகவ்வுதல் என்று கொண்டார் என்ப : மற்றும் அந்நிழற்சாயை இலேசாகச்சலனமுடைத்தாயும் (wavy) பாம்பு நெளிவதுபோல் தோற்றமளிக்கும் என்ப.) உவணன்-கருடன் : திருமாலுக்கு வாகனமாவன் : ''பாம்புக்குப் பகை கருடன்', என்பது வழக்கு. சந்திரன் பதினாறு கலைகளையுடையவன். அந்தப் பதினாறு கலைகளில் கிருஷ்ணபட்சத்தில் முதற்கலையை அக்கினியும், இரண்டாங்கலையைச் சூரியனும், மூன்றுங்கலையை விச்வேதேவரும், நான்காங்கலையை வருணபகவானும், ஐந்தாங்கலையை வஷட்காரக் கடவுளும், ஆறுங்கலையை இந்திரனும், ஏழாங்கலையைத் தேவரிஷிகளும், எட்டாங்கலையை ஒற்றைத்தாளனான அஜனென்பவனும், ஒன்பதாங்கலையை எமனும், பத்தாங்கலையை வாயுவும், பதினோராங் கலையை உமையும், பன்னிரண்டாங்கலையைப் பித்ருதேவதைகளும், பதின்மூன்றுங்கலையைக் குபேரனும், பதினான்காங்கலையைப் பசுபதியும், பதினைந்தாம்கலையைப் பிரஜாபதியும் உண்ண ஒற்றைக் கலையனான சந்திரன் அமாவாசையினன்று சூரியன் ஜலம் ஓஷதிகள் பசுக்கள் என்ற இவற்றில் வசித்து, ஓஷதியில்வசிக்கும் தன்னை உண்ட பசுக்களின் பாலிலிருந்து தோன்றிய நெய்யினால் யஜ்ஞங்களில் அக்கினியில் ஓமஞ்செய்யப்படுவதனால் ஆப்யாயனமடைந்து, (திருப்தியுற்று) புதிது புதிதாகக்கலைவளர்ந்துவரச் சுக்கில பட்சத்தில் வளர்ந்து வருகின்றனன் என்பதறியவேண்டுவது. 'முந்தாக' - பூர்வபாஷீசராகவ : என்பது போலக்கொள்வது. திரிந்தாவது - தொழிற்பெயர். என்-வினை : பயனின்மை குறிப்பது. (67).

38. பைத்தலை நெடுஞ்சுடிகை விடமொழுகு கட்செவிப்
படவரவு தொடரினு நீ
படரொளி மழுங்கிவான் முகடொளிக் குவைபெரும்
பாம்புதீண் டிக்கிடந்த
நித்திரை மயக்கத்து மொளிமழுங் கானிவன்
நெடியவா னிடைநுழைந்து
நிலையிலா தோடித் திரிந்துழல்வை நீயிவன்
நீடுழி யடிபெயர்ந்து
முத்தவா ணகைவிமலை யடிவருட வானவர்கள்
முனிவரஞ் சலிசெய்யநீள்
முத்திதரும் வைகுந்தம் வீற்றிருப்ப வனந்த
முறைமுறை தெரிந்துபார்க்கில்
அத்தகைமை தோறுமுன் னிலுமுயர்ந் தவனிவன்
அம்புலீ யாடவாவே
ஆழிநீர் வண்ணனெனும் வாழிமா தவனுடன்
அம்புலீ யாடவாவே.

(இ - ள்) பைத்தலை - படமுடைய தலையையும், நெடும் சுடிகை - பெரிய உச்சியையும், விடம் ஒழுகும் - விஷத்தைக் கக்கும், கட் செவிப் பட அரவு - (தமது) கண்ணையே காதாகக் கொண்ட பெரிய (இராகுகேது என்னும்) பாம்புகள், தொடரினும் - உன்னைப் பிடிக்கத்தொடர்ந்து வந்தாலே, நீ - , (அஞ்சி) படரொளி மழுங்கி - மிக்க வொளி மங்கிப்போய், வான் முகடு ஒளிக்குவை - ஆகாய வுச்சியிலே (மறைந்து) ஒளிந்து கொள்வாய்; இவன் - இந்தக் குழைக்காதனே, பெரும் பாம்பு தீண்டி - ஆதிசேடனாகிய பெரிய பாம்பு பற்றி, கிடந்த நித்திரைமயக்கத்தும் - படுத்துக்கிடந்த மயக்கத்தூக்கத்திலும், ஒளி மழுங்கான் - (தனது) பொலிவாகிய ஒளி மங்கிப்போகமாட்டான்: [மேலும்] நீ —, நெடிய வானிடை நுழைந்து - பெரிய ஆகாயத்திடத்து புகுந்து, நிலையிலாது ஓடித் திரிந்து - ஓரிடத்திலும் நிலைத்து நிற்காமல் ஓடிக் கொண்டே (எங்கும்) அலைந்து, உழல்வை - வருந்துவாய்: இவன் – இக்

குழைக்காதன், நீடுழி - நீண்ட விண்ணில், அடி பெயர்ந்து - (தன்) திருவடியால் (அளக்க) அதனைத்தூக்கிவைத்து, (அதனாலேற்பட்ட நோவுதீர) முத்தம் வாள் நகை விமலை - முத்துப்போல் ஒளி விடுகின்ற பற்களையுடைய இலக்குமிதேவி, அடி வருட - (திருப்பாதங்களைத்) தடவிக் [கைகளால்] பிடித்துவிட, வானவர்கள் முனிவர் அஞ்சலி செய்ய - தேவர்களும் இருடிகளும் கைகூப்பி வணங்க, முத்திதரும் நீள் வைகுந்தம் வீற்றிருப்பவன் - மோட்சத்தைக் கொடுக்கும் சாசுவதமான வைகுண்ட லோகத்தில் தனிச்சிறப்போடு எழுந்தருளியிருப்பவன் : அந்த முறை - அந்த ரீதியை (வகையை), முறை தெரிந்து பார்க்கில் - முறைமைப்படி ஆராய்ந்து பார்த்தால், அ தகைமை தோறும் - அந்தப் பண்புகளிலெல்லாம், உன்னிலும் உயர்ந்தவன் இவன் - உன்னைக் காட்டிலும் மேலானவன் இந்தக் குழைக்காதன் ; (ஆகவே) அம்புலீ ! -, ஆட வா - (இப்படிப்பட்ட மேலானவனோடு) விளையாட வருவாயாக : ஆழி நீர் வண்ணனெனும் மாதவனுடன் -, அம்புலீ ! -, ஆட வா -, (எ. று.) வாழி - அசை.

இந்தச் செய்யுளில் சந்திரனைக் காட்டிலும் குழைக்காதருக்கு மேன்மைகூறி, இவனுடன் அந்த அம்புலியையாடவருமாறு சொல்லுகின்றனர் என்க. எனவே இச்செய்யுள் **பேதோபாயத்தினால்** வந்தது. ஒளிக்குவை - கிரஹணகாலத்தில் மறைதலை நோக்கி. பெரும் பாம்பு - பெருமையையுடைய பாம்பு : எனவே ஆதிசேடன். தீண்டிக்கிடத்தல் - அதன்மேலே நித்திரை [யோகத்துயில்] கொண்டிருத்தல் யோகத்துயில், அறிதுயில், விழிதுயில், துயிலாத் துயில், பொய்த்துயில் என்பன ஒரு கருத்துடையன, அடிவருடல் - கால்பிடித்துவிடல் : அடி கொட்டுதல் : ''பள்ளிகொள்ளுமிடத்தடி கொட்டிட'' என்றாள் ஆண்டாள் ; ''வடிவிணையில்லா மலர் மகள்மற்றை நிலமகள் பிடிக்கும் மெல்லடியைக் கொடுவினையேனும் பிடிக்க'' என்றார் நம்மாழ்வார் (திருவாய் 9 - 2 -10) (68)

69. செங்குருதி யலைமண்டி யாறெடுத் தோடச்
சிலைக்கால் வளைத்துவிசயன்
தேற்றரச னைக்கொன்று கூற்றருந் தும்படி
சினத்திடும் போர்முகத்துப்
பொங்குகதி ராயிரந் தங்குசெஞ் சுடரவன்
பொழுதுகா ணுமலொளிர்செம்

பொன்னிறத் திகிரியா லிவன்மறைத் தனனன்று
போதாக் குறைக்கொளிரும்வெண்
சங்குகொண் டுன்னையு மறைத்திடா மற்கலை
தளர்ந்துமெலி வெய்துறுமல்
தாதள வெருப்பொடித் தெறியாமல் முன்னில்
தவழ்ந்துவிளை யர்டவாவென்
றங்கைமலர் விரல்குனித் துனையழைத் தனனிவன்
அம்புலீ யாடவாவே
ஆழிநீர் வண்ணனெனும் வாழிமா தவனுடன்
அம்புலீ யாடவாவே.

(இ - ள்) செங்குருதி - சிவந்தஇரத்தமானது, அலைமண்டி - அலைகளாக நெருங்கி, ஆறு எடுத்து ஓட - ஆறுகப்பெருகியோடும்படி, விசயன் - அருச்சுனன், சிலை கால் வளைத்து - தன் வில்லின் தண்டினை நன்றாக வளைத்து, தேற்று அரசனைக் கொன்று - உடலை நன்குதேற்றி வளர்த்த சகஸ்ரபாஹு என்ற அரசனைக்கொன்று, (மேலும்) கூற்று அருந்தும்படி சினந்திடும் - யமனுண்ணும்படி (பகைவரைக்) கோபிக்கும், போர் முகத்து - போர்க்களத்தில், பொங்கு கதிர் ஆயிரம் தங்கு செஞ் சுடரவன் - சொலிக்கின்ற ஆயிரம் கிரணங்களைத் தன்னிடத்துக் கொண்ட செவ்விய சூரியனுடைய, பொழுது காணுமல் - பகற்பொழுது காணமுடியாதபடி, (எங்கும் இருள்பரவும்படி) ஒளிர் செம்பொன் நிறத்திகிரியால் - (தன் கையில்) பொலிகின்ற சிவந்த பொன்னின் நிறத்தைக் கொண்ட திருவாழியினுல், இவன் - இந்த எம்பெருமான் (கண்ணன்), அன்று - அந்தப் பாரதயுத்தத்தில் [பதினன்காம் நாள்போரில்], மறைத்தனன் - (அந்தச்சூரியனை) மறைத்து விட்டான் : போதாக்குறைக்கு - (தனக்கு இன்னும்) திருப்தி பிறவாத குறைதீர, ஒளிரும் வெண்சங்குகொண்டு - விளங்குகின்ற வெள்ளிய பாஞ்சசன்னியத்தைக் கொண்டு, (இப்போது) உன்னையும் -, மறைத்திடாமல் - மறையச் செய்து விடாமல், கலை தளர்ந்து மெலிவு எய்துறுமல் - உன்னுடைய ஒளிக்கலைகள் மழுங்கி மெலிந்து போகாமல், தாது அளவு எரு - புழுதிகலந்த எருவை, பொடித்து - மேலும் துகளாக்கி, எறியாமல் - உன்மீது விசியெறியாமல், முன்னில் - (எனக்கு) முன்பாக, தவழ்ந்து - மெதுவாக நகர்ந்து, விளையாட வா என்று - (என்னேடு) விளையாடுதற்கு வருவாயாக என்று, இவன் -, அம் கை மலர் விரல் குனித்து - அழகியகையில் உள்ள பூப்

போல்மெல்லிய விரலைவளைத்து, உனை அழைத்தனன் - உன்னை அழைக்கின்ருன் : (ஆகவே) அம்புலீ ! - , ஆட வா - : ஆழி நீர் வண்ணனெனும் மாதவனுடன் -, அம்புலீ -, ஆட வா - ; (எ. று). வாழி - அசை.

இச் செய்யுள் தானவகையால் வந்தது (தானேபாயமாகும்). தேற்றரசன் - தேற்றுமாடு என்பது போல, உணவு முதலியவற்ருல் உடலைத் தேற்றிக் கொள்பவன். இது ஆயிரவாகுவைக் குறிக்கும் என்னலாம். (ஆயிரவாகு-சகஸ்ரபாஹு) எங்ஙனெனின், கண்ணன் சூரியனை ஆழிகொண்டு மறைப்பதற்கு முன் அருச்சுனனுல் அழிக்கப்பட்ட பல அரசர்களுள் இவனும் ஒருவனுதலின் என்க. 'தேற்று' என்ற அடை கொடுக்கவே, இவனைக்குறிக்கலாம் எனக்கொண்டது. [தேற்றுமாடு - உணவுமுதலியவற்ருல் உடலைத் தேற்றி விற்கும்மாடு : இவனும் தோள் ஆயிரமுடையனுதலின்] திகிரியால் மறைத்த கதையை முன்னர் செய்யுள் 30 - உரையிற் காண்க. போதாக் குறைக்கு - இது உலகவழக்கு : இங்கு நான்கனுருபு நீக்கப்பொரு ளில்வந்தது : பித்தத்துக்கு இஞ்சி, துன்பத்திற்கு யாரே துணையாவார் என்ற இடத்துப்போல. கன்னிமகளிர் எருவிட்டுச் சந்திரனை வணங்கி அஞ்சலி செய்வர். அதுகண்டு இவன் ஆண்குழந்தையாதலின் மேலே வீசியெறிவன் என்றபடி. விரலை மடக்கி மடக்கி அழைத்தல் மரபு. அம் + கை — அங்கை : அழகிய கை: பண்புத்தொகை. (69)

70\. கூறருந் துதியைநீ யுடையவ னிவனமரர்
கூறருந் துதியையுடையான்
குறைபடு தடங்கலை களுடையனீ யிவனுமோ
குறையாத கலைகளுடையான்
வீறுதரு முருவிலி மதிக்குடைய னீயிவன்
விதரண மதிக்குடையவன்
விண்ணிடை கரந்தொளி யொளித்திடுவை நீயிவன்
வேதநுட் பொருளினொளியான்
ஊறுபட வோடித் திரிந்திளைத் திடுவைநீ
ஒருநாளு மிளையானிவன்

உவரிப் புனற்பங்க மூடுதிப் பாயினும்
உம்பரா ழியினுதிப்போன்
ஆறலைபுரட்டு பொருனை நெடுந்துறைவன்
அம்புலீ யாடவாவே
ஆழிநீர் வண்ணனெனும் வாழிமா தவனுடன்
அம்புலீ யாடவாவே.

(இ - ள்) நீ —, கூறு அரும் துதியை – சொல்லுதற்கரிய (இல்லாத) துதிகளை, உடையவன் - : இவன் - இக்குழைக்காதன். அமரர் - தேவர்களும், கூறு அரும்- சொல்லுதற்கு அருமையான (மேன்மையான), துதியை - துதிகளை, உடையான் -,கொண்டவனு யிருக்கிருன் : நீ -, குறைபடு தட கலைகள் உடையன் - குறைந்து கொண்டேவருகின்ற நல்ல கலையொளிகளையுடையவன் :இவனு மோ - இவனே, குறையாத கலைகளுடையான் - பரிபூரணமான கலைகளனைத்தையும் உடையவனுயிருக்கிருன் : நீ -, வீறு தரும் - பெருமையையுடைய, உருவிலி - மன்மதனுடைய, மதி குடையன் - [சந்திர] வட்டக்குடையாயிருக்கிருய் : இவன் - இவனே, விதரண மதிக்கு - சாமர்த்தியமுள்ள அறிவினுக்கு, உடையவன் - உரியவன் : நீ -, விண்ணிடை கரந்து - ஆகாயத்திலே மறைந்து, ஒளி ஒளித் திடுவை - பிரகாசத்தை வெளிவிடாது செய்கின்ருய் : இவன் - இவனே, வேத நுண் பொருளின் ஒளியான் - வேதங்களின் நுட்பமா கிய விடயங்களில் பிரகாசிப்பவன் : [அவைகளுக்குப் பிரகாசம் அளிப்பவன்] : நீ -, ஊறுபட - காயமுண்டாகும்படி, ஓடித்திரிந்து - ஆகாயவிடமெங்கும் ஓடிச்சஞ்சரித்து, இளைத்திடுவை - (உடல்) தேய்ந்து மெலிந்து போகிருய் : இவன் - இக்குழையனே. ஒருநாளும் இளையான் - என்றைக்கும் மெலிவடையான் : (நீ) உவரிப்புனல் பங்கம் ஊடு - கடல்நீரின் சேற்றிலிருந்து, உதிப்பாய் - தோன்றுகின் ருய் : இவனும் -, உம்பர் ஆழியின் - மேலிடத்திலுள்ள திருப்பாற் கடலில், உதிப்போன் - தோன்றுவான் : (மேலும் இவன்) ஆறு அலை புரட்டும் பொருனைநதி நெடும் துறைவன் - (பாயும்) வழியிலே அலை களைப் புரட்டிக்கொண்டு வருகின்ற தாமிரபரணியாற்றின் [கரையி லுள்ள]பெரியநீர்த்துறைகளுக்குத் தலைவன் : (எனவே) அம்புலீ !-, ஆட வா -; ஆழி நீர்வண்ணனெனும் மாதவனுடன் அம்புலீ ! - ஆட வா ; (எ. று.) வாழி - அசை.

இச்செய்யுள் பேதோபாயத்தினுல்வந்தது. கூறு அரும் துதியை நீயுடையவன் என்றவிடத்து அருமை இன்மை குறித்து நின்றது ;

"அருங்கேடன்" (குறள், 210) என்ற-இடத்துப்போல. "அமரர் கூறு யுடையான்" என்றவிடத்து அருமை-பெருமை, (மேன்மை) அருந் துதியை குறித்து நின்றது. சந்திரன்கலைபதினாறு : அதுகுறைபடுதலாவது - கிருஷ்ணபட்சத்து, தினந்தோறும் ஒவ்வொன்ருகத் தேய்தல். குழைக்காதனுக்குக் கலையாவது - அறுபத்துநான்கு. அவன் சர்வஜ்ஞனுதலின், அக் கலை குறையாது. மன்மதனுக்குக் குடை சந்திரனுவன். விதரணமதி - சாமர்த்தியபுத்தி. ஒளியான் - ஒளிக்க மாட்டான், ஒளியையுடையவன் என்று இருபொருள் பட வந்தது. ஊறு - காயம் (Wound, injury) சந்திரனுக்குக்காயமாவது - கலைமழுங்கல் : இளைத்திடுதலாவது - க்ஷயித்தல் : (waning). சந்திரன் கடலினின்று உதிப்பதுபோல் தோன்றுதலால், உவரிப்புனல் பங்கமூடு உதிப்பாய் என்றது. பங்கம் - சேறு : இங்கே ஆழ்ந்த தரைப்பகுதியைக்காட்டுவது, "ஒளித்திடுவை : - ஒளியான்; இளைத்திடுவை - இளையான்" — முரணழகுகாண்க. பொருனு - பொருனை : இது பொருநை எனவும் வரும். (70).

71. சந்தப் படாமுலைத் தார்குழற் கோமளத்
தையல்சா னகிபொருட்டுத்
தடமதி லிலங்கா புரம்பொடி படுத்தித்
தகர்த்துமுடி பத்துமண்மேற்
சிந்தச் சரந்தொட்டச் சிலைவீர ராகவன்
சிறுகுழந் தைப்பிள்ளையாத்
திருவிரற் றலைசுட்டி யுனையழைத் தால்வரச்
செய்யா திருக்கமுறையோ
முந்தப் பெருந்தக்கன் வேள்வியிற் றேவர்கள்
முறிந்துதிசை கெட்டோடுநாள்
முழுமதிக் கடவுணீ பரிபவப் பட்டகதை
மொழியக் கணக்குமுண்டோ
அந்தக் கணக்கின்று வந்திருக் கின்றதினி
அம்புலீ யாடவாவே
ஆழிநீர் வண்ணனெனும் வாழிமா தவனுடன்
அம்புலீ யாடவாவே.

(இ - ள்) சந்தம் - அழகு பொருந்திய, படாம் — சீலைபோர்த்த, முலை - கொங்கைகளையும், தார் - பூமாலையையணிந்த, குழல் - கூந்தலையுமுடைய, கோமளம் தையல் - இளமையழகு பொருந்திய பெண்ணாகிய, சானகி பொருட்டு-சீதாபிராட்டியின் நிமித்தமாக, (அவளைச் சிறைமீட்டற்பொருட்டு), தட மதில் இலங்காபுரம் பொடிபடுத்தி - பெரிய மதில்களைக்கொண்ட இலங்கைமாநகரைத் துகளாக்கியழித்து, (அதன் அரசனாகிய இராவணனது) முடிபத்தும் தகர்த்து - பத்துத் தலைகளையும் சிதறவடித்து, மண் மேல் சிந்த - தரையின் மேல் (புழுதி பட) விழும்படி, சரம் தொட்ட - அம்பு தொடுத்த, அ சிலை வீரராகவன் - வில்லையேந்திய அந்த இராமபிரான், (இப்போது மகரநெடுங்குழைக்காதனாய்) சிறு குழந்தைப்பிள்ளையா - சிறிய ஆண்குழந்தையாகி, திரு விரல்தலை சுட்டி - அழகிய விரலின் நுனியினால் சுட்டிக்காட்டி, உனை அழைத்தால் - உன்னை (விளையாட)க் கூப்பிட்டால், வரச்செய்யாதிருக்க முறையோ - (நீ) வாராதிருத்தல் தகுதியாகுமா (ஆகாது): முந்த - முன்னொரு சமயம், பெருந் தக்கன் வேள்வியில் - பெரிய தக்ஷப்பிரஜாபதியின் யாகத்தில், தேவர்கள் முறிந்து திசைகெட்டு ஓடும் நாள் - தேவர்கள் முறியடிக்கப்பட்டுத் திசை தெரியாமல் சிதறியோடிய காலத்து, முழுமதிக்கடவுள் நீ - பூர்ணசந்திரனாயிருந்த நீ, பரிபவப்பட்ட கதை — அவமானமடைந்த நிகழ்ச்சியை, (தேய்ந்து போனதை), மொழிய - (நான்) சொல்லவேண்டிய, கணக்கும் உண்டோ? - நியாயமும் உளதோ? (அனைவர்க்கும் தெரியுமே) : அந்தக் கணக்கு - அந்தநாள் நியாயம் [நீ பட்டபாடு], இன்று வந்திருக்கின்றது - இந்த நாளிலும் [உனக்கு] ஏற்படவிருக்கின்றது : [ஆகவே] இனி - இனிமேல் தாமதிக்காமல், அம்புலீ -, ஆட வா - : ஆழி நீர்வண்ணனெனும் மாதவனுடன் —, அம்புலீ! —, ஆட வா - ; (எ. று.) வாழி - அசை.

இச்செய்யுள் **தண்டோபாயத்தால்** வந்தது, "இலங்காபுரம் காவலன் காலினால் வீழ்கருங்குன்று போல் மண் முகங்குத்தி வீழ" என்றார் திவ்யகவியும். விரற்றலை -விரல் நுனி. தக்கயாகத்தில் வீரபத்திரக்கடவுள் சந்திரனைத் தேய்த்தருளினார் என்பது அறியவேண்டுவது. "அன்றைக் கணக்கு இன்றும் வந்திருக்கின்றது" என்றது உலக வழக்குப்பற்றி." முன்றக்கன் வேள்விக் களங்கொலைக் களமென்ன முடியமரர் மொத்துண்ட நாள், முழுமதிக் கடவுணீ யவமதிப் புண்டது மொழிந்திடக் கடவதன்றால், அன்றைக் கணக்கின்றும் வந்திருக்கின்றது "என்று முத்துக்குமாரசுவாமிபிள்ளைத்தமிழிலும் (அம்புலி : செய்யுள் 8) வந்திருப்பது நோக்கத்தக்கது. (71).

72. தவநெறிக் கவுதமன் பன்னியக லிகைபுரந்
தரனொடு மணந்தவதனுல்
தவமுனி யறைந்தசா பத்திலவள் கல்லுருத்
தாங்கிய தொழித்ததெங்கோன்
புவனமொரு மூன்றுமீ ரடியா லளக்கின்ற
பொற்கழற் றுகளுனக்கும்
புனிதபூ ரணசெவ்வி முகமண்ட லக்கறைப்
புரைதீர வரமளிக்குஞ்
சிவனுமய னும்வெள்ளை யயிரா பதத்தனுஞ்
செஞ்சுடர்க் கடவுளோனுந்
தேவர்முப் பத்துமுக் கோடியு மறுமுகச்
செம்மலுங் கைம்மலைக்கோட்
டவனுமுறை முறைபரவு நிகரில்முகில் வண்ணனுடன்
அம்புலீ யாடவாவே
ஆழிநீர் வண்ணனெனும் வாழிமா தவனுடன்
அம்புலீ யாடவாவே.

(இ - ள்) தவ நெறி கவுதமன் - தவவொழுக்கத்தை மேற்கொண்டிருந்த கௌதம முனிவனின், பன்னி அகலிகை - பத்தினியாகிய அகலிகை, புரந்தரனொடு - தேவேந்திரனோடு, மணந்த அதனுல் - புணர்ந்த காரணத்தினுல், தவமுனி - அந்தக்கௌதமன், அறைந்த - சொன்ன. சாபத்தில் - சாபத்தினுல், அவள் - அந்த அகலிகை, கல்லுரு தாங்கியது ஒழித்தது - கல்லாய் உருவந்தாங்கிக் கிடந்ததை நீக்கியது. எம்கோன் - எமது தலைவனுகிய இவ்வெம் பெருமான் [இராமபிரான் :] [அதுபோல] புவனம் ஒரு மூன்றும் - மூவுலகங்களையும். ஈரடியால் அளக்கின்ற பொன்கழல் துகள் - இரண்டடிகளைக் கொண்டு அளந்த திவ்யபாதங்களின் புழுதி, உனக்கும் - (மாசுனடய) உனக்கும், புனித பூரண செவ்வி முக மண்டலம் கறை - தூய முழுமையான அழகுடைய முகவட்டத்திலுள்ள கறையின், புரை தீர - களங்கம் நன்கு நீங்கும்படி, வரம் அளிக்கும் - வரங்கொடுக்கும் : [ஆகவே] சிவனும் - சிவபெருமானும்,

அயனும் - பிரமதேவனும், வெள்ளை அயிராபதத்தனும் - வெள்ளை யானையாகிய ஐராவதத்தையேறிச் செலுத்துபவனுய இந்திரனும், செஞ்சுடர்க் கடவுளோனும் - சூரியனும், முப்பத்துமுக்கோடி தேவரும்—, அறுமுகச் செம்மலும் - முருகக்கடவுளும், கைம்மலைக் கோட்டவனும் - (முகத்தில்) யானைக்கொம்பினையுடைய விநாயகனும், முறைமுறை பரவும் - தங்கள் முறைதவருதபடி துதிக்கும், நிகரில் முகில்வண்ணனுடன் - மகரக்குழைக்காதனுடன், அம்புலீ -! ஆட வா - ; ஆழி நீர்வண்ணனெனும் மாதவனுடன் -, அம்புலீ -, ஆட வா - ; (எ. று.) வாழி - அசை.

இச்செய்யுள் தானுேபாய மாகும். முதலடியில், குறித்துள்ள அகலிகை சாசவிமோசனவரலாறு - செய்யுள் 47 - இன் உரைகண்டு தெளிக. ''மூவுலகும் ஈரடியால் முறைநிரம்பாவகை முடிய, தாவிய சேவடி'' என்ருர் இளங்கோவடிகளும், கறை - முயற்கறை எனப் படுவது, புரை - குற்றம், தோஷம். செஞ்சுடர் - செவ்விய ஒளிக் கிரணங்கள். விநாயகனுக்கு 'ஒற்றைக்கொம்பன்' என்று பெயருண்டு. கோடு - தந்தம். 'நிகரில்முகில்வண்ணன்' என்பதே திருப்பேரை எம்பெருமானுக்கு ஒரு திருநாமமாகும், எம்பெருமான் திருவடி ''துயரறு சுடரடி'' என்பது பெறவைக்கப்பட்டது. (72)

73. விண்டடவி முகமா யிரங்களு மொளித்துநெடு
வெளியின்வந் தொருமுகமதாய்
வெண்டிரைக் கங்கைப் பெரும்புனல் பரந்தென
விரிந்தவவ் வெள்ளத்தின்மேல்
தண்டரள மணியுமிழ்ந் தாகாய நள்ளிடை
தயங்கிய சலஞ்சலமெனத்
தாரகைக் குலமொடு தவழ்ந்து மேன்மேல்நீ
தலைப்பட்ட வாருனும்
புண்டரிக மலர்முகை முறுக்குடைந் தலருமொரு
பூவெனப் பொலிவுபெற்ருய்
புகலரிய மதிவள முரைக்கில்முழு மதியெனப்
புகல்கின்ற துண்மைகண்டாய்

அண்டபகி ரண்டமு நிரம்பிய விவனுடன்
அம்புலீ யாடவாவே
ஆழிநீர் வண்ணனெனும் வாழிமா தவனுடன்
அம்புலீ யாடவாவே.

(இ. ள்.) விண் தடவி - ஆகாயத்தை முற்றும் அளாவி, ஆயிரம் முகங்களும் ஒளித்து - (இழியும்) பல வாயில்களையும் மறையச்செய்து, நெடு வெளியில் வந்து - பெரிய வெட்டவெளி யிடத்துவந்து, ஒருமுகமதாய் - ஏகமுகமாய் (ஒருவாயிலைக் கொண்டு) வெண்திரைக்கங்கை பெரும் புனல் - வெள்ளிய அலை களைக்கொண்ட ஆகாச கங்கையாகிய பேராறு, பரந்தென விரிந்த- பரந்து பாய்வதென்னும்படி பரவிய, வெள்ளத்தின்மேல் - நீர்ப் பெருக்கில், தண் தரளமணி உமிழ்ந்து - குளிர்ந்த முத்துக்களை யீன்று, ஆகாய நள் இடை தயங்கிய - ஆகாசமாகிய நடு விடத்தே விளங்கிய, சலஞ்சலம் என - வலம்புரிச் சங்கினைப் போல, தாரகைக் குலமோடு தவழ்ந்து - நட்சத்திரக் கூட்டங் களோடு மெல்லநகர்ந்து, நீ-, மேன்மேல் தலைப்பட்டவாறுனும் - மிக்க (மேலிடத்துத்தலைதூக்கிச் சிறப்புற்ற வகையாலும், புண்டரிக மலர் முகை - வெண்டாமரையாகிய மலரின்மொட்டு, முறுக்கு உடைந்து அலரும் - கட்டவிழ்ந்து நன்கு மலர்கின்ற, ஒரு பூ என - ஒப்பற்றதோர் பூ என்று சொல்லும்படி, பொலிவு பெற்றாய்- விளக்கம் பெற்றுள்ளாய் : (அவ்வகையாலும்).

புகல் அரிய மதிவளம் உரைக்கில் - பேசுதற்கரிய அறிவுவளத் தைப்பற்றிச் சொல்லப்போனால், (உன்னை) முழுமதி எனப்புகல் கின்றது உண்மை - பூர்ணஅறிவுடையவன் என்று சொல்லுவது மெய்ம்மையாகும் : (அவ்வகையாலும்) [நீ எங்கும் எல்லாம் நிரம் பியவனாக இருக்கின்றாய் : ஆகையால் உன்னைப்போலே] அண்ட பகிர் அண்டமும் நிரம்பிய இவனுடன் - இந்தப்பூவுலக உருண் டையிலும் பிற வெளிவுருண்டைகளிலும் (பரிபூரணமாக) நிரம்பி யுள்ள இந்த மகரநெடுங் குழைக்காதனுடன், அம்புலீ ! - ஆட வா ; ஆழி நீர் வண்ணனெனும் மாதவனுடன் - , அம்புலீ - , ஆட வா - எ. று.). வாழி - அசை.

இச்செய்யுள் சாமம் என்ற உபாயத்தால் வந்தது. எங்கும் வியாபித்து நிரம்பிய தன்மையில் இருவர்க்கும் சாம்யம் (ஒப்பு) கூறப்பட்டது. ''தலைப்பட்டவாறுனும்'' என்பதிலுள்ள 'ஆறுனும்' என்பதை, 'பொலிவு பெற்றவாறுனும், 'புகல்கின்றவாறுனும்' எனப் பின்னரும்கூட்டிப் பொருட்பொருத்தமுறச் செய்துகொள்ளவும். கண்டாய் -முன்னிலையசை : தேற்றமுமாம். ஆகாயகங்கை ஆயிரங்

முகங்களால் இழியும் என்பர் : "கங்கை, துறைகொளாயிர முக ஞ்மு சுழல (கல்லாடம்), "ஆயிரமுகத்துநதி பாலனும்" (வேளைக் காரன் வகுப்பு). சலஞ்சலம் - உத்தமசாதிச் சங்கு : வலம்புரியாயிரஞ் சூழ்ந்த சங்கு : " வலம்புரி சலஞ்சலம் வளைஇய தொத்தனள்" "(சீவக : 184). தாரகை முத்துக்களுக்கு ஒப்பு. தரளமணி - இரு பெயரொட்டு. புண்டரிகம் - இங்கு வெண்டாமரை. முழுமதி - பூர்ணசந்திரன், பூர்ணஅறிவு : இந்த இருபொருளையும் காட்டுவதாக அமைந்துள்ள நயம் காண்க.

இனி, நீ மேன்மேல் தலைப்பட்டவாறு போல், இவனும் மேலான பரமபதத்தில் தலைப்பட்டவனுவன் என்பதும், நீ பூவெனப்பொலிவு பெற்றது போல் இவனும் கொப்பூழில் பிரமனைத் தோற்றிப்பொலிவு பெற்றவனென்பதும், நீ முழுமதியாவதுபோல இவனும் சர்வஜ்ஞனு வனென்பதும் உணர்ந்து சாம்யம் காணவும். (73).

74. என்னென்று நிகராவை யிருளன்றி நீயன்பர்
இதயவிரு ணீக்கவறியாய்
இருவிசும் பிற்பொலிகு வாயிவன் புவனங்கள்
எங்கணும் பொலிவதோராய்
பொன்னந் தகட்டிதழ்க் குமுதமல் லாலுளப்
புதுமலர் திறக்கவறியாய்
போலியல் லாவுனைப் போலியென் றுல்வந்து
புதுநிலா மணிமுன்றில்வாய்
மன்னுஞ் சரோருகப் படுகரும் புளினவெண்
மணற்குன்ற முஞ்சோலையும்
மடவனப் பேடையொடு கூடிப் புணர்ந்தகம்
மகிழ்ந்துபிரி யாதுசெஞ்சூட்
டன்னங்கள் விளையாடு தென்பேரை மாயனுடன்
அம்புலீ யாடவாவே
ஆழிநீர் வண்ணனெனும் வாழிமா தவனுடன்
அம்புலீ யாடவாவே.

(இ - ள்) என் - இது என்ன ? என்று - என்றைக்கு, நிகராவை - (இம்மாயனுக்கு) ஒப்பாவது (நீ) : நீ - , இருளன்றி - (இந்தப்) புற விருட்டையல்லது, அன்பர் இதய இருள் - பக்தர்களுடைய [அஞ் ஞான] மனவிருளை, நீக்க அறியாய் - போக்குதற்குத் தெரியாதவனு யிருக்கிறாய் : இரு விசும்பில் - பெரிய ஆகாயத்தில், (மட்டும்), பொலிகுவாய் - விளங்கிடுவாய் ; இவன் - இம் மாயன், புவனங்கள் எங்கணும் - எல்லாவுலகங்களிலும், பொலிவது - விளங்குவது, ஓராய் - அறியமாட்டாய் : பொன் அம் தகடு இதழ் குமுதம் அல்லால் - பொன்போல் அழகிய புறவிதழ்களைக் கொண்ட ஆம்பல் மலரன்றி, உளம் புதுமலர் - மணமாகிய புதியமலரை, திறக்க அறியாய் -விகசிக்கச் செய்யத் தெரியாதவனுயிருக்கிறாய் : (இப்படி) போலி அல்லா உனை - (ஒருபடியும்) நிகரல்லாத உன்னை, போலி என்றால் - நிகராவாய் என்று (நாங்கள் உன்னைத் தூக்கிவைத்துச்) சொல்வோமானால், (அதுகேட்டு உகந்து) புது நிலா மணிமுன்றில் வாய் வந்து - புதிய அழகிய நிலாமுற்றத்தினிடத்து வந்து (இவனு டன்விளையாட வரவேண்டாவோ ?)

மன்னும் - நிலைபெற்ற, சரோருகப் படுகரும் - தாமரைபூத்த நீர் நிலைகளிலும், புளினம் வெண்மணல் குன்றமும் - திட்டுக்களாக வுள்ள வெள்ளிய மணற் குன்றுகளிலும், சோலையும் - பொழில்களி லும், செஞ்சூட்டு அன்னங்கள் - சிவந்த உச்சிக்கொண்டையை யுடைய ஆணன்னங்கள், மட அனப்பேடையொடு கூடி புணர்ந்து - மென்மையான பெட்டையன்னங்களோடு கலந்து சேர்ந்து, அகம் மகிழ்ந்து பிரியாது - மனங்களிப்புற்றுப் பிரியாதபடி, விளையாடும் - , தென்பேரை மாயனுடன் - தென்பேரையில் [நித்தியவாசஞ் செய்யும்] மகரநெடுங்குழைக்காதனாகிய மாயனோடு, அம்புலீ ! -, ஆட வா - ; ஆழி நீர்வண்ணனெனும் மாதவனுடன் -, அம்புலீ - ! , ஆட வா - : (எ. று.) வாழி - அசை.

இச் செய்யுள் **பேதோபாயத்தினால்** வந்தது, 'வந்து' என்பதன் பின் 'விளையாட வேண்டாவோ'' என்பது சொல்லெச்சமாய் நின்றது. படுகர் - நீர்நிலை. புளினம் - ஆற்றிடைத்திட்டு. ''மென் னடையன்னம் பரந்து விளையாடும் வில்லிபுத்தூர்'' என்றதும் நினைக. (74).

சிற்றில் பருவம்

75. களிக்குஞ் சுரும்பர் துதைந்துழுது
கணைக்கா லசைத்துச் சில்லோசை
கனிந்தூற் றிருப்ப மிழற்றுதொறுங்
கக்குங் கலுழி நறவுபரி
மளிக்கும் பசுந்தார்ச் செழுந்துளவு
மணக்குங் குழகா ! கார்மேக
வண்ணா ! கருணை மடைதிறந்து
வழியும் புயலே ! பேரின்பம்
அளிக்கும் பெரிய திருவீதி
அணுகை வழிக்கும் புறம்பாக
அறியாப் பருவப் பெண்களெடுத்
தமைக்கும் வண்ட லிதுகண்டாய்
தெளிக்கும் தமிழ்த்தென் றிருப்பேரைச்
செல்வா ! சிற்றில் சிதையேலே
திரையார் பொருநைத் தடந்துறைவா !
சிறியேஞ் சிற்றில் சிதையேலே.

(இ - ள்) களிக்கும் சுரும்பர் - தேனுண்டு செருக்கும் வண்டுகள், துதைந்து - நெருங்கி, கணைக்கால் அசைத்து - , உழுது - கிண்டுதலால், கனிந்து - இளகி, ஊற்றிருப்ப - துளித்திருப்ப, (அப்போது) சில்லோசை மிழற்றுதொறும் - மிக மெல்லென ஒலியை எழுப்புந்தோறும், கக்கும் கலுழி நறவு - வெளியுமிழும் கலங்கிய தேன், பரிமளிக்கும் - கமழும், பசுந்தார் செழும் துளவு - அழகிய பச்சைத் திருத்துழாய் மாலை, மணக்கும்-(மார்பில்) பொருந்தியுள்ள, குழகா ! - அழகனே ! கார்மேக வண்ணா ! - மேகநிறத்தவனே ! கருணை மடை திறந்து வழியும் புயலே ! - தயை பெருகி வழியும் மேகமே !, பேரின்பம் அளிக்கும் பெரிய திருவீதி - மிக்க ஆனந்தம் கொடுக்கும் பெரிய திருவீதியை, அணுகு - நெருங்குகின்ற, வழிக்கும் - மார்க்கத்திற்கும்,

புறம்பாக - வெளிப்புறமாக இருக்கும்படி, அறியாப்பருவப்பெண்கள் - ஒன்றும் தெரியாத சிறு பெண்களாகிய நாங்கள், எடுத்து அமைக்கும்-மண்ணெடுத்து (விளையாட்டில்) இழைத்துள்ள, வண்டல் இது - சிற்றில் இதுவாகும் : (ஆகவே) தெளிக்கும் தமிழ்த் தென்திருப்பேரை செல்வா ! - சாரமான தமிழ்வழங்கும் தென்திருப்பேரை நகரிலுள்ள செல்வனே !, சிற்றில் சிதையேல் - (எங்களுடைய) சிற்றிலைச் சிதைக்காதே ; திரை ஆர் பொருநை - அலைகளை வீசுகின்ற தாமிரபரணி நதியின், தடம் துறைவா - பெரிய நீர்த்துறைகளையுடையவனே ! சிறியேம் - சிறுமியராகிய எங்களுடைய, சிற்றில் சிதையேல் - சிற்றிலைச் சிதைக்காதே ; (எ. று.)

திரு வீதிக்குப் போகும் வழிக்குப் புறம்பாக எடுக்கின்ற சிற்றிலைச் சிதைக்காதே எனச்சிறுமியர் வேண்டுகின்றனர். வண்டல் - விளையாட்டாக இழைத்த சிற்றில் : 'தண்புனல் வண்டலுய்த்தென' (ஐங்குறு : 69). முதலடியில், வண்டுகள் தேனைத் தேக்கிடும்படி பருகியுள்ளன என்றபடி. புயல் - உருவகம். அறியா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். (75).

76. வேண்டக் கிடையா வாரமுதம்
விரைதெண் டிரைநீர்க் கடன்முகட்டின்
வெற்பைப் பிடுங்கி மத்தாக
விடவா ளரவுக் கயிறுசுற்றிப்
பூண்டக் கணமே சுவைமதுரம்
பொங்கிப் பெருகக் கடைந்தெடுத்துப்
புலவர்க் களிக்கும் பெருமானே !
பொருந்தா நிருதர் போரேறே !
காண்டற் கரிய கொழுங்கிரணங்
கக்கும் பசிய மரகதமே !
கதிரா ழியிற்செங் கதிர்மறைத்த
கருணைப் புயலே ! பூமகள்கை
தீண்டச் சிவக்கும் புலனருளாற்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே

திரையார் பொருநைத் தடந்துறைவா !
சிறியேஞ் சிற்றில் சிதையேலே.

(இ - ள்) வெற்பைப் பிடுங்கி - மந்தரைமலையையெடுத்து, மத்தாக - கடையும் மத்தாக நாட்டி, விடம் வாள் அரவு கயிறு சுற்றி - விஷத்தையுடைய கொடிய வாசுகியாகியபாம்பைக் கடை கயிருகச் சுற்றி, பூண்ட அ கணமே - (கடையுந் தொழிலை) மேற் கொண்ட அந்த க்ஷணத்திலேயே (உடனே), விரை தெண் திரை நீர் கடல் முகட்டில் - (கரையை நோக்கி) விரைகின்ற தெளிந்த அலைகளையுடைய நீரைக் கொண்ட கடலின் மேற்பகுதியில், வேண் டக்கிடையா ஆரமுதம் - விரும்பினுலும் கிடைத்தற்கரிய தேவாமி ருதம், சுவைமதுரம் பொங்கி பெருக - இனிமையான சுவையோடு கிளர்ந்தெழுந்து பெருக, கடைந்து எடுத்து, புலவர்க்கு - தேவர் களுக்கு, அளிக்கும் - வழங்கிய - பெருமானே -, பொருந்தா - மனம் பொருந்தாத (பகைவராகிய) நிருதர் போர் ஏறே ! - அரக்கரோடு போரிடுஞ்சிங்கமே ! ; காண்டற்கு அரிய - பார்த்தற்கு முடியாத, கொழும் கிரணம் - (ஒளிமிக்குச்) செழித்த கதிர்க்கிரணங்களை, கக்கும் - வெளியுமிழும், பசிய மரகதமே ! - பச்சை மரகதரத்தினமே ! கதிர் ஆழியின் - ஜ்வலிக்கின்ற சக்கரப் படையினுல், செங்கதிர் மறைத்த - சிவந்த கிரணங்களைக் கொண்ட சூரியனை மறைத்த, கருணைப் புயலே ! - தயைபொழியும் மேகமே ! புலன் - உன்திருவடி, பூமகள் கைதீண்ட சிவக்கும் - இலக்குமி (தன் மென்மையான) கை யால் பிடிக்கச் சிவந்து காட்டும் : (அவ்வளவு மிருதுவானது : அதனுல்) அருளால் - (எங்கள் மேல்) கிருபைவைத்து, சிறியேம் - சிறுமியராகிய எங்களுடைய, சிற்றில் சிதையேல் -: திரை ஆர் பொருநை தடம் துறைவா ! -, சிறியேம் சிற்றில் சிதையேல் - ; (எ. று.).

புலவர்-தேவர். ''விஞ்சை வானவர் சாரணர் சித்தர் வியந்துதி செய்யப் பெண்ணுருவாகி, அஞ்சுவையமுதம் அன்று அளித்தான்'' என்றுர் திருமங்கைமன்னனும். ஏறு, மரகதம், புயல் _ இவை உரு வகம் : வீரத்திற்கும் ஒளிக்கும் வண்மைக்கும் ஒப்பாவன. ஆழியிற் கதிர்மறைத்த கதையைக் கீழ் 30 - ஆஞ் செய்யுளுரையிற் காண லாம், ''நாச்சிமாரும் கூசிப் பிடிக்கும் திருவடிகள்'' என்பது சம் பிரதாயம், 'பஞ்செனச் சிவக்கும் மென்கால் தேவியாகிய' பூமகளின் கைதீண்டச்சிவக்கும் என்றது நயம், புலன் • உறுப்பு : (limb) ''ஒன்பது வாய்ப்புலனும்'' (நாலடி. 47) ''வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணுக்கிக் கடல் வண்ணன் ! பண்டொருநாள் கடல் வயிறு கலக்கினையே'' என்றுர் இளங்கோவடிகளும் கடல்கடைந்த வரலாற்றில் ஈடுபட்டு. கிடையா - ஈறுகெட்டது. (76)

77. வள்ளைக் குழைவே னெடுங்கருங்கண்
மதிவா ணுதற்கோ மளப்புளக
வனமா முலைக்குங் குமச்சுவடு
மடவா ரொடும்போய் விளையாட
அள்ளிக் குடிக்குந் தடம்பொருநை
ஆற்றிற் கூடு புனற்றுறையின்
அருகிற் சிறுபே தையர்களெடுத்
தடங்கா விருப்ப மீதூர்ந்து
தள்ளிப் பால்மாற் றரும்பசும்பொன்
தகட்டின் வயிடூ ரியங்குயிற்றிச்
சமைக்குந் *திருமா மணிமுறத்துத்
தருதா மரைக்கை சேப்பமணல்
தெள்ளிக் கொணர்ந்து தரவிழைத்த
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
திரையார் பொருநைத் தடந்துறைவா!
சிறியேஞ் சிற்றில் சிதையேலே.

(இ - ள்) வள்ளைக்குழை - வள்ளைக்கொடிபோன்ற காதும், வேல் நெடும் கருங் கண் - வேலாயுதம் போல் கூரிய நீண்ட கரிய கண்களும், மதிவாள் நுதல் - சந்திரன் போல் ஒளிபொருந்திய நெற்றியும், கோமளம் புளகம் வனம் மா முலை - இளமையோடு மயிர்க் கூச்செறியும் அழகிய பருத்தமுலைகளும், குங்குமச்சுவடு -(அவற்றின் மேல்) பூசியகுங்குமக்குழம்பின் அடையாளங்களும் கொண்ட, மட வாரொடுபோய் - பெண்டிரோடும் சென்று, சிறுபேதையர்கள் – சிறுமியர்கள், விளையாட - விளையாடுதற்கு (முன்னதாக), அள்ளிக் குடிக்கும் - கைகளால் முகந்து குடிக்கின்ற, தடம் பொருநையாற்றின் கூடு புனல்துறையின் அருகில் - விசாலமான தாமிரபரணிநதியின் கூடுபுனற்றுறையின் [பலர்கூடும் நீர்த்துறையின்] சமீபத்தில், அடங்கா விருப்பம் மீதூர்ந்து - மிக்க ஆதரத்தோடு, எடுத்து - (மணலை) வாரியெடுத்து, தள்ளி - (அதிகமாக அள்ளவே) மிகுதியைத்தரையில் தள்ளி, பால்மாற்று அரும் - பின்வாங்காமல், பசும் பொன்தகட்டில் - பசியபொன்னாலாகிய தட்டில், வயிடூரியம் குயிற்

றிச் சமைக்கும் - (மஞ்சள்நிறவொளி வீசும்) வயிடூரிய மணிகளைப் பதியவைத்துப் பண்ணிய, திருமாமணி முறத்து - சிறந்த பிற மணிகளுமழுத்திய முறத்தினுல், தரு தாமரைக்கை சேப்ப - வழங்குகின்ற தாமரைப்பூப் போன்றகைகள் சிவக்கும்படி, மணல் தெள்ளி-(வாரிய அந்த) மணலைக்கொழித்தெடுத்து, கொணர்ந்து தர - பிரியமோடு கொண்டுவந்து கொடுப்ப, (அதனைக்கொண்டு) சிறியேம் - சிறுமியராகிய நாங்கள், விளைத்த - உண்டாக்கிய (கட்டிய), சிற்றில் - சிற்றிலை, சிதையேல் - சிதைக்காதே : திரை ஆர் பொருநை தடம் துறைவா - ! சிறியேம் சிற்றில் சிதையேல் -; (எ. று.)

வள்ளை - கொடி வகை : மகளிர் வள்ளை கொய்யும் "(பதிற்றுப் 29, 2). இந்த வள்ளைக்கொடி காதுக்கு உவமை. குழை - காது : "மணித்தோடுங்குழையிலாட" (அஷ்டப்: சீரங்கநாயகி: ஊசல் : 3) கூடுபுனற்றுறை - சமூகதீர்த்தம் என்னும் திருமஞ்சனத்துறை. பால்மாறுதல் - பின்வாங்குதல் (backslide): "பணத்துக்குப் பால் மாருமல் அவர்கள் இஷ்டம் போற்கொடு "என்ற வழக்குண்மை கொண்டறிக. 'பொன் தகட்டில் வயிடூரியங்குயிற்றியமணிமுறம்' என்றதால் செல்வச்செழிப்புத் தெரிவித்தபடி : இது, வீறுகோளணியின்பாற்படும். முதலடியில், உம்மைதொக்கது. 'சிறுபேதையர்கள்' மடவாரொடும் போய்' என்றவிடத்து "தாயருகாநின்ற தைந்நீராடல் " என்பதை நினைக. முதலடியில் வந்த மடவார்சிறப்பு, மங்கலங்குறிப்பது. (77).

78. தருக்கா மலர்ப்பூம் பொழிலும் வயல்
தடமுந் தருதென் றிருப்பேரை
தழைக்கும் படிநூற் றெண்மர்தொழுந்
தாமோ தர ! சீ தர ! முகுந்தா !
ஒருக்கா லெனுமவ் விருக்காலும்
உணராப் பொருளே ! பரஞ்சுடரே !
ஒருவா னுதல்பண் டுளங்களிப்ப
உயர்வான் முகடு கிழித்தெழுந்து
மருக்கால் நறுமென் மலர்கொணர்ந்த
மதமோ பதினு யிரங்கோப

மங்கை யர்கள் புளகமுலே
மணந்து கனிவா யமுதுண்ட
செருக்கோ வுனக்கீ தியல்பன்று
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
திரையார் பொருநைத் தடந்துறைவா !
சிறியேஞ் சிற்றில் சிதையேலே.

(இ-ள்) தரு கா (வும்) - மரங்களேயுடைய சோலேகளேயும், மலர் பூம்பொழிலும் - பூக்களேயுடைய அழகிய சோலேகளேயும், வயல் தடமும் - கழனியிடங்களேயும், தரு - கொண்டுள்ள, தென் திருப்பேரை - தென்திருப்பேரைநகர், தழைக்கும்படி - செழித்துச் சிறக்கும்படி, நூற்று எண்மர் - நூற்றெட்டு ஜைமிநீயதலவகார, ஸாமவேதிகள், தொழும் - வழிபடுகின்ற, தாமோதர ! - , சீதர !- முகுந்தா - !, ஒருக்கால் - ஒருசமயம், எனும் - உன்னேயறிய வேண்டும் என்று எண்ணிய, அ இருக்காலும் - அந்த வேதத் தாலும், உணரா - அறியமுடியாத, பொருளே ! - பரம்பொருளே ! பரஞ்சுடரே ! - மேலான சோதியே!, பண்டு - முன் துவாபரயுகத்தில் (கிருஷ்ணுவதாரத்தில்) ஒரு வாணுதல்-ஒரு பெண் [ஒப்பற்ற சத்திய பாமை] உளம் களிப்ப - மனம் மகிழும்படி, உயர் வான் முகடு கிழித்து எழுந்து - ஓங்கிய ஆகாயவுச்சியினே யூடுருவிச்சென்று, மரு கால் - வாசனேயை வெளியிடுகின்ற, நறு மென்மலர் - நல்ல மெல்லிய பாரிஜாத மலர்பூக்கும் தருவை, கொணர்ந்த - (இந்திர லோகத்திலிருந்து கருடன்மேலேற்றிக்) கொண்டு வந்த, மதமோ - செருக்கோ ?: பதிஞயிரம் கோப மங்கையர்கள் - பதிஞயிரம் கோப ஸ்திரீகளின், புளகம் முலே மணந்து - மயிர்க்கூச்செறிந்த கொங்கை களேத் தழுவியிருந்து, (மேலும் அவர்களது) கனிவாய் அமுது உண்ட - கொவ்வைக்கனிபோற் சிவந்தவாயினிடத்து அமுதநீரைப் பருகியதனுலான, செருக்கோ - அகந்தையோ ?: உனக்கு - , ஈது - இச் செயல் செய்தல், இயல்பு அன்று - தகாதது : சிறியேம் சிற்றில் சிதையேல் — ; திரை ஆர் பொருநைத்தடம் துறைவா ! -, சிறியேம் சிற்றில் சிதையேல் —; (எ. று.).

தேவலோகத்துத் தருவைப்பூவுலகுக்குக் கொணர்தலும், கோபி யர்களேத் தழுவி வாயமுதுண்ணுதலும் உனக்குத்தகும் என்ற செருக்கிஞல் சிறியேமாகிய எங்கள்சிற்றிலேச் சிதைக்கலாமா ! இது தகாதசெயலேயாகும். சத்தியபாமை, கோபஸ்திரீகளேப்போலவா நாங்கள் : நாங்கள் சிறியேம் : எளியேம் என்று பிரார்த்தித்தபடி

என்க. பதினுயிரம் கோபியர் எனஞர் திருமேனிக்கவிராசர் : பதினு ருயிரம் என்பது மரபு : "பதினாறுமாயிரவர் தேவிமார் பார்த் திருப்ப" என்றுள் ஆண்டாள் (நாச் : திரு : 7 - 9) அவர் தந்தை யார் "பதினாறுமாயிரவர் தேவிமார் பணிசெய்ய" என்றுர். (4-9-4). 'கா' என்பதன்பின் உம்மை தொக்கது, 'ஒருக்கால்... இருக்கால் - சொன்னயம் காண்க. வாணுதல் - ஒளிபொருந்திய நெற்றி : நெற்றியையுடையாளுக்கு - அடையடுத்த சினையாகுபெயர். 'மரு' வாசனையென்று பொருள்படுதலால் 'நறு' என்பது நன்மை (Excellence) என்ற பொருளில் வந்தது : "புனைவினைப்பொலிந்த பொலநறுந்தெரியல்" (புறம் : 29. 3) (நறு - நல்ல என்றது பழைய வுரை) "மதமோ, செருக்கோ" என்று வினவுவதிலே சிறுமியர் செருக்குத் தொனித்தல் சுவைக்க. (78).

79. கோவே ! கோவா மரகதமே !
கொடும்போ ரரக்கர் குலக்கூற்றே !
குளிர்பூந் துளவத் திருத்தொங்கல்
குவவுத் தடந்தோட் காயாவாம்
பூவே ! பூவின் பொலன்பொகுட்டுப்
புதுமென் மணமே ! யருள்சுரந்து
பொங்கிப் பெருகி யுவட்டெறிந்து
பொழியும் புயலே ! கற்பகப்பூங்
காவே ! முதுகோ சலைதவமே !
கண்ணே ! கண்ணி னுண்மணியே !
கதிர்நித் திலவெண் மணல்நினது
காலி னுறுத்தல் கடனன்றே
தேவே ! தேவப் பெருமானே !
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
திரையார் பொருநைத் தடந்துறைவா !
சிறியேஞ் சிற்றில் சிதையேலே.

(இ-ள்) கோவே - ! மன்னனே ! கோவா மரகதமே ! - கோக்கப் படாத பச்சைரத்தினமே ! கொடும் போர் அரக்கர் குலக்

கூற்றே ! - கொடியயுத்தத்தைச்செய்கின்ற ராட்சசர்களின் குல காலனே ! குளிர்பூந் துளவம் திரு தொங்கல் - குளிர்ந்த அழகிய துளசிமாலையைத்தரித்த, குவவு தட தோள் - திரண்ட பெரிய தோள் களையுடைய,காயாவாம் பூவே!-காயாம் பூப்போல் கருநிறம் படைத்த வனே! பூவின் - தாமரைப்பூவின், பொலன் பொகுட்டு - அழகிய கொட்டையினின்று எழும், புது மென் மணமே!-புதியமென்மையான பரிமளமே ! அருள் சுரந்து - கருணையூறி, பொங்கி - மேல்வந்து, பெருகி - ஒழுகி, உவட்டு எறிந்து - வெள்ளமிட்டு, பொழியும் - சொரியும், புயலே ! - மேகமே ! கற்பகப்பூங் காவே ! - கற்பகச் சோலையே ! முது கோசலை தவமே - (தசரதரின்) மூத்தமனைவியாகிய கௌசல்யாதேவியின் தவப்புதல்வனே ! கண்ணே - (எங்கள்) கண் போன்றவனே ! கண்ணின் நுண் மணியே ! - கண்ணுக்குள்ளிருக் கும் நுண்ணிய மணிபோன்றவனே ! கதிர் நித்திலம் வெண் மணல் - ஒளிருகின்ற முத்துக்களைக்கொண்ட வெள்ளியமணல், நினது காலின் உறுத்தல் - உன்னுடைய (மென்மையான) அடி களில் குத்துதல், கடன் அன்று - முறையன்று : தேவே ! - இறை வனே ! தேவப் பெருமானே ! - தேவர்களுக்குத் தலைவனே ! சிறி யேம் சிற்றில் சிதையேல்- ; திரை ஆர் பொருநைத்தடம் துறைவா ! -, சிறியேம் சிற்றில் சிதையேல் -; (எ. று.).

இச்செய்யுளில் வந்துள்ள பதின்மூன்று விளிகளும் ஆசிரி யரின் பக்திப்பரவசத்தைக் காட்டுவதாக அமைந்துள்ளது. 'கதிர் நித்தில வெண்மணல் நினது காலினுறுத்தல் கடனன்று' என்ற விடத்து "கதிர் நித்திலமும் உமையம்மை, கண்ணிலுறுத்த அடி கேள் ! நின்காலினுறுத்தல் கடனன்ருல்" என்ற முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ் அடிகள் நினைக : (சிற்றில் - 2). கோவா மரகதம் - பிறகுறிப்பு : வெளிப்படை. காயாம் பூவைத் திருமா லின் நிறத்திற்கு ஒப்புக்கூறுவர். இது பூவைநிலை யென்னும் புறத் துறையின்பாற்படும். "கறவை காவலன் நிறனொடு பொரீஇப், புறவலர் பூவைப் பூப்புகழ்ந் தன்று" என்றது புறப்பொருள் வெண் பாமாலை, "மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின், தாவா விழுப் புகழ் பூவைநிலையும்" என்றது தொல்காப்பியம் : (புறத்திணை யியல் - சூ 5.). "காயா வண்ணன்" (நாச் : திரு. 1-6), "காயா மலர்காள் ! திருமால் உருவொளி காட்டுகின்றீர்" (நாச் : திரு : 9 - 3) முதலியன நோக்குக. (காயாமலர் - memecylon). மர கதமே, பூவே, மணமே, புயலே, காவே, தவமே, கண்ணே, கண்மணியே, - இந்த விளிகள் உருவகம். (79).

80. வன்னக் களபப் புளகமுலை
மடவா ரெனுங்கோ வியர்கள்திரு
வாய்ப்பா டியிற்புக் களைகவர்ந்த
மணிவாய்க் கள்வ னென்றுகட்டி
உன்னிப் பொருமி யழவடித்த
துண்டே லவர்கள் விளையாடும்
ஒளிர்நித் திலவெண் மணற்சிற்றில்
உனக்கின் றழிக்க முறைகண்டாய்
கன்னிக் கமுக மிடறுடியக்
காய்க்கும் பசுங்காய்க் குலைசிதறக்
கதலிக் குலங்க ளடிசாயக்
கயல்பாய்ந் துளைந்து வாலறையுஞ்
செந்நெற் பழனத் திருப்பேரைச்
செல்வா ! சிற்றில் சிதையேலே
திரையார் பொருநைத் தடந்துறைவா !
சிறியேஞ் சிற்றில் சிதையேலே.

(இ - ள்) வன்னம் களபம் புளகம் முலை - அழகிய சந்தனம் பூசப்பட்டு மயிர்கூச்செறியும் கொங்கைகளைக் கொண்ட, மடவார் எனும் கோவியர்கள் - பெண்கள் என்று பேசப்படும் கோபியர்களின், திருவாய்ப்பாடியில் புக்கு - கோகுலத்திற்புகுந்து, அளை கவர்ந்த - வெண்ணெயைத் திருடிய, மணிவாய் - அழகிய வாயினையுடைய, கள்வன் என்று கட்டி - திருட்டுப் பையன் என்று தாம்பினால் பிணித்து; உன்னி - உற்று (உன்னை) உருத்துப்பார்க்க, (நீ) பொருமி அழ – விம்மி யழும்படி, அடித்தது உண்டேல் - (மத்தினால்) அடித்தது உண்மையானால், அவர்கள் விளையாடும் - அவர்கள் [வண்டலிழைத்து] விளையாடுகின்ற [இடத்திலுள்ள], ஒளிர் நித்திலம் வெண்மணல் சிற்றில் - பிரகாசிக்கின்ற முத்துக்களைக் கொண்ட வெள்ளிய மணலாலாகிய சிறு வீடுகளை, இன்று-இப்போது, அழிக்க - சிதைக்க, உனக்கு முறை - உனக்குத் தகுதியாகும் :

கன்னிக் கமுகு மிடறு ஒடிய - இளைய கமுகமரத்தின் கழுத்து தாழும்படி, காய்க்கும் பசுங்காய் குலை - காய்த்திருக்கின்ற பச்சைப் பாக்கின் குலைகள், சிதற - சிதறிவிழும்படியும், கதலிக்குலங்கள் - வாழைமரங்கள், அடி சாய - கீழ்ப்பகுதி சாயும்படியும், கயல் பாய்ந்து உளைந்து - கயல் மீன்கள் தாவியொலித்து, வால் அறையும் - (தங்களது) வாலை அக் குலைகளின் மீதும் அடிப்பகுதிமீதும் [விசையோடு] அடிக்கும், செந்நெல் பழனம் திருப்பேரை - செந்நெற்பயிர்கள் விளையும் வயல்களைக் கொண்ட திருப்பேரைநகரின், செல்வா! -, சிற்றில் சிதையேல் - : திரை ஆர் பொருநைத்தடம் துறைவா! –, சிறியேம் சிற்றில் சிதையேல் —; (ஈறு).

குலை சிதற, அடிசாய வாலறையும் என இயையும், உளைத்தல் - ஒலித்தல், "கடலுளைப்பதும்" (கம்பரா : கிட் : நட்புக் : 45). "நாங்கள் சிறுமியர், அவர்கள் முலைமடவார் ஆதலின் அழிக்க முறை" என்றது தொனி. "தீராத வெகுளியளாய்ச் சிக்கென ஆர்த்தடிப்ப" என்றவிடத்து (சிறிய திருமடல், கண்ணி - 36), "இது அபிநயமாத்திரம்" என்று வியாக்யாநமிட்டார் பெரிய வாச்சாச்சான்பிள்ளை : அதுபோலே ஈண்டும் "அடி அடித்த துண்டேல்" என்கிறார்கள் எனக்கொள்க "கள்வன் என்றுகட்டி" என்ற விடத்து அறியவேண்டுவதொன்றுண்டு : அஃதாவது - வெண்ணெய் கொள்ளுதல் முதலிய தொழில்களைச் செய்தலால் இந்தப் பட்டப் பெயர் பெற்றானாயினும், அவனைக் 'கள்வன்' என்றல் தகாது என்றார் திவ்யகவி தமது "நூற்றெட்டுத்திருப்பதியந்தாதி"யில் (செ : 85) அஃது வருமாறு "பண்டேயுன் றெண்டாம் பழவுயிரை யென்னதென்று, கொண்டேனைக் கள்வனென்று கூறாதே — மண்டலத்தோர், புள்வாய் பிளந்த புயலே யுனைக்கச்சிக் கள்வாவென் றோதுவதென் கண்டு" என்பது. (80),

81. பண்ணே றியமென் குதலைமொழிப்
பவளக் கனிவாய்க் குறுநகையும்
பாரித் தோங்கிப் பூரித்த
பைம்பொற் புயமுங் கண்டழகு
கண்ணே றெளியேம் பட்டனமென்
றெண்ணிக் கருத்து வேறுபடக்
கணக்கன் றுலகில் மன்னுயிர்க்குக்
காவற் கடவுள் நீயன்றே

மண்ணே ழையுமுண் டுமிழ்ந்தளந்த
மாலே ! வேலைப் புனல் சுவறி
மறுகக் கணைதொட் டிடுமுகுந்தா !
வருணன் றினமா ராதனைசெய்
தெண்ணீர்ப் பொருநைத் தடந்துறைவா !
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
தெளிக்குந் தமிழ்த்தென் றிருப்பேரைச்
செல்வா ! சிற்றில் சிதையேலே.

(இ - ள்) பண் ஏறிய மென் குதலை மொழி - இராகம் போல் சுவையுள்ள மெல்லிய இனிய பேச்சினையும், பவளக் கனிவாய் - பவளம் போற்சிவந்த இனிய வாயினையும், குறு நகையும் - புன்சிரிப்பினையும், பாரித்து ஓங்கிப் பூரித்த பைம்பொன் புயமும் - தோன்றி உயர்ந்து பருத்த அழகிய தோள்களினையும், கண்டு - (நீ) பார்த்து, (அதனால்) எளியேம் - சிறுமியராகிய நாங்கள், அழகு - எங்களது அழகினால், கண்ணேறு பட்டனம் என்று- (உன்னுடைய) திருஷ்டிதோஷம் அடைந்துவிட்டோம் என்று, எண்ணி - நினைத்து, கருத்து - (உன்மேல் வைத்துள்ள) மனம், வேறுபடக் கணக்கன்று - மாறுபட நியாயமில்லை : (ஏனெனில்) உலகில் - இந்நிலவுலகத்தி லுள்ள, மன்னுயிர்க்கு - நிலைபெற்ற ஜீவன்களுக்கு, காவற் கடவுள் நீ அன்றோ! - பாதுகாப்பளிக்குந் தெய்வம் நீயல்லவா? (நீயேதான்) : [ஆகவே], மண் ஏழையும் உண்டு உமிழ்ந்து அளந்த மாலே! - ஏழு தீவுகளையும் புசித்துப் பின்னர் வெளியே உமிழ்ந்து அவற்றை அளவிட்ட திருமாலே! வேலை - கடல், புனல் சுவறி-நீர் வற்றி, மறுக - வருந்தும்படி, கணை தொட்டிடு - ஆக்னேயாஸ்திரத்தைத் தொடுத்த, முகுந்தா - முகுந்தனே ! வருணன் தினம் ஆராதனை செய் - வருணபகவான் நாடோறும் பூஜை செய்கின்ற, தெள் நீர் பொருநை தடம் துறைவா ! - தெளிந்த நீரையுடைய தாமிரபரணி யின் விசாலமான துறைகளுக்குத் தலைவனே ! சிறியேம் சிற்றில் சிதையேல் - : தெளிக்கும் தமிழ்த் தென்திருப்பேரை - ஆராய்ந் தெடுத்த சாரமான தமிழ்பயிலும் தென்திருப்பேரை நகரின், செல்வா! - , சிற்றில் சிதையேல் — ; (எ.று.)

குதலை - இனிய மொழி : "குதலைச் செவ்வாய்க் குறுந்தொடி மகளிர்" (சிலப் : 30, 114), இனி, மழலைச்சொல் எனினுமாம் : "மழலை எக்காலத்திற்கும் கூறுப '(சீவக: நாமக : 152 நச்சி: உரை)'

கனி-இனிமை (சூடா : நிகண்டு) கண்ணேறு = கண்ணூறு : திருஷ்டி தோஷம். நீ காவற்கடவுளாதலின் உன்திருஷ்டியால் எங்களுக்குத் தோஷம் வராது. அதற்குமாருகச் சகல நன்மைகளும் உண்டாகும். ஆகவே நாங்கள் மனத்துப்பகைகொள்ள மாட்டோம். மண்ணேழையும் உண்டது -மகாபிரளயத்தின்போது. அளந்தது -திரிவிக்கிரமனுனபோது. பாரித்தல் -தோன்றுதல் : "பகல் செய் மண்டிலம் பாரித்தாங்கு" (பெரும்பாண் : 442). பட்டனம் - தன்மைப்பன்மை வினைமுற்று. ஆராதனை - திருவாராதனம் : பூசனை. இதற்குத் திரிகாலஸ்நானம் வேண்டுதலின் முன்னர் செய்யுள் 66 - இல் "வருணனுதரிக்கும் **திருசந்திச்** சமுகத்தீர்த்தத்துறை" என்றது நினைக. (81)

82. தடிக்குஞ் சிகரப் படாம்பொதிந்த
தடமா முலைக்குங் குமச்சுவட்டுத்
தழைக்குங் குறுங்கண் சாந்தொழுகித்
தருபா லசோதை மகிழ்ந்தூட்டக்
குடிக்கும் புயலே ! யிலங்கையில்வெங்
கொடும்போ ரரக்கர் குலக்கூற்றே !
குனிக்குஞ் சிலைக்கைத் தடக்களிறே !
கோவே ! பசுந்தண் டுழாய்மாலை
முடிக்கும் பொருளே ! முத்தொழிற்கும்
மூவா முதலே ! யழியாத
முத்திக் கொருவித் தாகவந்து
முளைக்கும் பொருளே ! பாகுபெற
வடிக்குந் தமிழ்த்தென் றிருப்பேரை
மாலே ! சிற்றில் சிதையேலே
மகரக் குழையே ! நூற்றெண்மர்
வாழ்வே ! சிற்றில் சிதையேலே.

(இ - ள்) தடிக்கும் சிகரம் – திரண்ட உச்சிமேல், படாம் பொதிந்த - சீலையையிட்டு மூடிய, தட மா முலை-பருத்த பெரிய முலை

யில், குங்குமச்சுவடு தழைக்கும் - பூசிய குங்குமச் சாந்தின் அடையாளம் நன்கு தெரிகின்ற, குறுங்கண் - சிறிய முலைக்காம்பினிடத்து, சாந்து ஒழுகி - சந்தனம் [கலந்து] இலேசாக ஒழுக, தரு - கொடுத்த, பால் - முலைப்பாலை, அசோதை - யசோதை, மகிழ்ந்து ஊட்ட - சந்தோஷமாக ஊட்ட, குடிக்கும் - (அதனை) உறிஞ்சிப் பருகும், புயலே - மேகமே! இலங்கையில் - இலங்கை மாநகரில், வெம் கொடும் போர் அரக்கர் குலம் கூற்றே! - கடிய கொடிய போரைச் செய்த அரக்கர்களின் குலத்திற்கு யமன் போன்றவனே! சிலை குனிக்கும் கை - வில்லை (நன்கு) வளைத்துத் (துட்டர்களை) (யொழிக்கும்) கையையுடைய, தடக் களிறே! - பெரிய யானை போன்றவனே! கோவே! - தலைவனே! பசும் தண் துழாய் மாலை முடிக்கும் பொருளே! - பச்சை நிறமுள்ள குளிர்ந்த திருத்துழாய் மாலையைச் சூடும் பரம்பொருளே! முத்தொழிற்கும் - படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்று தொழில்களைச் செய்து வரும், மூவா - (என்றைக்கும்) கெடாத. முதலே! -முதற்கடவுளே! அழியாத முத்திக்கு - (என்றைக்கும்) அழிவில்லாத முக்திக்கு, ஒரு வித்தாக வந்து - ஒப்பற்ற முதற்காரணமாக வந்து, முளைக்கும் - அவதரிக்கின்ற, பொருளே! - மூலப்பொருளே! பாகு பெற வடிக்கும் தமிழ் - வெல்லப்பாகு போல இனிமை பெறச் சாரமாகப்பிழியும் தமிழ் பயிலும், தென்திருப்பேரை மாலே-!, சிற்றில் - சிதையேல் -: மகரக் குழையே! - மகரநெடுங்குழைக்காதரே!, நூற்றெண்மர் வாழ்வே! - ஜைமிநீயதலவகார சாமவேதிகள் நூற்றெட்டுப்பேருக்கும் நல் வாழ்வளிப்பவனே! சிற்றில் சிதையேல்—; (எ, று.)

அழியாத முத்தி -,அந்தமிலின்பத்தழிவில் வீடு என்றார் பரிமேலழகர் (உரைப்பாயிரம்). வித்து - மூலகாரணம். முளைத்தல் - அவதாரஞ் செய்தல்: ''வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை'' என்றாள் ஆண்டாளும். பாகு - இனிமை பயப்பது. ''இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும்'' என்பது திவாகரம். புயலே, களிறே, - உருவகவிளிகள், 'முடிக்கும் பொருளே', முளைக்கும் பொருளே! என்றது - எல்லாம் அவனே என்பதைக் காட்டுவதெனலாம். துழாய்மாலை - திருமாலுக்குரியது: பரத்துவம் காட்டுவது. (82).

83. கொத்தோ டசையப் பசுந்துளவங்
குடக்கூ டரும்பி முளைத்தெழுந்து
கொழிக்குந் தவளப் பிறைநுதலிற்
குறுவேர் வொழுக வணிந்தசுட்டி

முத்தா னதுவெண் ணிலவெறிப்ப
முகத்தா மரையி னகையிலங்க
முதுகுண் டலமும் வார்காது
முழுமா மணிப்பொற் சோதிவிட
அத்தா ! வருணன் றினம்பரவும்
அரி ! கே சவ ! நா ரண ! முகுந்தா !
அடல்வா ளரவிற் கண்டுயிலும்
ஆழிப் புயலே ! யாய்ச்சியர்கை
மத்தா லடிப்ப வெண்ணெயுண்ட
வாயா ! சிற்றில் சிதையேலே
மகரக் குழையே ! நூற்றெண்மர்
வாழ்வே ! சிற்றில் சிதையேலே.

(இ-ள்) பசும் துவளம் கொத்தோடு அசைய - கொத்தாக இடப்பட்ட பச்சைத்துளவமாலை மார்பில் அசைந்தாடவும், குடக்கு ஊடு அரும்பி - மேற்குத்திசையில் கீற்றுக அரும்பி, முளைத்து எழுந்து - சற்றுநன்குதெரியும்படி மேலெழுந்து, கொழிக்கும் - நிலவை உமிழும், தவளம் பிறை - வெள்ளிய பிறைச் சந்திரன்போல் (வளைந்த), நுதலில் - நெற்றியில், குறு வேர்வு ஒழுக - சிறுதுளியாக வேர்வையொழுக, அணிந்த சுட்டிமுத்தா னது - சூட்டியசுட்டியிலுள்ள முத்தானது, வெள் நிலவு எறிப்ப - வெண்மையான ஒளியை வீசவும்; முகத்தாமரையில் - தாமரை மலர்போன்ற முகத்தில், நகை இலங்க - பற்கள் (அழகாக) விளங் கவும் ; முது குண்டலமும் - பெரிய குண்டலமும், வார் காது - நீண்ட காதினில் (அணிந்துள்ள), முழு மாமணி - முற்றும்சிறந்த மணிகளால் அமைந்த குழையும், பொன் சோதி விட - பொன் போல் ஒளிவிடவும் ; (நீ வந்து) சிற்றில்சிதையேல் எனமேல் இயையும், (இனி) அத்தா ! மேலோனுகிய விட்டுணுவே ! வருணன் தினம் பரவும் அரி ! வருணபகவான் தினந்தோறும் துதிக்கின்ற ஹரியே ! கேசவ ! -, நாரண !-, முகுந்தா ! -, அடல் வாள் அரவில் - வலிய ஒளியுள்ள ஆதிசேடன்மேல், கண்துயிலும் - யோகநித்திரை கொள்ளும், ஆழிப் புயலே ! - பாற்கடல் மேகமே ! ஆய்ச்சியர் - (கோகுலத்து) இடைச்சியர், கைமத்தால் அடிப்ப -

கையிற்கொண்ட மத்தினால் அடிக்கும்படி, வெண்ணெய் உண்ட வாயா !- (அவர்கள் மனையிலுள்ள) வெண்ணெயைக் களவாடித் தின்ற வாயையுடையவனே ! சிற்றில் சிதையேல் - : மகரக் குழையே! - நூற்றெண்மர் வாழ்வே ! -, சிற்றில் சிதையேல்-; (எ.று.).

பிறையாதலின், 'குடக்கு' கூறினார். 'நித்திலச்சுட்டி சாத்தி-என்றார் குமரகுருபரரும். (மீனாட்சி, பிள்ளை : செங் -1). நகை - புன்சிரிப்புமாம். முதுமை - பெருமை. வார் காது - தொங்கும்காது, தழைந்தகாது என்றபடி. 'மணி' யென்பதன்பின் உம்மை தொக்கது. பிறைநுதல் - உவமைத்தொகை. முகத்தாமரை - உருவகம். அத்தா - பரத்துவமும், மத்தால் அடிப்ப - சௌலப்யமும் காட்டும், அசைய, எறிப்ப, இலங்க, (சோதி) விட -, என்ற எச்சங்கள் அடுக்கி 'வந்து' என்ற சொல்லெச்சத்தோடு முடிந்தன எனக் கொள்க. (சொல்லெச்சமாவது - பொருள் முடியாதபோது அது முடித்தற்கு எஞ்சியசொல் வருவது). (83).

84. அன்போ டணைத்து முலைகொடுத்தின்
னமுதூற்றிருக்கும் புனலாட்டி
அருங்கட் கடைக்கஞ் சனமெழுதி
ஆரந் திருத்திப் பட்டுடுத்தி
உன்பே ரிடுவே னென்குழவிக்
குள்ள தயவாற் றனிசமைத்த
உயர்மா ளிகையு மாடரங்கும்
ஒளிர்வே திகையு நீயழிக்க
வன்பா லோடி வரவுனக்கு
வழக்கன் றுலகிற் சிறுபேதை
மகளி ரிருந்து விளையாடும்
வண்டற் றுகள்சே வடிபடுமே
தென்பே ரையினங் குலநாத !
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
திரையார் பொருநைத் தடந்துறைவா !
சிறியேஞ் சிற்றில் சிதையேலே.

(இ - ள்) அன்போடு அணைத்து - ஆசையோடு கட்டித் தழுவி யணைத்து, இன் அமுது ஊற்றிருக்கும் முலை கொடுத்து - இனிய பால் சுரந்து நிறைந்திருக்கும் முலை யூட்டி, (பின்னர்) புனல் ஆட்டி - [கடாரத்தில் பூரித்து வைத்த] நீரில் குளிப்பாட்டி, அரும் கண் கடைக்கு - அழகிய கடைக்கண்ணுக்கு, அஞ்சனம் எழுதி - மையிட்டு, ஆரம் திருத்தி - முத்து மாலையைச் சரிசெய்து, பட்டு உடுத்தி (அரையில்) வெண்பட்டினையுடுத்தி, என் குழவிக்கு - என் குழந்தைக்கு (என் வண்டற் பாவைக்கு), உன் பேர் இடுவேன் - உன்னுடைய (நல்ல) பேரை வைப்பேன் : (எனவே) உள்ளம் தயவால் - மனத்துக் கருணையினால், தனி சமைத்த - தனியாக நான் (வண்டலிழைத்துக்) கட்டியுள்ள, உயர் மாளிகையும் - உயர்ந்த மாளிகையையும், ஆடு அரங்கும் - நடன சாலையையும், ஒளிர் வேதிகையும் - விளங்குகின்ற திண்ணையையும், நீ அழிக்க - நீ சிதைக்க, வன்பால் - பலாத்காரத்தோடு, ஓடி வர - வேகமாக ஓடிவருதல், உனக்கு உலகில் வழக்கன்று - உனக்கு இவ்வுலகில் நியாயமாகாது: (உலகு பழிக்கும்): (இதுகிடப்ப)சிறு பேதை மகளிர்-மடச்சிறுமியராகிய நாங்கள்,இருந்து (முதுகு நோவ) இருந்து, விளையாடும் - இழைத்து விளையாடுகின்ற, வண்டல் துகள் - வண்டல் புழுதி, சேவடி படுமே - உன் சிவந்த பாதங்களில் பட்டு மாசுபடுத்துமே : (ஆகையால்) தென்பேரையில் நம் குலநாத - தென்திருப்பேரையிலுள்ள எங்கள் குலத்துக்கு முதல்வனே! சிறியேம் சிற்றில் சிதையேல் -. திரை ஆர் பொருநைத்தடம் துறைவா—, சிறியேம் சிற்றில் சிதையேல்-; (எ. று.)

இச்செய்யுள் விளையாடும் வண்டன் மகளிருள் ஒருத்தி கூறுவது போல் செய்யப்பட்டுள்ளது. உன்பேர் - மகரநெடுங்குழைக்காதன் என்பது [அது மகரபூஷணன் எனவும் வரும்] "உன் பேரிடுவேன்". என்றதால் அவன் மன மகிழ்ந்து சிற்றில் சிதைக்காது போவன் என்பது உட்கிடை., வேதிகை - திண்ணை; மணமேடையுமாம். சேவடி - பண்புத்தொகை. படுமே - ஏகாரம் இரக்கங்குறிப்பது. 'எங்குலநாத!' என்றும் பாடமிருக்கலாம். முதலடியில் ஒரு தாய் தன் மகவைக் கொஞ்சிக் கோலஞ்செய்தல் தன்மைநவிற்சியணி படக் காட்டப்பட்டுள்ளது. வர - வினையெச்சம் தொழிற்பெயர்த் தன்மைப்பட்டது. (84)

சிறுபறைப் பருவம்

85. வானுடர் முப்பத்து முக்கோடி யுஞ்சது
மறைக்கடவு ளுன்முகவனும்
மழுவலா ளனுமறு முகச்செம்ம லுங்கைம்
மலைக்கோட்டு வேழமுகனும்

ஏனோரும் வச்சிரக் குலிசபதி யுமகிழ்ந்
தெண்டிசா முகப்பாலரும்
இருவிழியு மிருசெவியு மிதயதா மரைமலர்ந்
தெக்கால முந்தழையவே
கானூறு பச்சைப் பசும்பூக மடல்விண்டு
கக்குங் கொழும்பிரசமுங்
கதலிக் கொழுங்கனி யுடைந்துவழி மதுவுங்
கலந்தோடி யலைமண்டியத்
தேனூறு பாயும்வயல் சூழ்வழுதி நாடனொரு
சிறுபறை முழக்கியருளே
தென்றிருப் பேரைவரு நங்குழைக் காதமுகில்!
சிறுபறை முழக்கியருளே.

(இ-ள்) முப்பத்துமுக்கோடி வானுடரும் - முப்பத்துமூன்று கோடிதேவர்களும், சதுமறைக்கடவுள் நான்முகவனும் - நான்கு வேதங்களையோதும் இறைவனாகிய பிரமனும், மழுவலாளனும் - மழுப்படையையேந்திய சிவபெருமானும், அறுமுகச் செம்மலும் - ஆறுமுகக்கடவுளாகிய முருகனும், கைம்மலைக்கோட்டு வேழமுகனும் - யானைத்தந்தத்தோடு யானை முகத்தையுடைய விநாயகனும், வச்சிரக்குலிசபதியும் - உறுதியான வச்சிராயுதத்தையுடைய இந்திரனும், மகிழ்ந்து எண்திசாமுகப்பாலரும் - களிப்புற்று எட்டுத் திக்குப்பாலகர்களும், ஏனோரும் - மற்றைத் தேவதைகளும், இருவிழியும் இருசெவியும் இதயதாமரை (யும்) மலர்ந்து - (தங்களது) இரண்டுகண்களும் இரண்டு காதுகளும் மனத்தாமரையும் விகசித்து, எக்காலமும் தழைய - எப்போதும் (அவர்களுக்கு) நல்வாழ்வுசெழிக்கும்படி, (சிறுபறைமுழக்கியருள் என மேலியையும்).

கான் ஊறும் - வாசனையூறிவீசுகின்ற, பச்சைப் பசும் பூகம் - மிகப்பசுமையாயுள்ள கமுகங்குலை, மடல் விண்டு - (தனது) மடல்கள் விரிந்து, கக்கும் கொழும் பிரசமும் - வெளியேசொரியும் செழித்த தேனும், கதலிக் கொழும் கனி உடைந்து - வாழையினது கொழுத்துப்பருத்த பழங்கள் சிதைந்து, வழி மதுவும் - வழிகின்ற தேனும், கலந்து ஓடி - ஒன்றாகச் சேர்ந்து (ஆறாக) ஓடி,

அலேமண்டி - அலேகளை நெருங்கவெறிந்து, தேறுறு பாயும் - (பெரிய) தேளுருகப் பாய்கின்ற, வயல் சூழ் வழுதிநாடன் ! - கழனிகள் சூழ்ந்த பாண்டிநாட்டுக்குரியவனே ! ஒரு சிறுபறை முழ்க்கியருள் - ஒப்பற்ற சிறிய பறையை (க்கொட்டி) முழக்குவா யாக : தென்திருப்பேரை வரு - தென்திருப்பேரைநகரில் வந்து கோயில்கொண்டுள்ள, நம் குழைக்காத முகில் - நம் மகர நெடுங்குழைக்காதராகிய (நிகரில்) முகில்வண்ணனே ! சிறுபறை முழக்கியருள்—; (எ. று.).

'தழையவேமுழக்கியருள்' என இயையும். ஒண்திசாமுகப் பாலர் - அஷ்டதிக்குப்பாலகர், அவராவார்— இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்பவர். 'கதலிமதுவும்' என்றவிடத்து "வாழையுதிர் வீழ்கனிகள் ஊறி வயல்சேறுசெயும் வைகாவிலே" என்ற சம்பந்தர் வாக்கு நினைக. மறைக்கடவுள் நான்முகவன் , வச்சிரக்குலிசம் - இருபெயரொட்டு, திசா - வடசொல் : இது 'திசை' எனத்தமிழில்வரும் ; ஆவீறு ஐயான வடசொல். இதயதாமரை - உருவகம். இச்சொல்பின்னர் உம்மைத்தொக்கது. கொழுங்கனி - பண்புத்தொகை. (85).

86\. பூவாருங் கொன்றைச் செழுஞ்சடா டவிமுடி

புனிதபூ ரணனிரட்டும்

பொற்றுடி யெனச்சொற் றிறம்பாத கனகவிப்

புலவர்திண் டிமமென்னவும்

மேவுகதிர் மணிமகுட கோடிநிபு டஞ்செயும்

விருதரசர் மணிவாசலின்

விதரணக் கொடைவெற்றி மணவொலி கறங்கு தெரு

வீதிமும் முரசமெனவுந்

தாவுசீ ரிட்டுடன் விசித்திறுக் கித்தொனி

தழைத்ததொண் டகமென்னவுந்

தவறுது சதிமுறையி னண்டகோ ளகைமுகடு

தடவியது செவிடுபடவோர்

தேவதுந் துபியெனத் திருவழுதி வளநாட !
சிறுபறை முழக்கியருளே
தென்றிருப் பேரைவரு நங்குழைக் காதமுகில் !
சிறுபறை முழக்கியருளே.

(இ - ள்) பூ ஆரும் கொன்றை – பூக்கள் நிறைந்த கொன்றை மாலையை, செழும் சடா அடவி முடி - தொகுதிப்பட்ட சடைக் காட்டிலே சூடியுள்ள, புனித பூரணன் - தூய நிறைவுடையனாகிய சிவபிரான், இரட்டும் - மாறி, மாறி அடித்து ஒலிக்கச் செய்கின்ற, பொன் துடி என - அழகிய உடுக்கையென்று சொல்லும்படியும் ;

சொல் திறம்பாத - சொன்ன சொல் மாறாத, கன கவிப் புலவர் - மாண்பு மிக்க வாதஞ் செய்யும் புலவர்கள், (முழக்கும்) திண்டிமம் என்னவும் - திண்டிமப்பறையென்று சொல்லும்படியும் ;

மேவு கதிர் மணி மகுடம் கோடி - பொருந்திய ஒளி விடுகின்ற மணிகள் பதித்த கிரீடங்கள், பல, நிபுடம் செய்யும் - நெருக்கத்தையுண்டாக்குகின்ற, விருது அரசர் மணிவாசலில் - சிறப்புடைய மன்னரின் அழகிய அரண்மனை வாசலில், விதரணம் கொடை - தயாள குணத்தோடு கொடுக்கும் தானம், வெற்றி - பெற்றுள்ள வெற்றிகள், மணம் - நிகழும் திருமணம் போன்ற மங்கல நிகழ்ச்சிகள் இவற்றைப் பற்றிய, ஒலி - முழக்கமானது, தெரு - குறுந்தெருக்களிலும், வீதி - பெருந் தெருக்களிலும், கறங்கு - ஒலிக்கச் செய்கின்ற, மும்முரசம் எனவும் - மூன்று முரசங்கள் என்று சொல்லும்படியும் ;

தாவு - பாய்ந்து குதித்தல் போன்ற துரிதத்தில், சீர் இட்டு - தாளத்தையமைத்து, உடல் விசித்து - பறையின் (ஓரம் தவிர்த்த முக்கிய) நடுப்பகுதியைத் தோல் வாரினால் இறுகக்கட்டி, இறுக்கி - மேலும் அழுத்தமாக இறுக்கி, தொனி தழைத்த - முழக்கவொலி (மேன்மேலும்) விருத்தியாகும், தொண்டகம் என்னவும்-தொண்டகப் பறை என்று சொல்லும்படியும் ;

சதி முறை தவறாது - தாளவொத்து பிழையுறாமல், அண்ட கோளகை முகடு - உலகவுருண்டையின் மேலுச்சியை, தடவியது - எட்டிய ஒலி முழக்கமானது, செவிடுபட – (கேட்காதபடி) கீழாகு மாறு, [பேரொலி செய்த] ஓர் தேவந்துபி என-ஒப்பற்ற தேவதுந்துபி என்று சொல்லும்படியும், திருவழுதிவள நாட ! — பாண்டிய

நாட்டுக்குத்தலைவனே ! சிறுபறை முழக்கியருள் - உன்னுடைய சிறுபறையைக் கொட்டுவாயாக : தென்திருப்பேரை வரு நம் குழைக்காத முகில்—, சிறுபறை முழக்கியருள் — ; (எ. று.)

துடியென, திண்டிமமென, மும்முரசமென, தொண்டகமென, துந்துபிஎன - என அடுக்கி 'முழக்கியருள்,' என முடியும். 'என - எண்ணிடைச்சொல்' : இது, 'என்ன' எனவும் வந்துள்ளது. சிவ பிரான் உடுக்கைக்கு 'டமருகம்' என்று பெயர். இரட்டுதல் - மாறி மாறியொலித்தல். திண்டிமம் - ஒரு வகைப்பறை ; "பெருங்கவிப் புலமைக்கு நீ சொன்னபடி திண்டிமங்கொட்ட" (திருச்செந் : பிள்ளை : சப்பாணி, 2) : திண்டிமத்தை முழக்கிக் கொண்டு. வாதஞ் செய்யுங்கவி திண்டிமகவி எனப்படுவன். 'மகுடகோடி' என்றது. சிற்றரசர்கள் தரித்திருப்பவை. அவர்கள் கிரீடமணிந்த தலைகளோடு பேரரசரைத் திறை செலுத்திப் பணிதற்கு நெருக்கமாகக் குழுமி யுள்ளனர். அப்பேரரசரின் மணிவாசலில் மும்முரசு ஒலிக்கும் என்ற படி. மும்முரசு, - கொடைமுரசு, வெற்றிமுரசு, மங்கலமுரசு என்பன : குமரகுருபரரும் "புலவோரை யழைத்திடு வண்கொடைமுரசமென, பொன்னுலகீன்ற அணங்கை மணம் புணரும் மணமுரசென்ன, செங்களவேள்வி செயும் திறன் முரசென என மும்முர சமுமதிர் காவிரி நாடன்" என்றார். (முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் : சிறுபறை : 8) விருதரசர் - பேரரசர் : விருது - பட்டம் கொடி முதலிய வெற்றிச் சின்னங்களாகிய சிறப்புக்கள். நிபுடம் = நிபிடம் : நெருக்கம் : "காலாள் நிபிடமாக (பாரத வெண்பா. 791. உரைநடை) விதரணம் - தயாள குணம் (Generosity). தெருவீதி - உம்மைத்தொகை. தாவுசீர் - துரிதநடைத்தாளம் : துரிதம் — தாள விரைவு : சீர் - தாளம்: (Time-measure) "தண் குரவைச்சீர்" (புறம். 24,6) சீர் இடுதல் - தாளம் அமைத்தல் : அதற்கேற்பப் பறையின் உடலாகிய நடுப்பகுதியிலுள்ள தோல்வார்களை விசித்தும் மேலு மிறுக்கியும் மிகுவொலியெழுப்புவர். தொண்டகப்பறை - குறிஞ்சி நிலப்பறை : ஆகோட்பறையென்பதுமுண்டு. உடல் விசித்து - உடலாவது-பறையின் ஓரம்(Border) ஒழிந்தபகுதி சதி-தாளவொத்து "நன் மாதர் சதிபட மாநடமாடி" (தேவாரம்' 118, 3) கோளகை- வட்ட வடிவம் : உருண்டை.

"சதி முறை முகடு தடவியது' என இயையும். அதாவது சதி முறையினொலி முகடு தடவியது என்றபடி. அங்ஙன் தடவியவொலி செவிடுபட தேவதுந்துபி முழங்கும். தடவியது - குறிப்பு வினையா லணையும்பெயர். செவிடுபடுதல் - கீழாதல். (86.)

87. கறைகொளுஞ் சமரில்வடி வாளொடு இராவணன்
கைகளிரு பதும்விழுதுபோற்
காறுடர்மண் ணில்விள்ளிக் குப்புற்று நிற்குநிலை
கண்டுதிரு வுளமிரங்கி
உறுதிபட வின்றுபோய் நாளைக்கு வாவென்
றுரைத்தரா கவ ! வெருவியன்
றோரானை மூலமென் றோதாமுன் னோடிவந்
துதவுமா தவ ! சீதரா !
நறையொழுக மடன்முகை முறுக்கவிழ்ந் தலரு மொரு
நளினப் பொகுட்டாசன
நள்ளிடை பதிந்துபைந் தாதளைந் திசைபாடி
நாகிளம் பேடையோடுஞ்
சிறைவண்டு கண்படுக் கும்வழுதி நன்னாட !
சிறுபறை முழக்கியருளே
தென்திருப் பேரைவரு நங்குழைக் காதமுகில் !
சிறுபறை முழக்கியருளே.

(இ-ள்) கறைகொளும் சமரில் - இரத்தக்கறை படியும் போரில், வடிவாளொடு - கூரியவாளோடு, இராவணன்—, கைகள் இரு பதும் - இருபதுகைகளும், விழுதுபோல் - ஆலம்விழுதுபோல, கால் துடர் - காலைத்தொடர்ந்து தொங்கி, மண்ணில் விள்ளி - தரையில் பரவலாகவிழுந்துதழுவி, குப்புற்று - தலைகவிழ்ந்து, நிற்கும் நிலை கண்டு - (நாணி) நிராயுதபாணியாய் நிற்கின்ற பரிதாபமான நிலை யைப்பார்த்து, திருவுளம் இரங்கி - மனவிரக்கமுற்று, உறுதிபட - (அவ்விராவணனுக்குத்) துணிவு ஏற்பட, 'இன்று போய் நாளைக்குவா' என்று உரைத்த - 'இன்று மனைபோய் போர்க்கு நாளைவா' என்று கருணையோடு கூறி விடுத்த, இராகவா ! - ரகுகுல உத்தமனே ! (இராமனே !), அன்று - (முதலைவாயிலகப் பட்ட) அன்று, ஓர் ஆனை - கஜேந்திரனென்ற ஒரு யானை, வெருவி – பயந்து, மூலமென்று ஓதாமுன் – ஆதிமூலமே ! என்று

கூப்பிடுவதற்குமுன்னே (கூப்பிட்டவுடனே), ஓடி வந்து உதவும் - (புள்ளேறி மடுக்கரைக்கு) விரைந்துவந்து உதவிபுரிந்து அதனுயிரைக் காப்பாற்றிய, மாதவ ! -, சீதரா ! -, நறை ஒழுக - தேனொழுகும்படி, மடல்முகை முறுக்கு அவிழ்ந்து - இதழோடுகூடிய மொக்கு கட்டுவிட்டுநெகிழ்ந்து, அலரும் - மலருகின்ற, ஒரு நளினம் பொகுட்டு ஆசனம் - ஒருதாமரையின் கொட்டையாகிய பீடத்தின், நள்ளிடை பதிந்து - நடுவிடத்தில் தங்கி, பைந்தாது அளைந்து - பசிய மகரந்தங்களை யுண்டு, இசை பாடி - பண்ணிசைத்து, நாகு இளம் பேடையோடும் - மிக்கஇளமையினையுடைய (தனது) பெண் வண்டோடும், சிறைவண்டு கண்படுக்கும் - சிறகுகளையுடைய ஆண் வண்டு (கவலையின்றி யின்பமாகத்) துயிலும், வழுதி நன்னாட ! - நல்ல பாண்டியநாட்டவனே ! சிறுபறை முழக்கியருள் - : தென் திருப்பேரை வரு நம் குழைக்காதமுகில் ! -, சிறுபறை முழக்கியருள் —; (எ. று.).

இராவணனுக்கு வாள் சங்கரன்கொடுத்தது. அதனால் தனியே 'வாளொடு' என்றது, "சங்கரன் கொடுத்தவாளும்" என்றார் கம்பரும். "இன்றுபோய் நாளைக்கு வா" என்றவிடத்து "போர்க்கு நாளை வா" என அச்சொல் இசையெச்சமாய் நின்றது. கம்பரும் "இன்றுபோய் போர்க்கு நாளைவா" என்றார். 'போரிடுவதாயின் நாளைக்குவா ; சரணம்புகுவதாயின் இக்கணமே சாலும் "என்பது சாரமானகருத்து. ஓதாமுன் ஓடிவந்து - காரணத்தின்முன் காரியம் நிகழ்ந்ததாகக் கூறியது, விரைவு தெரித்தற்கு, "உற்றழைக்க வருவேம் கடந்தும்பி ! அஞ்சலென் றோடின மால்கழலே" என்றார் திவ்யகவியும். (திருவேங் : அந் : 1), 'பதிந்து அளைந்து பாடிப் பேடையோடு கண்படுக்கும்' என்று வண்டின் மேலேற்றிக் கூறியது - அந்நாட்டு மக்களும் இல்லிருந்து உண்டு களித்து இல்லறம் ஒழுகிக் கவலையின்றி யிருந்தனரென்பதைப் பெற வைத்தற்கு. நாகிளம் - ஒருபொருட்பன்மொழி. (87).

88. அண்டபகி ரண்டமு மதிர்ந்துகுல வரையெட்டும்
அசையாம லெண்டிசைதொறும்
அளிகவுள கம்பக் கடாக்களிறு நிலைபெயர்ந்
தடிச்சுவ டெடுத்திடாமற்
கொண்டவட வைக்கனற் கண்பிதுங் கக்கொடுங்
கோளரா முடியிற்படங்

குலுங்காம லாமைநெடு முதுகுகுளுக் காவண்ட
கோளகையின் முகடுவெடி யா
விண்டடவு தாரகைக் குலமடங் கலுமண்ணில்
வீழாம லுயர்செழும் பொன்
மேருகிரி சாயாம லோடியிரு கரைதோறும்
வெண்ணிலா வுமிழுமுத்தந்
தெண்டிரை சுருட்டுபொரு ணுநதி நெடுந்துறைவ!
சிறுபறை முழக்கியருளே
தென்றிருப் பேரைவரு நங்குழைக் காதமுகில்!
சிறுபறை முழக்கியருளே.

(இ - ள்) அண்ட பகிரண்டமும் அதிர்ந்து - இந்த உலகமும் புறவுலகங்களும் அதிர்ச்சியடைந்து நடுங்கி, குலவரை எட்டும் அசையாமல் - அஷ்டகுலபர்வதங்களும் நடுக்கமுறுமல்,

எண்திசைதொறும் - எட்டுத்திக்குக்களிலுமுள்ள, அளி கவுள - வண்டுகள் மொய்க்கின்ற கன்னத்தையுடைய, கம்பம் கடாம் களிறு - கட்டுத்தறிகளில் கட்டப்படுகின்ற மதஜலம் பெருக்குகின்ற ஆண் யானைகள் (அட்டதிக்குக்கஜங்கள்), நிலை பெயர்ந்து - தாங்கள் நிலை பெற்றுத்தங்கியுள்ள திக்கினிடங்களி லிருந்து மாறி, அடிச்சுவடு எடுத்திடாமல் - (தங்கள்) கால்களைப் பெயர்த்துவைக்காமல்; கொடும் கோள் அரா - கொடிய பற்றுந் தன்மையுள்ள பாம்பாகிய ஆதிசேடன், கொண்ட - கொண்டுள்ள, வடவைக்கனல் கண் பிதுங்க - வடவாமுகாக்னிபோன்று சொலிக் கின்ற கண்கள் வெளிவரும்படி, முடியில் படம் குலுங்காமல் - தலையிலுள்ள படங்கள் நடுங்காமல், ஆமை நெடு முதுகு குளுக் கா(மல்) - மகாகூர்மத்தின் பெரிய முதுகு அசைந்து குலுங்காமல், அண்டகோளகையின் முகடு வெடியா(மல்) - உலகவுருண்டையின் மேலுச்சி பிளவுபடாமல், விண்தடவு தாரகைக்குலம் அடங்கலும் மண்ணில் வீழாமல் - ஆகாயத்திலுள்ள நட்சத்திரக் கூட்டமனைத் தும் (உதிர்ந்து) பூவுலகில் தரையின்மேல் விழாமல், உயர் செழும் பொன் மேருகிரி சாயாமல் - ஓங்கியுள்ள சிறந்த பொன்மலையாகிய மேரு சாய்ந்து போகாமல், (இருக்கும்படி சிறு பறைமுழக்கியருள் எனப்பொருள் முடிக்கவும்). இரு கரைதோறும் வெண்நிலா உமிழும் முத்தம் - இரண்டுகரைகளிலும் வெள்ளிய சந்திரன் வெளி

யிட்ட முத்துக்களை, தெண்திரை ஓடி சுருட்டும்-தெள்ளிய அலைகள் (கரையின்மேல்) பாய்ந்து ஓடிச்சுருளப்புரட்டிவரும், பொருநு நதி - தாமிரபரணி நதியின், நெடும் துறைவ ! - பெரிய நீர்த்துறைகளுக்குத் தலைவனே ! சிறுபறை முழக்கியருள்—: தென்திருப்பேரை வரு நம் குழைக்காதமுகில் !—, சிறுபறை முழக்கியருள் —; (எ. று.)

அசையாமல், அடியெடுத்திடாமல், குலுங்காமல், குளுக்காமல், வெடியாமல், வீழாமல், சாயாமல் - சிறுபறை முழக்கியருள் எனப் பொருள் முடிவு செய்க. இந்த ஏழும் எதிர்மறை வினையெச்சங்கள் : அடுக்கி "முழக்கியருள்" என்ற வினையொடு முடிந்தன. அஷ்டகுல பர்வதம்— இமயம், மந்தரம், கைலாசம், விந்தியம், நிடதம், ஏம கூடம், நீலம், கந்தமாதனம் என்பன. கவுள் - கன்னம். கன்னத்தில் பெருகும் மதஜலத்தை வண்டுகள் மொய்த்து உண்ணும். கம்பம் - அசைதல் எனினுமாம். யானை அசைந்து கொண்டேயிருக்கும். ஆதிசேடன் கண் வடவைக்கனல்போல் அனல் வீசுவது என்க. "ஆங்காரவாரமது கேட்டு அழலுமிழும் பூங்கார் அரவு" என்றார் திருமழிசைப்பிரானும். (நான்முகன் : திரு : 10). ஆமை என்றது இங்கு மகாகூர்மத்தை. கூர்மாவதாரம் செய்த திருமால் மத்தாகிய மந்தரகிரி கடலினுள்ளே அழுந்திவிடாதபடி அம்மலையின் கீழ் சென்று அதனைத் தன் முதுகின் மீது கொண்டு தாங்கிக் கடைதற்கு ஆதாரமாயிருந்தார் என்பது : (கூர்மம் - ஆமை) குளுக்கா - குலுக்கா : லகரளகர அபேதம் நோக்கி வந்தது என்க. பொருநு - பொருநை, (88)

89. கங்கா நதிச்செழும் புனல்யமுனை சரசோதி
கற்புரச் சுவைமணக்குங்
காவிரி யெனத்தேவர் வடியிட்ட வழுதேகக்
கமழுந் திரைப்பொருநையும்
மங்காத சதுமறைக் குரியவேள் வியும்விழா
வணியுமக வொலியுநாளும்
வளமைபெறு குலநாத! பரமபத வீடாள!
வயல்கடொறும் வாய்மடைதொறுஞ்
சங்கார வாரஞ்செய் தகடுளைந் தலறித்
தவழ்ந்தேறி முத்துயிர்க்குந்

தண்ணந் தடந்தா மரைப்பொகுட் டாசனத்
தமனியப் பொற்கோவிலிற்
செங்கா லனந்துயிலும் வழுதிவள நன்னாடா!
சிறுபறை முழக்கியருளே
தென்றிருப் பேரைவரு நங்குழைக் காதமுகில்!
சிறுபறை முழக்கியருளே.

(இ-ள்) தேவர் வடியிட்ட அமுது - தேவர்கள் வடித்தெடுத்த அமிருதம். கங்காநதி (என) - கங்காநதியாகவும், செழும்புனல் யமுனை (என) செழித்த நீரையுடைய யமுனைநதியாகவும், சரசோதி (என) - சரசுவதி நதியாகவும், கற்பூரச் சுவை மணக்கும் காவிரி என - கற்பூரவாசனை வீசும் காவிரி நதியாகவும், ஏக - பெருக்கெடுத்துப்போக, (அவ்வமுதின் மணம்) கமழும் - பரிமளிக்கும், திரைப் பொருநையும்- அலை வீசும் தாமிரபரணியாறும், மங்காத சதுமறைக் குரிய வேள்வியும் - பெருமை குறையாத நான்கு வேதங்கட்கும் உரித்தாய யஜ்ஞங்களும், விழா அணியும் - விழாக்கோலங்களும், மக ஒலியும் - குழந்தைகளின் விளையாட்டொலியும், நாளும் வளமை பெறு குலநாத! - தினந்தோறும் மாட்சிமை மிகும்படி செய்யும் கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவனே ! பரமபத வீடாள ! - பரமபதமாகிய மோட்சவீட்டிற்குரியவனே ! (சிறுபறை முழக்கியருள் என மேல் இயையும்).

வயல்கள் தொறும் - கழனிகளிலெல்லாம், மடைவாய் தொறும் - மடைத்தலைகளிலெல்லாம், சங்கு - [கருக்கொண்ட] சங்குப் பூச்சிகள், ஆரவாரம் செய்து-பேரொலியெழுப்பி, அகடு உளைந்து அலறி-வயிற்று வேதனையோடு கதறி, தவழ்ந்து ஏறி-வரப்புகளில் மெல்லநகர்ந்தேறி, முத்து உயிர்க்கும் – முத்துக்களையீனும் ; (மற்றும்) தண் அம் தடம் தாமரை பொகுட்டு ஆசனம் - குளிர்ந்த அழகிய விசாலமான தாமரை மலரின் கொட்டையாகிய (நடுப்பகுதியாகிய) தவிசினையுடைய, பொன் - இலக்குமியின், தமனியம் கோவிலில் - பொன் போலிலங்கும் உறையுளில், செங்கால் அன்னம் துயிலும் - சிவந்த கால்களையுடைய அன்னப் பறவைகள், துயிலும் - (சுகமாகத்) தூங்கும் ; (அப்படிப்பட்ட) வழுதி வள நன்னாடா! - வளப்பமுடைய பாண்டிய நாட்டுக்குத் தலைவனே ! சிறுபறை முழக்கியருள்—: தென் திருப்பேரை வரு நம் குழைக்காத முகில்! —, சிறு பறை முழக்கியருள் —; (எ-று)

வேள்வியில் வேதமோதுவராதலின், சதுமறைக்குரிய வேள்வி என்றது. ''வேத வொலியும் விழவொலியும் பிள்ளைக்குழா விளையாட் டொலியும் அருத் திருப்பேரை'' என்றார் நம்மாழ்வார், (திருவாய்-7-3-1) மற்றும், எங்கும் எழுந்த நல்வேதத் தொலி நின்றோங்கும் தென்திருப்பேரை'' (7-3-4) காண்க. குலம்-கோயில் (Temple), ''நீல வனக்குலமனந்தம்'' (இரகு : நகர : 46) 'தேவகுலம்' என்ற வழக்கும் கோயில் என்று பொருள்படுவதைக் காண்க ''ஊரா ரோர் தேவகுலம்'' ''தேவகுலமுந் தெற்றியும் பள்ளியும்'' (மணி 26,72).) வடியிடுதல் - வடித்தெடுத்தல். ''தெள்ளுமறை வடியிட்ட அமுதப்பிழம்பே'' (தாயு : கருணை : 8) கோவில் என்றதாலே 'பொன்' இலக்குமியைக்காட்டும் : அவள் உறையுள் பொற்றாமரையாகும். தமனியம் - பொன். (89)

90. நீறுபடு தவளவெண் பொடியாட வார்சடை
நெடுந்திரைக் கங்கையாட
நிலவாட முகைமுறுக் கவிழ்ந்தும்பை யாடவரன்
நின்றாட வமரராடப்
பாறுபடு நெட்டிலைச் சுடர்வேல் விடுங்கொடும்
படையிரா வணன் மகுடமோர்
பத்துந் தகர்ந்தாட வெம்பேய் குறும்பேய்
பறந்தலை கவந்தமாடத்
தாறுபடு கதலிக் கொழுங்கனி யுடைந்துவழி
சாறுமாங் கனியினறவுந்
தருமுடப் பலவினற் கனியுடைத் துப்பெருகு
தண்ணறவு மலைமண்டியே
சேறுபடு பள்ளவயல் சூழ்வழுதி நாடனொரு
சிறுபறை முழக்கியருளே
தென்றிருப் பேரைவரு நங்குழைக் காதமுகில் !
சிறுபறை முழக்கியருளே.

(இ-ள்) நீறுபடு தவளம் வெண்பொடி ஆட - திருநீருகிய மிக வெண்மையான துகள் மேலெழ, வார் சடை - நீண்ட சடை மேலுள்ள, நெடும் திரை கங்கை ஆட - பெரிய அலைகளை வீசும் கங்கையாறு பெருக, நிலவு ஆட - பிறைச்சந்திரன் அசைய, முறுக்கு அவிழ்ந்து தும்பை ஆட - கட்டவிழ்ந்து தும்பை மாலை அசைய, (இப்படியாக) அரன் நின்ருட - சிவபிரான் அம்பலத்தில் நின்று ஆடவும், (நர்த்தனம் புரியவும்), அமரர் ஆட - தேவர்கள் ஆடவும் (நடனமிடவும்), பாறு படு - பருந்துகள் (ஒட்டியுள்ளதசை களையுண்ணத்) தொடர்கின்ற, நெடு இலை சுடர் வேல் - பெரிய இலை வடிவாயமைந்துள்ள ஒளிரும் வேலாயுதத்தை விடும் - எறியும், கொடும்படை இராவணன் - கொடிய சேனைகளையுடைய இராவண னது, மகுடம் ஓர் பத்தும் தகர்ந்து ஆட - கிரீடங்கள் பத்தும் உடைந்து சிதறி (த்தலைகள்) ஆடவும் (நடுங்கவும்) பறந்தலை - போர்க்களத்து, வெம்பேய் குறும்பேய் - கொடிய பெரிய பேயும் சிறிய பேயும், கவந்தம் ஆட - உடற்குறையோடு ஒருசேரக் கூத்தாடவும்; (சிறுபறை முழக்கியருள் என இயையும்).

படு தாறு - குலையாகவிருந்த, கதலிக்கொழுங்கனி உடைந்து- வாழையின் செழித்த பழங்கள் விண்டு, வழி சாறும் - வழிகின்ற ரசமும், மாங்கனியின் நறவும்-மாம்பழத்திலிருந்து வருகின்ற தேனும், தரு முடப் பலவின் - வளைத்த பலா மரத்திலுள்ள, நல் கனி உடைத்து - நன்கு பழுத்த பழம் பிளந்து, பெருகு தண் நறவும் - ஒழுகுகின்ற இனியதேனும், (சேர்ந்து) அலை மண்டி - அலையாகச் செறிந்து, சேறுபடு பள்ளம் வயல் - சேடையாகிற தாழ்நிலங்கள், சூழ் - சுற்றியுள்ள - வழுதி நாடன்! - பாண்டியநாட்டவனே ! ஒரு சிறுபறை முழக்கியருள் —: தென்றிருப்பேரை வரு நம் குழைக்காத முகில் ! — சிறுபறை முழக்கியருள்—; (எ-று)

மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியானுதலின், 'பொடியாட' என்றது. மகுடம்-கிரீடம் ; தலைக்கும் பொருந்தும். பறந் தலை- போர்க்களம் : பகைவரோடுதற்குக்காரணமான இடம் என்பது பற்றி வந்தபெயர். கவந்தம் - தலையற்ற உடற்குறை : முண்டம், "குறட்பேய்... கவந்தமொடு தொந்தமிட்டாடும் பறந்தலை "என்ருர் குமரகுருபரரும். (முத்து : பிள்ளை : சிறுதேர், 2) " நிரை தாறுசிதறி, வாழையுதிர்வீழ்கனிகள் ஊறிவயல் சேறுசெயும் வைகாவிலே" என்ருர் சம்பந்தரும். 'வருக்கைபோழ்ந்து தேமாங்கனிசிதறி, வாழைப்பழங்கள் சிந்தும் ஏமாங்கத மென்னும் நாடு' என்ற சிந்தா மணியும் ஒருசார் ஒப்புநோக்குக. (90)

91. பொருதிரை யெறிசல ராசி யுடுக்கும்
புவனத் திருமாதும்
பொங்கு சினந்தலை மண்ட வடுஞ்சமர்
புக்கெதிர் வருவோர்செங்
குருதி படும்படி பொருது மணம்புணர்
கொற்றக் குலமாதுங்
கோதறு வண்புகழ் சேரனுகூலக்
கோமள மாமாதும்
மருமலி சததள மண்டபமீது
மகிழ்ந்துறை பூமாதும்
வடகலை தென்கலை முழுதுமு ணர்ந்தசொன்
மங்கையு நாடோறுந்
திருவுள மகிழ்தர வழுதிநன் ஞடா !
சிறுபறை கொட்டுகவே
தென்பே ரையில்வரு நங்குல நாதா !
சிறுபறை கொட்டுகவே.

(இ-ள்) பொரு திரைஎறி சலராசி-மோதுகின்ற அலைகளை வீசுகின்ற கடலை, உடுக்கும் - ஆடையாகச் சுற்றியிருக்கும், புவனம் திருமாதும் பூதேவியும்; பொங்கு சினம் தலை மண்ட - கிளர்ந்தெழுகின்ற கோபம் தலைக்கேற (மிகச்சினந்து) அடும் சமர்புக்கு - கொல்லுகின்ற போரிற்புகுந்து, எதிர்வருவோர் செங்குருதி படும்படி பொருது - எதிர்த்து வரும் பகைவர்களின் சிவந்த இரத்தம் தரையில் தோயும் படி போரிட்டுக் கொன்று, மணம் புணர் - வெற்றியைத் தழுவுகின்ற, கொற்றக் குலமாதும் - கொற்றவையும் (துர்க்காதேவியும்);

கோது அறு வண் புகழ் சேர் - குற்றமற்ற வளமைபொருந்திய புகழைக் கொடுத்து, அனுகூலக்கோமள மாமாதும் - நன்மை செய்யும் அழகிய கீர்த்திலக்ஷ்மியும்; மரு மலி சத தளம் மண்டபம் மீது - வாசனை செறிந்த நூற்றிதழ்தாமரையாகிய அலங்காரப் பந்தலில், மகிழ்ந்துறை பூமாதும் - களிப்புற்றுவாழும் இலக்குமிதேவி

யும்; வடகலை தென்கலை முழுதும் உணர்ந்த சொல்மங்கையும் - வடமொழி தமிழ்மொழியிரண்டிலும் உள்ள கலைகள் முற்றும் அறிந்த (கலைமகளாகிய) சரசுவதிதேவியும், நாள்தோறும் - தினந்தோறும், திருவுளம் மகிழ்தர - மனமகிழும்படி, வழுதி நல் நாடா! - பாண்டிய நாட்டுக்குத் தலைவனே! சிறுபறை கொட்டுக - சிறிய பறையை முழக்குவாயாக: தென்பேரையில்வரு—, நம் குலநாதா!— நம்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவனே! சிறுபறை கொட்டுக - சிறியபறையை குழக்குவாயாக; (எ-று)

மண்மகளும் வீரமகளும், புகழ்மகளும், திருமகளும், கலைமகளும் நாடோறும் மகிழ்ந்து வீற்றிருப்பர் என்றதால் வழுதி நன்னாடு நில புலங்களிலும், வென்றியிலும், புகழிலும், செல்வத்திலும், கலைகளிலும் சிறப்புற்று விளங்கியது என்றபடி. கொற்றக் குலமாது - போர் மகள் எனவும் படுவள். "போர்மகளைக் கலைமகளைப் புகழ்மகளைத் தழுவியகை பொருமை கூரச், சீர்மகளைத் திருமகளைத்.................. தழுவுவான் உயிர்கொடுத்துப் பழிகொண்ட பித்தா! பின்னைப் பார்மகளைத் தழுவினையோ?" என்ற விபீடணனின் புலம்பலில் இந்த வழக்கினைக் கம்பர்பெருமான் அழகுறக் காட்டியுள்ளார். சததளம்-நூற்றிதழ்: வடசொற்றொடர். சொல்மங்கை - வாக்தேவி: சரசுவதி. (91)

92. உழுதுழு திசைபயி லளியொரு கோடி
உதைந்து துதைந்தாட
ஒளிர்மடன் முகையவிழ் துளவணி மால்குரு
கூர னுவந்தோதும்
பழுதறு முதுதிரு வாய்மொழி நூல்செவி
பற்பல புகுநேயன்
பண்டுல கங்களை யுண்டுபி னளவு
படுத்துந் திருமாமால்
முழுமறை முறையிடு மிருசர ணலயன்
மூரிக் கவடூடு
முதுபுன லோடையு மகழியும் வால்வளை
மொய்க்குங் கழனியிலுஞ்

செழுமலர் மணமலி வழுதிநன் னாடா !
சிறுபறை கொட்டுகவே
தென்பே ரையில்வரு நங்குல நாதா !
சிறுபறை கொட்டுகவே.

(இ - ள்) உழுது உழுது- (கால்களால்) கிண்டி கிண்டி, இசை பயில் - ரீங்காரஞ் செய்கின்ற, ஒரு கோடி அளி — மிகப்பலவாகிய வண்டுகள். துதைந்து - நெருங்கி, உதைந்து - (கால்களால்) மிதித்து, ஆட - அசைய, (அதனால்) ஒளிர் மடல் முகை அவிழ் துளவு - விளங்குகின்ற இதழோடு மொட்டுக்கள் மலர்கின்ற திருத்துழாயை, அணி - (மாலையாகத்) தரித்துள்ள, மால் - திருமாலும் ;

குருகூரன் - நம்மாழ்வார், உவந்து ஓதும் - மகிழ்ந்து திருவாய் மலர்ந்தருளிய, பழுது அறு - குற்றமற்ற, முது - பழமையான, திருவாய்மொழிநூல் - திருவாய்மொழிப்பாடல்கள், பற்பல செவி - பலருடைய காதுகளில், புகு - புகுதற்குக் காரணமாகிய, நேயன் - நண்பனுகுபவனும் ; பண்டு - மகாபிரளய காலத்தில், உலகங்களை உண்டு - எல்லாவுலகங்களையும் புசித்து, பின் - பிரளயம் நீங்கிய பின், அளவு படுத்தும் - (உமிழ்ந்து) சீர் செய்து அமைக்கும், திருமா மால் - லக்ஷ்மீ நாராயணனும் ;

முழுமறை முறையிடும் - பூர்ணமாயுள்ள வேதங்கள் (கண்டறிய முடியாது) ஓலமிடும், இரு சரணலயன் - உபய பாதங்களையுடையவனும் ; (ஆகிய "வழுதி நன்னாடா" என மேலியையும்). (இனி)

மூரிக் கவடு ஊடும் - வலிய மரக்கிளைகளின் நடுவிலும், முது புனல் ஓடையும் - பழைய நீரோடைகளிலும், அகழியும் - அகழி களிலும், வால் வளை மொய்க்கும் கழனியிலும் - வெள்ளிய சங்குப் பூச்சிகள் நெருங்கியிருக்கும் வயல்களிலும், செழு மலர் மணம் மலி - செழித்து [ப்பூத்துள்ள] மலர்கள் வாசனையை மிகுதியாக வீசுகின்ற, வழுதி நல் நாடா ! - பாண்டிய நாட்டுக்குத் தலைவனே ! சிறு பறை கொட்டுக—; தென்பேரையில் வரு நம் குல நாதா—, சிறுபறை கொட்டுக —; (எ. று.)

துளவணிமால், நேயன், திருமால், சரணலயன் என்பன ஒரு பொருண்மேல் வந்த பலபெயர்கள். ஊடு - நடு, பலரும் திரு வாய்மொழி ஓதுதற்குக் காரணன் அவனே யாதலின் "பற்பல

செவிபுகு நேயன்'' என்றது. நேயன் - ஸுஹ்ருத் என்றது ஸ்ரீ விஷ்ணு ஸகஸ்ரநாமமும், ''சுருதி நான்கும் தேடுகின்ற பதம்'' என்ருர் வில்லியும். சரணுலயன் – சரணம் புகுதற்கு இடமானவன். வால்வளை - உரிச்சொற்ருெடர். செழுமலர் - பண்புத்தொகை. (92)

93. புவனமு மண்ட கடாகமும் வேலைப்
புணரித் திசையெட்டும்
பொங்கழல் கதுவிய கண்களி யானைப்
புகர்முக மலையெட்டுங்
குவடு படும்பொலன் வடவரை முதலாங்
குலகிரி யோரெட்டுங்
கொடுவிட முடவுப் பஃறலை மகுடக்
கோளர வோரெட்டுந்
தவமுனி வர்சுரர் மகபதி முக்கட்
சடைமுடி யுடையோனுஞ்
சதுமுக னறுமுக னெருகொம் பேந்திய
தந்திமு கத்தோனுஞ்
செவிகுளி ரத்திரு வழுதிநன் ஞடா !
சிறுபறை கொட்டுகவே
தென்பே ரையில்வரு நங்குல நாதா !
சிறுபறை கொட்டுகவே.

(இ - ள்) புவனமும் - நிலவுலகமும், அண்ட கடாகமும் - அண்ட கோளகையும், வேலைப் புணரி திசையெட்டும் - கரையையுடைய கடலொடு பட்ட எட்டுத்திக்குக்களும், குவடுபடும் - சிகரங்களைக் கொண்ட, பொலன் வடவரை முதலாம் குலகிரி ஓர் எட்டும் - வடக்கிலுள்ள பொன்மலையாகிய மேருமலை முதலாகிய சிறந்த எட்டு மலைகளும், பொங்கு அழல் கதுவிய கண்கள் - கிளர்ந் தெழும் நெருப்புப் பற்றியது போலச் (சினத்திஞல்) சிவந்த கண் களையுடைய, புகர் முக மலை - புள்ளிகளோடு கூடிய நெற்றியைக் கொண்ட மலை போன்றுள்ள. யானை எட்டும் - அட்டதிக்குக்கஜங் களும், கொடு விடம் - கொடிய விஷத்தையும், முடவு - வளைந்த, பல் தலை மகுடம் - பல தலைகளையுடைய உச்சியையும் கொண்ட,

கோள் அரா ஓர் எட்டும் - பற்றுந்தன்மையுள்ள அட்டமாநாகங் களும், (மற்றும்) தவமுனிவர் - தவவிருடிகளும், சுரர் - தேவர் களும், மகபதி - இந்திரனும், முக்கண் சடைமுடி உடையோனும் - மூன்றுகண்களையும் சடைமுடியையும் கொண்ட சிவபெருமானும், சதுமுகன் - நான்கு முகங்களைக் கொண்ட பிரமனும், அறுமுகன் - ஆறு முகங்களைக் கொண்ட முருகனும், ஒரு கொம்பு ஏந்திய தந்திமுகத்தோனும் - ஒற்றைக் கொம்பினையுடைய யானைமுகனாகிய விநாயகனும், செவி குளிர - காதுகள் (கேட்டு) இன்புறும்படி, திருவழுதி நல் நாடா! — சிறு பறை கொட்டுக — : தென்பேரை யில் வரு நம் குலநாதா! —, சிறு பறை கொட்டுக — ; (எ. று).

புவனம், அண்டகடாகம், திசையெட்டு, கிரியெட்டு என்பன அங்குள்ள ஜீவன்களுக்கு இடவாகுபெயர் : எனவே ஒரு சேர உரை கூறப்பட்டன. அட்டதிக்கஜங்களும் அட்டமாநாகங்களும் விலங்கினத்தைச் சேர்ந்தனவாதலின் ஒரு சேர வைத்து உரை கூறப்பட்டன. தவமுனிவர் முதல் உயர்திணையோர் கூறப்பட்டனர் என்பது அறிய வேண்டுவது. இவைகளும் இவர்களும் செவி குளிரப் பறைகொட்டுக என்றதால் அனைத்துலக இருதிணை ஜீவன் களும் இன்புறுவதில் நோக்கு என்க. அண்டகடாகம் - அண்ட கோளகை : (Sphere, Globe) அட்டதிக்கும் கஜங்களும் - கிழக்கில் ஐராவதம், தென்கிழக்கில் புண்டரீகம், தெற்கில் வாமனம், தென் மேற்கில் குமுதம், மேற்கில் அஞ்சனம், வட மேற்கில் புட்பதந்தம், வடக்கில் சார்வபௌமம், வடகிழக்கில் சுப்பிரதீகம் என்பன. அவற்றின் பிடிகள் — இந்த அட்டதிக்கஜங் களின் துணைவியான பிடிகள் முறையே அப்பிரமை, கபிலை, பிங்கலை, அனுபமை, தாமிரபருணி, சுதந்தி, அஞ்சனை, அஞ்சனாவதி என்பன. அட்டதிக்குப்பாலகர் - முறையே இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்பவர்.

குலகிரிஎட்டு :- இமயம், மந்தரம், கைலாசம், விந்தியம், நிடதம், ஏமகூடம், நீலம், கந்தமாதனம் என்பன, அட்டமா நாகங்கள் - வாசுகி, அனந்தன், தக்கன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடகன் என்பன. மகபதி - யாகங்களுக்குத்தலைவன் என்பது காரணப்பொருள் ; மகம் - யாகம். யாகத்திற் கொண்டாடப்படும் தேவர்கள் பலர்க்குந் தலைவ னுதல் பற்றிவந்தது. நூறு அசுவமேதயாகங்கச்ஞ்செய்து தேவ ராசபதவிபெறுதலால், இந்திரனுக்கு இப்பெயர். முக்கட்சடை முடியோன், சதுமுகன், அறுமுகன், கொம்பேந்திய முகத் தோன் - சினைப்பெயர்கள். தந்திமுகத்தோன் - உவமைத் தொகை. மூன்றுமடியிலுள்ள உம்மைகள் மூன்றும்

இயைந்தன. கூரெழுத்தாணிதன் கோடாகக்கொண்டு மாபாரதம் எழுதினனாதலின், விநாயகன் ஒற்றைக் கொம்பனாயினான், யானை தன்நிழலொடு மறலுமாதலின் "அழல்கதுவியகண்கள்" என்றது புகர் - (நெற்றிப்) புள்ளி. "புகர்முகயானையின் உரிவைப் போர்வை போர்த்த" என்றார் கம்பரும். புகர்முகமலை - பிறகுறிப்பு. (93).

94. அளிசுற் றியதண் டலப்பொதியத்
தஞ்சா ரலிற்பைங் கிழங்கெடுக்கும்
அம்பொற் குழியில் சுடர்விரிக்கு
மங்கால் வயிரங் கிடந்திமைப்பத்
துளிபட் டொழுகும் வரையருவி
சுழிக்குந் தொறும்பொன் னொழுக்கெறியச்
சுவையூற் றிருக்கும் புனற்பொருநை
சுருட்டுந் திரைசெம் மணிகொழிப்பத்
தளைவிட் டலரும் பசும்பாளைத்
தலைப்பூங் கமுக மணிமிடற்றுத்
தாங்கும் பவளக் குலைகவிப்பத்
தடஞ்சால் வழியூர்ந் தகடுளைந்து
வளைமுத் துதிர்க்கும் வயற்பேரை
மாலே ! சிறுபறை கொட்டுகவே
வருணன் பரவு மிருசரண
மாலே ! சிறுபறை கொட்டுகவே.

(இ-ள்) அளி சுற்றிய தண் தலம் பொதியத்து அம் சாரலில்- வண்டுகள் சுழலும் குளிர்ந்த சோலையிடங்களைக் கொண்ட பொதியமலையின் அழகிய பக்கங்களில், பைங் கிழங்கு எடுக்கும் அம் பொன் குழியில் - பசிய [வள்ளிபோன்ற] கிழங்குகளைக் கல்லியெடுக்கின்ற அழகிய குழிகளில், சுடர் விரிக்கும் அம் கால் வயிரம் கிடந்து இமைப்ப - ஒளியைப் பரப்பும் அழகிய கிரணங் களையுடைய வயிரக்கற்கள் கிடந்து பிராகாசிக்க, துளிபட்டு ஒழு கும் வரை அருவி - மழை பெய்தலால் பெருகும் மலையருவி, சுழிக்கும் தொறும் -சுழலிடும்போதெல்லாம், பொன் ஒழுக்கு எறிய-

பொன்னை ஒழுகவிட்டாற்போல் வீச ; சுவை ஊற்றிருக்கும் புனல் பொருநை - இனிய நீரூற்றுக்களைக்கொண்ட தாமிரபர்ணிநதி சுருட்டும் திரை - மடித்துவீசும் அலைகள், செம்மணி கொழிப்ப - சிவந்தரத்தினங்களைத் தெள்ளியொதுக்க; தளைவிட்டு அலரும் பசும் பாளை - கட்டு நெகிழ்ந்து மலர்கின்ற பசிய பாளைகளை, தலைபூங் கமுகம் - உச்சியிற்கொண்டுள்ள இளைய கமுகமரங்கள், மணி மிடற்றுத் தாங்கும் பவளக்குலை - (தமது) அழகிய கழுத்திடத்துத் தாங்கியுள்ள பவளம்போன்ற செவ்விய பாக்குக்குலைகளை, கவிப்ப - வளையத்தொங்கவிட்டு மூட, (இங்ஙனம் சிறப்புப்பெற்று மேலும்) தடம் சால் வழி ஊர்ந்து - பெரிய கலப்பைசென்ற வழி யிலேயே நகர்ந்துசென்று, (அதனால்) அகடு உளைந்து - (கருக் கொண்டிருக்கும்) வயிறு நொந்து, வளை - சங்குப்பூச்சிகள், முத்து உதிர்க்கும் - (வெண்) முத்துக்களை ஈனும், வயல் பேரை மாலே ! - கழனிகளைக்கொண்ட தென்திருப்பேரையில் கோயில்கொண்டுள்ள திருமாலே ! சிறுபறை கொட்டுக — : வருணன் பரவும் இருசரண மாலே!— வருணபகவான் தோத்தரிக்கின்ற உபயபாதங்களையுடைய திருமாலே !, சிறுபறை கொட்டுக — :

பொதியமலை பாண்டியநாட்டிலுள்ளது. அங்குக்குழிகளில் கிழங்கெடுத்தலை "கிழங்குகல்லித் தேனெடுத்து வளம்பாடி நடிப் போம்" என்ற குற்றாலக் குறவஞ்சியடியாலும் அறியலாம். கால் - கிரணம் : Ray. "நிலாக்கால் விழுந்தனைய" (மீனாட்சி : பிள்ளை ; ஊசல், 1) பசும் பாளை - பசுமை இளமை மேலதுமாம். பவளக்குலை- உவமைத்தொகை - இச்செய்யுளில், வயிரம், பொன், செம்மணி, பவளம் முதலிய வந்துள்ள நயம் காண்க. இமைப்ப, எறிய, கொழிப்ப, கவிப்ப, உதிர்க்கும் பேரை என இயையும. (94).

சிறுதேர்ப்பருவம்

95. உரைக்குஞ் சதுமா மறைதனக்கும்
உயர்வா னவர்க்கு மெட்டாத
உண்மைப் பொருளே ! கன்றெடுகுன்
றுருகும் படிவேய்ங் குழலூதி
நிரைக்குப் பின்னே நடந்தருளும்
நீலப் புயலே ! போரேறே !

நிலமா சமரா டிடுங்கொடிய
நிருதர் குலத்துக் கொருகூற்றே !
வரைச்சந் தகிலுஞ் செம்மணியும்
மதவா ரணக்கிம் புரிமருப்பும்
மயிற்பீ லியும்வெண் ணித்திலமும்
வாரிச் சுருட்டிக் கரைபொருது
திரைக்குந் திரைத்தண் பொருநைநதிச்
செல்வா ! தடந்தே ருருட்டுகவே
தென்பே ரையினங் குலநாதா !
செம்பொற் றடந்தே ருருட்டுகவே.

(இ - ள்) உரைக்கும் சதுமாமறைதனக்கும் - ஓதுகின்ற நால் வேதங்களுக்கும், உயர் வானவர்க்கும் - மேலான தேவர்களுக்கும், எட்டாத - காணமுடியாது அப்பாற்பட்ட, உண்மைப் பொருளே ! - சத்தியமான பரம்பொருளே ! கன்றொடு - (தான் மேய்க்கும்) பசுங்கன்றுகளோடு, குன்று உருகும்படி-கற்களும்(இசை கேட்டு) மனமுருகிநெகிழும்படி, வேய்ங்குழல் ஊதி - புல்லாங் குழலையிசைத்து, நிரைக்குப் பின்னே நடந்தருளும் - பசுக்கூட்டங் களுக்குப் பின்னே (அவற்றின் வாலுருவி) நடந்துசெல்லும், நீலப் புயலே ! - நீலமேகம் போன்றவனே !, போர் ஏறே ! - போர்க் களத்துச் சிங்கம்போன்றவனே ! நிமலா ! - தோஷமற்றவனே !, சமர் ஆடிடும் - போரிடுகின்ற, கொடிய நிருதர் குலத்துக்கு - கொடியஅரக்கரினத்திற்கு, ஒரு கூற்றே ! - ஒப்பற்ற காலனே !

வரை சந்து அகிலும் - மலையிடத்துள்ள சந்தனக் கட்டையினை யும் அகிற்கட்டையினையும், செம் மணியும் - சிவந்த இரத்தினங் களையும், மத வாரணம் கிம்புரி மருப்பும் - மதயானைகளின் பூணிட்ட தந்தங்களையும், மயில் பீலியும் - மயிற்றோகையின் இறகு களையும், வெள் நித்திலமும் - வெண்மையான முத்துக்களையும், வாரிச்சுருட்டி - (பாயும் வழியில்) வாரிக்கொண்டு சுருட்டிவந்து, கரை பொருது - கரைகளில் மோதி, திரைக்கும் - நுரைத்திடும், திரை தண் பொருநைநதி - அலைகளையுடைய குளிர்ந்த தாமிர பர்ணியாற்றின், செல்வா ! —, தடம் தேர் - அகலமான தேரை,

உருட்டுக - உருட்டுவாயாக : தென்பேரையின் நம் குல நாதா - தென்பேரையிலெழுந்தருளியுள்ள எங்கள் குலத்தலைவனே ! செம் பொன் தடம் தேர் - சிவந்த பொன்னினாலாகிய அகலமான தேரை, உருட்டுக - உருட்டுவாயாக ; (எ. று.).

'நிரைக்குப் பின்னே நடந்தருளும்' என்றவிடத்து, "காலடி நோவக்கன்றின்பின், கொடியேன் என்பிள்ளையைப் போக்கினேன்" என்ற பெரியாழ்வார் வாக்கு நினைக. (3-2-9), நிமலன் - புனிதன் என்றபடி. தடந்தேர் - அகலமான தேர் : பெரியதேர் எனில் சிறுதேர்ப்பருவத்துக்கு ஏலாது. புயல், ஏறு - உருவகம். (95).

96. உருவா யுயிரா யுணர்வாகி
உள்ளும் புறனு முளனாகி
உரைக்குஞ் சமய மாறினுக்கும்
ஒன்று பலவு மாயடங்கி
அருவாய் நிறையு நின்பெருமை
யார்க்குந் தெரிய வசமன்றே
ஆழிப் புயலே ! யருட்கடலே !
அரி ! கேசவ ! சீதர ! முகுந்தா !
மருவார் பொழிலிற் கேணியில்வாய்
மடையிற் சுழியிற் படுவரம்பில்
வளைமுத் துயிர்க்குந் திருவழுதி
வளநாட் டுறையெம் பெருமாளே !
தெருவீ தியினூற் றெண்மர்தொழச்
செம்பொற் றடந்தே ருருட்டுகவே
தென்பே ரையினங் குலநாதா !
செம்பொற் றடந்தே ருருட்டுகவே.

(இ - ள்) உருவாய் உயிராய் உணர்வாகி - உடம்புடையனவாய் உயிருடையனவாய் உணர்வுடையனவாய் இருக்கும் பொருள்களனைத்துமாகி, (அவற்றுள்) உள்ளும் புறனும் உளனாகி-

உள்ளுக்குள்ளும் வெளியிலும் இருப்பவனாகி, (மேலும்) உரைக்கும் சமயம் ஆறினுக்கும் - (சிறப்பித்துப்) பேசப்படும் ஆறுமதங்களுக்கும், ஒன்றும் பலவும் ஆய் அடங்கி - (பொதுப்பட்ட) ஒரே தெய்வமாய் ஏகனாகியும் (அததற்கு ஏற்ற வடிவினனாய்ப்) பல தெய்வமாகியும் அனைத்திலும் தங்கி, (மற்றும்) அருவாய் - கண்ணுக்குப் புலப்படாத உருக்கரந்த அந்தர்யாமியாய், நிறையும் - (யாண்டும் நீக்கமற) நிறைந்திருக்கும், நின் பெருமை - உன்னுடைய மேன்மை, யார்க்கும் தெரிய வசமன்று - எவர்க்கும் (அளவிட்டு) அறியும் தரத்ததன்று : ஆழிப்புயலே ! - (பாற்) கடலிலுள்ள மேகமே ! அருள் கடலே !- கருணைசமுத்திரமே ! அரி ! ஹரியே !, கேசவ !- கேசவனே !, சீதர ! – சீதரனே !, முகுந்தா ! - முகுந்தனே !

மரு ஆர் பொழிலில் - வாசனை நிறைந்த சோலைகளிலும், கேணியில் - கிணறுகளிலும், வாய்மடையில் - மடைத்தலைகளிலும், சுழியில் - நீர்ச்சுழியிடங்களிலும், படுவரம்பில் - இருக்கின்ற வரப்புகளிலும், வளை - சங்குப்பூச்சிகள், முத்து உயிர்க்கும் - முத்துக்களையீனுகின்ற, திருவழுதிவளநாட்டு - பாண்டியநாட்டில், உறை - நித்யவாசஞ்செய்கின்ற, எம் பெருமாளே ! - எங்கள் இறையவனே ! தெருவீதியில் - பெரியதெருவழியே, நூற்றெண்மர் தொழ - ஜைமீநீயதலவகாரசாம வேதிகள் நூற்றெட்டுப்பேரும் (கண்டு) தொழும்படி, செம்பொன் தடம் தேர் உருட்டுக—: தென்பேரையில் நம் குலநாதா ! —, செம்பொன் தடம் தேர் உருட்டுக —; (எ. று.).

இங்கு உணர்வென்பது - தர்மபூதஜ்ஞாநம் : அதாவது ஆன்மாவின் பண்பாய் வெளிப்பட்டுத்தெரியும் அறிவு. ''உருவாய் உயிராய் உணர்வாகி உள்ளும் புறனும் உளனாகி'' என்னுமிடத்து 'திடவிசும்பெரிவளி நீர்நிலமிவைமிசைப்,படர் பொருண்முழுவதுமாய் அவையவைதொறும், உடன்மிசையுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்'' என்னும் பாசுரத்தின் விசேஷார்த்தங்கள் விசாரித்தறியத்தகும். உள்ளேயிருப்பதற்கு உடலுக்குள் உயிரிருப்பதும், வெளிப்பட்டும் இருப்பதற்கு உயிரில் உணர்வு இருப்பதும் எடுத்காட்டுகளாகும். கம்பர்பெருமானும் ''ஊனுமுயிரும் உணர்வும் போலுள்ளும் புறனுமுளனென்ப'' என்றார். ஆறுசமயங்களாவன இன்னவென்பதை 29 - ஆம் செய்யுளுரையிற் குறித்தாம் : ஆங்குக் காண்க.

கடவுளென்பது ஒருபொருளேயாதலால், 'ஒன்றாய் அடங்கி' என்றது. அந்தப் பரம்பொருள் எல்லாப்பொருளிலும் எள்ளினுள் எண்ணெய் போலக்கரந்து எல்லாப்பண்டங்களின் வடிவுமா

யிருத்தலின் 'பலவாய் அடங்கி' என்றது. இக்கருத்தை "ஒன்றெனப் பலவென வறிவரும் வடிவினுள்நின்ற நன்றெழில் நாரணன்" என்று நம்மாழ்வார் அருளிச்செய்துள்ளார். கம்பர்பெருமானும் "ஒன்றேயென்னின் ஒன்றேயாம் பலவென் றுரைக்கிற் பலவேயாம்" என்றார். "அருவாய் நிறையும்" என்றவிடத்து 'உளனலனெனில் அவனருவம் இவ்வருவுகள்" என்ற நம்மாழ்வார் பாசுரம் நினைக. கடவுளைக் கூறுமிடத்து இவ்வண்ணம் மாறுபட்ட தன்மைகள் ஒருங்கேயமைந்தனவாகக் கூறவேண்டியிருத்தலால், "பெருமையார்க்கும் தெரியும் வசமன்று" என்று வியந்து கூறினார். புயல், கடல் - உருவகம். இல் - ஏழனுருபுகள். இவற்றின்பின் எண்ணும்மைதொக்கது. அரி - திருமால் : ஹரி என்ற வடசொல்லின் விகாரம். கேசவன் - பிரமனையும் உருத்திரனையும் தன் அங்கத்திற்கொண்டவனென்று பொருள்படும் : க - பிரமன், ஈச - சிவன் : "பிறைதங்கு சடையானை வலத்தேவைத்துப் பிரமனைத்தன்னுந்தியிலே தோற்றுவித்து"என்றார் திருமங்கையாழ்வாரும். இனி இதற்கு- அழகிய மயிர்முடியையுடையவனென்றும், கேசியென்னும் அசுரனைக்கொன்றவனென்றும் பொருள்கள் உண்டு, சீதரன் - ஸ்ரீதரன் : வடசொல். திருமகளைத்(திருமார்பில்) தரிப்பவன். முகுந்தன் - முத்தியுலகவின்பத்தையும் இவ்வுலகவின்பத்தையும் (தன் அடியார்க்குத்) தருபவனென்று பொருள் : மு - முக்தி, கு - பூமி, த - கொடுப்பவன். (96).

97. மேல்பால் முளைக்கும் பிறையெயிற்று
வெங்கட் கொடிய நிருதர்குழாம்
வெல்லுந் தடக்கைச் சிலையிராமன் !
விரிதெண் டிரைநீர்க் கடன்முகட்டின்
பாலா டரவிற் கண்டுயிலும்
பசுந்தார்க் குழகன் ! கஞ்சன்விடு
பாரச் சகடு மருதுமொடி
படத்தா னெரிக்கு மொருமுகுந்தன் !
கால்வாய்ப் புனலிற் கேணியினிற்
கழுநீர்க் குழியில் வாய்மடையிற்
கருஞ்சேற் றினினல் லருங்கயத்திற்
கழம்பூந் துறையில் வெகுண்டெழுந்து

சேல்பாய் வழுதித் திருநாடா !
செம்பொற் றடந்தே ருருட்டுகவே
தென்பே ரையினங் குலநாதா !
செம்பொற் றடந்தே ருருட்டுகவே.

(இ-ள்) மேல்பால் முளைக்கும் - மேற்குத்திக்கில் தோன்றுகின்ற, பிறை எயிறு - பிறைச்சந்திரன்போல் வளைந்த கூரிய பற்களையும், வெங்கண் - (கோபத்தினால்) சிவந்த கண்களையும் உடைய, கொடிய நிருதர்குழாம் - கொடிய அரக்கர்கூட்டத்தை, வெல்லும் தட கை சிலை இராமன் ! - செயித்த பெரிய கைகளில் வில்லைப்பிடித்த இராமபிரானே !, விரி தெள் திரைநீர் கடல் முகட்டின்பால் - பரந்த தெளிந்த அலைகளைவீசும் திருப்பாற்கடலின் மேலிடத்து, ஆடு அரவில் கண் துயிலும் - படமெடுத்தாடுகின்ற ஆதிசேடனாகிய பாம்பின்மேல் பள்ளிகொண்டு யோகநித்திரை செய்யும், பசும் தார் குழகன் ! - பச்சைத்திருத்துழாய் மாலையைத் தரித்த அழகனே ! கஞ்சன் விடு பாரம் சகடும் - கம்சனாகிய மாமன் (தன்னைக் கொல்லுமாறு) நிறுவிய பெருத்த வலிய வண்டியையும், மருதும் - [நாரத முனிவன் சாபத்தால் குபேரபுத்திரர் இருவர் மாறிய] இரட்டை மருதமரங்களையும், ஒடிபட - முறிந்து விழும்படி, எரிக்கும் - [அடியோடு] அழித்த, ஒரு முகுந்தன் ! - ஒப்பற்ற முகுந்தனே !

கால்வாய் புனலில் - வாய்க்கால் நீரிலும், கேணியினில் - கிணறுகளிலும், கழுநீர்க்குழியில் - செங்கழுநீர்பூத்த பள்ளங்களிலும், வாய்மடையில் - மடைவாயிடங்களிலும், கரும் சேற்றினில் - கரிய சேற்றிடங்களிலும், நல் அரும் கயத்தில் - நல்ல சிறந்த குளங்களிலும், கமழ் பூந்துறையில் - பரிமளிக்கின்ற பூக்கள் நிறைந்த நீர்த்துறைகளிலும், சேல் - சேல்மீன்கள், வெகுண்டு எழுந்து பாய் - சினந்து மேலெழுந்து தாவிப்பாய்கின்ற, வழுதித்திருநாடா - பாண்டியநாட்டிற்குரியவனே !, செம்பொன் தடம் தேர் உருட்டுக—: தென்பேரையில் நம் குலநாதா —!, செம்பொன் தடம் தேர் உருட்டுக —; (எ. று.).

பிறையெயிறு - உவமைத்தொகை. பால் - ஏழனுருபு. கஞ்சன் விடுத்தது - சகடுமட்டுமே : மருது - சாபத்தாலாகியது. தான் - அசை. இல் - ஏழனுருபுகள். இவற்றின்பின் எண்ணும்மைதொக்கது. சேலுக்கு வெகுண்டெழுதலியல்பு. இராமன், குழகன், முகுந்தன் - அண்மைவிளிப்பெயர்கள். (97).

98\. தந்தா னெனக்கு வரமிரண்டு
தலைநா ளுரைத்த சொற்படிக்குன்
தகப்பன் புரந்த முறைதருமந்
தழைப்ப வொருகோ லோச்சியெங்கும்
நந்தா வளமைப் பரதனிந்த
நாடா ளுவனீ காடாள
நடவென் றுரைத்த சிற்றவைசொல்
நலமேற் றலைக்கொண் டொருப்பட்டு
கொந்தார் குழலி சனகியொடுங்
கூடப் பிறந்த விளவலொடுங்
கொதிக்கும் பரல்வெங் கொடுங்கானங்
குறுகும் பொழுதுங் குளிர்ந்தலர்ந்த
செந்தா மரைப்பொற் றிருமுகத்துச்
செல்வா ! தடந்தே ருருட்டுகவே
தென்பே ரையினங் குலநாதா !
செம்பொற் றடந்தே ருருட்டுகவே.

(இ-ள்) "தலைநாள் உரைத்த சொற்படிக்கு - முன்னொருநாள் சொன்ன சொல்தவருதபடியிருக்க, உன் தகப்பன் - உனது தந்தையாகிய தசரதன், எனக்கு இரண்டு வரம் தந்தான் - (கைகேயியாகிய) எனக்கு இருவரங்கள் இப்போது தந்துள்ளான் : புரந்த-பாதுகாக்கப்பட வேண்டிய, முறை - முறைமைப்படி, தருமம் தழைப்ப - அறம் செழிக்கும்படி, ஒரு கோல் ஓச்சி - ஒப்பற்ற செங்கோலினைச் செலுத்தி, எங்கும் நந்தா வளமை இந்த நாடு - எவ்விடத்திலும் குறையாத வளப்பதை(ப்பெறும்படி)இந்தக் கோசலதேசத்தை,பரதன் ஆளுவன் - (என்மகன்) பரதன் ஆட்சி புரிவான். நீ—, காடாள நட-காட்டிற்குச் செல்வாய்"என்று உரைத்த சிற்றவை சொல்-என்று கூறிய சிறிய தாயாகிய கைகேயின் கட்டளை வார்த்தைகளை, நலம்-நன்மையுடையனவே, (என) ஒருப்பட்டு - உடன்பட்டு, தலை மேல் கொண்டு - சிரசாவகித்து, கொந்து ஆர் குழலி சனகியொடும் - பூங்கொத்துக்கள் நிறைந்த கூந்தலையுடைய சீதாபிராட்டியோடும்,

கூடப் பிறந்த இளவலொடும் - தன்னுடன் பிறந்த தம்பியாகிய் இலக்குமணனோடும், பரல் கொதிக்கும் - பருக்கைக்கற்கள் (வெப் பத்தால்) கொதிப்படைந்திருக்கும், வெம் கொடும் கானம் - மிகக் கொடுமையான ஆரணியம், குறுகும் பொழுதும் - செல்லும் போதும் (கவலையின்றி), குளிர்ந்து அலர்ந்த செந்தாமரை பொன் திருமுகத் துச் செல்வா !— குளிர்ச்சியாயிருக்கும்படி மலர்ந்த செந்தாமரைப் பூப் போன்ற அழகிய திருமுக மண்டலத்தையுடைய செல்வனே! தடம் தேர் உருட்டுக - அகன்ற தேரை உருட்டுவாயாக: தென் பேரையில் நம் குலநாத! செம்பொன் தடம் தேர் உருட்டுக—; (எ.று.)

தலைநாள் உரைத்த சொல் என்றது - சம்பரனோடு சமர்புரிகை யில் போர்த்துணையாய் நின்றதனுக்குக் கொடுத்த வர மிரண்டனை யும். 'தலைமேற்கொண்டு' என மாறுக. இணைபிரியாது நிழல்போல இருந்ததனால் 'கூடப்பிறந்த' என்றது. இலக்குமணன் சிற்றன்னை யாகிய சுமித்திரையின் புதல்வனுவன்; எனினும் ''பால்யாத்ப்ரப்ருதி ஸுஸ்நிக்தராவன் 'என்பதை ஸ்ரீமணவாளமாமுனிகள் வாக்குக் கொண்டு தெளியலாம். 'பரல் கொதிக்கும் கானம்' என்றவிடத்து, ''பொருந்தார்கை வேல்நுதிபோல் பால்பாய மெல்லடிக்கள் குருதி சோர, விரும்பாதகான்'' என்ற குலசேகரர் கூற்றும் நினைக. கான் செல்வாயாக என்ற போதும்'அலர்ந்த செந்தாமரைத் திருமுகம் உடையனுயிருந்தான் இராமபிரான்' என்பதைக் கம்பர்பெருமான் ''இத்திருத்துறந்தேகென்ற போதினும், சித்திரத்தினலர்ந்த செந் தாமரை, ஒத்திருக்கும் முகம்'' என்பதனுலும், இராமன் திருமுகச் செவ்வி ''அப்பொழுதலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா'' என் பதனுலும் பெறவைத்துள்ளமை காண்க. நட - முன்னிலையேவல் வினைமுற்று, கொந்து - கொத்து என்பதன் மெலித்தல். ''கொதிக்கும்'' என்றவிடத்து— ''வதிகொண்டதொர் வெவ்வழல் வாய்சொலின் வேம்'' (சிந்தாமணி : பதுமை : 21) ''படியின்மேல்வெம்மையைப் பகரினும் பகரும் நா, முடியவேம்'' (கம்ப : பால : தாடகை:6) (98)

99. தருநீழ லிடையினிது வீற்றிருக் கும்புரந்
தரனுமுனி வரருமுளரிச்
சதுமுகக் கடவுளு முக்கட் கொழுங்கனிச்
சடைமுடிச் சிவனும்வெஞ்சூர்ப்
பொருகிரண வேலுடைய பரமன்முரு கேசனும்
புகர்முகத் தவனுமதியும்

பொங்குளைப் பச்சைப் பசும்புரவி யேழ்கட்டு
பொற்றடந் தேரிரவியும்
பெருவா சலிற்புக நெருக்குண்டு சந்நிதிப்
பேறுண்டு கிட்டுமென்றே
பிறங்குபொற் கருடக் கொடிக்கம்பம் வலம்வந்து
பெருகவஞ் சலிசெய்திடத்
திருமேனி மண்டபத் தரசிருக் குங்கடவுள் !
சிறுதே ருருட்டியருளே
தென்றிருப் பேரைவரு நங்குழைக் காதமுகில் !
சிறுதே ருருட்டியருளே.

(இ - ள்) தரு நீழலிடை இனிது வீற்றிருக்கும் புரந்தரனும் - கற்பக விருட்சத்தின் நிழலில் இனிமையாகத் தங்கியிருக்கும் தேவேந்திரனும், முனிவரரும் - இருடிச்சிரேட்டர்களும், முளரிச் சதுமுகக் கடவுளும் - (திருமாலின் உந்தியாகிய) தாமரை மலரில் எழுந்தருளியிருக்கின்ற நான்முகனும், முக்கண் கொழும்கனி சடைமுடி சிவனும் - மூன்று கண்களையும் பழுத்தகனி போற் சிவந்த சடைத் தொகுதியையும் உடைய சிவபெருமானும், வெஞ் சூர் பொரு - கொடிய சூரபதுமனோடு போரிட்ட, கிரண வேலுடைய-ஒளி விடும் சக்தி வேலையேந்திய, பரமன் முருகேசனும் - மேலானவனாகிய கந்தனும், புகர்முகத்தவனும் - யானைமுகத்தவனாகிய விநாயகனும், மதியும் - சந்திரனும், பொங்கு உளை பச்சைப்பசும் புரவி - கிளர்ந்தெழுகின்ற பிடரிமயிரினையுடைய மிகுந்த பச்சை நிறமுடைய குதிரைகள், ஏழ்கட்டு-ஏழு கட்டப்பட்ட, பொன் தட தேர் - அழகிய விசாலமான பெரியதேரினையுடைய, இரவியும் - சூரியனும், பெரு வாசலில் புக - பெரிய கோபுரவாசல் மூலம் புகும்போது, நெருக்குண்டு - நெருக்கப்பட்டு, (உட்புகுந்தபின்) 'சந்நிதிப் பேறு உண்டு கிட்டும், - எம்பெருமான் திருவோலக்கசேவை நிச்சயம் கிடைக்கும்; என்று - என்று குதூகலித்து, பிறங்கு பொன் கருடக்கொடிக் கம்பம் வலம் வந்து - விளங்குகின்ற பொன்னாலாகிய அழகிய கருடத் துவசம் கொண்ட தம்பத்தைப் பிரதட்சிணஞ் செய்து, பெருக அஞ்சலி செய்திட - பெருத்தகும்பீடு போடும்படி, திருமேனி மண்டபத்து—திருமேனிமண்டபத்திலே, அரசிருக்கும் - வீறுடன் கொலுவிலெழுந்தருளியிருக்கும், கடவுள் - இறையவனே ; சிறுதேர்

உருட்டியருள் தென்திருப்பேரை வரு-: தென்திருப்பேரை நகரில் வந்து கோயில் கொண்டுள்ள, நம் குழைக்காத முகில் - நம் மகர நெடுங்குழைக்காதராகிய [நிகரில்] முகில் வண்ணனே ! சிறுதேர் உருட்டியருள் ; - (எ-று)

புகர்மா - யானை : அது "புகர்" என நின்றது, (புகர் - யானை முகத்துக்காணும் வெண் செம் புள்ளிகள்)சூரியனது தேர்க்குதிரைகள் ஏழுஎன்றும்,காயத்ரீ உஷ்ணிக் அநுஷ்டுப் ப்ருஹதீ பங்க்தி த்ரிஷ்டுப் ஜகதீ என்ற ஏழுசந்தசுகளுமே அக்குதிரைகளாக அமைந்துள்ளன வாதலால், அவை அப்பெயர் பெறுமென்றும், அக்குதிரைகளின் நிறம் பசுமை யென்றும் புராணம் கூறுவது நோக்குக- 'பச்சைமா ஏழுமேறப்போய் ஆறுமேறினார்" என்றார்கம்பரும். (கம்ப-பால : கையடை "23) பெருவாசல் - தலைவாசல், கோபுரவாசல். சந்நிதிப் பேறு - எம்பெருமான் முன்னிலையிற் சென்று கிட்டி யநுபவித்தல். திருமாலுக்குக்கொடி-கருடன். பெருக அஞ்சலி செய்திட-சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து என்றபடியுமாம். திருமேனிமண்டபம் என்பது அந்தாணிமண்டபம். முகில் - உருவகம். 'நெருக்குண்டு' என்ற விடத்து 'உன்கோயிலின் வாசல் சுந்தரர்நெருக்க விச்சாதரர் நூக்க இயக்கரும் மயங்கினர்' என்ற திருப்பள்ளியெழுச்சி ஒப்புக் காண்க. "நின் கோயிலின் வாசல், அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்'' என்றார் குலசேகரரும். முருகேசன் புக - குமர தண்டம்புகுந்து' என்றார் தொண்டரடிப்பொடியும். (திருப்பள்ளி-6)

(99)

100\. அன்பாய்ப் பணிந்து தினம்வருணன்
ஆரா தனைகொண் டருள்முகுந்தா !
அடியா ராசைப் புரிமுறுக்கி
அம்பொற் கயிற்று வடம்பூட்டி
வன்பால் விடுத்து நெகிழ்ந்தநெஞ்சம்
மணிவீ தியிலாள் ளிடைநினைந்து
வந்துத் தியரா யிருமருங்கு
மகிழ்ந்து முறையே பிடித்திழுப்பப்
பொன்பாற் பொருந்துஞ் செழுந்திலதம்
புவனத் திருவா னுதற்றிலதம்

பொங்கிப் பரந்த சலராசி
புடைசுற் றியபூ லோகத்துத்
தென்பாற் றிலத மெனும் பேரைச்
செல்வா! தடந்தே ருருட்டுகவே
செழுந்தார்த் துளவு மணங்கமழுந்
தேவே! தடந்தே ருருட்டுகவே.

(இ-ள்) பொங்கி - கொந்தளித்து, பரந்த - பரவிய, சலராசி - சமுத்திரமானது, புடைசுற்றிய - பக்கங்களில் சூழ்ந்துள்ள, பூலோகத்து - நிலவுலகத்து,

பொன்பால் - இலக்குமியிடத்து, பொருந்தும் - நெற்றியில் இடப்பட்டிருக்கும், செழும் திலதம் - செவ்வியதிலகம் (என்றும்), புவன திரு - பூதேவியின், வாள் நுதல் திலதம் - ஒளியுள்ள நெற்றியில் இடப்பட்டிருக்கும் திலகம் (என்றும்), தென்பால் - தெற்குத்திக்குக்கு, திலகம் எனும் - திலகம் என்றும் சிறப்பிக்கப்படுகின்ற, பேரை - திருப்பேரை நகரின், செல்வா—!,

வருணன் - வருணபகவான், தினம் - நாடோறும், அன்பாய் பணிந்து-பக்தியோடு வணங்கி, (செய்யும்) ஆராதனை-வழிபாட்டினை, கொண்டு அருள் - ஏற்றுக்கொண்டு அவனுக்கு அருள்புரிகின்ற, முகுந்தா—!

அடியார் - (உன்) அடியவர்களாகிய நாங்கள், ஆசை புரி முறுக்கி - (எங்கள்) ஆர்வத்தைச் சுருளாக முறுக்கி, அம் பொன் கயிறு வடம் பூட்டி - (அதனை) அழகியபொன்னாலாகிய கயிற்று வடமாகப்பூட்டி, வன்பால் விடுத்து - கடினமான முரட்டுத் தனத்தைவிட்டு, நெகிழ்ந்த நெஞ்சம் - உருகிய மனத்தினால், மணி வீதியின் நள் இடை நினைந்துவந்து - அழகியதெருவின் நடுவிடத்தில் (நீ தடந்தேரோடு வருதலை) எண்ணி வந்து, உத்தியராய் - இருதரப்பிலும் நின்று உனக்குத்துணைவராய், இருமருங்கு - வலம் இடமாகிய இருபக்கங்களிலும் நின்று, மகிழ்ந்து - சந்தோஷத்தோடு, முறையே பிடித்து இழுப்ப - நேரேவரும்படி கயிற்றினைப்பிடித்து வலிக்குமாறு, தடம் தேர் உருட்டுக —:செழும் துளவுத் தார் மணம் கமழும் தேவே!- தழைத்த திருத்துழாய்மாலை நறுமணம் வீசும் இறைவா!, தடம் தேர் உருட்டுக —; (எ. று.).

உன் அடியராகிய நாங்கள் உன்மேல் வைத்துள்ள ஆசையாகிய கயிறுபூட்டிய தேரினை இழுத்துவந்து, நீ தெருநடுவே தடந்தேரோடு வரும்போது உன்தரப்பிலும் உனக்குஎதிர் தரப்பிலும் உத்திபோட்டுநின்று, உன்தேரை உனக்கு இருமருங்கும்நின்று இழுத்து உதவுவோம் என்று பிரார்த்திக்கிறார்கள் என்க. ஆராதனை - திருவாராதனம். உத்தி - விளையாட்டில் எதிர்ப்பக்கத்தில் ஒருவனுக்கு நிகரான துணைவன் : உன்உத்தி யார் ? என்பது - உலகவழக்கு.

[குறிப்பு :— இப்போதுகூடத் தேர்இழுக்கும்போது ஒருவடத்தைப் பெண்டிரும் மற்றொரு வடத்தை ஆடவரும் பிடித்துக் கொண்டு இழுத்துவருவதைக்காணலாம் என்பர்].

திருமகள் திலகம், நிலமகள் திலகம், தென்திசைத் திலகம் என மூன்றும் திருப்பேரைக்குச்சேர்ந்து அதன்பெருமையைச் சிறப்பித்தது. இனி, திருமகள்திலகம், நிலமகள்திலகம் என்ற இரண்டும் பொங்கி (பெருகி) ப்பூலோகத்துத் தென்பால் திருப்பேரைத்திலகமாய் இலங்கிற்று என்னவுமாம். ஆசைப்புரி - உருவகம். வன்பால் - முரட்டுத்தனம் : கடினசித்தம். நள்ளிடை - நடுவிடம். துளவு - திருத்துழாய் : துளசி. இது அங்குரிக்கும்போதே நறுமணம் விஞ்சிக் கிடக்கும். "நாற்றத்துழாய்முடி நாராயணன்" என்றாள் ஆண்டாளும். (100).

101\. மத்தா லடிப்ப வுரல்மிதித்து
மலர்த்தாள் குந்திட் டுறியில் வெண்ணெய்
வாரிக் களவி னுண்டமணி
வாயா ! பரம பதந்தனக்கோர்
வித்தா கவும்வந் தங்குரிக்கும்
வேதப் பொருளே ! யருட்கடலே !
விரைநா றியபூம் பசுந்துளவ
மெய்யா ! பொருவெங் கரிமருப்பு
முத்தோ டகிலுஞ் செம்மணியும்
மூரித் திரைப்பாய் சுருட்டிமிக

முழங்கூ டும்பு னற்றுறைவா !
முதுவா ளரக்கன் றலைகள்பத்துங்
கொத்தோ டடிவந் துறவாளி
தொடுத்தோய் ! தடந்தே ருருட்டுகவே
கொழிக்குந் தமிழ்த்தென் றிருப்பேரைக்
கோவே ! தடந்தே ருருட்டுகவே.

(இ- ள்) மத்தால் அடிப்ப - (கோபியர் கடையும்) மத்தினாலே யடிப்பவும், (பொருட்படுத்தாது) உரல் மிதித்து - உரலின்மேலேறி, மலர்த்தாள் குந்திட்டு - காலைமடக்கிக்குந்தியுட்கார்ந்து கொண்டு, உறியில் வெண்ணெய் - உறியில் வைத்திருந்த வெண்ணெயை, களவின் வாரி உண்ட - திருடியள்ளித் தின்ற, மணி வாயா ! - அழகிய வாயையுடையவனே ! பரமபதம் தனக்கு ஓர் வித்தாகவும் - மேலான வைகுந்தம் தமக்கு ஒரு உற்பத்திஸ்தானமாகவும், வந்து - (அவ்விடத்தினின்று) பாற்கடலுக்கு எழுந்தருளி வந்து, அங்குரிக்கும் - அவதரிக்கின்ற, வேதப் பொருளே ! —, அருட்கடலே ! - கருணைசமுத்திரமே ! பூம் பசும் துளவ விரை நாறிய மெய்யா !- பூத்த பச்சைத் துழாய் வாசனை மணக்கும் திருமேனியையுடையவனே ! பொரு - (ஒன்றோடொன்று) சண்டையிடுகின்ற, வெம் கரி மருப்பு முத்தோடு - கொடிய யானைகளின் தந்தங்களீன்ற முத்துக்களோடு, அகிலும் - அகிற்கட்டைகளையும், செம் மணியும் - சிவந்த இரத்தினங்களையும், மூரித் திரை - வலிய அலைகள், பாய்சுருட்டி - வீசிப்பாய்போலச்சுருட்டி, மிக முழங்கு - மிகவும் சப்திக்கின்ற, கூடும்புனல்துறைவா ! - 'கூடுபுனற்றுறை' என்ற திருமஞ்சனத்துறையையுடையவனே ! முது வாள் அரக்கன் தலைகள் பத்தும் - பழையகொடிய இராவணனாகிய இராட்சசனின் பத்துத்தலைகளையும், கொத்தோடு அடி வந்து உற - ஒருசேரத்தொகுதியாக (க்குலைபோல்) தன் அடியில்வந்து விழும் படி, வாளி தொடுத்தோய் ! - பிரமாத்திரத்தை விடுத்தவனே ! தடம் தேர் உருட்டுக— : கொழிக்கும் தமிழ் - தெளிந்தெடுத்த தமிழ் மொழி பயிலுகின்ற, தென்திருப்பேரை - தென்திருப்பேரையில் கோயில்கொண்டுள்ள, கோவே ! - மன்னனே ! தடம் தேர் உருட்டுக —; (எ. று.).

பரமபதம் தமக்கு ஓர்வித்தாக இருப்பவும் அதனைவிட்டு மற்றொரு வித்தாகிய திருப்பாற்கடலுக்குவந்து அங்கினின்று அங்குரிக்கின்றனாதலின் "ஓர் வித்தாகவும்வந்து" என்றார். உம்மை -

பாற்கடலைத்தழுவியது. அங்குரித்தல் - முளைத்தல் : அவதரித்தல் என்றபடி. பாற்கடல் அவதாரங்களுக்கு நாற்றங்கால் எனப்படுவது சம்பிரதாயம். "வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்து" என்றார் கோதையாரும். 'துளவுநாறும் மெய்யா' என்றவிடத்து - "(அவன்) சென்ற வழியின்றளவும் துளவநாறும் சேது' என்ற வில்லியார் வாக்கு ரசிக்கத்தக்கது. (ஆதி : அருச் : தீர்த் : 45) கூடும்புனற் றுறை - ஸமூகதீர்த்தம் எனப்படும் கூடுபுனற்றுறை : இங்கு வருணன் நீராடிய திருமஞ்சனத்துறையாகும். இதன் விவரத்தை 13 - ஆம் செய்யுளுரையிற்காண்க. "கூடுபுனல் திருப்பேரையிற்கே என்னைக்காட்டுமின்கள்" என்றார் நம்மாழ்வாரும் (7-3-6). முழங்கு + கூடும் = முழங்கூடும் : நிலைமொழியீற்றுக் குற்றுகரம் மெய்யோடு கெட்டது. 'தலைகள்பத்தும் அடிவந்துற' என்றவிடத்து - "வாளரக்கன் நீள்முடியைப், பாதமத்தால் எண்ணினான் பண்பு" (முதல் திருவந் :45); வாளரக்கன் ஏய்ந்த முடிப்போது மூன்றேழென் றெண்ணினான், ஆர்ந்த அடிப்போது நங்கட்கரண் "(மூன்றுந் : திரு : 77); தண்டவரக்கன்தலைதாளால் — பண்டெண்ணிப், போம் குமரன் நிற்கும் பொழில் வேங்கடமலை" (நான்முகன் : திருவந் : 44) முதலிய இயற்பா அநுசந்திக்கவும். (101).

102. புழைத்திண் டிறற்கை மதசலதி
பொழியும் பிறைக்கிம் புரிக்கோட்டுப்
புகர்மா விடங்கர்க் குடைந்துவெரீஇப்
புதுப்பூங் கேணித் தடம்புனனின்
றழைக்கும் புயலே ! நெட்டரவி
னுடுங் குழகா ! வொருநாளும்
அறியாப் பரம பதந்தியர்க்
கருள்சீ தர ! மா தவ ! முகுந்தா !
மழைக்கொந் தளகக் குரும்பைமுலை
மதிவா ணுதற்சா னகிபொருட்டு
மதில்சூ ழிலங்கை யரக்கன்மணி
மகுடஞ் சிதறக் கோதண்டங்

குழைக்குந் தடக்கை ரெகுராமா !

கொடிஞ்சித் தடந்தே ருருட்டுகவே

கொழிக்குந் தமிழ்த்தென் றிருப்பேரைக்

கோவே ! தடந்தே ருருட்டுகவே.

(இ-ள்) புழை திண் திறல் கை - துவாரமுள்ள திண்ணிய வலியதும்பிக்கையினையும், மத சலதி - மதநீர்ப்பெருக்கை, பொழியும்-மிகுதியாகச் சொரியும், பிறை கிம்புரி கோடு - பிறைபோல்வளைந்து பூணிடப்பட்ட தந்தத்தினையும் உடைய, புகர்மா - யானையாகிய கஜேந்திரன், இடங்கர்க்கு உடைந்து - முதலைக்குத்தளர்ந்து, வெரீஇ - அஞ்சி, புது பூம் கேணித்தடம் புனல் நின்று - புதிய அழகிய உட்கிணற்றினைக்கொண்ட தடாகத்தின் நீரில் நின்று கொண்டு, அழைக்கும் - ஆதிமூலமே ! என்று ஓலமிட்டு அழைத்த புயலே! - மேக வண்ணனே! நெடு அரவின் ஆடும் - பெரிய (காளிய னென்னும்) பாம்பின்மேல் நடித்த, குழகா ! - அழகனே ! ஒரு நாளும் அறியா பரமபதம் - என்றைக்கும் (இப்படித்தென்று) அறிய முடியாத மேலான வைகுந்தத்தை, ததியர்க்கு - அடியார்க்கு, அருள் - கொடுக்கின்ற, சீதர ! - ஸ்ரீதரனே !, மாதவ ! -மாதவனே ! முகுந்தா ! - முகுந்தனே !, மழை கொந்து அளகம் - மேகம்போற் கறுத்துத் தொகுதியாகத்தழைத்த கூந்தலினையும், குரும்பை முலை - தென்னங்குரும்பைபோற் கொங்கைகளையும், மதிவாள் நுதல் - சந்திரனைப்போல் ஒளிரும் நெற்றியினையும் உடைய, சானகி பொருட்டு - சீதாபிராட்டியின்பொருட்டு, மதில் சூழ் இலங்கை அரக்கன் - மதில்களால் சூழப்பட்ட இலங்கைத்தீவின் அரசனாகிய அரக்கன் இராவணனது, மணி மகுடம் சிதற - மணிகள் பதித்த கிரீடங்கள் சிதைவுற்றழிய, கோதண்டம் குழைக்கும் - கோதண்ட மென்னும் தமதுவில்லை வளைக்கும், தட கை - பெரிய நீண்ட கைகளையுடைய, ரெகுராமா - ரகுகுலதிலகனாகிய ராமா ! கொடிஞ்சி தடம் தேர் - தேர்மொட்டினையுடைய அகலமான தேரை, உருட்டுக —: கொழிக்கும் தமிழ் தென்திருப்பேரைக் கோவே ! —, தடம் தேர் உருட்டுக—; (எ. று.).

சலதி - கடல் ; நீருக்கு இலக்கணை. புயலே - உருவகவிளி. ததியர் - அடியார் : (devotees) : "தமிழ்வேதம் ததியர்பாட" (அஷ்டப்ர : ஸ்ரீரங்கநாயகர் : ஊசல் 6) :'சரணமாகுந் தனதாளடைந்தார்க்கெல்லாம், மரணமானல் வைகுந்தம் கொடுக்கும் பிரான்" என்றார் நம்மாழ்வாரும். (திருவாய் : 9-10-5). "மகுடஞ்சிறக்க" என்றொரு பாடங்காண்கின்றது : அதற்கு - கோதண்டஸ்பர்சத்

தால் சிறந்தது என்னவேண்டும். தடக்கை - உரிச்சொற்றொடர். கொடிஞ்சி - தேர்த்தட்டின் முன்னே கைக்குதவியாக நடப்பட்ட தாமரைப்பூவடிவுள்ள அலங்காரவுறுப்பு : "மணித்தேர்க்கொடிஞ்சி கையாற் பற்றி" (மணி.4,48) (102).

103. வாலப் பிறைவா ணுதன்மடவார்
மலர்க்கை வளைகை விழத்தொழுவோர்
மாருப் பிறவி வேரொடற
வானத் தமரர் களிகூரச்
சாலப் பொரும்வா ளசுரர்படத்
தருமா கதர்கள் கொண்டாடத்
தருமந் தழையக் கனகவிதைத்
தமிழ்நா வலவ ரீடேற
ஏலக் குழல்சா னகிகழுத்தின்
இடுமங் கலநாண் வாழ்வேற
எக்கா லமுநூற் றெண்மர்குழாம்
இதயத் திருந்து மகிழ்கூர்ந்து
கோலத் தெருவில் விளையாடிக்
கொடிஞ்சித் தடந்தே ருருட்டுகவே
கொழிக்குந் தமிழ்த்தென் றிருப்பேரைக்
கோவே! தடந்தே ருருட்டுகவே.

(இ-ள்) வாலம் பிறை வாள் நுதல் மடவார் - வெண்மையான பிறைச்சந்திரன்போல் ஒளிருகின்ற நெற்றியினையுடைய பெண்டிர், மலர்க்கை - தாமரைமலர்போன்ற கையிலணிந்துள்ள, வளை கை விழ தொழுவோர் - வளைகள் முன்கையினின்று நழுவிவிழும்படி அஞ்சலிசெய்வோரது, மாரு பிறவி வேரொடு அற - நீங்காது தொடரவருகின்ற பிறப்பும் அடியோடு அறும்படியும்; வானத்து அமரர் களிகூர - தேவலோகத்துத் தேவர்கள் மகிழ்ச்சிமிகுதியாகக் கொள்ளும்படியும்; சால பொரும் - மிகுதியாகப்போரைச் செய்கின்ற, வாள் அசுரர் பட - கொடிய அரக்கர்கள் அழியும்படியும்;

தரு மாகதர்கள் -'தரு என்ற இசைப்பாட்டை இருந்துபாடும் துதி பாடகர்கள், கொண்டாட - பாராட்டும்படியும்; தருமம் தழைய - அறம் செழித்தோங்கும்படியும்; கன கவிதை தமிழ்நாவலர் - மேன்மைமிக்க கவிகளைப்பாடும் தமிழ்ப்புலவர்கள், ஈடேற - பெருமை பெறும்படியும்; ஏலம் குழல் சானகி - வாசனைச்சாந்து பூசப்பட்ட கூந்தலினையுடைய சீதாபிராட்டியின், கழுத்தின் இடு மங்கல நாண் - கழுத்தில் தரித்த திருமாங்கல்யம், வாழ்வு ஏற - (என்றும்) மங்களவாழ்ச்சிபெற்றுயரும்படியும்; (நீ) எக்காலமும் - என்றென் றைக்கும், நூற்றெண்மர் குழாம் இதயத்து இருந்து - ஜைமிநீய தலவகாரசாமவேதிகள் நூற்றெட்டுப்பேர் உள்ளத்திலும் (நீங்காது) கோயில்கொண்டிருந்து, மகிழ் கூர்ந்து - மகிழ்ச்சிமிக்கு, கோலத் தெருவில் விளையாடி - அழகிய நேர்த்தியான வீதியில் விளையாடி, கொடிஞ்சித் தடம் தேர் உருட்டுக—; கொழிக்கும் தமிழ் தென் திருப்பேரைக்கோவே! —, தடம் தேர் உருட்டுக -; (எ. று).

வேரோடற, களிகூர, பட, கொண்டாட, தழைய, ஈடேற, வாழ்வேற,—தடந்தேருருட்டுக எனவும்; இருந்து, கூர்ந்து, விளையாடி—தடந்தேருருட்டுக எனவும் இயையும். மாகதர் - இருந்தேத் துவார்: அரசர்திருமுன் இருந்துகொண்டு அவர்புகழ் பாடுவோ ராகிய ஒரு சாதியர். தரு - ஒருவகைச்சந்தம்: த், ந், ன், என்னும் மெய்யெழுத்துக்களோடு நெடில்குறில்களைக்கலந்து சுரத்திற்கு ஓட் டாமல் பாடுகின்ற இசைப்பாட்டுவகை என்பர். நாவலர் ஈடேறத் தேருருட்டுதலாவது - அவர் 'சிறுதேர்ப்பருவம்' பாடுதற்கு இசை வானதாயிருப்பது. 'எக்காலமும்' என்றதால் இப்போதும் அச்சாம வேதிகள் குழாம் இதயத்து மகரநெடுங்குழைக்காதர் இருக்கின் றனர். (103).

104. மருவார் நறுமென் மலர்கொணர்ந்து
வழிபட் டிருசே வடிசொரிந்து
மயங்கும் புலன்க ளைந்துமொன்ருய்
வருணன் செயும்பூ சனையுவந்த
திருமா முகிலே! தமிழ்க்குருகுஞ்
செல்வக் குழகா! பாட்டயர்ந்து
சிறைவண் டலம்பிக் கண்படுக்குஞ்
செழுந்தார்த் துளவப் புயமுகுந்தா!

அருநான் மறைநூற் றெண்மரும்வந்
தங்கீ கரித்து வடம்பிடிப்ப
அம்போ ருகப்பூந் திருவுமு (ந்) நீர்
அவனித் திருவு மருங்கிருப்பக்
குருமா மணிப்பொன் மறுகினெடுங்
கொடிஞ்சித் தடந்தே ருருட்டுகவே
கொழிக்குந் தமிழ்த்தென் றிருப்பேரைக்
கோவே ! தடந்தே ருருட்டுகவே.

(இ-ள்) மரு ஆர் நறுமென் மலர் கொணர்ந்து - வாசனை பொருந்திய மெல்லியபூக்களைக் கொண்டுவந்து, வழிபட்டு - பூசனை புரிந்து, சேவடி சொரிந்து - திருவடிகளில் சமர்ப்பித்து, மயங்கும் புலன்கள் ஐந்தும் ஒன்றாய் - மருளச்செய்யும் பஞ்சேந்திரியங்களும் ஒருமுகமாக்கி (ஏகாக்கிரசித்தத்தோடு), வருணன் செயும் பூசனை - வருணபகவான் செய்கின்ற அர்ச்சனையை, உவந்த - மனமகிழ்ந்து ஏற்றுக்கொள்ளும், திருமா முகிலே ! - இலக்குமியோடு கூடிய மேக வண்ணனே ! தமிழ்க்கு உருகும் - (திருவாய்மொழிபோன்ற) தமிழ் வேதத்திற்கும் ஏனையதிவ்யபிரபந்தங்களுக்கும் மனம்நெகிழும், செல்வக் குழகா ! - சகல ஐசுவரியங்களையும் கொண்ட அழகனே ! சிறை வண்டு - சிறகுகளையுடைய வண்டு, அலம்பி - ஒலித்து, பாட்டு அயர்ந்து - இசைப்பாட்டுக்களைப்பாடி, கண்படுக்கும் - (இனிது) உறங்கும், செழும் துவளத் தார் புயம் முகுந்தா - செழித்த திருத் துழாய்மாலையைத் தோளில்தரித்த முகுந்தனே !

அரு நான்மறை நூற்றெண்மரும் வந்து - (அறிதற்கரிய) நான்கு வேதங்களிலும்வல்ல அந்தணராகிய நூற்றெட்டுச் சாமவேதிகளும் ஒருசேரவந்து, அங்கீகரித்து - மனமொருப்பட்டு, வடம் பிடிப்ப - தேர்வடத்தைப்பிடித்து இழுக்க, அம்போருகம் பூ திருவும் - தாமரைமலரில் எழுந்தருளியிருக்கின்ற இலக்குமியும் (ஸ்ரீதேவியும்), மு (ந்) நீர் அவனித்திருவும் - கடலாற்சூழப்பட்ட பூமியின் தேவியும் (பூதேவியும்), மருங்கிருப்ப - இருபக்கத்திலும் தங்கியிருப்ப, குரு மா மணி பொன் மறுகில் - நிறனுடையசிறந்த மணிகளும் பொன்னும் கிடக்கும் தெருவில், நெடும் கொடிஞ்சி - பெரிய தேர் மொட்டினையுடைய, தடம் தேர் உருட்டுக - அகலமான தேரை உருட்டுவாயாக: கொழிக்கும் தமிழ் தென்திருப்பேரைக் கோவே !— தடம் தேர் உருட்டுக —: (எ. று).

புலன்கள் - இந்திரியங்களைக்காட்டி வந்தது. தனது பாசத்தை அசுரர் கவர்ந்து செல்ல,மகரநெடுங்குழைக்காதர் அருளால் வருணன் திரும்பவும் பாசத்தைப் பெற்றனனாதலின், அந்நன்றிக்காகத் தினந் தோறும் ஏகமுகமாக வருணன் பூசனை செய்கின்றான் என்பது அறியவேண்டுவது. முன்னர் செய்யுள்கள் 41, 81 -இலும் வருணன் வழிபடுதல் குறிக்கப்பட்டுள்ளது காண்க. "அந்தமிழினின்பப்பா" வாகவே அவனிருத்தலின், 'தமிழ்க்குருகும் செல்வன்' என்பது தேற்றம். திருத்துழாய் திருமாலுக்கேயுரியது 'திருமாதுபுவிமாதோ டாடிரூசல்' என்றது போல, திருத்தேர் உருட்டுதலிலும் இருவரும் இருமருங்கிருக்கின்றனர் என்றார் : உபயநாச்சிமாரோடு சேவை சாதித்தலைக் குறிப்பிடுவது. (104).

[அக்ஷய ஹூ பங்குனி மீ 22 உ மக நக்ஷத்திரமும் புந்திவாரமுங்கூடின சுபதினத்தில் பிள்ளைத்தமிழ் எழுதி முகிந்தது. ஞான தேசிகன் மகரநெடுங்குழைக்காதர் திருவடிகளே சரணம். திருமேனி கவிராசர் வாக்கு]

முற்றும்.

மகரநெடுங்குழைக்காதர் பிள்ளைத்தமிழ்

செய்யுண்முதற்குறிப்பகராதி

செய்யுள்	பக்கம்
அஞ்சிறையவரிவண்டு	3
அடங்காத வெழுபது	78
அடியார் பிறவிக்கடல்	65
அண்டபகிரண்டமு	165
அமரர்கின்னரர்முனிவர்	74
அரமகளிர் தங்கழுத்தணியு	72
அருமைப் பெருமான் பிறவி	123
அலைவளைக்குங் கருங்கடலும்	51
அளிசுற்றிய தண்டலப்	176
அறுகால் வரிச்சுரும்படை	39
அன்பாய்ப்பணிந்து தினம்	186
அன்போடணைத்து முலை	158
ஆரணப் பொருளுணர்கும்	10
ஆராவமுதொத்திலவிதழின்	121
இடிக்குங்கடுஞ்சொல் கொடும்	58
இடையிற்றெடியக்கனத்தடி	64
இருகுழையுமணிகுதம்பையு	41
இருவினைச்செனனவலைக்	127
உடுக்குந்திரைக்கருங்	83
உருவாயுயிராயுணர்வாகி	179
உரைக்குஞ்சதுமாமறை	177
உலைவளைக்குங்கொழுங்	97
உழுதுழுதிசைபயிலளி	172

செய்யுள்	பக்கம்
உளநெகிழ்ந்திருபொழுதும்	114
எத்திக்கும் வண்புகழ்	47
எரியுமனல் கதுவும் விழி	109
என்னென்று நிகராவை	142
ஒள்ளொளி விரித்தசெறு	44
கக்கக்கொழுங்குருதி	87
கங்கா நதிச்செழும் புனல்	167
கயங்கொண்டலம்பித்திரை	53
கருணைபெருகியுவட்டெறியுங்	68
கருதுஞ்சமயமோராறும்	60
கலைமறைந்தொளிர்தவள	113
களிக்குஞ்சுரும்பர்துதைந்து	144
கறைகொளுஞ்சமரில் வடி	164
கூறருந்துதியை நீயுடையவன்	135
கொத்தோடசையப் பசுந்துளவம்	156
கொந்தார் பசுந்துளவு	15
கோவே கோவா மரகதமே	150
சந்தப்படாமுலைத்தார்	137
சந்தனக்கதம்பப்படீர	42
சந்தாடவியும் பாதிரியும்	106
சிந்தாமணியே மரகதமே	120
சிறிய திருமடல் பெரியதிரு	27
செங்குருதியலைமண்டி	133
சொல்லற்கரியகிரண நெடுஞ்	61
சொற்ற நான்மறைபுக்கி	90
தடிக்குஞ் சிகரப்படாம்	155
தந்தானெனக்கு வரமிரண்டு	183
தருக்காமலர்ப்பூம் பொழிலும்	148

செய்யுள்	பக்கம்
தருநீழலிடையினிது வீற்றிருக்	184
தவநெறிக்கவுதமன் பன்னி	139
தழைமடற் பச்சைப்	91
தாதவிழ்பசுந்துளவமாலை	50
துளிக்குந்திரைப்பாற்கடன்	105
தெளிக்குங்கொழும்பிரசமூற்	13
நிரையும் பசும்பொனணிமாட	46
நீறுபடுதவளவெண்	169
படநடுங்கக்கண்பிதுங்கப்	88
பண்டாலிலையிற்கண்டுயில்	23
பண்டாலிலையினரங்கத்தும்	118
பண்ணூர்மதுரம் பழுத்தொழுகிப்	55
பண்ணேறியமென்குதலைமொழிப்	153
பம்புதிரைவாரிதி	99
பாரராவணனெனும்	8
புகலருஞ்சதுமறையருந்தவர்	111
புவனமுமண்டகடாகமும்	174
புழைத்திண்டிறற்கைமதசலதி	190
பூமாது குடிகொண்டு	1
பூவாருங்கொன்றைச்செழுஞ்	161
பைத்தலை நெடுஞ்சுடிகை	132
பொங்குவெண்டிங்களங்	101
பொருதிரைசுருட்டுமணி	95
பொருதிரையெறிசலராசி	171
மண்டுதிரையெறிமகர	79
மண்மகளுமாய்ப்பின்னை	5
மத்தாலடிப்பவுரல் மிதித்து	188
மதியுடைத்தாயமண்டலம்	125

செய்யுள்	பக்கம்
மருவார் நறுமென் மலர்	193
மானவேலரசர்தொழு	85
முடிக்கும் பசுந்துழாய்ச்	30
முடிமீதொளிர்சூழியத்	116
முதியகவி நாவலவர்	32
முருகொழுகுபங்கயத்தடமு	37
முளைக்குந்தவளக்கற்றை நிலா	56
முனியுமிளவலுமுடன்	93
மூவா முதலாயுலகமொரு	103
மேல்பால்முளைக்கும்பிறை	181
வச்சிரக்குலிசபதி	26
வண்ணந்தனைந்த கடலுலக	82
வள்ளைக்குழைவேனெடுங்	147
வள்ளைவாய்நெகிழத்	17
வன்னக்களபம்புளகமுலை	152
வாலப்பிறைவாணுதன் மடவார்	192
வாளுடர்முப்பத்துமுக்கோடி	159
வாளுடரும் பொற்பொகுட்டாச	35
விடங்காலும் வாளரா	20
விடவாளரவக்கயிறு சுற்றி	70
விண்டடவிமுகமாயிரங்	140
விதுரன் மனையிலடிசில்நுகரும்	108
வெவ்வராவிடமொழுகு	129
வேண்டக்கிடையா வாரமுதம்	145
வேதங்களோடைந்து	75

குழைக்காதர் சந்தானப்பத்து

ஸ்ரீராமையங்கார் அருளியுள்ள இந்தப் பதின்மூன்று செய்யுட்களையும் தினந்தோறும் ஏகாக்ர சித்தத்துடன் பிள்ளைப்பேறு இல்லாதவர்கள் பாராயணம் செய்தால் நன்மகவைப் பெற்று இன்புற்று வாழ்வார்கள் என்பது அநுபவசித்தம்.

1. சந்தான மூர்த்தி மகரக்
குழையர்தம் மேலடியேன்
சந்தானப் பத்துத் தமிழ்மாலை
பாடத் தயவருள்வாய்
சந்தான மாகுந் தமிழ்ப்பேரை
நங்கை தவத்துதித்த
சந்தான மாஞ்சட கோபா
மகிழ்மலர்த் தாமத்தனே.

2. செந்தார் மணிமகிழ் சேர்மணி
மார்பன் திருப்புயத்திற்
கொந்தாரும் பச்சைத் துழாயணி
கேசவ கொண்டல்வண்ண
பிந்தாமல் நான்வந்து பொன்னடி
போற்றப் பிரியமுடன்
சந்தானந் தாகுழைக் காதாதென்
பேரைத் தயாநிதியே

3. முந்தித்த காலம் பொருநா
நதியினின் மூழ்கியுமே
வந்தவென் பாவம் தவிர்ந்திலை
நீயதை மாற்றுகண்டாய்

உன்பதி யார்பதம் போற்றுந்
தமியன் உளமகிழச்
சந்ததி பாக்கியந் தந்தருள்
பேரைத் தயாநிதியே.

4. பாகார்ந்த செந்தமிழ்ப் பாமாலை
பாடிய பாவலர்க்குப்
போகாத வல்வினை போக்குவித்
தாயிந்தப் பூதலத்தில்
வாகார் மகரக் குழையா
யடியன் மனமகிழச்
சாகாத சந்ததி தந்தருள்
பேரைத் தயாநிதியே.

5. கையார வாரி யெடுத்தணைத்
தேமுத்தங் காதலுடன்
பொய்யாமல் மைந்தன் அருள்புரி
வாயிந்தப் பூதலத்தில்
அய்யா மகரக் குழையா
அடிமைக் கிரங்கியிப்போ
மெய்யான சந்ததி தாருந்தென்
பேரையில் வித்தகனே.

6. கூர்க்காயு மாழிக் கரத்தா
யினியுன் குரைகழலே
யார்க்கார மாகத் தொழுமடி
யேனுக் கருள்புரிவாய்

நீர்க்கார மேனி யழகா
எனக்கின்று நிச்சயமாய்
தீர்க்காயு ளுள்ள மகன்தாதென்
பேரையில் ஸ்ரீதரனே.

7. அத்திர வேல்விழி மின்னார்கள்
தந்த விரகத்தினால்
தெத்திலும் தீவிழுந் தெரியாமல்
உன்தன் திருவுளத்தால்
பத்திர மாக அடியேன்
தனக்கோர் பலமிகுந்த
புத்திர சம்பத்தை ஈவாய்தென்
பேரையில் புண்ணியனே.

8. மீனம்பு நீர்விழி யனார்கள்
தந்த விரகத்தினால்
ஊனம் படுந்துயர் ஒன்றொழிப்
பாயுயர் வானறலே
வானம்பு பூமி வளர்பயிர்
போலுன் மலர்ப்பதத்தை
நான்நம்பி னேன்குழைக் காதாயி
னியுன்ற னடைக்கலமே.

9. நத்தூர நேமிக் கரத்தாய்
இனியுந்தன் நாமத்தைதான்
எத்தூரம் போயினும் நான்மற
வேனிடை மாதர்தனில்

முத்தூருங் கொங்கைய சோதைப்
பிராட்டி முகத்திலிட்ட
கத்தூரி நாமத் தழகாதென்
பேரையில் காதலனே.

10. மாந்திக் கிடக்கும் அடியே
னுடைய மனமகிழ
சாந்தி முனிக்கருள் செய்தது
போலத் தயவு செய்து
ஏந்தி மதிக்க விளையாடப்
பிள்ளை எனக்கருள்வாய்
காந்தி மதிக்கு நிகரா
கியமுகக் காகுத்தனே.

11. ஒருமைந் தனுக்கு வரம்வேண்டிப்
பெற்ற உடையநங்கைக்
கருமைந்த னாகி யவதரித்
தாயய்யன் ராமனுக்கு
திருமைந் தனாகிய ஸ்ரீராமன்
செல்வக் குடிதழைக்கக்
கருமைந்தன் தந்தருள் பேரை
வகுள திவாகரனே.

12. மாவுக்கு வாசந் திருமால்
உரையடி மாதர்மகிழ்
பாவுக்கு வாசமகிழ் மாறன்
செய்பாடல் பைந்துளவத்

தேவுக்கு வாச மடியார்கள்
சிந்தையில் சேர்ந்திருந்தும்
நாவுக்கு வாசம் புகழ்பேரை
வந்தருள் நாரணனே.

13. சந்தானப் பத்துந் தமிழ்மாலை
நூறுந் தரித்தவர்கள்
அந்தா ரணியில்நல் லாண்பிள்ளை
தான்பெற் றகமகிழ்ந்து
கொந்தார் துளவமணி மால்குழைக்
காதரைக் கும்பிட்டுடன்
மந்தாத வாழ்வும் பெறுவார்
அவரிந்த மாநிலத்தே.